# மாயா விநோதினி

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகூர் எழுதியது

1518

—:o:—

ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது

MADRAS

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர்

1938

பதிப்புரிமை] [விலை ரூ. 1-8-0

PRINTED AT
MADRAS LAW JOURNAL PRESS
MYLAPORE, ~~MADRAS~~
1938

# முன்னுரை

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் அவர்கள் வங்காளியில் எழுதிய "சோகேர் பாலி" என்ற அரிய நாவலின் மொழிபெயர்ப்பாகிய இது, ஸ்ரீமதி தஞ்சம் அவர்களால் ஆசிரியர் அநுமதிபெற்று மொழிபெயர்க்கப்பெற்றது. சென்னை அரசாங்கச் சுகாதார மந்திரியும் இதனை மொழிபெயர்த்தவருடைய தந்தையாருமாகிய கனம் ஸ்ரீ டி. எஸ். எஸ். ராஜனவர்கள் இந்நூலைக் கலைமகளில் வெளியிடவும், தனிப்புத்தக உருவத்தில் பிரசுரிக்கவும் அனுமதி தந்தார்கள். ஸ்ரீமதி தஞ்சம் அவர்களுக்கும் அவருடைய அருமைத் தந்தையாரவர்களுக்கும், எங்களுடைய நன்றியறிவை இதன் முகமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மொழிபெயர்ப்பு, கலைமகளில் வெளிவந்த காலத்தில் இதனைப் பல தமிழன்பர்கள் பாராட்டினார்கள். மொழிபெயர்ப்பு மிக நன்றாக அமைந்திருப்பதைப்பற்றிப் பத்திரிகைகள் சிறப்பித்தன.

தமிழ்நாட்டார் இந்நாவலை ஆதரவுடன் வரவேற்பார்களென்பது எங்கள் நம்பிக்கை.

இங்ஙனம்
**பிரசுரகர்த்தர்**

# முகவுரை

உலகத்துத் தலை சிறந்த புலவர்களில் ரவீந்திரநாத தாகூர் ஒருவர். இலக்கிய சம்பந்தமாகவும், சமய சம்பந்தமாகவும், மேல்நாட்டாருக்கு அழுத்தமான உணர்ச்சி அவ்வளவாக இல்லாமல் இருந்தாலும், ரவீந்திர நாதர், தனித்த புலமை வாய்ந்தவர் என்றும் தற்காலத்துப் புலவர் யாவரிலும் சிறந்தவர் என்றும், கண்டு அங்கீகரித்த பெருமை அவர்களுக்கே போய்ச் சேரும். அவருடைய நூல்களை அறிந்து அனுபவிக்கவேண்டும் என்று ஆசைப்படாத மேல்நாட்டாரே இல்லை. ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலான பல பாஷைகளிலும் ரவீந்திருடைய நூல்களை மொழிபெயர்த்து, அதனால் புதிய அனுபவங்கள் எவ்வளவோ அடைந்து வருகிறார்கள். அந்த அளவுக்கு ரவீந்திரரைத் தமிழர்களாகிய நாம் பயன்படுத்திக் கொண்டோமா என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. சமயம், சரித்திரம், அரசியல், கவிஇயல், கலைஇயல் முதலிய விஷயங்கள் பற்றி அவர் எழுதியுள்ள நூல்கள் எத்தனையோ பல. அவை எல்லாம், நம்முடைய பழமையான நுட்ப தத்துவங்களையும், மேல்நாட்டார் நேற்றுக் கண்டு பிடித்த

நுட்பதத்துவங்களையும், உள்ளாக்கிக்கொண்டு நடை பெறுகின்றன. அதனால் நம்மவரில் பலருக்கு அவைகளை அறிந்து அனுபவிப்பது கஷ்டமாயிருக்கலாம். ஆனால் கதைகள் சம்பந்தப்பட்ட மட்டில் கஷ்டம் அவ்வளவாக ஒன்றும் இல்லை.

மேல் நாட்டுப் புலவர்கள் எழுதியுள்ள கதைகளோ, மூலத்தை வாசித்தாலும் கஷ்டம்; மொழிபெயர்ப்பிலோ அதைவிடக் கஷ்டம். காரணம்: மேல்நாட்டாருடைய நடை, அவர்களுடைய உடை, அவர்களுடைய பாவனை, எல்லாம் நமக்கு அயலான காரியங்கள்.

ஆனால் ரவீந்திரர் சித்திரிக்கிற நடை உடை பாவனை எல்லாம் நம்முடைய வாழ்க்கையோடு ஒட்டியுள்ளன. ஆடவர் பெண்டிர் எல்லாம் நம்மைப்போன்றவர்களே. ஏதோ சில முக்கியமல்லாத அம்சங்களில் வேறுபாடிருக்கலாம். நாம் காப்பி சாப்பிடுகிறோம்; அவர்கள் அந்த வேண்டாத வழக்கம் இன்றிச் சரபத்துச் சாப்பிடுகிறார்கள். நம்முடைய பெண்டுகளுக்கு முக்காடு கிடையாது; வங்காளப் பெண்டுகளுக்கோ முக்காடு உண்டு. ஆன போதிலும் வீட்டுக்குள் ஆடவரான உறவினரோடும் நண்பரோடும் அன்னியோன்னியமாய், சங்கோசம் அவ்வளவாய் இன்றி, உல்லாசமாய்ப் பொழுது போக்குவது வழக்கம். இவ்வளவுதான் வேறுபாடு.

“மாயா விநோதினி”யில் நாம் சந்திக்கும் ஆடவரும் பெண்டிரும் நம்மோடு ஒட்டியவர்களே. பெயர் மாத்திரம்

ஏதோ, விநோதினி, ஆசா, விஹாரி, மஹேந்திரன் என்று புதுப் பெயராய் வரும். மனப்பான்மைகள் விஷயத்தில் அவர்கள் தமிழ் நாட்டவரே. அதுகாரணமாக அவர்களு டைய இதயத்துக்குள் புகுவது நமக்கு எளிது. அந்த இதயத்துக்குள் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம் நம்முடைய கண்ணுக்கு முன் நிகழ்வது போலவே தெளிவாயிருக் கின்றன.

ரவீந்திரருடைய அருமையான சிருஷ்டி தத்துவ மானது, கதையை வகுப்பதிலும், பாத்திரங்களை வனைவதி லும் அற்புதமாய் விளங்குகிறது. கருத்தூன்றியே கதையை வாசிக்கவேண்டும். அப்போதுதான் ஆசிரியரின் தீவிரசக்தி தெரியவரும்.

இந்த அருமை வாய்ந்த கதையை ஸ்ரீமதி தஞ்சம்மாள் தமிழில் மொழிபெயர்த்து நமக்குத் தந்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஒரு கதையை வாசித்தால் கதை நம்முடை யது ஆகாது. விஷயம் எல்லாம் சாயம் ஏற்றிய கண்ணாடி வழியாகப் பார்ப்பதுபோலத்தான் தெரியும். தமிழ் வாயி லாகப் பார்ப்பது, கண்ணாடியே இல்லாமல் நேருக்கு நேர் பார்ப்பதாகும்.

மேலும், கையாண்டிருக்கிற தமிழ், நம்முடைய வீட் டுக்குள் வழங்கும் தமிழ். ரஸபாவத்தோடு ஆடவர் பெண்டிர் பேசுகிற தமிழ். விஷயம் அவ்வளவும் குடித்த னப் பாங்கு பற்றியே இருப்பதால் பாஷை ரொம்பவும்

பொருத்தமாய் அமைந்திருக்கிறது. பெயர்களையும் ஊர்களையும் கொஞ்சம் மறந்து கொண்டால், கதை தமிழ் நாட்டுக் கதை என்றே தோற்றும். இலக்கியத்தில் எதிர் பார்ப்பது இதய பாவங்களின் உண்மை, நம் இதயத்தில் தட்டவேண்டும் என்பதுதான். இது சித்தியாவதற்கு; பாவத்தோடு ஒட்டித் திருந்திய பாஷைதான் கருவி, அத்தகைய தமிழை ஸ்ரீமதி தஞ்சம்மாள் திறமையோடு கையாண்டிருக்கிறார்கள். ரொம்ப ஸந்தோஷமான காரியம் இது நமக்கு.

தமிழ் நாட்டில் எல்லோருமே, ஆங்கிலம் கற்றவருமே "மாயா விநோதினி"யை வாசித்துப் பயன் அடைவார்கள் என்று நம்புகிறேன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

# மாயா விநோதினி

## முதல் அத்தியாயம்

ஒருநாள் விநோதினியின் அன்னை ஹரிமதி மஹேந்திரனின் அன்னை ராஜலக்ஷ்மியிடம் குசலப் பிரச்னம் செய்துகொண்டு வந்து உட்கார்ந்தாள். இருவரும் ஒரே கிராமத்தில் பிறந்தவர்கள்; இளமையிலிருந்தே தோழிகள்.

மறுதினம் ராஜலக்ஷ்மி மஹேந்திரனிடம் பெரிய பூர்வபீடிகையுடன், "மஹேன், எப்படியாவது ஏழைகளின் மானத்தைக் காப்பாற்றவேண்டும். பெண் மிகவும் அழகுடையவள்; இங்கிலீஷிலும் தேர்ச்சிபெற்றவள் என்று கேள்விப்பட்டேன். தற்கால நாகரிகப் போக்குக்கு ஏற்றபடியே பெண்ணும் வாய்த்திருக்கிறாள்" என்று சொன்னாள்.

மஹேந்: அம்மா, தற்கால யுவர்கள் என்னைத் தவிர எத்தனையோ பேர் இருக்கின்றனர்.

ராஜலக்ஷ்மி: மஹேன், இதுதான் உனது கெட்ட குணம். உன் எதிரில் விவாகப் பேச்சை எடுப்பதே கஷ்டமாயிருக்கிறது.

மஹேந்: அம்மா, இதை விட்டால் உலகத்தில் பேச வேறு விஷயமே கிடையாதா? அது எப்படி எனது கெட்ட குணமாகும்?

மஹேந்திரனின் தகப்பனார் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். தாயின் செல்வப் பிள்ளையாய் மஹேந்திரன் வளர்ந்தான். இப்போது அவனுக்கு வயது இருபத்திரண்டு. எம். ஏ. பரீக்ஷையில் தேர்ச்சிபெற்று, டாக்டர் வேலைக்குப் படித்துக்கொண்டிருந்தான். ஆனால் இப்பொழுதும் சிறு குழந்தைபோல் தாயிடம் கோபித்துக் கொள்ளுவது, பிடிவாதம் செய்வது, சுயேச்சையாய் நடப்பது முதலிய குணங்களை அவன் விடவில்லை. கங்காரு என்னும் பிராணி தனது கர்ப்பத்திலிருந்து குழந்தை வெளியில் வந்துவிட்ட போதிலும் அதை எப்படிக் கீழே விடாது வயிற்றிலேயே சதா கட்டிக்கொண்டு திரியுமோ, அதுபோல், எவ்வளவு வயதான போதிலும் தனது ஒவ்வொரு காரியத்திற்கும் தாயைத் தொத்திக் கொண்டிருப்பதே மஹேந்திரனுக்கு வழக்கமாகி விட்டது. குளிப்பது, சாப்பிடுவது, படிப்பது முதலிய யாவும் ராஜலக்ஷ்மியின் உதவியின்றி நடைபெறுவதில்லை.

விநோதினியைக் கலியாணம் செய்துகொள்ளும்படி ராஜலக்ஷ்மி மிகவும் வற்புறுத்தவே மஹேந்திரனும் பெண்ணை ஒருநாள் பார்த்துவர ஒப்புக்கொண்டான்.

பார்க்க நிச்சயித்திருந்த நாள் வந்ததும் அவன், "அம்மா, பெண்ணைப் பார்த்துத்தான் என்ன ஆகவேண்டும்? உன்னைத் திருப்தி செய்யத்தானே நான் கலியாணமே செய்துகொள்கிறேன்? பின் அதனால் வரும் நன்மை தீமையைப்பற்றி யோசிப்பது வீண்" என்றான்.

அவன் குரலில் கோபமும் விரக்தியும் கலந்திருப்பதைத் தாய் அறிந்துகொண்டபோதிலும், 'பெண்ணைப் பார்த்தால் அவன் நிச்சயம் விவாகத்திற்குச் சம்மதிப்பான்;

அவனது மனமும் மாறும்' என்று நினைத்து அவள் சமாதானம் செய்து கொண்டாள்.

இந்த நம்பிக்கையின்மேல் பெண் வீட்டாருக்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. விவாகத்திற்கு நாளும் நிச்சயிக்கப்பட்டது. கலியாண நாள் நெருங்க நெருங்க மஹேந்திரனின் மனத்தில் ஓர் எண்ணம் உதிக்கலாயிற்று. கடைசியில் கலியாணத்திற்கு இரண்டொரு நாள் இருக்கும்போது அவன் தாயிடம், "அம்மா, என்னால் விவாகம் செய்துகொள்ள முடியவே முடியாது" என்று சொல்லி விட்டான்.

சிறு வயதிலிருந்தே அவனுக்கு வாழ்க்கையில் எல்லா விதமான ஸம்பத்தும் குறைவின்றி நிறைந்து இருந்தது. அவன் சுயேச்சையாக வளர்ந்தவன். பிறருக்கு அடங்கி நடக்கும் சுபாவம் உள்ளவனல்லன். தன் இஷ்டத்திற்கு விரோதமாகப் பிறர் தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி வேண்ட, தான் சம்மதிப்பதாவென்னும் அகங்காரத்தில், கடைசியில் கலியாணமே வேண்டாமென்று மறுத்து விட்டான்.

விஹாரி மஹேந்திரனின் ஆப்த நண்பன். அவன் மஹேந்திரனைத் தன் உடன்பிறந்த சகோதரன் போலவும், ராஜலக்ஷ்மியைத் தன் தாயாகவும் கருதிப் போற்றி வந்தான். மஹேந்திரனுக்கு எல்லாவிதத்திலும் அவன் உதவியாக இருந்ததால் ராஜலக்ஷ்மியும் விஹாரியினிடம் பிரியமாகவே இருந்துவந்தாள். அவள் அவனிடம், "அப்பா, இப்பொழுது உன்னால்தான் காரியம் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த ஏழைப் பெண்ணின் கதி—" என்பதற்குள் விஹாரி கைகூப்பி, "அம்மா!

இந்தக் காரியம் மட்டும் என்னால் பண்ணமுடியாது. சிறு வயதில் மஹேந்திரனுக்குப் பிடிக்காமல் எறிந்துவிட்ட மிட்டாய்களை நீங்கள் எனக்குக் கொடுத்துச் சாப்பிடச் சொல்வதுண்டு. நானும் மறுக்காமல் தின்பதுண்டு. ஆனால் அதுபோல் அவன் மாட்டேனென்று மறுத்த கன்னிகையை நான் கலியாணம் செய்து கொள்ளுவதென்பது முடியாத காரியம்'' என்றான்.

ராஜலக்ஷ்மியும் மனத்திற்குள், 'விஹாரி விவாகம் எங்கே செய்துகொள்ளப் போகிறான்? பாவம்! மஹேந்திரனின் நட்பைத் தவிர வேறு நட்பு அறியாதவன். கலியாணம் செய்துகொண்டு மனைவி வீட்டிற்கு வரவேண்டுமென்ற கவலையே இவனுக்கு இல்லை' என்று எண்ணி அவனிடம் முன்னிலும் வாஞ்சையுடன் இருக்கலானாள்.

விநோதினியின் தந்தையார் பணக்காரரல்ல. இருந்தாலும் தம் ஒரே புத்திரிக்கு ஒரு மிஷனரி மாதை அமர்த்தி, படிப்பு, தையல் முதலியன நன்கு கற்பித்திருந்தார். பெண்ணிற்கு வயதாகி வந்தபோதிலும் கலியாணத்தைப் பற்றிச் சிந்திக்காமலே இருந்து கடைசியில் திடீரென்று இறந்துவிட்டார். பெண்ணுக்குத் தகுந்த வரன் தேடும் பாரம் விதவையான தாயின் தலையில் விழுந்தது. பெண்ணோ பெரியவளாகிவிட்டாள். கையிலோ பணமில்லை.

ராஜலக்ஷ்மி அப்பெண்ணின் ஸ்திதியைக் கண்டு மனமிரங்கினாள். மஹேந்திரன் விஹாரி இருவரும் மறுத்துவிடவே, கடைசியில் தன் பெரியப்பாவின் பிள்ளை ஒருவனுக்கு அப்பெண்ணைக் கொடுத்து மணம் செய்வித்தாள்.

விநோதினியின் துரதிருஷ்டம், சில நாட்களுக்கெல்லாம் அவள் கணவன் இறந்தான். அவள் விதவையானாள்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் மஹேந்திரன் தன் தாயிடம் வேடிக்கையாக, "நல்ல வேளை; நான் அவளைக் கலியாணம் செய்துகொள்ளாமல் தப்பினேன். செய்து கொண்டிருந்தால் நான் இன்று இவ்வுலகத்தில் இருந் திருக்கமாட்டேன்" என்று சொன்னான்.

இச்சம்பவம் நடந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட் டன. ஒருநாள் தாயும் மகனும் பின்வருமாறு சம்பாஷித் துக் கொண்டிருந்தனர்:

ராஜலக்ஷ்மி: மஹேன், ஜனங்கள் என்னைத்தான் நிந்திக்கிறார்கள்.

மஹேந்: ஏன் அம்மா? நீ யாரை, என்னகெடுத்தாய்?

ராஜலக்ஷ்மி: நாட்டுப்பெண் வந்துவிட்டால் பிள்ளை தன் வசத்தில் இருக்கமாட்டானென்று பயந்துதான் இன் னும் உனக்கு விவாகம் செய்துவைக்கவில்லையென்று எல்லோரும் என்னை ஏசுகிறார்கள்.

மஹேந்: உனக்கு அப்படிப் பயமிருக்குமானால் அது நியாயந்தான். நான் மாத்திரம் தாயாக இருந்தால் நான் உயிருடனிருக்கும்வரையில் என்பிள்ளைக்குக் கலியாணமே பண்ணிவைக்க மாட்டேன். ஊரார் பேச்சை நாம் ஏன் பொருட்படுத்த வேண்டும்?

ராஜலக்ஷ்மி: (சிரித்துக்கொண்டு) நன்றாயிருக்கிறது! பிள்ளையின் பேச்சைக் கேட்டாயோடி, அம்மா!

மஹேந்: ஆமாம்; நாட்டுப்பெண் வந்து பிள்ளையை வசப்படுத்திக்கொண்டு விடுவது, பத்துமாதம் சுமந்தெடுத் துப் பெற்று அன்புடன் வளர்த்த தாய் அன்னியளாகி விடுவது, தாயையும் மகனையும் வேற்றுமைப்படுத்தி மூன்றாமவள் ஒருத்தி வருவது: அம்மா, இதெல்லாம் ஒரு

வேளை உனக்குப் பிடித்திருக்கலாம்; ஆனால் என் மனம் ஒப்பவில்லை.

அவனுடைய பேச்சைக் கேட்டு ராஜலக்ஷ்மி பூரித்துப் போனாள். தன் ஓரகத்தியிடம், "கேட்டாயோ மகேந்திரன் சொல்வதை? விவாகம் செய்துகொண்டால் தாயிடமிருந்து பிரிய நேரிடுமே என்பதற்காக அவன் விவாகம் செய்து கொள்ளவில்லையாம்! இந்த விசித்திரம் எங்கேயாவது உண்டோ?" என்றாள்.

மகேந்திரனின் பெரியம்மாவாகிய அன்னபூரணி அவனிடம், "அப்பா, இது நீ அறியாமையினால் சொல்வது. வயதுக்கேற்ற பேச்சும் எண்ணமுந்தான் அறிவுடைமை. இது தாயின் மடியில் உட்கார்ந்து விளையாடும் வயதல்ல. வீட்டை நிர்வகிக்க வேண்டிய வயது. இப்படிக் குழந்தையைப்போல் நீ பேசுவதைக் கேட்க எனக்கு வெட்கமாயிருக்கிறது, அப்பா" என்றாள்.

ஓரகத்தியின் பேச்சு ராஜலக்ஷ்மியின் மனத்தில் சுறுக்கென்று தைத்தது. அவை நியாயமாயிருக்கலாம்; ஆனால் அவள் செவிக்கு இனிமையாக இருக்கவில்லை. அவள் அன்னபூரணியிடம், "அக்கா, என் பிள்ளை ஊரார் பிள்ளைகளைக் காட்டிலும் தாயிடம் அதிக அன்புடன் இருக்கிறான். அதனால் உனக்கென்ன வெட்கம்? உன் சொந்தக் குழந்தையாயிருந்தால் அன்பின் அருமை உனக்குத் தெரியும்!" என்று குத்திச் சொன்னாள்.

**அன்ன:** நீ விவாகப் பேச்சை எடுத்ததனால் நான் இவ்வளவாவது சொன்னேன். இல்லாவிடில் எனக்கு இதைப் பற்றிப் பேச அதிகாரம் என்ன இருக்கிறது?

**ராஜலக்ஷ்மி:** என் பிள்ளை கலியாணம் செய்துகொள்ளவில்லையென்றால் உனக்கு ஏன் இவ்வளவு பொறாமை?

ஏதோ இவ்வளவு காலமும் அவனுக்கு நானதானை சுசுரு ஷை செய்து வளர்த்தேன்? அப்படியே இன்னமும் செய் கிறேன். இதற்காக எனக்கு வேறு யாருடைய உதவியும் தேவையில்லை.

அன்னபூரணியின் கண்களில் நீர் துளித்தது. பேசாது அங்கிருந்து எழுந்து போய்விட்டாள். இதனால் மஹேந்திரனின் மனம் சஞ்சலம் அடைந்தது. அன்று அவன் காலேஜிலிருந்து சீக்கிரமே திரும்பிவிட்டான். வந்ததும் நேராகத் தன் பெரியம்மாவின் அறைக்குள் போனான். பெரியம்மா எது சொன்னபோதிலும் தன் மேலுள்ள அன்பினால்தான் சொல்வாளென்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். அவளுடைய தங்கை பெண் ஒருத்தி தாய் தந்தையற்று இருந்தாள். அவளை மஹேந்திரனுக்கு மணம் செய்வித்துத் தன்வீட்டில் சுகமாக இருக்கப் பார்க்கவேண்டுமென்பது அன்னபூரணியின் நீண்டகால விருப்பம்; இது மஹேந்திரனுக்கும் நன்றாகத் தெரியும். தனக்குக் கலியாணத்தில் விருப்பமில்லாவிட்டாலும், தன் பெரியம்மாவின் எண்ணம் மிகவும் நியாயமானதென்று அவனுக்குப் பட்டது.

அன்னபூரணியின் அறைக்குள் மஹேந்திரன் நுழைந்தபோது அந்திநேரம். அன்று அடுக்களையில் அவளுடைய சாப்பாடு அப்படியே கிடந்தது. அவள் அதைத் தொடக்கூட இல்லை. வாடிய முகத்துடன் கட்டிலடியில் தரையில் உட்கார்ந்திருந்தாள். மஹேந்திரனுக்குக் கோழைமனது. பெரியம்மாவின் நிலையைப் பார்த்ததும் அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அருகில் போய் உட்கார்ந்து அன்பு ததும்ப, "பெரியம்மா!" என்றான். அவள் சட்டென்று தனது துக்கத்தை மறைத்துக்கொண்டு நகை

முகத்துடன், "குழந்தாய், வா அப்பா! வந்து உட்கார்" என்றாள்.

மஹேந்: பெரியம்மா! மிகவும் பசியாயிருக்கிறது. சாப்பிடவேண்டும்போல் இருக்கிறது.

அன்னபூரணிக்கு அவனது நோக்கம் புரிந்துவிட்டது. பெருகியோடும் கண்ணீரை மிகவும் கஷ்டத்துடன் அடக்கிக்கொண்டு எழுந்திருந்தாள். தானும் சாப்பிட்டு அவனையும் சாப்பிடச் செய்தாள்.

அவன் மனத்தில் அன்னபூரணியின்பால் அன்பும் தயையும் ஒருங்கே ததும்பி எழுந்தன. எப்படியாவது அவளை உற்சாகப்படுத்த விரும்பினான். உடனே அவன், "பெரியம்மா, அன்றொரு நாள் உன் தங்கை பெண்ணைப் பற்றிச் சொன்னாயல்லவா? என்னை அழைத்துப் போய் ஒருநாள் அவளைக் காட்டு; பார்க்கலாம்" என்றான்.

சொல்வது என்னவோ சொல்லிவிட்டான். பிறகு ஏன் இப்படிச் சொன்னோமென்று அவனுக்கு மனத்துக்குள் பயமே.

அன்னபூரணி சிரித்துக்கொண்டே, "என்ன, கலியாண விசாரம் வந்துவிட்டதா?" என்றாள்.

மஹேந்திரன் உடனே பேச்சை மாற்றிக்கொண்டு, "எனக்காக இல்லை; பெரியம்மா, விஹாரியைச் சம்மதிக்கு மாறு செய்திருக்கிறேன். இப்பொழுது நீ கலியாணத்திற்கு நாள் நிச்சயித்துவிடு" என்றான்.

அன்ன: ஆஹா! அந்த அநாதைப் பெண்ணிற்கு அவ்வளவு அதிருஷ்டம் ஏது? விஹாரியைப் போன்ற கணவன் கிடைப்பதற்கு அவள் தலையெழுத்து நன்றாயிருக்க வேண்டுமே?

அன்னபூரணியின் அறையை விட்டு வரும்போது வாசற்படியிலேயே மஹேந்திரன் ராஜலக்ஷ்மியைப் பார்த்தான். அவள் உடனே, "மஹேன், உங்களுக்குள் என்ன யோசனை நடக்கிறது?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

மஹேந்: யோசனை என்ன இருக்கிறது? இரண்டு வெற்றிலை எடுத்துப் போகலாமென்று வந்தேன்.

ராஜலக்ஷ்மி: உனக்காக வெற்றிலை மடித்து என் அறையில் நான் தயாராக வைத்திருக்கிறேனே!

மஹேந்திரன் பதில் ஒன்றும் பேசாது வெளியே போய்விட்டான். ராஜலக்ஷ்மி அன்னபூரணியின் அறைக்குள் எட்டிப்பார்த்தாள். அழுது அழுது அவள் கண்கள் சிவந்திருந்தன. அதன் காரணத்தை ராஜலக்ஷ்மியினால் ஊகிக்கமுடியவில்லை. "ஏன்? பிள்ளையுடன் கூடிக் கூடி ரொம்பப் பேசிக்கொண்டிருந்தாய் போலிருக்கிறது!" என்று சொல்லிவிட்டுப் பதிலிற்குக்கூடக் காத்திராமல் ராஜலக்ஷ்மி 'விர்' என்று போய்விட்டாள்.

---

## இரண்டாம் அத்தியாயம்

பெண்ணைப் பார்க்கப்போகும் விஷயத்தை மஹேந்திரன் அறவே மறந்துவிட்டான். ஆனால் அன்னபூரணி மறக்கவில்லை. பெண்ணைப்போய்ப் பார்க்க வேண்டிய நாளையும் அவள் நிச்சயித்துவிட்டாள். மஹேந்திரனும் கல்கத்தாவிலேயே வசித்துவந்தான்; பெண்ணும் அதே ஊரில் பெரிய கடைத்தெருவில் வசித்துவந்தாள்.

கன்னிகையைப் போய்ப் பார்க்கவேண்டிய நாள் நிச்சயித்தாகிவிட்டது என்று கேட்டவுடன் மஹேந்திரன்

பெரியம்மாவிடம், "இத்தனை சீக்கிரம் ஏன் ஏற்பாடு செய்தாய்? நான் இன்னும் விஹாரியிடம் இதைப்பற்றிப் பேசக்கூட இல்லையே" என்றான்.

அன்ன: இது என்னடா, மஹேறன்? நீயேதான் விஹாரி சம்மதித்துவிட்டதாகச் சொன்னாய்! பார்க்க வருவதாகச் சொல்லிவிட்டு இப்பொழுது போகாவிட்டால் அவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்?

மஹேறந்திரன் விஹாரியை வரவழைத்து நடந்தவற்றை விளக்கிச் சொன்னான்; "போய்த்தான் பெண்ணைப் பார்ப்போமே. பிடிக்காவிட்டால் கட்டாயப்படுத்தி உன் கழுத்தில் கட்டிவிட முடியுமா என்ன?" என்றான்.

விஹாரி: இது என்னால் முடியாது. பெரியம்மாவின் தங்கை பெண்ணைப் பார்த்து 'இவள் எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொல்ல என்னால் முடியவே முடியாது!

மஹேந்: இது இன்னும் வேடிக்கையாய்த்தான் இருக்கிறது!

விஹாரி: மஹேறன், நீ மிகவும் அநியாயம் செய்துவிட்டாய். பொறுப்பை என்மேல் ஏற்றிவிட்டு நீ தப்பித்துக் கொள்வது அழகல்ல. இப்பொழுது நான் அப்பெண்ணை விவாகம் செய்துகொள்ள மறுத்தால் பெரியம்மாவுக்கு எவ்வளவு மனவருத்தம் ஏற்படும்; பார்!

மஹேந்: (வெட்கத்துடனும் ஆத்திரத்துடனும்) ஆனால் இப்பொழுது என்ன செய்யவேண்டும் என்கிறாய்?

விஹாரி: எப்பொழுது நீ என் சார்பாக அவளுக்கு வாக்களித்து விட்டாயோ அப்பொழுது நான் அவசியம் விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டும். பெண்ணைப் போய்ப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

விஹாரி அன்னபூரணியிடம் பக்தியும் சிரத்தையும் கொண்டிருந்தான்.

அவள் நடந்த வரலாற்றை அறிந்துகொண்டு விஹாரியைக் கூப்பிட்டு, "குழந்தாய், அப்படிச் செய்யக்கூடாது. பெண்ணைப் போய் நீ அவசியம் பார்க்கவேண்டும். உன் மனத்திற்குப் பிடிக்காவிடில் விவாகம் நடக்கவே நான் விடமாட்டேன்" என்றாள்.

நிச்சயிக்கப்பட்டிருந்த தினத்தன்று மஹேந்திரன் காலேஜிலிருந்து வந்ததும் தாயிடம் தனது பட்டுச் சட்டையையும் ஜரிகை வேஷ்டியையும் எடுத்துத் தருமாறு கேட்டான்.

ராஜலக்ஷ்மி: ஏன்? எங்கே போகிறாய்?

மஹேந்: ஓர் இடத்திற்குப் போகவேண்டும். எடு; வந்து சொல்லுகிறேன்.

நண்பனுக்காகப் பெண் பார்க்கப் போனபோதிலும் தானும் மாப்பிள்ளைக் கோலம் பூணவேண்டுமென்ற ஆவல் அவனுக்கு எழுந்தது. தலையை வாரிவிட்டுக்கொண்டு, கைக்குட்டையில் 'ஸெண்ட்' போட்டுக்கொண்டு போவது அவனுக்கு உசிதமாகவே தோன்றியது. பிறகு இரு தோழர்களுமே கன்னிகையைப் பார்த்துவரப் புறப்பட்டனர்.

கன்னிகையின் பெரியப்பா அனுகூலபாபு என்பவர் நல்ல போஜனப்பிரியர். தமது சொந்தச் சம்பாத்தியத்தைக் கொண்டு ஒரு மாடிவீடும் அதைச்சுற்றிச் சிறு தோட்டமும் வைத்திருந்தார். அக்கம்பக்கத்திலெல்லாம் அவருடைய வீடே சற்றுப் பெரிதாய் அவருடைய கௌரவத்தின் சின்னமாய் விளங்கியது.

தம்முடைய ஏழைத் தம்பி இறந்ததும், அவருடைய ஒரே பெண்ணை அனுகூலபாபு தம்மிடம் அழைத்துக் கொண்டார். தாய்தந்தையற்ற அப்பெண்ணைத் தன்னிடம் வைத்துக்கொள்ள அன்னபூரணி விரும்பியபோதிலும் அவர் சம்மதிக்கவில்லை. தம்பியின் பெண்ணைப் பிறரிடம் விடுவது தமக்கு மரியாதைக் குறைவென அவர் எண்ணினார். அப்பெண் கலியாண வயதடைந்ததும் அவருக்குக் கவலை உண்டாயிற்று. வரதக்ஷிணை, சீர் என்ற பிரஸ்தாபம் ஏற்பட்டபோதெல்லாம் அவர், "எனக்கு இன்னும் வேறு பெண் இருக்கிறாள். நான் ஒண்டிக்காரன்; தம்பியின் பெண்ணுக்கு எப்படி அதிகம் செலவழிப்பது?" என்று சொல்லிக் கொண்டே வந்தார். இப்படி விவாகம் சிறிதுகாலம் வரை தடைபட்டுக்கொண்டே வந்தது. இந்தச் சமயந் தான் மஹேந்திரனும் விஹாரியும் நன்கு அலங்கரித்துக் கொண்டு மாப்பிள்ளைக் கோலத்துடன் அவ்வீட்டில் பிரவேசித்தனர்.

சித்திரைமாதம் அந்திப்பொழுது. சூரியாஸ்தமனம் ஆகிவிட்டது. அனுகூல் பாபுவின் வீட்டு மாடியின் தெற்குப் பார்த்த தாழ்வாரத்தில் ஒரு சலவைக்கல் மேஜையின் மீது வெள்ளித் தட்டில், பழம் பக்ஷணம் எல்லாம் வைக்கப் பட்டிருந்தன. இரண்டு வெள்ளி டம்ளர்களில் ஐஸ் போட்ட சர்பத்தும் வைக்கப்பட்டிருந்தது. மஹேந்திரனும் விஹாரியும் சற்று வெட்கத்துடனேயே சாப்பிட உட்கார்ந்தனர். கீழே தோட்டக்காரன் புஷ்பச் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். மண்ணில் நீர் பட்டதும் கம் மென்ற மணம் எழுந்தது. பூமணத்துடன் கூடிய தென்றற்காற்று மஹேந்திரனின் மடித்த அங்கவஸ்திரத்தை அப்படியும் இப்படியும் கலைத்து விளையாடிக்

கொண்டிருந்தது. பக்கத்து ஜன்னலிலிருந்து யாரோ மெதுவாகப் பேசுவது, சிரிப்பது, கை வளையல்களின் 'ஜல்' என்ற சப்தம் இவை செவியிற்பட்டன.

பலகாரம் அருந்தியானதும் அனுகூல பாபு கதவின் புறம் பார்த்து, "ஆசா! வெற்றிலை பாக்குக் கொண்டு வா" என்றார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண் உலகத்திலுள்ள நாணமெல்லாம் ஓர் உருவெடுத்ததுபோல் வெட்கித் தலைகுனிந்து வெற்றிலைத் தட்டைக் கையிலேந்திய வண்ணம் பெரியப்பாவின் பக்கத்தில் வந்து நின்றாள். "குழந்தாய்! வெட்கம் ஏன்? தட்டை அவர்கள் முன்னே கொண்டுபோய் வை!" என்று அவர் சொன்னார்.

அப்பெண் கைநடுங்க வெற்றிலைத்தட்டை விருந்தாளிகளின் எதிரில் வைத்தாள். சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருக்க, அந்திப் பொழுதின் மஞ்சள் வெயில் அச்சிறுமியின் முகத்தில் பட்டு அதை ஸ்வர்ண மயமாக்கியது. அச்சமயம் நாணிய அந்நங்கையின் முககாந்தியை மஹேந்திரன் நன்றாகப் பார்த்தான்.

சிறுமி தட்டை வைத்துவிட்டு உள்ளேபோகும் சமயம் அனுகூல பாபு அவளைக் கூப்பிட்டுச் சற்று நிற்கச் சொல்லி, விஹாரியைப் பார்த்து, "இவள்தான் என் தம்பி அபூர்வனின் புத்திரி. அவர்களெல்லாம் காலஞ்சென்று விட்டனர். இப்பொழுது என்னைத் தவிர இக்குழந்தைக் குக் கதி யாருமில்லை" என்று சொல்லிப் பெருமூச்செறிந் தார்.

மஹேந்திரனின் இருதயத்தில் கருணைவெள்ளப் பொங்கி எழுந்தது. தாய் தந்தையற்ற அக்கன்னிகை யைக் கருணை ததும்ப ஒருதரம் உற்று நோக்கினான்.

பெண்ணின் வயதை நிதானிப்பது கடினமாயிருந்தது. உறவினர் அவளுக்குப் பன்னிரண்டு என்றனர். பார்த்தால் பதின்மூன்று என்று சொல்லலாம். ஆனால் அநாதையாய்ப் பிறர் ஆதரவில் வளர்ந்துவந்ததால் அடக்கமும் பயமும் அவளுடைய யௌவன சௌந்தரியத்தை மறைத்தன.

தயையும். ஆதரவும் நிறைந்த குரலில் மஹேந்திரன் அச்சிறுமியை நோக்கி, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

அனுகூல பாபுவும் சிறுமியை உற்சாகப்படுத்தி, "உன்பெயரை அவர்களுக்குச் சொல்லம்மா" என்றார்.

கன்னிகை மிகவும் பணிவுடன் தலைகுனிந்தவாறே, "ஆசாலதா" என்றாள்.

ஆசாலதா!— இப்பெயர் மிகப் பொருத்தமானதாகவும், குரல் மிகவும் இனிமையானதாகவும் மஹேந்திரனுக்குத் தோன்றின. மனத்திற்குள் ஒரு குரல், 'ஆமாம். அநாதைப்பெண் ஆசாதான்!' என்று கூறியது. இரு நண்பர்களும் வெளியே வந்து வண்டியில் ஏற, வண்டியும் புறப்பட்டது.

மஹேந்: விஹாரி! நீ இப்பெண்ணைக் கைவிட்டு நழுவ விடாதே.

விஹாரி அதற்கு நேரான பதிலொன்றும் அளியாமல், "பெண்ணின் சாயல் அவளுடைய பெரியம்மாவைப் போன்றே இருக்கிறது. குணமும் அப்படியே நிறைந்திருக்குமென்று தெரிகிறது" என்றான்.

மஹேந்: நான் உன் தலைமேல் ஏற்றிய பளு இப்பொழுது உனக்குப் பாரமாக இல்லையென்று தெரிகிறது.

விஹாரி: இல்லை. என்னால் அப்பாரத்தை இப்பொழுது தாங்க முடியுமென்றே நம்புகிறேன்.

மஹேந்: ஆனால் இத்தனை கஷ்டந்தான் எதற்கு? வேண்டுமானால் அப்பாரத்தை உன்னிடமிருந்து நானே மாற்றிக்கொள்ளுகிறேன். என்ன சொல்லுகிறாய்?

விஹாரி மஹேந்திரனைக் கூர்ந்து நோக்கி, "நண்பா! உண்மைதானா? இப்பொழுதும் சரியாய்ச் சொல். நீ விவாகம் செய்து கொள்ளுவதானால் பெரியம்மாவுக்கு ஆனந்தமாயிருக்கும். பெண்ணை எப்பொழுதும் அருகிலேயே வைத்துக்கொள்ளவும் அவளுக்கு முடியும்.

மஹேந்: போடா பைத்தியமே! அப்படியானால் எப்பொழுதோ கலியாணமாகி யிருக்காதா?

விஹாரி இதற்குமேல் வற்புறுத்தவில்லை. அவனை வீட்டில் விட்டுவிட்டு மஹேந்திரன் நேர்வழியை விட்டுத் தெருத்தெருவாய்ச் சுற்றிக்கொண்டு வெகுநேரம்கழித்துத் தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

அச்சமயம் ராஜலக்ஷ்மி கறிகாய் நறுக்கிக்கொண்டிருந்தாள். அன்னபூரணி இன்னும் அனுகூல பாபுவின் வீட்டிலிருந்து திரும்பிவரவில்லை. மஹேந்திரன் மாடியில் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டான். கல்கத்தாவின் பெரிய பெரிய கட்டிடங்களின்மேல் சந்திரன் தனது ஒளியை நிச்சப்தமாகப் பரப்பிக் கொண்டிருந்தான். ராஜலக்ஷ்மி வந்து மஹேந்திரனைச் சாப்பிட அழைத்தாள். அவன் உற்சாகமின்றி, "எனக்கு இப்பொழுது எழுந்திருக்கவே மனமில்லை" என்றான்.

ராஜலக்ஷ்மி: வேண்டுமானால் இங்கேயே கொண்டு வருகிறேன்.

மஹேந்: இல்லை; எனக்கு இன்று சாப்பாடு வேண்டாம். சாப்பிட்டு வந்திருக்கிறேன்.

ராஜலக்ஷ்மி: எங்கே சாப்பிடப் போயிருந்தாய்?

மஹேந்: பிறகு சொல்லுகிறேன். எனக்கு இப்பொழுது உடம்பு சரியாயில்லை.

வழக்கத்திற்கு விரோதமான இப்பதிலைக் கேட்டுத் தாயின் மனம் வருந்தியது. ஆனாலும் அவள் எதுவும் பேசாமல் அப்புறம் சென்றாள்.

இதற்குள் மஹேந்திரன் சமாளித்துக் கொண்டு, தான் செய்ததற்காக வெட்கி, "அம்மா! சாப்பாட்டை இங்கேயே கொண்டு வா" என்றான்.

ராஜலக்ஷ்மி: பசியில்லாவிட்டால் சாப்பிடுவானேன்?

தாயும் மகனும் சிறிது நேரம்வரை தத்தம் மரியாதையை விட்டுக்கொடுக்காமலே பேசினர். கடைசியில் மஹேந்திரன் மறுபடியும் சாப்பாட்டிற்கு உட்காரவேண்டி வந்தது.

---

## மூன்றும் அத்தியாயம்

மஹேந்திரன் அன்று இரவு முழுதும் தூக்கமின்றியே கழித்தான். மறுநாள் அதிகாலையிலேயே எழுந்திருந்து விஹாரியினிடம் சென்று, "நண்பா! இரவுமுழுவதும் யோசனைசெய்ததில் நான் அக்கன்னிகையை விவாகம் செய்துகொள்ளாவிடில் பெரியம்மாவுக்கு மிகவும் வருத்தமாக இருக்குமென்ற முடிவுக்கு வந்தேன். தன் சகோதரியின் பெண்ணை எனக்கு மணம் செய்வித்துத் தன்னிடமே

வைத்துக்கொள்ள வேண்டு மென்பதுதான் அவளுக்கு உள்ளூற இச்சை" என்றான்.

விஹாரி: மஹேன்! இதற்காகத் திடீரென்று புதிதாய் யோசிக்க வேண்டியது ஒன்றுமில்லையே. பெரியம்மாதான் தன் இஷ்டத்தை உனக்குப் பலதடவை தெரியப்படுத்தியிருக்கிறாளே.

மஹேந்: அதுதான் நானும் சொல்லுகிறேன். இப் பெண்ணை நான் கலியாணம் செய்துகொள்ளாவிடில் பெரியம்மா ஆயுள் முழுவதும் அதையே நினைத்து வருந்துவாள்.

விஹாரி பாராமுகமாய் எங்கோ பார்த்துக்கொண்டு, "வருந்தக்கூடும்" என்றான்.

மஹேந்: நான் ஆசாவைக் கலியாணம் செய்துகொள்ளாவிடில் நன்றாயிராது; அது அநியாயமுமாகும்.

விஹாரி தனது ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு உற்சாகமாயிருக்க யத்தனித்துக்கொண்டே, "நல்லதாயிற்று; உனக்குச் சம்மதமானால் பிறகு கேட்பானேன்? ஆனால் இந்தக் கடமையை நிறைவேற்றும் புத்தி உனக்கு நேற்றே-அந்தப் பெண்ணைப் பார்ப்பதற்கு முன்னமேயே-இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்" என்றான்.

மஹேந்: இப்பொழுதுதான் என்ன? ஒருநாள் பிந்தித் தோன்றியதால் என்ன முழுகிப் போய்விட்டது!

மஹேந்திரன், இனித் தாமதியாது எப்படியாவது கலியாணத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டுவிடத் துடித்தான். அன்னையிடம் சென்று, "அம்மா! உன் வார்த்தையைத் தட்ட நான் விரும்பவில்லை. விவாகத்திற்கு எனக்குச் சம்மதந்தான்" என்றான்.

ராஜலக்ஷ்மிக்குக் குட்டு வெளிப்பட்டு விட்டது. அன்று, ஏன் தன் ஓரகத்தி பெண்ணைப் பார்த்து வரப் போனாள், கூடவே மஹேந்திரனும் தன்னை அலங்கரித்துக் கொண்டு வெளியே கிளம்பினான் என்பவை யாவும் அவளுக்கு இப்பொழுது விளங்கிவிட்டன.

மகன் தனது பேச்சை அலட்சியம் செய்துவிட்டு அன்னபூரணியின் இஷ்டப்படி நடப்பது அவளது பொறாமைத் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. 'இருக்கட்டும். எப்படியாவது அன்னபூரணியின் எண்ணம் நிறைவேறாமற் செய்வது' என்று பிரதிக்ஞை செய்து கொண்டாள். மகனிடம், "நல்லது; உனக்கேற்ற நல்ல கன்னிகையாக நான் தேடுகிறேன்" என்றாள். மஹேந்திரன் ஆசாலதையின் பெயரைக் குறிப்பிட்டு, "வேறு பெண் தேடுவானேன்?" என்றான்.

ராஜலக்ஷ்மி: அப்பா! அந்தப் பெண் சரியில்லை. நீ அவளை விவாகம் செய்துகொள்ள நான் சம்மதிக்கவே மாட்டேன்.

மஹேந்திரன் தனது ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு சாந்தமாய், "ஏன் அம்மா? பெண்ணுக்கு என்ன குறை?" என்றான்.

ராஜலக்ஷ்மி எரிச்சலுடன், "பெண்ணுக்கு ஏனென்று கேட்க நாதியில்லை? அதைக் கட்டிக்கொண்டால் குடும்பத்தில் நமக்கு என்ன சுகம் ஏற்படும்?" என்றாள்.

மஹேந்: குடும்பத்தில் சுகமோ, இல்லையோ எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. பெண் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறாள்.

மஹேந்திரனின் பிடிவாதம், ராஜலக்ஷ்மிக்கு ஏற்கனவே அன்னபூரணியிடம் இருந்த வெறுப்பை அதிகரிக்கச் செய்தது. நேரே அன்னபூரணியின்முன் போய், "ஓர் அநாதைப் பெண்ணை என் ஒரே செல்வப் பிள்ளையின் கழுத்தில் கட்டி என்னையும் அவனையும் வேறாக்கச் சதிசெய்கிறாயா? உனக்கு ஏன் இந்தத் துர்ப்புத்தி?' என்று இரைந்தாள்.

அன்னபூரணி அழுதுகொண்டே, "மஹேந்திரனின் கலியாணப் பேச்சையே நான் எடுக்கவில்லையே. அவனாக உன்னிடம் வந்து என்ன சொன்னானோ. அதுவும் தெரியாதே" என்றாள்.

ராஜலக்ஷ்மி அவளது பேச்சை நம்பவில்லை. அன்னபூரணி விஹாரியை அழைத்துவரச் சொல்லி அவனிடம், "கலியாணம் உனக்கன்றோ நிச்சயித்தேன்? இது என்ன அமர்க்களம்! நீ அப்பெண்ணை மணம் செய்துகொண்டு என்னை இந்தச் சங்கடத்தினின்றும் காப்பாற்றமாட்டாயா? தங்கமான பெண். உனக்கேற்றவள்" என்று கண்ணீர் வழிந்தோடக் கெஞ்சினாள்.

விஹாரி: பெரியம்மா! உங்கள் சகோதரி புத்திரியை மணம் செய்துகொள்ள நான் எப்பொழுதாவது மறுப்பேனா? நீங்கள் அதற்காக என்னை வேண்டவும் வேறு வேண்டுமா? நான் எப்பொழுதும் தயார். ஆனால் மஹேந்—

அன்னபூரணி குறுக்கிட்டு, "விஹாரி, மஹேந்திரன் அவளை விவாகம் செய்துகொள்ளவே கூடாது. நான் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நீ அவளை மணந்தால்தான் என் மனம் நிம்மதி அடையும். அப்பெண்ணை மஹேந்திரனுக்குக் கொடுப்பதை நான் விரும்பவேயில்லை" என்றாள்.

விஹாரி இதற்குப் பிறகு ராஜலக்ஷ்மியிடம் போய், "அம்மா! நான் ஆசாலதையை மணப்பதென்று நிச்சய மாகிவிட்டது. எனக்கு வேறு யாரும் இல்லாததால் வெட்கத்தை விட்டு நானே இதை உங்களிடம் தெரிவிக்க வேண்டி வந்தது. மன்னிக்கவேணும்" என்று பணிவாக உரைத்தான்.

ராஜலக்ஷ்மி ஆச்சரியத்துடன், "என்ன சொல்லு கிறாய்! இதைக் கேட்க எனக்குக் கரைகடந்த சந்தோஷம். பெண் சாக்ஷாத் லக்ஷ்மியின் அவதாரந்தான். உனக்கேற்ற வள். கன்னிகையை நழுவவிடாதே, அப்பா!" என்றாள்.

விஹாரி: எப்படி நழுவவிட முடியும்? மஹேந்திரன் தானே தேடி எனக்காக இவளை நிச்சயித்திருக்கிறான்?

தன் மனோரதம் நிறைவேறாது ஒன்றன் பின் ஒன்றாக இடையூறு ஏற்படுவதை மஹேந்திரன் பார்த்தான். கோபம் பொங்கி எழுந்தது அவனுக்கு. அன்னை, பெரி யன்னை இருவரிடமும் கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு 'ஹாஸ்டலி'ல் போய் இருக்கலானான்.

ராஜலக்ஷ்மியினால் மகனது பிரிவு தாங்கமுடியவில்லை. அன்னபூரணியைப் போய் வேண்டினாள். "பையன் கோபித் துக்கொண்டு போய்விட்டான். அவனைச் சமாதானப் படுத்தி அழைத்து வர உன்னால்தான் முடியும்" என்றாள்.

அன்ன: தைரியமாயிரு. இரண்டுநாள் போனால் தானே கோபம் தணிந்து வருவான்.

ராஜலக்ஷ்மி: உனக்கு அவன் சுபாவம தெரியாது. தான் பிடித்ததை எப்படியாவது நிறைவேற்றியே தீரு வான். எப்படியோ உன் தங்கை பெண்ணைக் கொடுத்து—

அன்ன: அழகுதான்! அது எப்படி முடியும்? விஹாரிக்குக் கொடுப்பதென்று நிச்சயித்தாகிவிட்டது.

ராஜலக்ஷ்மி: ஆனால் என்ன? இப்பொழுதுதான் அதைத் தவிர்க்க முடியாதோ? நீ மனம் வைத்தால் எல்லாம் முடியும்.

ராஜலக்ஷ்மி உடனே விஹாரிக்குச் சொல்லி அனுப்பினாள். அவன் வந்ததும் அவனிடம், "அப்பா! உனக்கு ஏற்றவளாக நான் வேறு பெண் தேடித் தருகிறேன். இவளை விட்டுவிடு. இவள் உனக்குத் தகுதியில்லை" என்றாள்.

விஹாரி: அம்மா, முடியாது. எல்லாம் நிச்சயமாகி விட்டது.

ராஜலக்ஷ்மி அன்னபூரணியிடம் வந்து, "அக்கா, நான் உன் காலில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன். எப்படியாவது நீ விஹாரிக்குப் புத்திசொல்லி அவன் மனத்தை மாற்று" என்றாள்.

அன்னபூரணி வேறு வழியின்றி விஹாரியைத் தனியாய்க் கூப்பிட்டு, "குழந்தாய், உன்னை நான் எந்த வாயால் இப்பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளாதே என்று சொல்லுவேன்! ஆனால் நான் என்ன செய்வது? நீயே சொல். ஆசாவை நீ மணந்து கொண்டால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். ஆனால் விஷயமனைத்தும் நீயே அறிவாய்" என்றாள்.

விஹாரி: பெரியம்மா, நான் நிலைமையை நன்கு உணருகிறேன். நீங்கள் சொல்வதுபோல் நடக்க நான் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒரு பிரார்த்தனை: இனி என்றைக்

கும் என்னை நீங்கள் கலியாணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது.

இதைச் சொல்லி முடித்ததும் விஹாரி வெளியே போய்விட்டான். அன்னபூரணிக்குத் துக்கம் நெஞ்சைப் பிளந்தது. கண்களில் நீர் ததும்பியது. மஹேந்திரனின் நன்மையை உத்தேசித்துத் தன்னைத் தானே சமாதானப் படுத்திக்கொண்டாள்; எல்லாம் நன்மைக்கே என்று தேற்றிக்கொண்டாள்.

இடையில் தாய்க்கும் மகனுக்கும் வாதப்பிரதிவாதங்கள் நடந்துகொண்டேயிருந்தன. கலியாண லக்னமும் நெருங்கி விட்டது. எங்கும் தோரணமும் தீபமும் துலங்கின. மங்களவாத்தியம் வானைப் பிளந்தது. ஏராளமான பூரி தக்ஷிணையுடன் விவாகம் யாதொரு குறைவுமின்றி நடந்தேறியது.

ரூபவதியான புது நாட்டுப்பெண், நாணத்தை அணிகலனாகக்கொண்டு முதன்முதலாகக் கணவன் வீட்டில் பிரவேசம் செய்தாள். வாழ்வில் துன்பமுண்டென்பதை அக்கன்னிகை அறியாள். தன்னிடம் அன்புபூண்ட சிற்றன்னையிடம் வசிக்கப்போகும் ஆனந்தத்தில் சமுசயம், பயம் யாவும் மறைந்து போயின.

சிலநாட் கழித்து ராஜலக்ஷ்மி மஹேந்திரனிடம், "ஆசா கொஞ்சநாள் பெரியப்பாவிடம் போயிருந்து வரட்டும்" என்றாள்.

மஹேந்: ஏன்? எதற்காக?

ராஜலக்ஷ்மி: உனக்குப் பரீக்ஷை சமயம். படிப்பதற்கு இடையூறின்றி இருக்கட்டும்.

மஹேந்: நான் என்ன குழந்தையா? என் நன்மை தீமையை அறிந்துகொள்ள எனக்குச் சக்தியில்லையா?

ராஜலக்ஷ்மி: (மெதுவாய்) இப்பொழுதுதான் கலி யாணமாகி ஒரு வருஷமாயிற்று. அதற்குள்—

மஹேந்: (சற்று அதிகாரத்துடன்) அவளுக்குத் தாய்தந்தை யிருந்தால் எனக்கும் அனுப்பத் தடையொன் றும் இராது. ஆனால் பெரியப்பாவின் வீட்டில் அவளைக் கொண்டுபோய்விட நான் விரும்பவில்லை.

ராஜலக்ஷ்மி: (மனத்திற்குள்ளே) அடேயப்பா! இப்பொழுதே இந்தப் பாடு! அவள்தான் ஸர்வமும்; நான் ஒன்றுமே யில்லை! நேற்றுக் கலியாணமாயிற்று. இதற்குள் அவளுக்காக இவ்வளவு அநுதாபமா? நன்றாயிருக்கிறது! எனக்குந்தான் கலியாணம் ஒரு காலத்தில் ஆயிற்று. ஆனால் இப்படி வெட்கமின்றிப் பெண்சாதிக்குப் பரிந்து பேசியவரைக் காணேன்.

அதற்குள் மஹேந்திரன், "அம்மா, கவலைப்படா தே; பரீக்ஷைக்கு ஒரு விக்கினமும் நேராது" என்று சொல்லிப் போய் விட்டான்.

---

## நான்காம் அத்தியாயம்

ராஜலக்ஷ்மி நாட்டுப் பெண்ணிற்கு வீட்டு வேலை கள் யாவும் கற்பிப்பதில் தீவிரமாய் முனைந்தாள். ஆசா விற்கு நாள் முழுவதும் சமயலறை, சாமான் அறை, சுவாமியறை இவற்றிற்குள்ளாகவே வேலை சரியாயிருக்கும். போதாக்குறைக்கு அவள் தனிமையை உணராமல் இருக்க வேண்டி ராஜலக்ஷ்மி அவளை இரவிலேயும் தன் பக்கத்தி லேயே படுக்க வைத்துக்கொண்டாள்.

அன்னபூரணி முன்யோசனையுடன், தான் ஆசாவிடம் அதிகம் நெருங்காமல் சற்றுத் தூரத்திலேயே இருந்து வந்தாள். பசியால் வருந்துபவன்முன் நல்ல போஜனம் பரிமாறப்பட்டும் அவன் அதைத் தொடாமல் பார்த்திருக்க வேண்டுமென்றால் எப்படியிருக்குமோ அதே நிலையில் இருந்தான் மகேந்திரனும். தன் புதுமனைவியின் மென்மையான தேகம் வீட்டு வேலைகளினால் வாட்டப்படுவதைப் பார்த்துச் சகிக்க எப்படி அவனால் முடியும்?

அவன் மெதுவாய் அன்னபூரணியிடம் போய், "பெரியம்மா, இம்மாதிரி நாட்டுப்பெண்ணிடம் வேலை வாங்கினால் அவள் தேகாரோக்கியம் கெட்டுவிடுமே. இதை என்னால் பார்க்கச் சகிக்க வில்லையே!" என்றான்.

ராஜலக்ஷ்மி மருமகளிடம் சற்று அளவுக்கு மீறியே வேலை வாங்குகிறாளென்பது அன்னபூரணிக்கும் தெரியும். ஆனாலும் அதைக் காட்டிக்கொள்ளாது அவனிடம், "ஏண்டா, வீட்டு வேலைகளைக் கற்பிப்பதில் கெடுதல் என்ன இருக்கிறது? வேலை செய்தால் தேகாரோக்கியம் கெட்டுவிடுமா? இந்தக் காலத்துப் பெண்களைப்போல் நாவல் வாசிப்பதும், தையல் தைப்பதும், மேல் நாட்டாரைப் போல் நாற்காலியில் வீற்றிருப்பதும் என்ன அழகாகவா இருக்கின்றன?" என்றாள்.

மகேந்திரன் சற்று ஆத்திரத்துடன், "அழகோ, அழகில்லையோ, காலத்திற்கேற்றவாறு இருப்பதுதான் சரி. இப்பொழுது நான் நாவல் படித்து அதன் சுவையை அறிந்து அனுபவிப்பது போல், அவளும் செய்தால் அதில் கேலிக்கோ, வருந்துவதற்கோ என்ன இருக்கிறது?" என்றான்.

அன்னபூரணியின் அறையில் பேச்சுக்குரல் கேட்ட வுடன் ராஜலக்ஷ்மி தனது கை வேலையையும் அப்படியே விட்டுவிட்டு அங்கே ஓடிவந்தாள். வந்ததுமே கடுங்கு லுடன், "நீங்கள் இருவரும் என்ன கூடிக் கூடிப் பேசி கொண்டிருக்கிறீர்கள்?" என்று கூப்பாடு போட்டாள்.

மஹேந்திரன் சற்று ஆத்திரத்துடன், "கூடிப் பே ஒன்றுமில்லை. என் மனைவியை வேலைக்காரிபோல நடத்து வது எனக்குப் பிடிக்கவில்லை" என்றான்.

ராஜலக்ஷ்மி பொங்கிவரும் கோபத்தைக் கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டு, "பின் அவள் என்ன செய்ய வேண்டும்?" என்றாள்.

மஹேந்: நான் அவளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுக்கப் போகிறேன்.

ராஜலக்ஷ்மி பதிலொன்றும் உரையாது சரேலென்று உள்ளே போய், நாட்டுப்பெண்ணைக் கையைப்பிடித்து அழைத்து வந்து மஹேந்திரனுக்கு முன் நிறுத்தி, "இதோ உன் மனைவி. எழுதப்படிக்கக் கற்றுக்கொடு!" என்றாள்.

இதைச் சொல்லி முடித்ததும் தன் ஓரகத்தியிடம் போய் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு, "அக்கா! என்னை மன்னிக்க வேணும். எனக்கு உன் பெண்ணின் யோக்கியதை தெரியவில்லை. புஷ்பம்போன்ற அவள் கரங்களை வீட்டு வேலை செய்யச்சொல்லி மாசுபடியச் செய்துவிட்டேன். இப்பொழுது நீ அவளைச் சுத்தமாக்கி, துரைசானிபோல் மஹேந்திரனிடம் ஒப்பித்துவிடு. கால் மேல் கால்போட்டுக்கொண்டு அவள் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளட்டும். நான் வீட்டில் அடிமைத்தொழில் செய்கிறேன்" என்றாள்.

இதற்குமேல் ராஜலக்ஷ்மியால் அங்கே நிற்கமுடியவில்லை. தனது அறையில் போய்த் தடாலென்று கதவை அறைந்து மூடி உள்ளே படுத்துக்கொண்டாள்.

அன்னபூரணி மனங்கலங்கி அப்படியே யோசனையில் ஆழ்ந்தாள். திடீரென்று ஏற்பட்ட இக்கலகத்திற்குக் காரணம் என்னவென்று ஆசாலதைக்குப் புரியவில்லை. அவளை வெட்கம், பயம், துக்கம் எல்லாம் ஒருமிக்கச் சூழ்ந்தன. மகேந்திரன் மனத்திற்குள்ளேயே, 'சரி, இனி நானே என் மனைவியைக் கவனித்துக் கொள்ளுகிறேன். அதுதான் நேர்மையானது' என்று எண்ணிக்கொண்டான்.

எப்பொழுது கடமையும், விருப்பமும் ஒருங்கே சேர்ந்தனவோ அப்பொழுது தீயும் காற்றும் சேர்ந்தது போலத்தான். காலேஜ், பரீக்ஷை, சிநேகம், ஊரார் அவச்சொல் யாவும் காற்றில் பறக்கவிடப்பட்டன. மனைவியைச் சீர்திருத்துவதுதான் மகேந்திரனின் முக்கிய நோக்கமாய்விட்டது. இதில் வீட்டு வேலையையும் ஊரார் பழிப்பையும் அவன் லட்சியமே செய்யவில்லை.

இங்கே, ராஜலக்ஷ்மி மமதையுடன் அறைக்குள் உட்கார்ந்துகொண்டு தானே மனத்திற்குள், 'வரட்டும் மகேன்; மனைவியும் தானுமாய் வந்து கதவைத் திறக்கும்படி வேண்டிக் கொள்ளட்டும். நான் திரும்பிப் பார்ப்பேனா? பார்க்கலாம், எவ்வளவுநாள் தாயைவிட்டு மனைவியுடன் இருக்கிறானென்று' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள்.

ஆனால் பகல் கழிந்தது. இரவும்போய் மறுதினமும் வந்தது. பிள்ளை மன்னிப்புக் கேட்க வரும் வழியாகக் காணோம். 'ஆகட்டும்; இன்று அவன் வந்தால் சற்று முரணுவது; கோபித்துக்கொண்டு விட்டுப் பிறகு அவனை

மன்னித்தே விடுகிறேன்' என்று அவள் நிச்சயித்துக் கொண்டாள்.

அன்று பகல் முழுவதும் காத்திருந்தும் மஹேந்திரன் வரக் காணோம். தாயின் மனது இளகிவிட்டது. 'சீ, பையன் கோபித்துக் கொண்டால் நாமும் அதற்காகக் கோபித்துக்கொள்வதா? நானே அவன் அறைக்குப் போய் அவனுக்கு மன்னிப்பளித்து வருகிறேன்' என்று எழுந்தாள்.

மாடியில் முன்புற ஓரமாய் ஒரு சிறு அறை. அங்கே தான் மஹேந்திரன் படிப்பது, தூங்குவது எல்லாம். தினமும் மகனது அறையைச் சுத்தம் செய்து, துணிமணிகளை ஒழுங்காய் எடுத்து மடித்துவைத்துப் படுக்கையை உதறிப்போட்டு ஸகல பணிவிடையும் செய்தால்தான் ராஜலக்ஷ்மிக்குத் தூக்கம் வரும். இதில் அவள் ஒருநாளேனும் தவறியது இல்லை. இரண்டு தினங்களாய் இவைகளைச் செய்யாமல் இருந்தது சிசுவிற்குப் பாலூட்டத் தவறிய தாயின் மனத்தைப்போல் அவளை வருத்தியது. 'பகல் நேரமானதால் மஹேந்திரன் காலேஜிற்குப் போயிருப்பான். நான் அவன் வருவதற்குமுன் அவன் அறையில் எல்லாவற்றையும் சரியாக வைத்து வந்தேனானால், வந்து பார்த்ததும் தாயின் மனது இரங்கிவிட்டது என்பது நன்றாகத் தெரிந்துவிடும்' என்று ராஜலக்ஷ்மி எண்ணினாள்.

அவள் மெல்லப் படியேறி மேலே சென்றாள். மஹேந்திரனின் அறைக் கதவு ஒன்று திறந்தபடி இருந்தது. எதிரே பார்த்த காட்சி சர்ப்பம் தீண்டியது போல் ராஜலக்ஷ்மியைத் திடுக்கிடச் செய்தது. கட்டிலின்மேல் மஹேந்திரன் படுத்துக்கொண்டிருக்கிறான். கதவுப்புறம்

முதுகைத் திருப்பிக்கொண்டு ஆசா கட்டிலில் அவனருகில் உட்கார்ந்துகொண்டு மெல்ல அவன் கால்களை வருடிக் கொண்டிருக்கிறாள். பட்டப்பகலில், திறந்த உள்ளில் யௌவன தம்பதிகளின் இந்த லீலையைக் கண்டு ராஜலக்ஷ்மி வெட்கி உடல்குன்றிப் பேசாது அப்படியே கீழே இறங்கி வந்துவிட்டாள்.

---

## ஐந்தாம் அத்தியாயம்

மழையின்றிக் களத்தில் நட்ட பயிர் உலர்ந்து கருகும் சமயம் மழை பெய்யவே, அப்பயிர் இழந்த ஜீவ சக்தியைப் பெற்றுத் தழைத்துப் பசுமை யோங்குகிறது; தலை தூக்கிக் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கிறது. ஆசாவின் நிலையும் இதை ஒத்ததுதான். பிறந்தகத்தில் அவளை மனதார நேசிப்பார் யாருமில்லை. அநாதைப் பாலிகையான அவள்மேல் இன்று பகவான் கருணை கூர்ந்து அன் பென்னும் முகுடத்தை அவள் சிரசில் அணிவித்ததைப் பூர்ணமனத்துடன் அவள் அங்கீகரிப்பதிற் பின்வாங்க வில்லை. சிறிதும் தயக்கமோ வெட்கமோ இன்றித் தன் கணவனின் ஹிருதய சிம்மாசனத்தைத் தனதாக்கிக் கொண் டாள். பிறகு பதியின் பாதங்களை வருட அவளுக்கு நாணம் ஏன்?

நூதனமாக வந்த பிறர்வீட்டுப் பெண், தன் மகனி டம் வெகுகாலம் பழகியவள்போல் துணிச்சலுடன் பட்டப்பகலில் ஒரு கட்டிலில் வீற்றிருப்பதைக் காண ராஜலக்ஷ்மியால் சகிக்க முடியவில்லை. அவள் மனம் அனலி லிட்ட மெழுகுபோல் உருகியது. தான் மனமெரிவது போதாதென்று அன்னபூரணியிடமும் சென்று, "அக்கா

போய்ப்பார், அந்த அநியாயத்தை! உனது நவாப்வம்சத்துப் பெண் என்ன வித்தை கற்று வந்திருக்கிறாளென்று வந்து பார்! வீட்டில் இன்னும் உற்றார் பெரியோர் மாத்திரம் இன்று இருந்திருந்தால்—" என்பதற்குள் அன்னபூரணி மிகவும் வியாகுலத்துடன், "அம்மா, நீ என்னிடம் ஏன் முறையிடுகிறாய்? உன் மருமகள் தானே? அவளைத் தண்டிக்கவோ சீர்திருத்தவோ உனக்கும் அதிகாரம் இருக்கிறது" என்றாள்.

ராஜலக்ஷ்மி ஆவேசத்துடன், "என் மருமகள்! உன்னைப்போன்ற தூர்மந்திரி இருக்கும்போது அவள் ஏன் என் சொற்படி நடப்பாள்!" என்று கர்ஜித்தாள்.

அன்னபூரணி தடதடவென்று தனது வருகையைத் தெரிவித்துக்கொண்டே மஹேந்திரனின் அறையிற் புகுந்தாள். அங்கே ஆசாவிடம், "ஏண்டீ, நீ என்ன என் மானத்தைப் போக்குகிறாயே இப்படி? உனக்கோ வெட்கமுமில்லை. வேலையில்லை, பொழுதில்லை. கிழட்டுமாமியாரின் தலையில் வீட்டுப் பொறுப்பையெல்லாம் கட்டிவிட்டு நாள் முழுவதும் அறையில் குசாலாய் உட்கார்ந்திருக்கவா நான் உன்னை இங்கே கொண்டுவந்தது? ஐயோ! என் தலையிலெழுத்து இப்படியா ஆகவேண்டும்?" என்றாள்.

மேலே பேச முடியாது தன் தலைவிதியை நொந்து கொண்டு அழலானாள் அன்னபூரணி. ஆசாவும் எழுந்து ஒரு மூலையில் நின்றுகொண்டு அழ ஆரம்பித்தாள்.

மஹேந்: பெரியம்மா, வீணாக ஆசாவை ஏன் நீ மிரட்டுகிறாய்? நான்தான் அவளை இங்கேயே இருக்கும்படி தடுத்து நிறுத்தி வைத்துக் கொண்டேன்.

அன்ன: அதனால் நீ மிகவும் நன்மை செய்துவிட்டா யாக்கும்! அவள்தான் தாய் தந்தையற்ற அறியாச் சிறுமி. தாயிடமிருந்து குடும்பவேலைகளைக் கற்கத்தான் அவளுக்கு முடியாது போயிற்று. எது நல்லது, எது கெட்டது என்பதைக் கூட அவள் அறியாள். நீ அவளுக்கு என்ன கற்பித்துக்கொண்டிருக்கிறாய்?

மஹேந்: இதோ பார்: நான் அவளுக்காகச் சிலேட், நோட்டு, முதல் பாட புத்தகம் எல்லாம் வாங்கிவந்து எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்து வருகிறேன். நீங்கள் என்னவேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். நான் அவசியம் அவளுக்குப் பாடம் கற்பிக்கத்தான் போகி றேன்.

அன்ன: என்ன! ஒருநாள் முழுவதுமா பாடமும் படிப்பும்? ஏதோ சாயங்காலம் ஒழிந்த நேரத்தில் ஒன் றிரண்டு மணி நேரம் படித்தால் போதாதோ?

மஹேந்: படிப்பு ஒன்றும் நீ நினைப்பதுபோல் லேசில் வந்து விடாது, பெரியம்மா. அதற்கு வெகுநேரம் வேண் டும்.

அன்னபூரணி சினத்துடன் வெளியேறினாள். ஆசாவும் மெதுவாய் அவள் பின்னேயே கிளம்பினாள். மஹேந்திரன் உடனே அவளைக் கையைப்பற்றி இழுத்து நிறுத்தினான். அழுத கண்ணுடன் அவள் ஏங்கி நிற்பதை அவன் பொருட்படுத்தவில்லை. “நில்; என்ன அவசரம்? வெகு நேரம் தூங்கிப் பொழுதை வீணாக்கிவிட்டேன். இப்பொ ழுது பாடத்தை ஆரம்பித்து அதை ஈடுசெய்யவேண்டும்” என்றான்.

மஹேந்திரனின் மேற்பார்வையில் ஆசாவின் படிப்பு எம்மாதிரி விருத்தியடைகிறதென்று சற்றுக் கவனிப்

போம்; அம்மாதிரி, உண்மையில் ஒரு பள்ளிக்கூட இன்ஸ்பெக்டரால் கூடச் செய்யச் சாத்தியப்படாது.

ஆசாவிற்குத் தன் கணவனிடத்தில் அபார நம்பிக்கை. தனக்குச் சகஜமாய்ப் படிப்பு வருமென்று அவளே நம்பவில்லையாகுலும், பதியினிடம் பாடம் கற்று அவன் விருப்பத்தை நிறைவேற்றுவது தனது கடமையென்று கருதிளுள். இதனால் அவள் மிகவும் ஊக்கத்துடன் மனத்தை இருத்திக் கவனத்துடன் படிக்கவேண்டு மென்று கட்டிலின்மேல் ஒரு மூலையில் உட்கார்ந்து கொள்வாள். புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு தலையை அசைத்துக்கொண்டே ஒவ்வொரு வரியாய் நெட்டுருப் பண்ண ஆரம்பிப்பாள்.

இன்னொருபுறம் மஹேந்திரன் எதிரில் மேஜையின் மீது வைத்தியப்புத்தகங்களை மூடிவிட்டு, "ஆசா! எங்கே, கொண்டு வா இங்கே புத்தகத்தை. எதுவரை படித்திருக்கிறாய் பார்க்கலாம்?" என்பான்.

ஆசா 'உபாத்தியாயர்' தம்மை எங்கே பரீக்ஷிக்கப் போகிறாரோ வென்று பயப்படுவாள். ஏனெனில் பரீக்ஷையில் தேறுவோம் என்ற நம்பிக்கையே அவளுக்கு இல்லை. எவ்வளவோ தலைகீழாக முயன்றும் முதற்பாட புத்தகத்தின் பாடமே மனத்தில் ஏறவில்லை. பாடத்தைத் தெரிந்து கொள்ள அவள் அதிகமாக முயல முயல ஒவ்வோர் அக்ஷரமும் ஒரு மலைபோல் தோன்றி அவள் அறிவை முன்னிலும் அதிகமாகக் குழப்பிவிடும்.

'உபாத்தியாயர்' கூப்பிடவே குற்றவாளியைப்போல் புத்தகத்துடன் மஹேந்திரனின் நாற்காலியருகில் போய் நிற்பாள். அவன் தன் ஒரு கையை அவளது இடுப்பைச் சுற்றிப் போட்டுக் கட்டி அவள் ஓடாதபடி பிடித்துக்

கொண்டு, மற்ருெரு கையால் புத்தகத்தை வாங்கிக் கொண்டு, "எங்கே, எதுவரை இன்று படித்தாய்? காண்பி பார்க்கலாம்" என்பான். ஆசா ஏதாவது ஒரு வரியைக் காண்பித்து, "இதுவரைதான்" என்பாள். "ஓஹோ! இவ்வளவு படித்துவிட்டாயா? என்னுல் இத்தனை படிக்கவே முடியாது!" என்று ஆச்சரியத்துடன் கூறிக்கொண்டே தனது புத்தகத்தில் முதல் இரண்டு பக்கங்களைக் காண் பித்து, "நான் பார், இவ்வளவுதான் படித்தேன்" என் பான். அபலை ஆசா, "பின் இத்தனை நேரம் என்னசெய்து கொண்டிருந்தீர்கள்?" என்பாள். மஹேந்திரன் அவளது மோவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு, "என்ன செய்துகொண்டிருந்தேனு? ஒருத்தியைப்பற்றியே நினைத் துக்கொண்டிருந்தேன். ஆனுல் அந்தக் கல்நெஞ்சினளோ என்னைத் திரும்பிக்கூடப் பாராது தன் பொன் வண்டுப் பாடத்திலேயே முழுக்கவனமும் செலுத்திக்கொண்டிருந் தாள்" என்பான். ஆசா அன்பினுலும் நாணத்தினுலும் இதற்குப் பதில் ஒன்றும் உரையாது வெட்கி நிற்பாள்.

மஹேந்திரனின் இந்தப் 'பள்ளிக்கூட'த்தில் கவர்ன் மெண்டு ஸ்கூல் பாட விதிமுறை எதுவும் நடக்காது.

எப்பொழுதாவது அவன் வெளியே போகும் சமயம் பார்த்து ஆசா மறுபடி படிக்க ஆரம்பிப்பாள். அவன் எங்கிருந்தோ பின்புறமாக வந்து அவள் கண்களை இறுகப் பொத்திக்கொண்டு, "என்ன கல்நெஞ்சு! நான் கண்மறைந் ததும் என்னை அறவே மறந்து படிக்க ஆரம்பித்துவிடு கிருய்" என்பான்.

ஆசா: என்னை நீங்கள் அசடாயடிக்க விரும்பு கிறீர்கள்.

மஹேந்: நீ கல்வியற்ற பேதை, நான் மாத்திரம் கல்வியில் கரைகண்ட பண்டிதனோ?

ஆசா உடனே எதையோ நினைத்துக்கொண்டவளாய், "நானென்ன உங்கள் படிப்பிற்கு இடையூறா யிருக்கிறேனா?" என்றாள்.

மஹேந்திரன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "இதன் மர்மம் உனக்கு எப்படித் தெரியும்? நீ என்னவோ நான் எதிரில் இல்லாவிட்டாலும் சுலபமாய்ப் படிக்கிறாய். ஆனால் எனக்கோ நீ இல்லாவிடில் படிப்பே ஓடுவதில்லை" என்றான்.

எத்தனை பெரிய குற்றச்சாட்டு! ஆசாவின் கண்களில் மளமளவென்று நீர்த்துளி. உடனே கணவனின் அன்பென்னும் சூரியனைக் கண்டதும் பனித்துளிபோல் அது மறைந்துவிடும்.

'மாணவி'யின் பாடத்தில் 'உபாத்தியாய'ரே இப்படிக் குறுக்கிட்டால் அபிவிருத்தி எப்படி ஏற்படும்? சிலசமயம் சித்தி கோபிப்பாளே என்ற பயத்தினால் மனம் கலங்கும். படிப்பதாகச் சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிருப்பதெல்லாம் அவர்களை ஏமாற்ற ஒரு ஹேதுவென்று அவளுக்குத் தோன்றும். மாமியார் எதிரில் வர நேரிட்டால் வெட்கம் தலையெடுக்க முடியாது. மாமியாரோ அவளை வேலை செய்யச் சொல்வதுமில்லை; புத்திமதியும் சொல்வதில்லை. 'சொல்லாவிட்டால் என்ன? நாமே போய்ச் செய்யலாம்' என்று எதையாவது செய்ய ஆரம்பித்துவிட்டாலோ, கோபத்துடன் ராஜலக்ஷ்மி ஓடிவந்து, "என்னடீ செய்ய வந்துவிட்டாய்? மேலே அறைக்குப் போ! பாடத்திற்கு எங்காவது குந்தகம் ஏற்படப்போகிறது!" என்பாள்.

ஒருநாள் அன்னபூரணி ஆசாவிடம், "உன் படிப்பையும் வாசிப்பையும் பார்த்தால் நீ அவனைக்கூடப் பரீக்ஷையில் தேறவிட மாட்டாயென்று தோன்றுகிறது" என்றாள். ஆசா மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். மஹேந்திரனிடம் போய், "நான் உங்கள்கூட இருப்பதால் உங்கள் படிப்பில் தடை ஏற்படுகிறது. இன்றைய தினத்திலிருந்து நான் கீழே சித்தியிடமே படுத்துக் கொள்ளுகிறேன்" என்றாள். இதைச் சொல்லி முடிக்குமுன் கண்ணீர் பெருக்கெடுத்தோட, அவளது மெல்லிய தேகம் பதறியது.

மஹேந்: நல்லது! நீ அங்கே போ; நானும் வருகிறேன்! பெரியம்மா இந்த அறைக்கு வந்துவிடட்டும்.

இம்மாதிரிக் கேலியான பதிலைக் கேட்டு ஆசா சினந்தாள்.

மஹேந்: ஆசா, இதைவிட நாள் முழுவதும் நீயே நான் சரிவரப் படிக்கிறேனா இல்லையா என்று மேற்பார்வையிட ஏன் னெதிரிலேயே ஏன் இருந்துவிடக்கூடாது? நான் படிக்கிறேனா இல்லையா என்பதை அப்பொழுது பார்!

சிக்கலான விஷயம் சுலபமாய்த் தீர்ந்துபோயிற்று! ஆசாவின் மேற்பார்வையில் மஹேந்திரனின் கல்வி எவ்வளவு முன்னேற்றம் அடைந்தது என்பதற்கு அவ்வருஷம் அவன் பரீக்ஷையில் 'கோட்' அடித்ததே தக்க சான்று. ஆசாவுக்கோ முதற்பாட புத்தகம் முடியமுடியத் தனது பெயர்கூடத் தப்பில்லாமல் எழுத வரவில்லை; அவ்வளவு அபிவிருத்தி!

இவ்வளவு அழகான படிப்பிற்குத் தடையும் ஒன்று இருந்தது. எதிர்பாராதபோதெல்லாம் மஹேந்திரனைக் கூப்பிட்டுக்கொண்டே விஹாரி வந்து தொலைவான்.

அறையை விட்டு வெளியே வந்தா லொழிய விடவும் மாட்டான். "படிப்பை இப்படி அலக்ஷியம் செய்துவிட்டு இருக்கலாமா?" என்று குத்தலாகச் சொல்வான். ஆசாவிடம், "ஏனம்மா, எதிலும் மிதம் வேண்டும். போஜனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சுவைத்து அருந்தினால்தான் அதன் ருசி தெரியும். ஒரே விழுங்காய் விழுங்கிவிட்டால் அஜீரணந்தான் ஏற்பட்டுப் பிறகு அதற்கு வைத்தியம் செய்ய நேரிடும்" என்று கேலியாகப் பேசுவான்.

மஹேந்: ஆசா, நீ விஹாரி சொல்வதைப் பொருட் படுத்தாதே! நமது சுகம் அவனுக்கு விஷம்போல் இருக்கிறது.

விஹாரி: அந்தச் சுகம் உன் வசத்திலேயே இருக்கு போது அதைப் பிறர் அசூயைப் படாதவாறு கொஞ்ச கொஞ்சமாய் அனுபவியேன்.

மஹேந்: உனக்கு இது தெரியாது போலும்: அ யைப்படுகிறவர்களை இன்னும் அதிக அசூயை கொள்ள செய்வதில் ஒரு சுகம் இருக்கிறது.

மனைவியிடம் இவ்வாறு சொல்லிவிட்டு மஹேந்திரன் "ஆசா, ஈசுவர கிருபையால் நல்லதாய்ப் போயிற்று. இ லாவிடில் இந்த விஹாரியின் கையிலல்லவா உன்னை கொடுக்க இருந்தேன்?" என்றான்.

விஹாரி முகம் சிவக்கக் கோபத்துடன், "போதும் வாயை மூடிக்கொள்!" என்றான்.

இவ்விதமான சம்பாஷணை ஆசாவுக்கு விஹாரியின் பால் வெறுப்பை உண்டாக்கியது. முதலில் அவனை தனக்கு விவாகம் செய்ய நிச்சயம் ஆகியிருந்தது என்

காரணத்தாலேயே அவள் அவனிடம் பாராமுகமாக இருந்து வந்தாள். அவனும் இதை அறியாமலில்லை. அவன் மனத்தைப் புண்படுத்தியதில் மஹேந்திரனுக்குச் சந்தோஷம்.

ராஜலக்ஷ்மி விஹாரியினிடம் தன் துக்கத்தை வெளியிட்டு அழுதாள்.

விஹாரி, "அம்மா, பட்டுப்பூச்சி உள்ளேயிருக்கும் வரை அது தன்னைச் சுற்றிக் கூடு கட்டிக்கொண்டு பட்டு உற்பத்தி செய்துகொண்டேயிருக்கும். ஆனால் அது தன் பந்தத்தை அறுத்துக்கொண்டு ஒருமுறை வெளியே பறந்துவிட்டதோ, அதைத் திருப்பிக் கூண்டிற்குள் அடைப்பது முடியாத காரியம். அதுபோலத்தான் இருக்கிறது மஹேந்திரனின் நிலையும். தாய்க்கும் மகனுக்கும் உள்ள பாசம் இப்படி அறுபடுமென்று யார் கண்டார்கள்?" என்று துக்கித்தான்.

மஹேந்திரன் பரீக்ஷையில் தவறினான் என்ற செய்தி கேட்டதும் ராஜலக்ஷ்மி கோபாக்கினி பொங்கியெழ ஆர்ப்பரித்தாள். அக்கோபத்தீ அன்னபூரணியையும் பொசுக்கத் தவறவில்லை. அவள் மனமுடைந்து அன்ன ஆகாரம் நித்திரை யாவும் துறந்தாள்.

---

## ஆறாம் அத்தியாயம்

**ம**ழைக்கால ஆரம்பம். அந்திப்பொழுது. சற்றுமுன் தான் மழைபெய்து ஓய்ந்திருந்தது. இன்னமும் வானத்தில் மேகங்கள் சூழ இருண்டிருந்தது. மஹேந்திரன் பட்டுச் சட்டையும் தூய்மையான ஜரிகை அங்கவஸ்திரமும் தரித்து மிகச் சந்தோஷித்தனாய்த் தனது அறைக்குள் நுழைந்தான். திடீரென்று பிரவேசித்து ஆசாவைத்

திடுக்கிடச் செய்யவேண்டுமென்பதற்காகச் சப்தமின்றி நடந்து வந்தான். கிழக்குப் புற ஜன்னற் கதவு திறந்து இருந்தது. வெளியிலிருந்து காற்றும் தூற்றலும் உள்ளே அடித்துக்கொண்டிருந்தன. காற்றில் விளக்கும் அணைந்திருந்தது. ஆசாவோ கட்டிலின்கீழ்த் தரையில் படுத்து விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள்.

மஹேந்திரன் பரபரப்புடன் அருகில் போய், "ஏன்? என்ன சங்கதி? ஆசா!" என்றான். ஆசாவின் அழுகை அதிகரித்தது. கடைசியாக விக்கிக்கொண்டே, தன் சித்தி, வீட்டில் சச்சரவு பொறுக்கமாட்டாமல் வீட்டை விட்டுத் தன் அத்தான் அகத்திற்குச் சென்றுவிட்டதைத் தெரிவித்து மேலும் அழலானாள்.

தனது அன்றைய சுகவாழ்வில் மண் விழுந்ததை நினைத்து மஹேந்திரன் வெகுண்டான். அவனது கோபம் முழுவதும் தாயின்மீது திரும்பியது. அவள்தான் இவ்வளவிற்கும் காரணமென்று நம்பினான். "இருக்கட்டும். இவளுக்குப் புத்தி கற்பிக்கிறேன். பெரியம்மா போன இடத்திற்கே நானும் மனைவியுடன் போய்விடுகிறேன். இவள் யாருடன் பிறகு சண்டை பிடிப்பாள் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே வீட்டில் சப்தம்போட்டு ஆர்ப்பரித்தான். ஆட்களை அழைத்துச் சாமான்களையெல்லாம் எடுத்துக் கட்டச்சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தான். ராஜலக்ஷ்மிக்கு எல்லாம் புரிந்தது. மிகவும் சாந்தமாய் மஹேந்திரனிடம் போய், "ஏன், எங்கே போகிறாய்?" என்று கேட்டாள்.

அவன் பதிலே சொல்லவில்லை. அடுத்தடுத்துக் கேட்டதன்பிறகு, "பெரியம்மாவிடம் போகிறேன்" என்றான்.

ராஜலக்ஷ்மி: நீ போகவேண்டாம். நானே உன் பெரியம்மாவை இங்கே அழைத்து வருகிறேன்.

அவள் ஒரு வண்டி கொண்டுவரச் செய்து அன்ன பூரணியிடம் மறுவினாடியே சென்றாள். அன்னபூரணியின் முன் நமஸ்கரித்தபடியே ராஜலக்ஷ்மி, "அக்கா, திருப்தி யடை! என்னை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

அன்னபூரணி ராஜலக்ஷ்மியின் காலை இறுகப் பிடித்துக்கொண்டு ஈனக்குரலில், "அம்மா, என்னை ஏன் நரக வேதனைக்கு ஆளாக்குகிறாய்? உன் ஆக்ஞைக்குக் கீழ்ப் படிய நான் காத்திருக்கிறேன்" என்றாள்.

ராஜலக்ஷ்மி: நீ போய்விட்டாயாம்; உன் பின்னாலேயே மஹேந்திரனும் மனைவியை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டுப் போய்விடுகிறானாம்!

மமதையும் கோபமும் மேலே பேசவொட்டாது தடுக்க, ராஜலக்ஷ்மி அழுதுவிட்டாள். அன்னபூரணி ராஜலக்ஷ்மியுடன் வீட்டிற்குத் திரும்பினாள். வெளியில் இன்னும் தூறிக்கொண்டிருந்தது. ஆசாவின் அழுகை ஓய்ந்து மஹேந்திரன் அவளைச் சந்தோஷப்படுத்த முயன்று கொண்டிருந்தான். சுகமய வாழ்க்கையில் அன்றைய இரவு தூக்கமாகக் கழிய அவன் விரும்பவில்லை. இச்சமயம் அன்னபூரணியும் ராஜலக்ஷ்மியும் உள்ளே வந்தனர்.

அன்னபூரணி ஆசாவிடம், "ஆசா, உன் தொல்லை பொறுக்க மாட்டாது வீட்டை விட்டு வெளியேறினாலும், அங்கும் பின் தொடருகிறாய். எனக்கு மனவமைதி எங்கும் கிடையாதா?" என்றாள்.

ஆசா அடியுண்ட மான்போல் மருண்டாள்.

மஹேந்திரன் ஆத்திரத்துடன், "ஏன் பெரியம்மா? அவள் உன்னை என்ன செய்துவிட்டாள்?" என்றான். அன்னபூரணி மறுபடி ஆசாவிடம், "புதிய நாட்டுப் பெண்ணுக்கு இவ்வளவு வெட்கங்கெட்ட தனம் இருந்து நான் பார்த்ததேயில்லை. உன் முகத்திலே விழிக்கக் கூடாதென்று வீட்டைவிட்டு ஒழிந்தேன். மாமியாரை அழைவைத்து என்னைக் கூட்டிவரச் செய்தாயே நீ!" எனப் புலம்பினாள்.

தனது ஆனந்தமய வாழ்க்கைக்குக் கேடாகத் தாயும் பெரியன்னையும் இப்படி வந்து முளைப்பார்களென்று மஹேந்திரன் சொப்பனத்திலும் நினைக்கவில்லை

மறுதினம் ராஜலக்ஷ்மி விஹாரியை வரவழைத்து அவனிடம், "அப்பா, நான் என் பிறந்தகம்போய் எவ்வளவோ வருஷங்களாயின. இப்பொழுது போய்ச் சில தினங்கள் தங்கி வரவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. இதை நீ உன் சிநேகிதனிடம் சற்றுத் தெரிவி" என்றாள்.

விஹாரி: இவ்வளவு வருஷங்களாய் இல்லாமல் இப்பொழுது மாத்திரம் போக என்ன அவசியம் நேர்ந்துவிட்டது? நல்லது; அவனிடம் சொல்கிறேன். ஆனால் அவன் உங்களைப் போகவிடுவானென்று நான் நினைக்கவில்லை.

விஷயத்தைத் தெரிவித்ததும் மஹேந்திரன் விஹாரியினிடம், "அம்மா தன் ஊரைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று விரும்பினால் யார்தான் தடுக்கமுடியும்? ஆனால் மழைக் காலத்தில் அந்தப் பாழடைந்த கிராமத்தில் அதிக நாள் தங்குவது உசிதமென்று எனக்குத் தோன்றவில்லை" என்றான்.

இவ்வளவு லகுவில் மஹேந்திரன் தன் தாயை அனுப்பச் சம்மதித்தது விஹாரிக்குப் பிடிக்கவில்லை. அவன்

மஹேந்திரனிடம், "அம்மா தனியாய்ப் போகிறாள். அவளுக்கு வேண்டிய கைங்கரியம் செய்ய அங்கே யார் இருக்கிறார்கள்? உன் மனைவியையும் அவளுடன் அனுப்பி வைப்பது நல்லது" என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.

நண்பனின் பரிஹாசம் மஹேந்திரனுக்குச் சுறுக்கென்று தைத்தது; "அது ஒருநாளும் முடியாது" என்றான்.

விஷயம் இதனுடன் நின்றது.

விஹாரியின் கேலிப்பேச்சுக்கள் ஆசாவின் மனத்தை அறுத்தன.

உண்மையில் ராஜலக்ஷ்மிக்குப் பிறந்தகம் போக வேண்டுமென்ற ஆவலொன்றும் இல்லை. மகனுக்குத் தன் மீதுள்ள அன்பின் ஆழத்தை அளவிட்டறிய இதை ஒரு கருவியாகக் கொண்டாள். தான் போவதற்கு இத்தனை லேசில் சம்மதித்து விடுவானென்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. தான் வீட்டைவிட்டுப் போவதற்கும் தன் ஓரகத்தி போவதற்குமுள்ள வித்தியாசத்தை அவள் அறிந்து மனம் பொருமினாள். 'வசியப்படுத்துவதில் தேர்ந்த மாயாவினி அவள்; நான் வெறும் தாய்தானே! நான் இருப்பதைக் காட்டிலும் போவதே நலம்போலும்!' என்று எண்ணி வருந்தினாள்.

உள்ளூறப் புகையும் விஷயங்களை அன்னபூரணி ஒருவாறு அறிந்துகொண்டு மஹேந்திரனிடம், "ராஜலக்ஷ்மி போனால் நான் இந்த வீட்டில் தங்கமாட்டேன்" என்று சொன்னாள்.

மஹேந்திரன் தன் தாயிடம், "கேட்டாயா, அம்மா? நீ போனால் பெரியம்மாவும் போய்விடுவாளாம். பிறகு வீட்டுவேலை எப்படி நடைபெறும்?" என்றான்.

அசூயையினால் ராஜலக்ஷ்மிக்கு மனம் வெடித்தது. அவள் அன்னபூரணியிடம், "நன்றாயிருக்கிறது. நீ போக வாவது! அது எப்படி முடியும்? நீ இங்கேயேதான் இருக்க வேண்டும்" என்றாள். ராஜலக்ஷ்மிக்கு அவ்வீட்டிலிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாய்க் கழிந்தது. மறுதினம் ஊருக்குப் போக மூட்டையைக் கட்டினாள். தாயை மஹேந்திரனே அழைத்துப்போய் விட்டுவிட்டு வருவான் என்று யாவரும் நினைத்திருந்தனர். ஆனால் புறப்படும் சமயம் நெருங்கியதும் அவன் தன் ஆட்களில் ஒருவனை அவளுடன் அனுப்ப ஏற்பாடு செய்தான்.

விஹாரி: மஹேன், என்ன நீ இன்னும் புறப்படத் தயாராக வில்லையா?

மஹேந்: (சற்றுச் சங்கோசத்துடன்) எனக்குக் காலேஜ்—

விஹாரி: நல்லது. நீ இரு. நான் அம்மாவைக் கொண்டு விட்டு வருகிறேன்.

இது மஹேந்திரனின் மனத்தைத் தாக்கியது. ஆசா விடம் தனிமையாய், "வரவர விஹாரியின் நடத்தை சகிக்கமுடியாததா யிருக்கிறது. என்னைவிட என் தாயைப் பற்றிய கவலை இவனுக்குத்தான் அதிகமாக்கும்!" என் றான்.

அன்னபூரணி வேறு விதியின்றி வீட்டிலேயே தங்க நேர்ந்தது. துக்கத்தினால் மனம் வெறுத்துத் தம்பதிக

னிடம் அவள் நெருங்கவேயில்லை. இவர்களுக்கும் அவள் அப்படி நடந்துகொள்வது பிடிக்கவேயில்லை.

---

## ஏழாம் அத்தியாயம்

**ரா**ஜலக்ஷ்மி பிறந்தகம் வந்து சேர்ந்தாள். முதலில் அவளை அங்கே கொண்டுவந்துவிட்டுத் திரும்பிவிடலா மென்று விஹாரி எண்ணியிருந்தான். ஆனால் அங்குள்ள நிலையைக் கண்டதும் அவனால் திரும்பிப்போக முடியவில்லை.

ராஜலக்ஷ்மியின் பிறந்தகத்தில் ஒன்றிரண்டு கிழ விதவைகளைத் தவிர வேறு யாரும் திக்கில்லை. அவ்வூர் ஒரு பாழடைந்த கிராமம். சுற்றுமுற்றும் மூங்கில் தோப்புகளும் அடர்ந்த காடுந்தான். வீட்டிற்கெதிரில் ஒரு பாசி நிறைந்த குளம். பகலிலேயே நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்கப் பயங்கரமா யிருந்தது.

விஹாரி: அம்மா, இது உங்களுக்குப் பிறந்த இடமாதலால் அருமையாயிருக்கலாம். ஆனால் இது வாசத்திற்கு யோக்கியமான இடமென்று நான் சொல்லவேமாட்டேன். போதும்; கல்கத்தாவுக்குத் திரும்பிப் போவோம்; வாருங்கள். உங்களை இங்கே தனியாய் விட்டுவிட்டுப் போனால் எனக்குத்தான் பாவம் சம்பவிக்கும்; உங்களுக்கும் இங்கிருக்க மனம் வராது.

ராஜலக்ஷ்மிக்கும் அலுப்பேற்பட்டது. இதற்குள் விநோதினி (ராஜலக்ஷ்மியின் ஒன்றுவிட்ட சகோதரனின் மனைவி; பாலிய விதவை) அவளுக்குத் துணையாக வந்து அவளோடு வசிக்கலானாள்.

விநோதினி யாரென்பது முதலிலேயே சொல்லப் பட்டிருக்கிறது. முதலில் மஹேந்திரனுக்கு அந்தப் பெண் நிச்சயிக்கப்பட்டு அவனால் நிராகரிக்கப்பட்டுப் பிறகு விஹாரியும் மறுக்கவே அந்த அபாக்கியவதி வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட்டுச் சில தினங்களிலேயே விதவையானாள்.

கணவன் இறக்கவே, விநோதினி ஆதரவின்றித் தவிக்கும் இளங்கொடிபோல், கவனிப்பாரற்று அந்தப் பாழுங் கிராமத்தில் தனிமையாக வாழ்க்கை நடத்திவந்தாள். அநாதையான அப்பெண் தன் ஒன்றுவிட்ட நாத்தியை நமஸ்கரித்து முழுமனத்துடன் அவளுக்கு ஸேவை செய்வதில் முனைந்தாள்.

ஸேவையென்றால் அற்ப சொற்பமான ஸேவையன்று. ஒரு நிமிஷம் உட்காருவதில்லை. ஒவ்வொரு வேலையையும் தானே அறிந்து செய்வது, வாய்க்கு வேண்டியபடி அறு சுவையுடன் சமைப்பது, இனிமையான வார்த்தைகளைப் பேசிச் சந்தோஷப்படுத்துவது, இவை யாவும் அவள் செய்தாள்.

"அம்மா, நாழிகையாயிற்று. போய்ச் சாப்பிட்டு விட்டு வா" என்று ராஜலக்ஷ்மி சொல்வாள். ஆனால் விநோதினி தன் நாத்தனார் தூங்கினாலொழிய அவளுக்கு விசிறுவதையும் கால்பிடிப்பதையும் விட்டு எழுந்து போக மாட்டாள்.

"குழந்தாய், இப்படி ஓய்வின்றி உழைத்தால் தேகசுகம் கெட்டுவிடும்" என்று ராஜலக்ஷ்மி சொல்லும்போதெல்லாம் அப்பெண், "அம்மா, என்னைப்போன்ற துர்ப்பாக்கியவதியைக் கண்டாலே வியாதிகூடப் பயந்து கிட்ட அண்

டாது. இத்தனை நாட்களுக்குப் பிறகு உங்களைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. இந்த அற்ப ஸேவையைத் தவிர உங்களுக்குச் செய்ய என்னிடம் வேறு என்ன இருக்கிறது?'' என்று தன்னையே நொந்து கொள்வாள்.

சில தினங்களிலேயே விஹாரியின் செல்வாக்குக் கிராமம் முழுதும் பரவிவிட்டது. சிலர் அவனிடம் வியாதிக்கு வைத்தியம் கேட்க வருவது, கோர்ட்டு விண்ணப்பம் அல்லது குத்தகைப் பத்திரங்கள் எழுதிக்கொள்ள வருவது, பட்டணத்தில் பிள்ளைக்குச் சிறு உத்தியோகம் தேடித் தருமாறு கேட்பது—இப்படிச் சிறியோர் பெரியோர் யாவருடைய மனத்தையும் அவன் தனது அன்பினால் கவர்ந்தான். அவனுடைய எளிய மாசற்ற சுபாவம் யாவரையும் வசீகரித்தது.

நகரத்தில் வாசம்செய்த விஹாரிக்குக் கிராமவாசத்தில் அலுப்புத் தோன்றாதிருக்குமாறு செய்ய, விநோதினி தன்னால் இயன்றவரையில் முயன்றாள். அவன் வெளியிலிருந்து திரும்பு முன்னரே அவனது அறையைச் சுத்தம் செய்வது, அறையின் ஒரு புறத்தில் கண்ணாடி டம்ளரில் இரண்டோர் அழகிய காட்டுப் புஷ்பங்களை ஜோடித்து வைப்பது, படுக்கையண்டை பங்கிம் பாபு, தீனபந்து மித்ரர் முதலிய பிரசித்த ஆசிரியர்கள் எழுதிய சில புத்தகங்களும் ஒன்றிரண்டு மாதப்பத்திரிகைகளும் அடுக்கி வைப்பது, இவை யாவும் அவள் விஹாரிக்காகச் செய்துவந்தாள். புத்தகத்தைத் திறந்து பார்த்தால் முத்துப்போன்ற அக்ஷரங்களில் தேர்ச்சிபெற்ற கையெழுத்தில் 'விநோதினி' என்று வரையப்பட்டிருக்கும்.

நாட்டுப்புறத்தில் இவ்வளவு சௌகரியங்களைச் செய்துவரும் விநோதினியின் சாமர்த்தியத்தைச் சிலாகித்து

விஹாரி ராஜலக்ஷ்மியிடம் பேசுவான். அப்பொழுதெல்லாம் ராஜலக்ஷ்மி, "இப்படிப்பட்ட தங்கமான பெண்ணைத்தான் நீங்கள் விவாகம் செய்துகொள்ள மறுத்தீர்களே!" என்று சுட்டிக் காட்டுவாள்.

விஹாரி சிரித்துக்கொண்டே, "அம்மா, நல்லதாகப் போயிற்று. விவாகம் செய்துகொண்டு ஏமாறுவதைவிடச் செய்து கொள்ளாமலே ஏமாறுவது மேல்தான்" என்றான்.

'இம்மாதிரிப் பெண்ணை மருமகளாயடைய நான் கொடுத்து வைக்கவில்லையே!' என்று உள்ளூற வருந்தினாள் ராஜலக்ஷ்மி.

கல்கத்தா திரும்பும் பிரஸ்தாபமெடுத்தாலே விநோதினி, கண்களில் நீர் ததும்ப, பரிதபித்த குரலில், "அம்மா, நீங்கள் வருவதற்குமுன் நான் தனிமையை உணராமல் எவ்விதமோ காலத்தைக் கழித்துவந்தேன். இரண்டு தினங்களுக்கு நீங்கள் வந்து போவது என் கஷ்டத்தை அதிகரிக்கச் செய்கிறது. உங்களைப் பிரிந்து நான் எப்படி ஒண்டியாய் இருப்பேன்?" என்றாள்.

ராஜலக்ஷ்மி தழுதழுத்த குரலில், "அம்மா, உன்னை ஏன் நான் என் நாட்டுப்பெண்ணாக அடையவில்லை! உன்னைக் கட்டி முத்தமிட்டு வளர்ப்பேனே!" என்றாள்.

விநோதினி வெட்கித் தலைகுனிந்து வேலையைக் கவனிக்க உள்ளே சென்றாள்.

ராஜலக்ஷ்மி தன் மகனிடமிருந்து அன்பான கடிதப் ஏதாவது கிடைக்குமென்று தினமும் ஆவலுடன் எதி பார்த்திருந்தாள். அவன் பிறந்ததுமுதல் இதுவை தாயைவிட்டு இவ்வளவு நாள் பிரிந்திருந்ததே இல்லை தனது பிரிவை மகன் அவசியம் உணர்ந்திருப்பான், தன்னை

உடனே புறப்பட்டு வருமாறு வேண்டிக் கடிதம் எழுது வான் என்று அவள் எதிர்நோக்கியிருந்தாள்.

விஹாரிக்கு மஹேந்திரனிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதில், "அம்மா வெகு நாட்களுக்குப் பிறகு பிறந்த ஊரைப் பார்க்கப் போயிருக்கிறாள். நன்றாய்ப் பார்த்துத் திருப்தியடையட்டும்" என்று எழுதியிருந்தான்.

இதைக்கேட்ட ராஜலக்ஷ்மி, "ஓஹோ! மஹேந்திரன் கோபத்தினால் அப்படி எழுதியிருக்கிறான். அவனைப் பிரிந்து நான் சந்தோஷமும் திருப்தியும் எங்கிருந்து அடைவது? அவன் இன்னும் என்ன எழுதியிருக்கிறான்! சொல்லப்பா" என்று ஆர்வத்துடன் வினவினாள்.

"இன்னும் ஒன்றுமில்லை, அம்மா" என்று வெறுப்புடன் அக்கடிதத்தைக் கசக்கி ஒரு புத்தகத்தில் வைத்து மூலையில் எறிந்துவிட்டான் விஹாரி.

கடிதத்தில், தன்மேல் கோபித்து மஹேந்திரன் ஏதோ எழுதி யிருக்கிறான், அதைச் சொல்ல விஹாரிக்கு இஷ்டமில்லை யென்று ராஜலக்ஷ்மி ஊகித்தாள்.

இவ்வளவுநாள் தடைப்படுத்தி வைத்திருந்த புத்திர வாஞ்சை இப்பொழுது பெருக்கெடுத்து ஓடியது. ராஜலக்ஷ்மி தன் மகனின் சகல தவறுகளையும் உடனே மறந்து அவனை மன்னித்துவிட்டாள். 'அவன் மனைவியுடன் எப்படியிருந்தால்தான் என்ன? எப்படியாவது சந்தோஷமாயிருக்கட்டும். அவர்கள் சுகத்தில் இனி நான் குறுக்கிட மாட்டேன். என்றும் அவனை விட்டுப் பிரியாத நான், இப்பொழுது இங்கே வந்து இவ்வளவு நாள் தங்கினால் அவனுக்கு என்மேல் கோபம் வருவது சகஜந்தானே?' என்று சமாதானம் செய்துகொண்டாள்.

அன்பின் அறிகுறியாக அவள் கண்களில் நீர் துளித்தது. அன்று ராஜலக்ஷ்மி விஹாரியினிடம், "போய்க் குளித்துவிட்டு வாடா, அப்பா. வெகு நேரமாயிற்று" என்று அடிக்கடி சொன்னாள். ஆனால் விஹாரிக்கு அன்று ஸ்நானம், போஜனம் எதன் பேரிலும் நாட்டமில்லை. "இன்னும் நாழிகையாகவில்லை, அம்மா" என்றே சொல்லிக்கொண்டிருந்தான்.

ராஜலக்ஷ்மி சற்றுப் பிடிவாதமாகவே, "இல்லை; நீ போய் ஸ்நானம் செய்துவிட்டு வா!" என்றாள்.

இவ்வளவு வற்புறுத்தியபின் அவன் குளிக்க எழுந்து சென்றான். அவன் தலை மறைந்ததுதான் தாமதம். ராஜலக்ஷ்மி புத்தகத்திற்குள்ளிருந்து கசங்கிக் கிடந்த கடிதத்தை எடுத்து விநோதினியின் கையில் கொடுத்து, "இதைக் கொஞ்சம் படித்துக் காண்பியம்மா" என்றாள்.

விநோதினி உரத்துப் படிக்க ஆரம்பித்தாள். முதலில் தாயைப்பற்றிக் கொஞ்சம்; அதுவும் விஹாரி சொன்னதற்கு மேல் இல்லை. பிறகு ஆசாவைப்பற்றி; தாம்பத்திய வாழ்க்கையின் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்த மஹேந்திரன் தன்னையும் மறந்து ஏதேதோ பிதற்றி எழுதியிருந்தான். இரண்டொரு வரிகள் படித்து மேலே படிக்க முடியாது விநோதினி நிறுத்திவிட்டு, "அம்மா இதையெல்லாம் கேட்டு உங்களுக்கு ஆக வேண்டியதென்ன?" என்றாள். புத்திரவாஞ்சையினால் இளகியிருந்த தாயின் இருதயம் கல்லாக உறைந்தது. "சரி! விட்டுவிடு" என்று சொல்லிக் கடிதத்தைத் திரும்பவும் வாங்கிக்கொள்ளாமல் அப்படியே வாயிற்புறம் போய் விட்டாள்.

விநோதினி அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு தனது அறைக்குள் போய் உட்புறம் கதவைத் தாளிட்டுவிட்டு அதை நிதானமாய்ப் படிக்க ஆரம்பித்தாள்.

அக்கடிதத்தில் அவளுக்கு ஏன் அவ்வளவு ருசியோ தெரியாது. ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம்: அது அவளுக்குச் சந்தோஷத்தை அளிக்கக்கூடியதாக இல்லை. ஒரு வரி விடாது கடிதத்தைப் பன்முறை படித்தாள். படிக்கப் படிக்கக் கண்களும் முகமும் சிவந்தன; பெரு மூச்செறிந்தாள்.

அவள் மனத்தில் ஒரே வேட்கை. 'மஹேந்திரன் எப்படி யிருப்பான்? ஆசா எப்படிப்பட்டவள்? அவர்கள் காதல் எத்தன்மையது?'—இப்படிப் பலவாறான சிந்தனை களில் அவள் மனம் உழன்றது. வெகுநேரம் வரை அக் கடிதத்தை மார்போடு அணைத்தவாறு ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் மல்லாந்து படுத்திருந்தாள்.

விஹாரி வந்தபிறகு அக்கடிதத்தை எங்கும் தேடிப் பார்த்தான்; அகப்படவே யில்லை.

அன்று திடீரென்று அன்னபூரணி வந்துசேர்ந்தாள். இப்படி எதிர்பாராது அவள் வந்தது ராஜலக்ஷ்மியின் மனத்தில் பல சந்தேகங்களை எழுப்பியது. வீட்டில் என்ன சங்கதியோ வென்று தவித்தாள்.

அன்னபூரணி அவள் முகம் வெளுத்ததிலிருந்து இதை அறிந்துகொண்டு, "ராஜலக்ஷ்மி, கல்கத்தாவில் எல் லாரும் க்ஷேமந்தான்" என்றாள்.

ராஜலக்ஷ்மி சற்றுத் தைரியமடைந்து, "பின் நீ ஏன் இங்கே வந்தாய்?" என்றாள்.

அவள் தொடுத்துக்கொண்டிருந்த மாலையை நடுவில் பிடுங்கி
.....வலுவில் சண்டைக்கு இழுத்தான். —பக்கம் 54.

அன்னபூரணி: ராஜலக்ஷ்மி, வீட்டுப்பொறுப்பை நீயே வந்து ஏற்றுக்கொள். எனக்கு உலகப்பற்றே அற்று விட்டது. என் கடைசி நாட்களை நான் காசியில் போய்க் கழிக்க நிச்சயித்து விட்டேன். உன்னைப் பார்த்து விடை பெற்றுப் போகவே நான் இங்கே வந்தேன். தெரிந்தும் தெரியாமலும் நான் எவ்வளவோ குற்றங்கள் செய்திருக் கக்கூடும். அவைகளில் ஒன்றையும் நீ மனத்தில் வையாது மன்னித்துவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உன் நாட்டுப்பெண் (அப்பொழுது அவள் கண்களில் நீர் நிரம்பி வழிந்தது) இன்னும் அறியாச் சிறுமி; தாய் தந்தையற்ற குழந்தை. அவள் தெரியாத்தனமாய் என்னதான் தப்பு இழைத்தபோதிலும் உன் குழந்தை.

இதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. குரல் தழு தழுத்தது.

ராஜலக்ஷ்மி சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்ய எழுந்து போய்விட்டாள். அன்னபூரணி வந்த சங்கதி கேட்டதும் கோவிலுக்குச் சென்றிருந்த விஹாரி ஓடோடியும் வந்து அவளை நமஸ்கரித்து, "பெரியம்மா, இது என்ன யோசனை? எங்களையெல்லாம் மறந்து இப்படி விட்டுப்போகவா எண் ணினீர்கள்?" என்று கேட்டான்.

அன்னபூரணி கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "அப்பா விஹாரி, என்னைத் தடுக்காதே. நான் எங்கிருந் தால் என்ன? நீங்கள் எல்லோரும் சுகமாக இருக்க வேண்டுமென்றுதான் நான் பிரார்த்திக்கிறேன்" என் றாள்.

விஹாரி சற்றுப் பேசாதிருந்தான். பிறகு, "பெரி யம்மா, மஹேந்திரனின் புத்தியே மாறிவிட்டது. அவன்

உங்களையும் வீட்டை விட்டு வெளியேறும்படி செய்து விட்டான்” என்றான்.

அன்னபூரணி சட்டென்று, “அப்படிச் சொல்லாதே, விஹாரி. அவன் என்னை ஒன்றும் சொல்லவில்லை. நான் காசிக்குப் போவதால் இந்தக் குடும்பத்திற்கு நன்மையே ஏற்படும்” என்றாள்.

விஹாரி தூரத்தில் தெரியும் பரந்த வெளியைப் பார்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்தான். அன்னபூரணி தனது புடைவைத்தலைப்பில் முடிந்து வைத்திருந்த ஒரு ஜோடித் தங்க வளையல்களை எடுத்து அவன் கையில் கொடுத்து, “விஹாரி, இந்தா: இவைகளை உன்னிடமே வைத்துக்கொள். உனக்குக் கலியாணமானபிறகு வரும் மனைவியின் கைகளில் இவற்றை அணிவித்து என் ஆசீர் வாதத்தைத் தெரிவி” என்றாள்.

விஹாரி அவ்வளையல்களைப் பக்தியுடன் கண்களில் ஒற்றிக்கொண்டான். கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருக, அவன் சட்டென்று வெளியில் எழுந்துபோய்விட்டான்.

விடை பெற்றுக்கொள்ளும் சமயம் அவனிடம் அன்ன பூரணி வந்து, “அப்பா விஹாரி! என் மஹேந்திரனையும் ஆசாவையும் மறக்காதே” என்றாள்.

பிறகு அவள் ராஜலக்ஷ்மியின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து, “இதில் என் சொத்துமுழுவதும் மஹேந்திரன் பெயருக்கு உயில் எழுதி வைத்துவிட்டேன். நான் ஜீவித்திருக்கும்வரை எனக்கு மாதம் பதினைந்து ரூபாய் மாத்திரம் அனுப்பினால் போதுமானது” என்று சொல்லி அவளை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு அன்னபூரணி காசிக்குப் பிரயாணமானாள்.

# எட்டாம் அத்தியாயம்

இது என்ன! முதலில் மாமியார், பிறகு சித்தி, இப்படி ஒவ்வொருவராய் வீட்டை விட்டுப் போய்விட்டனர். மஹேந்திரனுக்கோ இவர்கள் போனதில் சற்றும் கவலையில்லை. சந்தோஷமாகவே இருக்கிறான். அடுத்த முறை தன்னுடையதுதானே என்னவோ? வெறிச்சென்று பாழடைந்து காணப்படும் இவ்வீட்டில் புதுமணம் புரிந்த தம்பதிகளின் வாழ்க்கை என்னதான் அன்பு மயமாயிருந்த போதிலும் அது பயத்தையும் திகிலையும் உண்டு பண்ணுவதாக ஆசாவுக்குத் தோன்றியது.

உலகில் கடமையும் அன்பும் ஒன்று சேரும்போது தான் அவ்வன்பு வேரூன்றி நிற்கும். கடமை என்னும் செடியிலிருந்து அன்பு என்னும் பூவைப் பறித்துவிட்டால் அது இரண்டொருநாள் வேண்டுமானால் தனது மணத்தையும் நிறத்தையும் இழவாதிருக்கும்; எப்பொழுதும் அப்படியே இருக்க முடியாது; சிறுகச் சிறுக வாடித் தான் போகும். ஆசாவுக்குத் தனது காதல் வாழ்க்கையும் அவ்வாறே தோற்றியது. சதா ஏற்பட்ட சேர்க்கையினால் சற்று அலுப்பு உண்டாயிற்று. கடமையினின்றும் வேருக்கப்பட்ட காதல் வேரற்ற செடிபோல் ஸ்திரமற்றுக் காணப்பட்டது.

மஹேந்திரனே வீட்டில் யாருமில்லாத இச்சமயத்தைப் பூரணமாய்ப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினான். புதிய காதல்வாழ்க்கையின் பூரண இன்பரஸத்தையும் முடிந்தமட்டில் ஒரேசமயத்தில் அருந்திக் களித்திட அவன் இச்சைகொண்டான். ஆசாவின் திகிலை நீக்க அவன் அவளிடம், "ஆசா, ஏன் இப்படி ஒருமாதிரியாக இருக்

கிறாய்? வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் போய் விட்டால்தான் என்ன? நீ எதற்காக வருந்த வேண்டும்? நம்மிருவருடைய அன்பைக் காட்டிலுமா இது பெரிது? நம் காதலில் பிரும்மாண்டமும் அடங்கியில்லையா?" என்று தேற்றினான்.

ஆசாவின் மனம் என்னவோ சாந்தி அடையவில்லை. வீட்டை விட்டு ஒவ்வொருவராய் வெளியேறியது அவளுக்குக் கலக்கத்தையே உண்டுபண்ணியது. தங்கள் காதல் வாழ்க்கையில் எங்கேயோ குறை அவசியம் இருக்க வேண்டும், இல்லாவிடில் இப்படி நேரிடாதென்று அவள் நினைத்தாள். அக் குறையைக் கண்டு பிடித்து நீக்கும் வகை அவளுக்குத் தெரியவில்லை. சந்தோஷமாயிருக்க எவ்வளவோ முயன்றும் அவளால் முடியவில்லை.

வீட்டிலோ ஒரு வேலையும் சரியாய் நடக்கவில்லை. வேலையாட்கள் எதையும் முன்போல் சரியாய்க் கவனிப்பதில்லை. ஒரு நாள் வேலைக்காரி தனக்கு உடம்பு சுகமில்லை யென்று தெரிவித்துவிட்டு வீட்டிலேயே இருந்து விடுவாள். சமையற்காரன் புகையிலையும் கஞ்சாவும் போட்டுக்கொண்டு மயங்கி ஒருபுறம் படுத்துக் கிடந்தான். மறுநாள் வீட்டிலேயே அவனைக்காணோம். "நல்லதாயிற்று; வேடிக்கைதான்! நீயும் நானும் சேர்ந்து சமைப்போம் வா!" என்று மஹேந்திரன் ஆசாவைப் பார்த்துக் கூறினான். அவன் வண்டியில் ஏறிக்கொண்டு சமையலுக்குக் கறிகாய் வாங்கிவரப் புதிய கடைவீதிக்குப் போனான். எதை வாங்குவது, எவ்வளவு வாங்கவேண்டு மென்பதே அவனுக்குப் புரியவில்லை. வேண்டும் வேண்டாதது எல்லாவற்றையும் கூடை நிறைய வாங்கி நிரப்பிக்கொண்டு

குதூகலமாய் வீடுவந்து சேர்ந்தான். கொண்டுவந்தவற்றை என்ன செய்வதென்று ஆசா அறியாள். இருவரும் சேர்ந்து சமையல் ஆராய்ச்சி செய்வதற்குள் மூன்றுமணி ஆகிவிட்டது. என்றும் காணாத விசித்திரவிதமாய்ப் பலவித ருசியுடன் கூடிய பதார்த்தங்களைப் பார்க்கும்போது மஹேந்திரனுக்குத் தமாஷாக இருந்தது. ஆனால் ஆசாவுக்கு அவ்விதமாகத் தோன்றவில்லை; தனது அறியாமையை நினைக்கும்போது வெட்கமும் துக்கமும் எழுந்து ஒருங்கே அவளை வதைத்தன.

வீட்டில் சாமான்கள் மூலைக்கொன்றாய்ச் சிதறி அலங்கோலமாய்க் கிடந்தன. மஹேந்திரனின் வைத்திய ஆயுதங்கள் கறிகாய் நறுக்க உதவின! பிறகு அவை குப்பையுடன் மூலையில் அஞ்ஞாதவாசம் செய்யலாயின. அவனது வைத்தியப் புத்தகங்கள் அடுப்புத் தீயை விசிறப் பயன்படுத்தப்பட்டுக் கடைசியில் சாம்பற் குவியலில் இளைப்பாறின. வீட்டில் எந்தச் சாமான் வேண்டுமானாலும், தேடினாலும் அகப்படாத நிலையிலிருந்தது. இவ்வளவு சீரான குடும்ப நிர்வாகத்தைக் கண்டு மஹேந்திரன் ஆனந்தக் கூத்தாடினான். இவ்வித அமர்க்களத்தினிடையே அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் ஆசா கலவரப்பட்டாள்.

பலத்த மழையானது பெய்து கல்கத்தாவின் வானத்தை யளாவிய கட்டிடங்களின் மேலுள்ள தூசியையெல்லாம் போக்கி நன்றாகச் சுத்தம் செய்துவிட்டது. அன்று இரவு நிலவொளியில் அவை பளிச்சென்று பிரகாசித்தன. வீட்டைச் சுற்றிய சிறு தோட்டத்தில் பூத்து நனைந்த மகிழ மலர்களைப் பறித்துக்கொண்டு வந்து ஆசா மாடி வராந்தாவில் உட்கார்ந்து மாலை கட்டிக்கொண்டிருந்தாள்.

மஹேந்திரனும் அங்கு இருந்தான். அவள் பேசாது மாலை கட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே எவ்வளவு நேரந்தான் பொறுத்திருப்பான்! அவள் தொடுத்துக் கொண்டிருந்த மாலையை நடுவில் பிடுங்கி அவளை வலுவில் சண்டைக்கு இழுத்தான். இப்படி அகாரணமாய்த் தன்னைத் தொந்தரவு படுத்துவதற்காகக் கோபித்துக்கொண்டு ஏதோ சொல்ல வாய்திறக்கு முன், அவன் அவள் வாயைப் பொத்திக்கொண்டு பேசமாட்டாமற் செய்துவிட்டான்.

இச்சமயம் அண்டை வீட்டார் வளர்க்கும் கிளி, "ராம ராம" என்று பேசும் சத்தம் கேட்டது. பக்கத்து வீட்டுக் கிளி பேசும் சமயமெல்லாம் இவர்கள் வீட்டுக் கிளியும் கூடவே கத்தும். இன்றோ வழக்கத்திற்கு விரோதமாக அக்கிளியின் சப்தத்தையே காணோம். தம்பதிகள் இருவரும் மேலே தொங்கும் கூண்டைத் திரும்பிப் பார்த்தனர்.

ஆசா: (கலவரத்துடன்) இன்று கிளிக்கு என்ன வந்து விட்டது?

மஹேந்: உன் குரலுக்கெதிரில் தன் குரலைக் காட்ட அதற்கு வெட்கம் போலும்!

ஆசா நிமிர்ந்து, "வேடிக்கையில்லை இது; சற்று எழுந்திருந்து அது என்னவாயிற்று என்று பாருங்களேன்?" என்றாள்.

அவன் கூண்டை இறக்கிப் பார்த்தபோதோ, கிளி அதற்குள் இறந்துகிடந்தது! அன்னபூரணி வீட்டை விட்டுப் போனதும் வேலையாட்களும் வேலைக்கு வரவில்லை. கிளியைக் கவனிப்பார் யாருமில்லை.

தனை, துக்கம், கவலை இவற்றால் ஆசாவின் முகம் மலினமடைந்தது. அவளால் மேலே மாலை தொடுக்க

முடியவில்லை. அதை அப்படியே கீழே நழுவவிட்டாள். மஹேந்திரனின் மனத்தையும் இது உறுத்தியதானாலும், தங்கள் சந்தோஷத்திற்கு எங்கே பாதகம் நேரிடுமோ வென்று அஞ்சி, அவன் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. அதைப் பற்றி வேடிக்கையாகப் பேசி ஆசாவை உற்சாகப்படுத்த முயன்றான்; "ஆசா, அது தொலைந்தது நல்லதாயிற்று. நான் காலேஜுக்குப் போயிருக்கும் சமயமெல்லாம் அது கத்திக் கத்தி உன்னை விரக வேதனையில் ஆழ்த்தி வந்தது" என்று சொல்லி அன்புடன் அவளைத் தன்னருகில் இழுத்து இருகைகளாலும் அணைத்துக் கொண்டான். அவள் அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு, மடியில் பாக்கியிருந்த பூக்களையும் கீழே உதறி விட்டுக் கோபத்துடன், "போதும் நமது லீலை! நீங்கள் இன்றே போய் அம்மாவை முதலில் அழைத்து வாருங்கள்" என்றாள்.

---

## ஒன்பதாம் அத்தியாயம்

அதேசமயம் விஹாரி, "மஹேன், மஹேன்" என்று கீழேயிருந்து உரத்துக் கூப்பிடுவது கேட்டது. "யார்? விஹாரியா? வா" என்று பதிலளித்துக்கொண்டே மஹேந்திரன் கீழே இறங்கி வந்தான். சிலநாட்கள் பிரிந்திருந்ததற்குப் பிறகு இன்று தன் அருமைத் தோழனைக் காண்பது மஹேந்திரனுக்கு ஆனந்தத்தை அளித்தது. விவாகத்திற்குப் பிறகு விஹாரி பரிஹஸித்தும் குத்தலாகப் பேசியும் மஹேந்திரனைப் புண்படுத்தியதுண்டு. ஆனால் இன்று நண்பனின் கோபப் பேச்சும் வாழ்விற்கு அவசியமெனத் தோன்றியது மஹேந்திரனுக்கு.

விஹாரியைப் பார்த்ததும் ஆசாவின் மனமும் சற்றுச் சாந்தமடைந்தது. அவனைக் கண்டதும் உள்ளே போக எழுந்தாள். அதற்குள் மஹேந்திரன், "ஏன்! எங்கே போகிறாய்? விஹாரிதானே வந்திருக்கிறான்?" என்றான்.

ஆசா: இல்லை; அவர் சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வருகிறேன்.

வேலையில் தனக்குச் சற்று மன அமைதி ஏற்படு மென்பது ஆசாவின் கருத்து.

அவள் விஹாரியின் எதிரில் நின்று பேசுவதில்லை. ஆனால் மாமியாரைப் பற்றிய க்ஷேம சமாசாரம் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் அவளுக்கு மிகவும் ஆவல் இருந்தது. தன் கணவனருகில் அவள் வந்து நின்றுகொண்டாள்.

வந்தவுடனேயே விஹாரி ஆசாவைப் பார்த்து, "உங்கள் சந்தோஷத்திற்கு இடையூறாக நான் வந்து சேர்ந்தேனென்று நினைக்கிறேன். பாதகமில்லை; உட்காரம்மா. நான் போய்வருகிறேன்" என்றான்.

அவள் மஹேந்திரனைப் பார்த்தாள். அவன் அக் குறிப்பை உணர்ந்து, "விஹாரி! அம்மா எப்படியிருக்கிறாள்?" என்றான்.

விஹாரி: (பராமுகமாக) அம்மா, பெரியம்மா இவர்களெல்லாம் எப்படிப் போனாலென்ன? பிறகு பார்த்துக் கொள்ளலாமே. அம்மாவைப் பற்றியும் மற்றொருவரைப் பற்றியும் நினைப்பதற்கு இது சமயமில்லை.

இதைச் சொல்லிவிட்டு அவன் வெளியே செல்லப் புறப்பட்டான். மஹேந்திரன் அவனது கரங்களைப் பிடித்திழுத்து அவனைப் பலவந்தமாக உட்காரவைத்தான்.

உடனே விஹாரி ஆசாவிடம், "பார்: எனது தப்பிதமில்லை, அம்மா. நான் போகிறேனென்றாலும் இவன் உட்காரச் சொல்லிப் பலவந்தப்படுத்துகிறான். என்னவோ, பாவம் அவனதும் பழி எனதுமாக ஆகாதிருக்கட்டும்!" என்றான்.

ஆசா பதிலொன்றும் சொல்லவில்லை. அவள் மனம் நொந்தது. வேண்டுமென்றே விஹாரி அப்படிப் பேசினான்.

விஹாரி: அடேயப்பா! வீடு என்ன லக்ஷணமாய்க் காணப்படுகிறது! அம்மாவை அழைத்து வர வேண்டுமென்று உனக்கு இன்னும் புத்தியில் உதயமாகவில்லையா?

மஹேந்: அவள் என்றைக்கு வருவாளென்றுதான் நாங்களும் எதிர்நோக்கியிருக்கிறோம்.

விஹாரி: புறப்பட்டு வரும்படி இரண்டுவரி கடிதம் எழுதி விட்டால்தான் என்ன, குறைந்தா விடும்? உன் இன்ப வாழ்க்கை இதனால் கெட்டுப்போய்விடாது; அம்மாவின் மகிழ்ச்சிக்கும் எல்லையிராது. (ஆசாவைப் பார்த்து) மஹேந்திரனுக்குக் கடிதமெழுத இரண்டொரு நிமிஷம் விடைகொடுக்குமாறு உன்னையும் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

ஆசாவினால் பொறுக்க முடியவில்லை. அவள் கண்களில் நீர் ததும்பிற்று.

மஹேந்திரன் கோபத்துடன் விஹாரியைப் பார்த்து, "எந்த வேளையில்தான் உன்னைப் பார்த்தேனோ! ஏதாவதொரு கலகம் மூட்டிவிட்டுக் கொண்டே யிருக்கிறாய்" என்றான்.

விஹாரி: அம்மாவே உன்னை அதிகச் செல்வமாக வளர்த்துக் கெடுத்துவிட்டாள். போதாக்குறைக்கு மனைவி வேறு வாய்த்து உன்னை இன்னும் கெடுக்கிறாள். என்னால்

பொறுக்க முடியாமல் நானும் அவ்வப்பொழுது இரண்டொரு வார்த்தைகள் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

மஹேந்: இதனால் உனக்கு என்ன லாபம்?

விஹாரி: உனக்கு வீணாகத் தோன்றினாலும் எனக்கு லாபம் இருக்கிறது.

---

## பத்தாம் அத்தியாயம்

விஹாரி, தன்னெதிரிலேயே மஹேந்திரனைத் தாய்க்குக் கடிதமெழுதச் சொல்லி, அதை வாங்கிக் கொண்டு மறுதினமே ராஜலக்ஷ்மியை அழைத்துவரச் சென்றான். அவன்தான் தன் மகனைக் கடிதமெழுதச் சொல்லியிருக்க வேண்டுமென்பது ராஜலக்ஷ்மிக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இனியும் பிள்ளையைப் பிரிந்திருக்க மனம் பொறுக்கவில்லை. விநோதினியையும் கூட அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள்.

வீட்டின் அலங்கோலமும் குப்பை கூளங்களும் மருமகளின் மீது ராஜலக்ஷ்மிக்கு இருந்த சொற்ப மதிப்பையும் போக்கிவிட்டன.

ஆனால் ஆசாவோ முழுதும் மாறியவளாகக் காணப்பட்டாள். வந்ததுமுதல் ராஜலக்ஷ்மியைப் பின்தொடர்ந்தே வந்துகொண்டிருந்தாள். சொல்லாமலே மாமியாருடன் கூட ஒவ்வொரு வேலையையும் செய்ய முன் வந்தாள். ராஜலக்ஷ்மியோ அவளை, “இருக்கட்டும், வைத்துவிட்டுப் போ; உனக்கு ஒன்றும் சரியாகவே செய்ய வருவதில்லை. நீ ஏன் செய்ய வருகிறாய்?” என்று போகச் சொல்லிவிட்டாள்.

அன்னபூரணி இல்லாமையால்தான் மருமகளின் மனம் இப்படி மாறிவிட்டதென்று ராஜலக்ஷ்மி நினைத்தாள். அன்னபூரணி வீட்டிலிருக்கும்போது மனைவி தன்னுடனேயே இருக்கச் சமயம் கிடைத்தது, அம்மா வந்து மறுபடி வேலைகொடுத்து வதைக்க ஆரம்பித்து விட்டாளென்று மஹேந்திரன் எங்கே நினைப்பானோ வெனவும் ராஜலக்ஷ்மி அஞ்சினாள். 'பிள்ளையின் சுகத்தில் அன்னபூரணிக்கு இருக்கும் அக்கறை எனக்கு இல்லையா? நாட்டுப் பெண்ணை நான் ஏன் வேலை செய்யச் சொல்லவேண்டும்?' என்று பலவாறு எண்ணினாள்.

இப்பொழுதெல்லாம் ஆசாவை மஹேந்திரன் கூப்பிடுகிறானென்று தெரிந்தால் உடனே ராஜலக்ஷ்மி அவளிடம், "போயேன். அவன் கூப்பிடுவது காதில் விழவில்லையா? நீ ஒன்றும் கறிகாய் நறுக்கவேண்டாம்!" என்பாள்.

பழைய நாடகம் திரும்பவும் ஆரம்பமாயிற்று! மஹேந்திரன் பாடம் சொல்லிக்கொடுப்பது; ஆசா படிப்பது! தம்பதிகளின் பழையலீலை, ஒன்றுமில்லாதவிஷயத்திற்கெல்லாம் வாத விவாதம்; 'உன்னுடைய அன்பு அதிகம்', 'என்னுடைய அன்பு அதிகம்' என்று சண்டை; ஒருவர் மேலொருவர் குற்றச்சாட்டு—இப்படி விடாது நடந்துவந்தன. பழகப்பழகப் பாலும் புளிக்குமென்பது பழமொழி. காமாக்கினியை அணையவொட்டாமற் காப்பது கஷ்டம்; ஆனால் இதை யுவதம்பதிகள் ஒப்பக்கொள்ளுவதும் கடினம்.

ஒருநாள் விநோதினி ஆசாவின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு, "சகோதரி, உன் சௌபாக்கியம் நீடித்திருக்கட்டும். ஆனால் என்போன்ற துர்ப்பாக்கிய

வதியைச் சற்று ஏறெடுத்துப் பார்த்து நின்று பேசக் கூடாதா?" என்றாள்.

ஆசா சிறுபருவ முதலே பயந்த ஸங்கோச சுபாவ முடையவள். யாருடனும் பழகுவதற்கு வெட்கம். அவர்கள் தன்னோடு எப்படி யிருப்பார்களோ வென்ற பயம் வேறு. விநோதினியைப் போன்ற யௌவன ஸௌந்தரிய மும், வசீகரிக்கும் முகமுமுடைய கட்டழகியிடமுங் கூட நெருங்கிப் பேசிப்பழக அவளுக்குத் தைரியமில்லை.

தவிரத் தன் மாமியார் அவளிடம் விசேஷப் பிரியம் காண்பிப்பதையும், தனது அறியாமையையும் விநோதினி யின் சாமர்த்தியத்தையும் ஒப்பிட்டு அடிக்கடி சுட்டிக்காண் பிப்பதையும் பார்த்து ஆசா, தான் விநோதினியைக் காட்டி லும் எல்லா விதத்திலும் தாழ்ந்தவளென்று கருதலானாள். வீட்டு வேலையிலோ விநோதினிக்குத் தெரியாதது ஒன்று மில்லை. ஆட்களிடம் சாமர்த்தியமாய் வேலை வாங்குவதி லேயோ அவளுக்கு நிகர் யாருமில்லை.

அழகும் புத்தியும் நிறைந்த விநோதினி எப்பொழுது தன்னிடம் வந்து சிநேகிதம் செய்துகொள்ள விரும்பினா ளோ, அப்பொழுதே ஆசாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்களின் சிநேகம், ஒரே நாளில் பூத்துக் காய்த்துவிடும்போல முற்றியது.

ஆசா: அக்கா! நாமிருவரும் ஒருவரை யொருவர் வேறு பெயர் இட்டு அழைத்துக் கொள்ளலாம்.

விநோ: (புன்னகையுடன்) என்ன பெயர்?

ஆசா 'கங்கா', 'வகுளம்' என்று தனக்குத் தெரிந்த அழகிய பெயர்களாக அடுக்கிக் கொண்டே போனாள்.

விநோ: சே! இவையெல்லாம் பழங்காலத்துப் பெயர் கள்! இப்பொழுது யாருக்கும் இவை பிடிப்பதில்லை.

ஆசா: பின் உனக்கு எது பிடித்திருக்கிறது?

வினோ: (சிரித்துக்கொண்டே) மாயா!

செவிக்கின்பமான வேறு எவ்வளவோ நல்ல பெயர்கள் இருக்க, விநோதினி இதைச் சொன்னது ஆசாவிற்குப் பிடிக்காவிடினும் அவள் சொன்னதை மறக்கக்கூடாது என்பதற்காகச் சம்மதித்தாள். ஆசா விநோதினியின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, "மாயா" என்று கூப்பிட்டுக் கொல்லெனச் சிரித்தாள்.

---

## பதினோராம் அத்தியாயம்

ஆசாவுக்கும் ஒரு தோழி அவசியம் வேண்டியிருந்தது. சதா கணவனும் மனைவியுமே பேசிச் சந்தோஷிப்பது சாத்தியமில்லை. மனம் விட்டுப் பேச, விளையாட மூன்றுமவர் ஒருவர் தேவையாயிருந்தார்.

விநோதினியும் இவ்வித நட்பிற்காக ஏங்கியிருந்தாள். ஆசா தனது காதல் வாழ்க்கையின் பரம ரகசியங்களையும் தனது சகிக்குச் சொல்லுவாள். யாவற்றையும் ஆவலுடன் கவனமாய் விநோதினி கேட்பது வழக்கம். அவளுக்கு இவை புதுமையாகத் தோன்றும். பராதாகத்துடன் பாலைவனத்தைக் கடக்கும் பிரயாணி ஒருவனுக்கு எதிரே ஒரு தடாகம் தென்பட்டால் எங்ஙனம் குதூகலம் ஏற்படுமோ, அவ்வாறே இக்காதல் வரலாறு விநோதினியின் மன வேட்கையைத் தணிக்கும் அமிருதபானம்போல் இருந்தது. கேட்கக் கேட்க அவள் மதி மயங்கும்; உணர்ச்சி பொங்கும்.

உச்சிவேளை; எங்கும் நிச்சப்தமாயிருக்கும் சமயம்; ராஜலக்ஷ்மி வேலை முடிந்து சற்றுப் படுத்து உறங்குவாள். வேலைக்காரர்கள் இளைப்பாறப் போய்விடுவார்கள். விஹாரி

யின் வற்புறுத்தலின் பேரில் மஹேந்திரன் பகல் கொஞ்ச நேரம் காலேஜுக்குப் போக ஆரம்பித்தான். ஆசா தனது அறையில் பாயின்மேல் ஒரு சிறு தலையணையை வைத்துக் கொண்டு படுத்திருப்பாள். விநோதினியும் அச்சமயம் அவள் பக்கத்தில் போய்ப் படுத்துக்கொள்வாள். ஆசாவுக்கும் மஹேந்திரனுக்கும் உள்ள அன்பைப் பற்றிய கதை ஆரம்பமாகும். வி நோ தி னி மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருப்பாள். அவளது ரோஜா இதழை யொத்த கன்னங்கள் குபீலெனச் சிவக்கும்; பெருமூச்செறிவாள்.

ஆசா சற்று நிறுத்திவிட்டால், விநோதினி அவளைத் தூண்டித் தூண்டிக் கேள்விமேல் கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பாள். ஒவ்வொரு சிறு சம்பவத்தையும் ஆதியோடந்தமாய்ச் சொல்லச் செய்து கேட்பாள். தனது கற்பனு சக்தியைப் பூர்ணமாக உபயோகப்படுத்தி, "இப்படி இப்படியானல் பிறகு என்னவாகும்? நீ அப்பொழுது எப்படி நடந்துகொள்வாய்?" என்றெல்லாம் விநோதினி கேட்பாள்.

இவ்விஷயங்களைப் பற்றிப் பேச ஆசாவும் அலுப்பதில்லை. அதை விஸ்தரித்துக்கொண்டு போவதில் அவளுக்கும் ஆனந்தம் இருந்தது.

விநோதினி: சரிதான்; நீ விஹாரியை விவாகம் செய்து கொண்டிருந்தால்?

ஆசா: சீச்சீ! என்னபேச்சுப் பேசுகிருய்? எனக்குக் கேட்க வெட்கமாயிருக்கிறது. ஆமாம் உனக்கும் அவருக்கும் ஆகியிருந்தாலும் நன்றுய்த்தான் இருந்திருக்கும். அதற்கும் அப்பொழுது பேச்சு நடந்ததே!

விநோ: எனக்கு எத்தனையோ வரன் பார்த்தார்கள், ஒன்றும் நடக்கவில்லை. நல்லதாயிற்று. நான் இப்பொழுத

இருக்கும் நிலைதான் எனக்கென்று ஏற்பட்டது. இதுவே எனக்குச் சரி.

ஆசா இதை ஒப்புக்கொள்ளவில்லை. தன்னைக் காட்டிலும் நன்னிலையில் விநோதினி இருப்பதாக அவள் நினைக்கவில்லை.

ஆசா: என் பதி இணங்கியிருந்தால் நீ அவரையே மணந்திருப்பாய்!

இது விநோதினியின் உள்ளத்தில் அடங்கிக்கிடந்த தீயை எழுப்பிற்று. 'மணந்திருப்பேன்! ஏன் மணக்கவில்லை? இந்த இன்பவாழ்க்கை, இந்த வீடு எல்லாம் எனது ஏக போகமாய் இருந்திருக்கும். இன்று இந்த வீட்டில் எனக்கென்ன அதிகாரம் இருக்கிறது? கேவலம் இன்று வந்து நாளைக்குப் போகப் போகிறவள்' —இவ்வெண்ணங்களினால் அவள் அகத்தைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

வேண்டாமென்றாலும் கேளாமல், விநோதினி தினமும் சாயங்காலம் ஆசாவின் தலையை விதவிதமாய்ப் பின்னிக் கொண்டையிட்டு மஹேந்திரனின் அறைக்கு அனுப்புவாள். தனது கைத்திறமையை இதன்மூலம் காண்பித்து அவன் மனத்தைக் கவரலாமென்ற நோக்கம் அவளுக்கு. சில சமயம் ஆசாவை அவள் கணவனிடம் போகவிடாமல் ஏதாவது பேச்சுக் கொடுத்துக்கொண்டே காலதாமதம் செய்வாள்; "என்ன அவசரம்? போனால் போயிற்று. உனது புருஷர் எங்காவது ஓடிப்போய் விடுவாரோ? உட்காரேன்" என்பாள்.

இப்படி வேடிக்கை விளையாட்டில் ஒரு நாள் ஆசா வர நேரமாகிவிட்டது. வெகுநேரம் காத்திருந்த மஹேந்திரன் அவள் வந்தவுடன் கோபத்துடன், "என்ன, உன் தோழி

வீட்டைவிட்டு அசைவதாகக் காணும். அவள் எப்பொழுது திரும்பிப் போகப்போகிருள்?" என்ருன்.

ஆசா சற்று வருத்தத்துடன், "நீங்கள் என் தோழியைப் பற்றி இப்படியெல்லாம் பேசாதீர்கள். அவள் உங்களிடம் எவ்வளவு மதிப்பும் வாஞ்சையும் கொண்டிருக்கிருள் தெரியுமா? உங்களைப் பற்றிய விஷயம் எதுவாளுலும் என்ன சிரத்தையுடன் கேட்கிருள்! சாயங்காலமாளுல் எனக்குத் தலையை வாரிச் சிங்காரித்து உங்களிடம் அனுப்புகிருள்" என்ருள்.

ராஜலக்ஷ்மி மருமகளை வேலை செய்யச் சொல்வதை விட்டுவிட்டாள். ஆளுல் விநோதினி அவளைத் தனது உதவிக்கு அழைத்துக்கொண்டாள்; அவள் தாளும் ஒரு நிமிஷம் வீண்பொழுது போக்கமாட்டாள், ஆசாவையும் போக்க விடவில்லை. ஆசாவும் தினம் இவ்வளவுதான் வேலை செய்யவேண்டுமெனத் திட்டம் போட்டுவைத்திருந்தாள் விநோதினி. அதிலிருந்து ஆசா தப்பித்துக்கொள்ளவும் முடியவில்லை. மஹேந்திரன் மேலே அவனது அறையில் ஆசாவுக்காகக் காத்திருப்பானென்று விநோதினிக்கு நன்ருகத் தெரியும். அவன் அப்படித் தவிப்பதை நினைத்து மனத்திற்குள்ளேயே சிரித்துக்கொள்வாள்.

ஆசா மேலே போகவேண்டுமென்று அவசரப்படுவாள்; "நான் போகிறேன். இல்லாவிடில் அவருக்குக் கோபம் வந்துவிடும்" என்பாள்.

விநோதினி, "நில்லேன். சற்று இதைச் செய்துவிட்டுப் போகலாம். அதற்குள் நாழிகை யாகிவிடாது" என்பாள்.

ஆசா சற்றுப் பேசாதிருப்பாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும், "நிச்சயமாய் இனிப் போகா

விட்டால் அவர் மிகவும் கோபிப்பார். என்னைப் போக விடு" என்பாள்.

விநோதினி, "அடியம்மா! சற்றுக் கோபித்துக் கொண்டுவிட்டால்தான் என்ன? குழம்பிற்கு மிளகாய் எப்படி அவசியமோ, அப்படிக் காதல் வாழ்க்கையிலும் சற்றுக் கோபதாபம் அவசியம் வேண்டும். இல்லாவிடில் அது ருசிக்காது" என்று சொல்வாள்.

இந்த ருசியை விநோதினிதான் அறிவாளே தவிர சாதுவான ஆசா ஒன்றும் அறியாள். இவ்விதச் சுகத்தைத் தான் அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லையே யென்பதைத் நினைக்க நினைக்க விநோதினியின் மனம் பற்றி யெரியும். 'இம்மாதிரி அன்பான கணவன்! இப்பேர்ப்பட்ட சுகத்திற் கதிகாரி! இந்தப் பாக்கியம் எனக்கு வாய்த்திருந்தால் கணவனைக் கைக்குள் அடக்கி வைத்திருப்பேனே! அப்பொழுது இவ்வீட்டின் நிலையே வேறு மாதிரியாக இருந்திருக்குமே. இன்று அந்த ஸ்தானத்தில் ஏதும் அறியாத சிசுவையொத்த இந்த அசட்டுப் பெண் வெறும் விளையாட்டுப் பொம்மையாயிருக்கிறாள்' என்று ஆசாவை உள்ளூறச் சபித்தாள்.

---

## பன்னிரண்டாம் அத்தியாயம்

ஒருநாள் மஹேந்திரன் தன் தாயைக் கூப்பிட்டு மிகவும் ஆத்திரத்துடன், "இது என்ன? நன்றாயிருக்கிறது! யாரோ ஒரு பாலிய விதவையைக் கொண்டுவந்து வீட்டில் எவ்வளவு நாள் வைத்துக்கொண்டிருப்பது? எனக்குப் பிடிக்கவேயில்லை; என்ன அனர்த்தம் நேரிடுமோ தெரியவில்லை?" என்றான்.

ராஜலக்ஷ்மி: அவள் என்ன அன்னியமா? என் பெரியப்பாவின் மருமகள்தானே? நான் அவளை அன்னியமாக நினைக்கவில்லை.

மஹேந்: அம்மா, இது நன்றாயில்லை. அவளை அவள் வீட்டிற்கு அனுப்பிவிடுவதுதான் நல்லது.

மஹேந்திரன் தான் நினைத்த காரியத்தைச் சாதித்தே விடுவானென்பதை ராஜலக்ஷ்மி நன்றாயறிவாள். அவன் பேச்சைத் தட்டுவதும் கஷ்டம். ராஜலக்ஷ்மி விஹாரிக்குச் சொல்லியனுப்பினாள். வந்ததும் அவனிடம், “இவ்விஷயத்தில் நீதான் மஹேந்திரனுக்குப் புத்திமதி சொல்ல வேண்டும். விநோதினி வீட்டுவேலை எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறாள். எனக்கு மிகவும் ஒத்தாசையாயிருக்கிறாள். அவள் யாராக இருந்தாலும் அவளைப் போல நமக்கு உழைக்க யார் இருக்கிறார்கள்?” என்றாள்.

விஹாரி அச்சமயம் ராஜலக்ஷ்மிக்குப் பதிலொன்றும் சொல்லவில்லை. மஹேந்திரனிடம் சென்று, “என்ன மஹேன்? விநோதினியைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது” என்றான்.

மஹேந்: ஸதா அதே விசாரந்தான். இரவில்கூடத் தூக்கம்போய்விட்டது. ஆசாவையே கேட்டுப்பார்: இரவு பகல் இதே விசாரத்தில் என் சுகவாழ்க்கைக்கே பங்கம் ஏற்பட்டுவிட்டது.

ஆசா அவனை முறைத்துப் பார்த்தாள்.

விஹாரி: ஏன்? அவளென்ன விஷஜந்துவா?

மஹேந்: ஆம்! எனக்கு அப்படித்தான் தோன்றுகிறாள்.

விஹாரி: நானும் இதைப்பற்றி யோசிக்காமலில்லை. ஆனால் அந்தப் பாழடைந்த கிராமத்தை என் கண்ணால் கண்ட பிறகு அவளைத் திரும்பிப் போகுமாறு சொல்வதும் உசிதமென்று எனக்குத் தோன்றவில்லை. இங்கும் அவளை எப்பொழுதும் வைத்துக்கொள்ள முடியாது. ஆனால் அந்தக் காட்டுக்கு அனுப்புவதோ அவளுக்குக் கொடூர தண்டனை விதிப்பது போலாகும்.

விஹாரியின் எதிரில் விநோதினி வந்ததில்லையானாலும், அவன் தற்செயலாய் அவளை முன்பே பார்த்திருந்தான். அவளைப் போன்ற பெண் குக்கிராம வாழ்க்கைக்கு ஏற்ற வளல்லவென்பதை அவன் அறிந்துகொண்டான். மஹேந்திரன் வீட்டில் அவளிருப்பதும் அனர்த்தமாய் முடியுமென்று அவனுக்குப் பட்டது. 'வீட்டிற்குப் பிரகாசத்தை அளிக்கும் விளக்கே வீட்டைக்கொளுத்தவும் காரணமாகலாம். இவ்விஷயத்தைச் சாவதானமாய் முடிவு செய்ய வேண்டும். இந்த யுவதி விளையாட்டுப் பொருளல்ல. இவளைப்பற்றி அலட்சியமாயிருப்பது ஆபத்தாகும்' என்று கருதினான்.

இது இப்படியிருக்க, ராஜலக்ஷ்மி விநோதினியைக் கூப்பிட்டு, "பெண்ணே, நீ ஆசாவை உன்னிடமே வெகு நேரம் வரையில் பேச வைத்துக்கொள்ளாதே. நீ ஒரு பட்டிக்காட்டுப் பெண். இக்காலத்துப் பையன்களின் சுபாவம் உனக்குத் தெரியாது. முன்பின் யோசித்து ஜாக்கிரதையாக நடந்துகொள்" என்று எச்சரித்துவைத்தாள்.

இதன் பலனாக விநோதினி அன்று முதல் ஆசாவுடன் நெருங்கிப் பழகுவதையும் பேசுவதையும் நிறுத்திக் கொண்டாள். அவள் குத்தலாக ஆசாவிடம், "நான்

யாரடியம்மா உனக்கு? காலம் நல்லதில்லை. எனது மானத்தை நான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் எந்தச் சமயத்தில் என்னவாகுமோ?'' என்றாள்.

ஆசா விம்மி விம்மி அழுது பார்த்தாள். வலுவில் போய்ப் பேசிப் பார்த்தாள். எதற்கும் விநோதினி தனது மௌனத்தை விடுவதாகக் காணோம். ஆசாவுக்கோ, நாள் தவறாது தனது காதற் கதையைச் சொல்லுவது வழக்கமாகிவிட்டது. இப்பொழுது அதை யாரிடம் சொல்வது?

சில நாட்களாய் மஹேந்திரனது சுபாவத்திலும் மாறுதல்கள் காணப்பட்டன. தம்பதிகளிடையில் அன்பும் பாசமும் தளர்ந்து வந்தன. ஸதா சேர்ந்திருக்க வேண்டுமென்ற ஆவலும் குறைந்துவந்தது. முன்பெல்லாம் ஆசா ஏதாவது தப்பிதம் செய்துவிட்டாலோ, வேலையைச் சரியாகச் செய்யாவிட்டாலோ மஹேந்திரனுக்கு அதுவும் ஒரு வேடிக்கையாகத் தோன்றும்; அதைக் கண்டு சந்தோஷப்படுவான். இப்போதோ அப்படியில்லை. அவளது திறமையற்ற செய்கைகள் அவனுக்குப் பிடிப்பதில்லை. அவன் இதை வாய்விட்டுக் கூறாவிட்டாலும் முகக் குறிப்பிலிருந்து ஆசா அறிந்துகொண்டாள். ஸதா கூடவே இருப்பதன் பலனாகவே இன்பவொளி மங்கலாயிற்றென்று அவள் நம்பினாள். அவனுடைய பேச்சிலும் நடத்தையிலும் முன்பிருந்த ஆர்வமும் அன்பும் காணப்படவில்லை. அதைக் காண்பித்துக் கொள்ளாதிருக்க அவன் பிரயாசைப் படுவதையும் உணர்ந்தாள்.

இதற்கு ஒரே உபாயம், சற்றுப் பிரிந்து தூர இருப்பதுதான் என்று அவள் நினைத்தாள். ஸ்திரீகளுக்கும் சுபாவமாகவே இம்மாதிரி ஸமயங்களில் எப்படியிருந்தால்

நலமெனத் தெரியும். ஆசாவும் மஹேந்திரனிடம் அதிகம் நெருங்காதிருக்க விரும்பினாள். ஆனால் எங்கே போவது, எப்படிப் பொழுதைக் கழிப்பது என்று தெரியவில்லை. விநோதினியை விட்டால் பேச்சுத் துணைக்கே வேறு ஒருவரும் இல்லை.

மஹேந்திரனும் புதுமோகம் சற்றுத் தணிந்ததும் மனம் தெளிந்து தனது தினசரி வேலைகளில் கவனம் செலுத்தலானான். மூலையில் கிடந்த வைத்தியப் புத்தகங்களையெல்லாம் தேடியெடுத்துத் தூசுபோக்கிப் படிப்பில் கவனம் செலுத்தினான்.

---

## பதின்மூன்றாம் அத்தியாயம்

விநோதினியை இணங்கச் செய்ய ஆசாவுக்குப் புதிய யுக்தி ஒன்று தோன்றியது. அவள் விநோதினியிடம், "ஆமாம்; நீயேன் அவரெதிரிலேயே தலைகாட்டாமல் இப்படி ஓடி ஓடி ஒளிகிறாய்?" என்றாள்.

விநோதினி முகத்தைச் சுளித்துக்கொண்டு கோபமாய், "சீ, போ!" என்றாள்.

ஆசா: ஏன்? நீ ஒன்றும் அன்னியமில்லையென்று மாமி கூடத்தான் சொல்லுகிறாளே!

விநோதினி: (சற்று உதாசீனமாக) உலகத்தில் நாம் யாரை வேண்டியவர்களென்று நினைக்கிறோமோ அவர்களெல்லாம் நமக்கு வேண்டியவர்களே. வேறாக நினைத்தால் நெருங்கிய பந்துக்களாயிருந்தாலும் அன்னியர்களே.

இதற்குச் சரியான பதில் ஆசாவிடமில்லை. தன் கணவன் அவளை வேறாகப் பாவித்து அவளுடன் பேசா

மலும் பாராமலும் இருப்பது முற்றும் அநியாயமென்று அவளுக்குத் தோன்றியது. அன்றிரவே அவள் மஹேந்திரனிடம், தன் தோழியோடு அவன் கட்டாயம் பேசத்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள்.

மஹேந்: (சிரித்துக்கொண்டே) உன் பிடிவாதம் ஒன்றும் சாதாரணமானதாயில்லை.

ஆசா: உங்களுக்கு அவளுடன் பேசச் சங்கோசமேன்?

மஹேந்: நீ அவளைப்பற்றிச் சொல்வதையெல்லாம் கேட்டால் அவளுடன் பேசுவதும் லேசல்லவென்று தெரிகிறது.

ஆசா: உங்களுக்கு ஏன் அதைப்பற்றிக் கவலை? நான் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் சிரிக்காது சொல்லுங்கள்: அவளுடன் பேசுவீர்களா? மாட்டீர்களா?

மஹேந்திரனுக்கும் விநோதினியைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் இல்லாமற் போகவில்லை. ஆனால் அப்படிச் செய்வது உசிதமன்று என்றே சும்மா இருந்தான்.

பிறருடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் அவன் மிகவும் தாரதம்மியம் பார்ப்பதுண்டு. அவனுடைய லக்ஷியமே இவற்றில் வேறாயிருக்கும். எதிலும் மிதமிஞ்சிப்போவான். தாயின் அன்பு குறையாதிருக்க முதலில் கலியாணமே வேண்டாமென்றான். அப்படியே இப்பொழுது ஆசாவைத் தவிர வேறு ஸ்திரீயைக் கண்ணெடுத்துப் பார்ப்பதும் தகாதென்று நினைத்தான். மனைவியின்பால் தனக்குள்ள உண்மையான அன்பிற்காகத் தன்னைத் தானே சிலாகித்துக்கொண்டான். விஹாரியைத் தவிர அவன் வேறு யாரிடமும் தோழமை கொண்டா

டியதில்லை. தனது சிநேகத்தை நாடி வருபவர்களை விஹாரி யின் எதிரிலேயே எவ்வளவோ முறை உதாசீனமாய்ப் பேசி அனுப்பிவிட்டு அவர்களைக் கேலி செய்வான். இப் படிச் செய்வது தகாதென்று விஹாரி சொன்னால், "உன் னைப்போல் என்னால் இருக்க முடியாதப்பா. நீ போகும் இடமெல்லாம் சிநேகிதம் கொண்டாடுவாய்; எல்லாரும் உன் நண்பர்களே!" என்பான்.

தனது தூய்மையைப்பற்றிக் கர்வங்கொண்ட மஹேந் திரனுக்கு, விதவையான விநோதினியைப் பார்க்கத் தூண் டிய ஆசையொன்றே அவனை வெட்கமுறச் செய்தது. எப்படியாவது அவளை வீட்டைவிட்டு அனுப்பிவிடவேண் டித் தாயுடன் சச்சரவு செய்ய ஆரம்பித்தான்.

ஒருநாள் ஆசாவிடம், "இந்தப் பேச்சை விடு, ஆசா! எனக்கு அவளுடன் பேச நேரமெங்கே? படிப்பும் காலேஜும் போக ஒழிந்த நேரம் உன்னுடன் சற்றுப் பேசிக் கொண்டிருப்பதில் கழிந்து விடுகிறது. பிறகு எனக்குப் பொழுது எங்கே இருக்கிறது?" என்றான்.

ஆசா: நல்லது. படிக்கும் சமயத்தில் வேண்டாம். என்னுடன் பேசும் நேரத்தை நான் என் தோழிக்காக விட்டுவிடுகிறேன். அப்பொழுது அவளுடன் பேசுகிறீர் களா?

மஹேந்திரன், "உன்னுடன் இருக்கும் சிறிது நேரத் தை நீ விடத் தயாரானாலும் என்னால் அதை விட முடி யாது. தோழியிடம் உள்ள அன்பின்மிகுதியால் என் மீதுள்ள அன்பு குறைந்துவிட்டது போலும்! ஆனால், ஆசா, என்னால் உன்னைப்போல் இருக்கமுடியாது" என்று சற்றுக் கோபத்துடனேயே உரைத்தான்.

ஆனால் ஆசா இதோடு விடுவதாகக் காணோம். அழு வாள்; வாக்குவாதம் செய்து கடைசியில் தோற்றுப் போவாள்.

தங்களிருவருக்கும் இடையில் மூன்றாமவள் ஒருத்தி வந்து புகுவதற்குத் தான் சற்றும் இடங் கொடாமலிருப்பதைப் பற்றி மஹேந்திரனுக்குப் பெருமை. ஆசா இதைச் சரியென்று ஒப்பவில்லை. கடைசியில் அவனைத் தன்னை திரிலேயாவது விநோதினியுடன் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுவதற்கு இணங்கச் செய்தாள்.

ஆசாவிடம் தனக்குள்ள ஆழ்ந்த அன்பைப்பற்றிப் பன்முறையும் தெரிவித்துக்கொண்டே மஹேந்திரன் இதற்கு ஒப்புக்கொண்டான். அப்பொழுதும் அவன் அவளிடம், "இதோ பார்: அவளுடன் அடிக்கடி என்னால் பேச முடியாது. வேண்டா வெறுப்பாக ஏதோ ஒன்றிரண்டு முறைதான் பேசுவேன்" என்று எச்சரித்தான்.

மறுநாள் அதிகாலையிலேயே ஆசா குதித்தோடிவந்து விநோதினியின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். விநோதினி உடனே, "இது என்ன ஆச்சரியம்! வண்டு நறுமணம் கமழும் புஷ்பத்தை விட்டு உலர்ந்த இலையை நாடி வந்தது எப்படி?" என்று பரிகசித்தாள்.

ஆசா: இதோ பார்: இம்மாதிரியான கவித்துவச் சொற்களின் அழகு எனக்குத் தெரியாது. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? யாருக்கு இதை அறிந்து கொள்ளும் சக்தியுண்டோ அவர்களிடமே ஏன் சொல்லக் கூடாது?

விநோதினி: யார் அப்பேர்ப்பட்ட கவி?

ஆசா: உன் மைத்துனர்தாம்! சிரிக்காதே. இது ஒன்றும் பொய்யில்லை. உன்னுடன் சம்பாஷிக்க விரும்பி என்னிடம் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்.

கெட்டிக்காரியான விநோதினி உள்ளூற, 'மனைவி சொன்ன பிறகுதான் என்னுடன் பேசத் தோன்றியதாக்கும்! ஆனால் நான் மாத்திரம் இவன் விரும்பியதும் பேச ஓடுவானேன்?' என்று நினைத்தாள்.

ஆசாவின் வேண்டுகோளிற்கு விநோதினி எவ்விதத்திலும் இணங்கவில்லை. இம்முயற்சியில் தான் தோற்றதைத் தெரிவிப்பதற்கு மஹேந்திரனிடம் ஆசா வெட்கினாள்.

'என்ன? என்னெதிரில் வருவதற்கா இவ்வளவு பிகு! நானும் மற்றப் புருஷர்களைப் போல்பவனே என்று நினைத்திருக்கிறாள் போலும்! வீட்டிலிருப்பவளைப் பாராமல் என்னைத் தவிர வேறு யாரால்தான் இருந்திருக்க முடியும்? நானென்ன அவளைப் பார்க்கவாவது முயன்றேனோ? என் குணத்தை அவள் இன்னும் அறியவில்லைபோலும்! ஒருமுறை அறிந்தால் பிறகு எனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் நன்றாகத் தெரியும்' என்று எண்ணினான் மஹேந்திரன். விநோதினியின் மனத்திலும், 'இத்தனை நாளாக நானும் பார்க்கிறேன்: வீட்டில் நான் ஒருத்தி இருக்கிறேன் என்று திரும்பிக் கூடப் பார்த்ததில்லை; நான் அவ்வளவு பொருட்டில்லையா? நானும் ஒரு ஸ்திரீ தானே? எனது பரிசயம் சற்று ஏற்பட்டால் பிறகு எனக்கும் ஆசாவுக்கும் உள்ள வித்தியாசம் தெரியும்' என்று பல எண்ணங்கள் தோன்றின.

ஆசா மஹேந்திரனிடம் ஒருநாள், "இன்று நீங்கள் காலேஜுக்குப் போய்விட்டதாகச் சொல்லி என் தோழி

யை உங்கள் அறைக்குக் கூட்டிவந்து உட்காரவைக்கிறேன். நீங்கள் காலேஜுக்குப் போவதுபோல் சற்று வெளியில் போய்விட்டுத் திடீரென்று அறைக்குள் வந்து நுழையுங்கள். விநோதினியும் நமது வசத்தில் சிக்கிவிடுவாள்" என்றாள்.

மஹேந்: என்ன அபராதத்திற்காக அவளுக்கு இப்படி ஒரு தண்டனை விதிக்கத் தீர்மானித்திருக்கிறாய்?

ஆசா: உண்மையில் அவள்மேல் எனக்குக் கோபந்தான். உங்களுடன் பேசிவிட்டால் அவளுக்கென்ன குறைந்தாபோய்விடும்? பேசாமலிருக்கச் சங்கல்பமாம்! அதை உடைத்தெறிந்தாலொழிய நான் விடப்போவதில்லை.

மஹேந்: உன் அருமைத் தோழியைப் பாராமல் எனது கண்களொன்றும் பூத்துப்போய்விடவில்லை. எனக்கு இப்படியெல்லாம் ஒளிந்து மறைந்து பார்ப்பது இஷ்டமில்லை.

ஆசா கெஞ்சியவண்ணம், "என்மீது ஆணை! நீங்கள் எப்படியாவது இந்த ஒருதரம் நான்சொல்கிறபடி செய்யுங்கள்; போதும். எப்படியாவது அவள் பிரதிக்ஞையைத் தகர்க்கவேண்டும். பிறகு உங்கள் இஷ்டம். பேசினாலும் சரி, பேசாவிட்டாலும் சரி" என்றாள்.

மஹேந்திரன் பேசாதிருந்து விட்டான். உள்ளூற விநோதினியைக் காணவேண்டுமென்ற ஆவல் அவனுக்கும் அதிகரித்து வந்தது. ஆனால் வெளிக்கு அலக்ஷியமாக, ஆசாவிற்காகவே இதற்கு உடன்படுவது போலக் காட்டிக் கொண்டான்.

வஸந்த காலம். வானம நிர்மலமாயிருந்தது. பகற்பொழுது; எங்கும் நிச்சப்தம். விநோதினி மஹேந்திர

னின் அறையில் உட்கார்ந்து ஆசாவுக்குத் துணியில் பூவேலை செய்யக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஆசாவின் கவனம் அதில் செல்லவில்லை. வாயிற் கதவுப்புறம் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே தப்புத் தப்பாய்த் தையலைப் போட்டுக் கொண்டிருந்தாள்.

விநோதினிக்குக் கோபம் பொறுக்கவில்லை. ஆசாவின் கையிலிருந்து தையலைப் பிடுங்கி மூலையில் எறிந்துவிட்டு, "இதெல்லாம் உனக்கு வராது! நான் போகிறேன். எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்று சொல்லி எழுந்தாள்.

ஆசா: இதோ சற்றுப் பொறு. இம்முறை நான் சரியாய்த் தைக்கிறேன்.

ஆசா மறுபடி துணியை எடுத்துத் தைக்க ஆரம்பித்தாள். இதற்கிடையில் மஹேந்திரன் சத்தமின்றி விநோதினியின் பின்புறம் கதவினருகில் வந்து நின்றான். ஆசா பார்க்காததுபோல் தலைகுனிந்து சிரித்துக்கொண்டாள்.

விநோதினி: என்னடீ? என்ன சிரிப்புத் தாங்கவில்லை? எதை நினைத்துக்கொண்டாய்?

ஆசாவினால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கையிலிருந்த பூத்துணியைத் தூர எறிந்துவிட்டு, "அக்கா, நீ சொல்வதுபோல் இது எனக்குத் தைக்கத்தான் வராது" என்று கூறிக் கொல்லென்று நகைத்தாள்.

விநோதினி முதலிலேயே ஒருவாறு இதையெல்லாம் அறிந்திருந்தாள். ஆசாவின் முகக் குறிப்பிலிருந்தே தன்னை வலையில் சிக்கவைக்க ஏதோ யுக்தி நடக்கிறதென்று தெரிந்து கொண்டாள். மஹேந்திரன் தன் பின்னால் வந்து நின்ற

தையும் அவள் அறியாமலில்லை. ஆனால் ஒன்றுமே அறியாதவள்போல் பாசாங்கு செய்தாள்.

மஹேந்திரன் உள்ளே நுழைந்தவண்ணம், "இந்தச் சிரிப்பிற்குக் காரணம் எனக்கும் சற்றுத் தெரியக் கூடாதா?" என்றான்.

விநோதினி திடுக்கிட்டவள்போல் எழுந்து வெளியே போக முயன்றாள். ஆனால் ஆசா அவள் கையைக் கெட்டியாய்ப் பிடித்து இழுத்து இருத்திக் கொண்டாள்.

அதற்குள் மஹேந்திரன், "நீங்கள் இருங்கள். நான் வெளியே போகிறேன்" என்றான்.

ஆசா: இல்லை. இருங்கள்; போகவேண்டாம்.

விநோதினி மற்ற ஸ்திரீகளைப்போல் நாணத்துடன் எழுந்து ஓட எத்தனிக்கவில்லை. அங்கேயே உட்கார்ந்தாள். ஆசா அவளிடம், "இவ்வளவு வெட்கப்படுவானேன்?" என்றாள். விநோதினி மஹேந்திரனைப் பார்த்து, "உங்கள் விருப்பப்படியே நான் உட்காருகிறேன். ஆனால் என்னை உள்ளூற வைது சபிக்காதீர்கள்!" என்றாள்.

மஹேந்: உன் காலுக்கு வெகுநேரம் வரை எழுந்து ஓடச் சக்தி வராதிருக்குமாறு கட்டாயம் சபிக்கத்தான் போகிறேன்.

விநோதினி: இந்தச் சாபத்திற்கு நான் பயப்படவில்லை. ஏனெனில் உங்களுடைய வெகுநேரமென்பது ஐந்துநிமிஷமாயிருக்கும். அந்த ஐந்து நிமிஷ நேரமும் அநேகமாய் இப்பொழுதே ஆகிவிட்டிருக்கும்.

இதைச் சொல்லிக்கொண்டே விநோதினி எழுந்தாள். ஆசா மறுபடியும் அவளைத் தடுத்து, "என்மேல் ஆணை!

நீ இன்னும் சற்றுநேரம் இருந்துவிட்டுத்தான் போகவேண்டும்" என்றாள்.

---

## பதினொன்றாம் அத்தியாயம்

ஆசா பதியிடம், "நிஜமாகச் சொல்லுங்கள்: என் தோழி எப்படியிருக்கிறாள்?" என்று கேட்டாள்.

மஹேந்திரன் அசட்டையாக, "பாதகமில்லை" என்றான்.

ஆசா மனத்தாங்கலுடன், "உங்களுக்கு யாரைக் கண்டாலும் பிடிப்பதில்லை" என்றாள்.

மஹேந்: ஆமாம், ஒருத்தியைத் தவிர!

ஆசா: அவளுடன் நன்றாகச் சம்பாஷித்துப் பார்த்தால் பிறகு தெரியும்.

மஹேந்: மறுபடியுமா? சரிதான். இது இனிமேல் நாள்தோறும் நடைபெறுமென்று தெரிகிறது!

ஆசா: எதிரில் வந்துவிட்டால்கூடப் பேசாதிருந்து விடுவீர்களோ? மரியாதைக்காகவாவது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டாமா? ஒருமுறை தெரிந்த பிறகு உடனே பார்ப்பதையும் பேசுவதையும் நிறுத்திவிட்டால், அவள்தான் என்ன நினைத்துக் கொள்ளமாட்டாள்? உங்களுடைய விஷயமே விசித்திரந்தான்! இம்மாதிரி ஸ்திரீயுடன் சம்பாஷிக்கச் சமயம் கிடைக்காதாவென்று யாராயிருந்தாலும் தோன்றும். நீங்கள்தான் ஏதோ பெரிய அபாயம் வருமென்று இதைத் தவிர்க்கிறீர்கள்!

இப்படி மற்றவர்களிலிருந்து தான் வேறுபட்டிருப்பதைப் பெரிய பெருமையாக நினைத்து மஹேந்திரன் கர்வங்கொண்டான். அவன் ஆசாவிடம், "நல்லது; நீ

இதற்காக வருந்த வேண்டாம். எனக்குந்தான் போக்கிடமெங்கே? உன் தோழியும் வீட்டை விட்டுப் போவதாகக் காணும். ஆகையால், இனிச் சந்திக்காமல் இருக்கப் போவதில்லை. அவளைப் பார்த்தால், எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொண்டுதானே ஆகவேண்டும்? இதைக் கற்றுக் கொடுக்க நீயே என் குருவாக இருக்கவேண்டும்!" என்றான்.

மஹேந்திரன் ஏதாவதொரு விதத்தில் விநோதினியுடன் சந்திப்பும் சம்பாஷணையும் ஏற்படுமென்று நினைத்தான். ஆனால் இதில் அவன் ஏமாற்றமே அடைந்தான். அவள் அதற்கு இடங் கொடுக்கவில்லை.

மஹேந்திரனுக்கோ தனது ஆவலைக் காண்பித்துக் கொள்ளவும் முடியவில்லை. ஆசாவிடங்கூட அவன் விநோதினியின் பிரஸ்தாபத்தை எடுப்பதில்லை. ஆவலை வெளிக் காட்டாமல் அடக்க அடக்க அது பன்மடங்கு அதிகரித்தது. விநோதினி பராமுகமாயிருப்பது அவனது மன வெழுச்சியைப் பின்னும் தூண்டியது.

ஒருநாள் அவன் ஆசாவிடம் சிரித்துக்கொண்டே, "உன் தோழிக்கு என்னைப்பற்றி என்ன அபிப்பிராயம்?" என்று கேட்டான்.

தானாகவே ஆசா இதைப்பற்றி ஒரு விஸ்தாரமான அறிக்கை சமர்ப்பிப்பாளென்று அவன் எதிர்பார்த்திருந்தான். ஆனால் அவள் அப்படியொன்றும் சொல்வதாகக் காணும். ஆகவே அவனே அவ்விஷயத்தை விளையாட்டுப் போல் சிரித்துக்கொண்டே ஆரம்பித்தான்.

ஆசா என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தாள். விநோதினியோ இதைப்பற்றி ஒன்றுமே அவளிடம்

சொல்லவில்லை. இதற்காக ஆசாவுக்கும் சகியினிடம் சற்று வருத்தந்தான்.

ஆசா: இருக்கட்டும். இன்னும் சில தினங்கள் இப்படியே பேச்சு வார்த்தை ஏற்பட்டால் பிறகு உங்களைப் பற்றி அவளுக்கும் தெரியும். இதற்குள் அவள் என்ன சொல்வாள்?

இந்தப் பதிலைக் கேட்டு மஹேந்திரனுக்கு ஏமாற்றம் அதிகமாயிற்று; அவளைச் சந்தித்துப் பேசவேண்டுமென்ற அவாவும் கூடவே அதிகரித்தது.

இந்தச் சமயம் விஹாரி வந்து சேர்ந்தான். உள்ளே நுழையும்போதே, "ஏன்? என்ன பெரிய யோசனை நடக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

மஹேந்: இதோ பார்த்தாயா? அந்த விநோதினியோ கிநோதினியோ, அவள் பெயர்கூடச் சரியாய்த் தெரியவில்லை: அவளுடன் ஆசா மிகவும் சிநேகமாம். தங்களிருவருக்கும் பொதுப்பெயராக ஏதோ ஜகன்மோகினியோ ஜாலவிநோதினியோ என்று கூட வைத்துக்கொண்டிருக்கின்றனராம். எனக்கும் அவளைச் சிநேகம் செய்து வைக்க விரும்புகிறாள். கூப்பிடுவதற்கு ஒரு விசித்திரப் புதுப் பெயரும் வேண்டும். சமாசாரம் எப்படியிருக்கிறது, கேட்டாயா?

அருகிலிருந்த ஆசாவின் முகம் கோபத்தினால் சிவந்தது.

விஹாரி நண்பனைப் பார்த்துக் கண் சிமிட்டிவிட்டு ஆசாவிடம், "இது என்னவோ சரியில்லைதான், அம்மா. எல்லாம் சுத்தப் புரட்டு. உனது மாயாவிநோதினியை நான் பார்த்திருக்கிறேன். நான் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்:

அவளை அடிக்கடி சந்திக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் நான் அதை என் பாக்கியமாக நினைப்பேன். அப்படியிருக்க மஹேந்திரனுக்கு அவளைக் காண விருப்பமில்லை என்று சொல்வதை நான் நம்பவே முடியாது'' என்றான்.

ஆசா மஹேந்திரனுக்கும் விஹாரிக்கும் உள்ள வித்தியாசத்தை அளவிட இதை ஓர் உதாரணமாகக் கொண்டாள்.

நிற்க; திடீரென்று மஹேந்திரனுக்குப் போட்டோ பிடிக்கும் பைத்தியம் ஏற்பட்டது. முன்பு ஒருமுறை அளவில்லாத உற்சாகத்துடன் போட்டோ எடுக்க ஆரம்பித்து, சில தினங்களுக்கெல்லாம் காமிரா மூலையில் எறியப்பட்டது. இப்பொழுது அதை எடுத்துப் பழுது பார்த்து மறுபடியும் படம் எடுக்க ஆரம்பித்தான். வீட்டிலிருக்கும் ஆட்கள், நாய், பூனை யாவும் போட்டோ எடுக்கப்பட்டாய்விட்டன.

ஆசா அவனிடம், "நீங்கள் என் தோழியையும் ஒரு போட்டோ பிடிக்கத்தான் வேண்டும்" என்று வற்புறுத்தினாள்.

அவன் மிகவும் சுருக்கமாய், "சரி, அப்படியே" என்று பதிலளித்தான்.

அதிலும் சுருக்கமாக விநோதினி, "முடியாது" என்று மறுத்தாள்.

ஆசா இதற்கும் ஒரு யுக்தி கண்டுபிடிக்க முயன்றாள். விநோதினிக்கு அவள் அப்படிச் செய்வாளென்று நன்றாகத் தெரியும்.

அன்று பகல் ஆசா தன் தோழியை எப்படியாவது தன் அறைக்குக் கூட்டிவந்து தூங்கச் செய்து விட

விநோதினி......போட்டோ எடுப்பதற்கு அனுகூலமாகவே அப்படிப் படுத்திருப்பது போலத் தோன்றியது. —பக்கம் 81.

வேண்டும்; அந்தச் சமயம் மஹேந்திரன் அவளைப் போட்டோ எடுக்கவேண்டும்; இதுதான் விநோதினியை வழிக்குக் கொண்டுவரத்தக்க உபாயம் - இவ்வாறு ஓர் ஏற்பாடு நிச்சயிக்கப்பட்டது.

விநோதினி பகற்பொழுதில் எப்பொழுதும் தூங்குவதில்லை. அதிசயிக்கத்தக்க விதமாய் அன்று ஆசாவின் அறைக்குள் வந்ததுமே அவளுக்குத் தூக்கம் வந்துவிட்டது. திறந்த ஜன்னலருகில் கையை மடித்துத் தலைக்கு வைத்தபடி ஒரு சிவப்புச் சால்வையைப் போர்த்துக் கொண்டு விநோதினி படுத்திருந்த மாதிரியைப் பார்த்தால் போட்டோ எடுப்பதற்கு அனுகூலமாகவே அப்படிப் படுத்திருப்பதுபோலத் தோன்றியது.

மஹேந்திரன் காமிராவை எடுத்து வந்தான். வெளிச்சம் சரியாயிருக்கிறதா வென்று பார்ப்பதாகக் கூறிக்கொண்டே விநோதினியின் ஒவ்வோர் அங்கத்தையும் உற்றுக் கவனித்தான். போட்டோ சரியாக வரவேண்டுமாதலால் அவிழ்ந்து புரண்டு கொண்டிருந்த அவள் கூந்தலைச் சற்றே விலக்கினான். காலை மூடியிருக்கும் சால்வையையும் எடுக்கும்படி ஆசாவிடம் சொன்னான்.

சூது என்பதையே அறியாத பெண்ணாகிய ஆசா, "என்னால் முடியாது. அவள் எழுந்து விடுவாள். நீங்கள் விலக்கி விடுங்கள்" என்றாள். மஹேந்திரன் அப்படியே செய்தான்.

எல்லாம் சரியாகிவிட்டது. காமிராவில் பொத்தானை அமுக்க வேண்டியதுதான் பாக்கி. ஏதோ ஒரு சப்தம் கேட்டுத் திடீரென்று விழித்துக் கொள்பவளைப்போல விநோதினி சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். ஆசா

கலகலவென்று சிரித்தாள். விநோதினிக்குக் கோபம் பொங்கிற்று. கண்கள் சிவக்க மஹேந்திரனைப் பார்த்து, "இந்த அநியாயம் அடுக்காது!" என்று சீறினாள்.

மஹேந்: அநியாயந்தான்; சந்தேகமில்லை. ஆனால் திருடப்போன கள்வனுக்குக் கன்னம் வைத்தும் சொத்து கைக்கு அகப்படவில்லையே! ஆனது ஆயிற்று. நடந்த அநியாயம் பூராவும் நடந்துவிடட்டும். பிறகு எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் விதி.

ஆசாவும் தோழியைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். போட்டோ பிடித்தாயிற்று. ஆனால் அது கெட்டுப்போயிற்று. மறுபடி பிடிக்கவேண்டியதாயிற்று. தோழிகளின் நட்பிற்கு அறிகுறியாக இருவரையும் சேர்த்து ஒன்று பிடிப்பதற்கும் விநோதினி கடைசியில் இணங்கினாள். "இதுதான் கடைசி. இனி நான் போட்டோ எடுக்க விடவே முடியாது" என்றாள் அவள்.

ஆனால் மஹேந்திரன் வேண்டுமென்றே ஒவ்வொன்றையும் கெடுத்து விட்டுத் திரும்பத் திரும்ப எடுக்க ஆரம்பித்தான். இம்முறையில் அவர்களின் நட்பு விருத்தி படைந்து வந்தது.

---

## பதினைந்தாம் அத்தியாயம்

நீறு பூத்த நெருப்பு, காற்றுப் பட்டவுடன் செந்தழலாகக் கனிந்தது. தணிந்துகொண்டே வந்த தம்பதிகளின் பிரேமாக்கினி மூன்றுமவர் ஒருத்தரின் சம்பந்தத்தினால் மூண்டு எழுந்தது.

ஆசாவுக்கு ஹாஸ்யமாகப் பேசும் திறமை இல்லை. ஆனால் விநோதினி இதில் கெட்டிக்காரி. இக்காரணத்

திருல்தான் ஆசா அவளைத் தனது ஆனந்தத்திற்கு இருப்பிடமாகக் கொண்டாள். மஹேந்திரனைச் சந்தோஷமடையவும் சிரிக்கவும் வைக்கவேண்டிய கவலை அவளுக்கு இப்பொழுது நீங்கிவிட்டது.

வட்டியைக்கொண்டு பிழைப்பதைவிட்டு மூலதனத்தையே கரைக்க ஆரம்பித்துவிட்டால் அசல் அழிய எவ்வளவு காலமாகும்? கலியாணமான சில தினங்களுக்குள்ளாகவே மஹேந்திரன் சிற்றின்பக் கடலில் மூழ்கிக் கரை கடந்துவிட விரும்பியதன் பலனாகக் காதலென்னும் தெய்விக அன்பு பெருக இடமில்லாமலே போயிற்று. குடிகாரன் குடிமயக்கத்தின் ஆனந்தத்தை நிரந்தரமாக அடைய வேண்டி மேலும் மேலும் குடித்துக்கொண்டே போகிறான். மயக்கம் தெளிந்து தனது செயலற்ற தன்மை தெரிந்தும் மறுபடி குடிமயக்கத்தையே விரும்புகிறான். மஹேந்திரனும் சிற்றின்ப ஸுகத்தில் சதா மயங்கியிருக்க விரும்பினான். ஆனால் அவனது மதுபானக் கிண்ணத்தை நிரப்ப ஆசாவினால் முடியவில்லை. இந்தச் சமயத்தில் விநோதினி வந்து சேர்ந்தாள். அக்கிண்ணத்தை நிரப்பி ஆசாவின் கையில் கொடுத்தாள். அதை வாங்கிக் கணவனுக்கு அளித்து அவன் இன்புறுவதைக் கண்டு தானும் சிந்தனையற்றிருக்கலானாள் ஆசா.

வரவர ஆசாவின் தூண்டுதலின்றியே மஹேந்திரனும் விநோதினியும் சேர்ந்து வேடிக்கையாகப் பேசிக் காலங் கழிக்க ஆரம்பித்தனர். ஆசா தானும் இவ்வேடிக்கையில் கலந்துகொண்டு மனம் விட்டுப் பேசுவதும் சிரிப்பதுமாயிருந்தாள். சதுரங்கம் ஆடும்பொழுது மஹேந்திரன் தன்னைக் கேலியாகவோ கடிந்தோ பேசும்பொழுதெல்லாப்

ஆசா தனக்காகப் பரிந்து பேசுமாறு விநோதினியின் முகத்தை நோக்குவாள். இவ்வாறு தினந்தோறும் மூவரும் ஒன்று சேர்ந்து வந்தனர்.

விநோதினி இவர்கள் விளையாட்டு விநோதங்களில் கலந்து கொண்டாலும், வீட்டு வேலை ஒன்றையும் அசட்டை செய்யவில்லை. சமையல், சாப்பாடு, லக்ஷ்மிக்கு வேண்டிய சுசுருஷை யாவும் செய்து முடித்து விட்டே வந்து உட்காருவாள். "ஆட்களைக் கூட வேலை செய்ய விடாது சோம்பேறியாய் அடித்து விடுவாய் போல் இருக்கிறதே!" என்று மஹேந்திரன் அவளைக் கடிந்து கொள்வான்.

விநோதினி, "வேலையின்றி நான் சோம்பேறி யாவதை விட ஆட்களைப் பாழாயடிப்பது எவ்வளவோ நல்லது. நீங்கள் காலேஜிற்குப் போங்கள்" என்பாள்.

மஹேந்: இன்று போக வேண்டிய முறையில்லை.

விநோ: இது முடியாது. வண்டி தயாராயிருக்கிறது. நீங்கள் போகத்தான் வேண்டும்.

மஹேந்: நான்தான் வண்டி கொண்டுவர வேண்டாமென்று சொல்லியிருந்தேனே?

விநோ: நான் கொண்டுவரச் சொன்னேன்.

இதைச் சொல்லிவிட்டு விநோதினி அவன் அன்று போட்டுக்கொள்ள வேண்டிய உடுப்புகளை அவன்முன் கொண்டுவந்து வைத்தாள்.

மஹேந்: நீ ஒரு ராஜபுத்திர ஸ்திரீயாய்ப் பிறந்திருக்க வேண்டும். அப்பொழுது யுத்தத்திற்குப் புறப்படும் கணவனுக்குக் கவசங்கள் அணிவித்து அனுப்பியிருப்பாய்!

விநோதினியின் நிர்ப்பந்தத்தினால் மஹேந்திரனுக்குக் காலேஜுக்குப் போகாமல் லீவு எடுத்துக் கொள்ளவோ படிக்காமலோ இருக்க முடியவில்லை. சாயங்கால வேளை தவிர வேறு எப்பொழுதும் வேடிக்கை விளையாட்டுகள் கூடாவென்பது அவளுடைய அமல். மஹேந்திரன் அந்த இன்பகரமான சாயங்காலம் எப்பொழுது வரப்போகிற தென்று ஒவ்வொரு நிமிஷத்தையும் கணக்கெண்ணிக் கொண்டு தினமும் எதிர்பார்த்திருப்பான். பகலெல்லாம் உழைத்த பிறகு அந்திப்பொழுதில் கிடைக்கும் அவ்வின்பம் அவனுக்கு ஆனந்தமாயிருந்தது.

முன்பெல்லாம் வீட்டில் வேளைக்குச் சரியாய்ச் சமையல் ஆகாது. இதைச் சாக்காகக் கொண்டு அவன் காலேஜுக்குப்போகாது நின்றுவிடுவான். இப்பொழுதோ அப்படியில்லை. சரியான மணிக்கு விநோதினி சமைத்து அவனுக்குப் பரிமாறிவிடுவாள். உடனே வாசலில் வண்டி தயாராய் நிற்பது அவனுக்குத் தெரிவிக்கப்படும். முன் பெல்லாம் உடுப்புகள் வண்ணானுக்குப் போடப்பட்டிருக் கிறதா, வீட்டிலிருக்கிறதா, எந்த அலமாரியின் அடியில் விழுந்து கிடக்கிறது என்னும் இவற்றில் ஒன்றும் மஹேந் திரனுக்குத் தெரியாது. இப்பொழுதோ எல்லாம் ஒழுங் காக மடித்துப் பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

முதன்முதல் விநோதினி அவற்றையெல்லாம் மஹேந் திரனுக்கெதிரில் ஆசாவைக் கொண்டே செய்வித்து வந்தாள். சரியாகச் செய்யாவிடில் எதிரிலிருந்து அவளைக் கண்டிக்கவும் கண்டித்தாள். மஹேந்திரனும் தன் மனைவி யின் திறமையற்ற தன்மையைக் கண்டு கேலி செய்வான். கடைசியில் இப்பொழுது தோழிக்கு உதவி செய்வது தனது கடமையென்று மதித்து, விநோதினி இவ்வேலை

யையெல்லாம் தானே ஏற்றுக்கொண்டாள். அவளே இப்பொழுது வீட்டின் எஜமானி.

ஒருநாள் மஹேந்திரனுக்குச் சட்டையில் பொத்தா னில்லை. சீக்கிரம் பொத்தான் வைத்துத் தைத்துக் கொடுக்க ஆசாவிற்குத் தெரியவில்லை. உடனே விநோதினி அதை வாங்கி ஒரு நொடியில் தைத்துக் கொடுத்து விட்டாள். ஒருநாள் மஹேந்திரனுக்காகத் தட்டில் வைத் திருந்த பலகாரத்தில் பூனை வாய் வைத்துவிட்டது. ஆசா என்ன செய்வதென்று தெரியாது திகைத்தாள். விநோ தினி உடனே அடுப்பைப் பற்றவைத்து ஒரு க்ஷணத்தில் மறுபடி பலகாரங்கள் செய்துகொண்டு வந்து பரிமாறி னாள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஆசாவிற்கு ஆச்சரியமாயிருந்தது.

இப்படித் தினசரி உண்பது உடுப்பது ஒவ்வொன் றிலும் விநோதினியின் சாதுரியம் மேலோங்கி நிற்பதை மஹேந்திரன் அநுபவத்தில் உணரலானான். அவன் காலிலிருக்கும் பட்டு மேல்ஜோடு அவள் பின்னியது. கழுத்து 'டை' அவள் கையால் போட்டது. இவைகளின் மூலம் அவளுடைய மெல்லிய மிருதுவான கரங்களின் ஸ்பர்சம் தன்மேல் படுவது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. ஆசாவையும் தினம் புதுப்புது மாதிரி யாக அலங்கரித்து அவனிடம் அனுப்பித் தனது திறமையை வெளிப்படுத்தினாள் விநோதினி. இப்படிப் புது அலங்கரிப்பில் தன்னிடம் வரும் மனைவியின் சௌந் தரியத்தில் விநோதினியின் சௌந்தரியமும் கூடக் கலந் திருப்பதாக மஹேந்திரனுக்குத் தோன்றும்.

இப்பொழுதெல்லாம் விஹாரிக்கு இங்கே முன்பிருந்த ஆதரவு இல்லை. அவனைக் கூப்பிடுவாரும் இல்லை. ஒருநாள்

அவன், "நாளை ஞாயிற்றுக்கிழமை. அம்மாவின் கையால் போஜனமிட்டு உண்ண விரும்புவதால் நாளைப்பகல் அங்கேயே சாப்பிட வருகிறேன்" என்று எழுதி அனுப்பினான்.

அவன் வருவதால் அந்த ஞாயிற்றுக்கிழமை பாழாய்விடுமென்று மஹேந்திரனுக்குத் தோன்றியது. "நாளை ஓர் அவசியமான வேலையை முன்னிட்டு நான் வெளியே போகவேண்டியிருக்கிறது" என்று மஹேந்திரன் உடனே பதில் எழுதி அனுப்பிவிட்டான்.

இந்தப் பதிலைப் பார்த்ததும் விஹாரி நிச்சயம் வரமாட்டானென்று மஹேந்திரன் நினைத்தான். ஆனால் விஹாரி போஜனத்தை முடித்துக்கொண்டு நேரே மஹேந்திரனின் வீட்டை அடைந்தான். வேலைக்காரர்கள் மூலமாக மஹேந்திரன் வீட்டில்தான் இருக்கிறான், எங்கும் போகவில்லை யென்பதை அறிந்துகொண்டான். அவனைக் கூப்பிட்டுக்கொண்டே மாடியில் அவனது அறைக்குள் நுழைந்தான். மஹேந்திரனுக்கு நண்பனைக் காணக் கூச்சமாயிருந்தது. "அப்பாடா, தலைவலி மண்டையை உடைக்கிறது" என்று சொல்லிக்கொண்டே படுக்கையில் படுத்துக்கொண்டான். தலைவலி என்று அவன் படும் அவஸ்தையைக் கண்டு என்ன செய்வதென்று தெரியாமல் ஆசா கவலையுடன் விநோதினியைப் பார்த்தாள். விநோதினிக்கு இது என்ன தலைவலி, எதற்காக வந்தது என்பவை யாவும் நன்றாகத் தெரியும். ஆனாலும் வெளிக்கு மிகத் திகிலடைந்தவளைப்போல் மஹேந்திரனிடம், "வெகு நேரமாய் உட்கார்ந்திருந்ததுதான். போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். நான் யூ-டி-கோலோன் கொண்டுவருகிறேன்" என்று சொல்லி எழுந்தாள்.

மஹேந்: பாதகமில்லை; அதெல்லாம் ஒன்றும் அவசியமில்லை.

விநோதினி அவன் சொன்னதைப் பொருட்படுத்தவில்லை. ஐஸ் கலந்த தண்ணீரில் யூ-டி-கோலோன் போட்டுக்கொண்டு வந்தாள். அதில் கைக்குட்டையை நனைத்து அவன் நெற்றியின்மேல் போடுமாறு ஆசாவிடம் கொடுத்தாள்.

மஹேந்திரன் அடிக்கடி, "எனக்கு எதற்கு இவையெல்லாம்? விடமாட்டீர்களா?" என்று சொல்லிக்கொண்டேயிருந்தான்.

விஹாரியும் வெகு கஷ்டத்துடன் சிரிப்பை அடக்கிக்கொண்டு இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தான். மஹேந்திரன் தனக்கு நடக்கும் உபசாரத்தையும் கைங்கரியத்தையும் நண்பனும் பார்க்கட்டுமென்று உள்ளூறக் கர்வங்கொண்டான்.

விஹாரியின் எதிரில் தன் கணவனின் நெற்றியில் நீரில் நனைத்த கைக்குட்டையைப் போடுவதற்குள் ஆசாவுக்குக் கை நடுங்கியது. மஹேந்திரனின் கண்களிலெல்லாம் தண்ணீர்த் துளிகள் விழுந்தன. அவளால் சரியாய்ப் போடமுடியவில்லை. உடனே விநோதினி அதை அவள் கையிலிருந்து வாங்கி மெதுவாய் மஹேந்திரனின் நெற்றியில் வைத்து அதன்மேல் சொட்டுச் சொட்டாக ஐஸ் ஜலம் விட்டுக்கொண்டேயிருந்தாள். ஆசா அவனுக்கு விசிறிக்கொண்டிருந்தாள்.

விநோதினி மஹேந்திரனிடம் மிகவும் ஆதரவுடன், "இப்பொழுது சற்றுக் குணமாக இருக்கிறதா?" என்று கேட்டாள்.

விஹாரி சிரித்துக்கொண்டே, "அம்மா, இந்தமாதிரி அபார சுசுருஷையினால் வியாதி பலக்குமே தவிரக் குறையாது" என்றான்.

விநோ: மூட ஸ்திரீகளாகிய எங்களுக்கென்ன வைத்தியமா தெரியும்? உங்களுடைய வைத்திய புஸ்தகத்தில் இதற்கு என்ன சிகித்சை சொல்லப்பட்டிருக்கிறது?

விஹாரி: புஸ்தகத்தில் என்ன சொல்லியிருந்தால் என்ன? கண்ணெதிரில் சிகித்சை நடப்பதைத்தான் பார்க்கிறேனே! உபசாரங்களைப் பார்த்தால் எனக்குக் கூடத் தலை வலிக்கிறாப்போல் இருக்கிறது. ஆனால் என்னைப் போன்ற நிர்ப்பாக்கியசாலிகளுக் கெல்லாம் நோய் வைத்தியமின்றியே சரியாகிவிடும். மஹேந்திரன் மிகவும் பாக்கியசாலி.

விநோதினி யூ-டி-கோலோனில் துணியை நனைத்துக் கொண்டே, "நண்பருக்கு வைத்தியம் நண்பரே செய்வார்" என்றாள்.

இருக்கும் நிலையைக் கண்டு விஹாரி உள்ளூறப் பொருமினான். சில தினங்களாக மும்முரமாகப் படிப்பில் கவனத்தைச் செலுத்தி வந்ததன் காரணமாக அவன் இந்தப் பக்கம் வரவேயில்லை. இங்கே மூவரும் இப்படி ஒன்றுசேர்ந்துவிட்டது அவனுக்குத் தெரியாது. இன்று விநோதினியை அவன் ஒருமுறை உற்றுப் பார்த்தான். அவளும் அவனை அப்படியே பார்த்தாள்.

விஹாரி சற்றுப் பதற்றமாகவே, "சரியான பேச்சுத்தான். நண்பனுக்குச் சேவை, சிகித்சை இவைகளை நண்பனேதான் செய்யவேண்டும்! தலைவலிக்குக் காரணம் நான்தானாகையால் நானே என்கூட அதை எடுத்துப்

போய்விடுகிறேன். யூ-டி-கோலோன் விலை யுயர்ந்த பொருள். அதை வீணுக்க வேண்டாம். வியாதியைப் போக்குவதைக் காட்டிலும் வியாதி வராமல் தடுத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்" என்று கடைசி வாக்கியத்தை ஆசாவைப் பார்த்துச் சொல்லிவிட்டு எழுந்துசென்ருன்.

---

## பதினூரும் அத்தியாயம்

'இனி இப்படித் தூர விலகிப் பார்த்துக்கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது. இவர்கள் விரும்பட்டும், அல்லது வெறுக்கட்டும்; இவர்களிருவருக்கும் குறுக்கே நானே வலியப்போய் நின்றுகொண்டுதான் ஆகவேண்டும்' என்று விஹாரி நிச்சயித்தான்.

அவன் தன்னைக் கூப்பிட வேண்டுமென்ற மரியாதை யொன்றும் வைத்துக்கொள்ளாது இந்தச் சக்கரவியூகத்திற்குள் தானும் புகுந்தான்.

அவன் விநோதினியிடம், "சகோதரி! என் நண்பனை அவனது தாயே கெடுத்து வைத்தாள். நானும் அதில் சேர்ந்துகொண்டேன். மனைவி வேறு பாழாக்கினுள். இப்பொழுது நீயும் இதில் சேர்ந்துகொள்ளாதே" என்ருன்.

மஹேந்: இல்லாவிடில்?

விஹாரி: இல்லாவிடில் என்னைப் போன்ற கேட்பாரற்றவனை வேண்டுமானுல்.....

"..பாழ்பண்ணு" என்று மஹேந்திரன் வார்த்தையைப் பூர்த்திசெய்துவிட்டு நண்பனைப் பார்த்து, "குட்டிச்

சுவராகப் போவதும் சாதாரண விஷயமல்ல. நீ மனுப் போட்டதுமே தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவாயென்று நினைக்காதே" என்றான்.

விநோதினியும் சிரித்துக்கொண்டே, "ஆமாம்; குட்டிச்சுவராவதற்கும் தகுதிவேண்டும்" என்றாள்.

விஹாரி: என்னிடத்தில் இயல்பாக யோக்கியதை யில்லாவிட்டாலும் ஆட்டிவைப்பவர்களின் திறமையினு லாவது காரியம் நிறைவேறக்கூடுமல்லவா? ஒருதரம் பரீக்ஷித்துத்தான் பாரேன்!

விநோ: இப்படி முன்னதாகவே முஸ்தீப்புக்களுடன் வந்தால் எதுவும் நடக்காது. ஜாக்கிரதையின்றி இருக்கும் நிலையில்தான் இவை முடியும். (ஆசாவைப் பார்த்து) நீ என்ன சொல்லுகிறாய்? இந்தப் பாரத்தை நீதான் சற்று ஏற்றுக்கொள்ளேன்.

ஆசா அவளை முழங்கையால் இடித்து அப்புறம் தள்ளினாள். விஹாரி பதிலே சொல்லவில்லை.

ஆசாவை இம்மாதிரி கேலிசெய்வது விஹாரிக்கு இஷ்டமில்லை என்று விநோதினிக்கு நன்றாகத் தெரியும். அவன் ஆசாவிடம் ஏதோ தேவதை போன்ற பக்தி சிரத்தையுடன் நடந்துகொள்வது, தன்னை மாத்திரம் அற்ப மாக மதித்து நடந்துகொள்வது இவையெல்லாம் காண அவள் மனத்தில் முள் தைத்ததுபோலிருந்தது. அவள் மறுபடியும் ஆசாவைப் பார்த்துக் குத்தலாக, "உன் மைத் துனர் என்னைச் சாக்கிட்டுக்கொண்டு உன் அன்பையும் ஆதரவையும் பெறவேண்டித்தான் வந்திருக்கிறார். அவருக்கு அன்புப்பிச்சை இடமாட்டாயா?" என்றாள்.

ஆசா இப்பேச்சைக் கேட்டுச் சினந்து எழுந்தாள். விஹாரியின் முகமும் சிவந்தது. அவன் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு சிரித்தவாறே விநோதினியிடம், "என் குற்றத்தைப் பிறர்மேல் ஏன் வீணாய்ச் சாட்டுகிறாய்? மஹேந்திரனிடமே அமல் நடத்தக் கற்றுவிட்டாய் போலிருக்கிறது" என்றான்.

விஹாரி தங்கள் நட்பை முறிக்கத்தான் வந்திருக்கிறானென்று விநோதினிக்குத் தெரியும். 'இனி இவனிடம் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டும்' என்று நிச்சயித்தாள்.

மஹேந்திரனுக்கும் மனம் எரிந்தது. விஷயங்களை உள்ளபடியே உரைத்தால் யாருக்குத்தான் பிடிக்கும்? விஹாரியோ யாவற்றையும் வெளிப்படையாகவே சொல்லுகிறான். கோபமும் பரிஹாஸமும் கலந்த குரலில் மஹேந்திரன் நண்பனிடம், "இங்கே ஒன்றும் கொடுக்கவும் வாங்கலும் அமலும் இல்லை. அதற்கு அவசியமும் இல்லை. எனக்கிருப்பதைக்கொண்டு நான் சந்தோஷமாகவே யிருக்கிறேன்" என்றான்.

விஹாரி: சந்தோஷமாயிருக்கலாம். ஆனால் அதைச் சின்ன பின்னப்படுத்தக் கூடிய சக்தியும் வெளியிலிருந்து வரலாமல்லவா?

விநோதினி இதற்கு மறுமொழியாக அவனிடம், "உங்களிடம் ஏதாவதிருந்தால்தானே சின்னபின்னப் படுத்துவதற்கு?" என்றாள்.

இதைச் சொல்லி முடித்து வெற்றியடைந்தவள் போல் புன்சிரிப்புத் தவழ அவனை ஒருமுறை உற்றுநோக்கினாள். மெதுவாய் ஆசாவையும் சற்று நிமிண்டினாள்.

ஆசா இச்சம்பாஷணையினால் கோபமுற்று எழுந்திருந்தாள். விஹாரி போக யத்தனித்தான். அதற்குள் விநோதினி, "போகவேண்டாம். இதோ என் தோழியை அனுப்பிவிட்டேன். நானும் போகிறேன் உள்ளே" என்று சொல்லி எழுந்து போனாள்.

விநோதினி போனதும் மஹேந்திரனுக்கு அந்த இடம் சூன்யமாகத் தென்பட்டது. அவன் குதூகலமெல்லாம் மறைந்தது. இதை விஹாரியும் கவனிக்காமலில்லை. இதுவரை மனம்விட்டுப் பேசச் சமயம் கிடைக்காமல் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டிருந்தான். இப்பொழுது தானும் நண்பனும் தனிமையில் விடப்பட்டதும் அவனால் பின்னும் அடக்க முடியவில்லை.

"சகோதரா, நீ படுகுழியில் விழுந்து நாசமடைய விரும்பினால் விழுந்துகொள்; உனது வழக்கமே அப்படியாகிவிட்டது. ஆனால் ஒன்றும் அறியாத நிஷ்கபடச் சிறுமி ஆசா உன்மேல் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறாள். அவளுக்கு உன்னைத் தவிரத் திக்கில்லை. அவளையும் படுகுழியில் தள்ளாதே. விசுவாச காதகமாய் நடந்துகொள்ளாதே. இதுதான் நான் உன்னைப் பிரார்த்திப்பது" என்று சொல்வதற்குள் அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது.

மஹேந்திரன் கோபத்தை அடக்கிக்கொண்டு, "விஹாரி, நீ சொல்வது எனக்கு விளங்கவேயில்லை. இப்படிப் புதிர் போடுவதைவிட்டுச் சற்று ஸ்பஷ்டமாகப் பேசு" என்றான்.

விஹாரி: ஸ்பஷ்டமாகவே சொல்லுகிறேன்: விநோதினி வேண்டுமென்றே உன்னைத் துன்மார்க்கத்தில்

இழுக்கிருள். நீயும் முன்பின் யோசியாது அவள் வலையில் விழச் சென்றுகொண்டிருக்கிருய்.

"சுத்தப் பொய்! குடும்ப ஸ்திரீகளைப் பார்த்து நீ இவ்வித எண்ணம் கொண்டால் நீ ஸ்திரீகள் இருக்கும் இடத்திற்கே வரத் தகுதியற்றவன்!" என்று மஹேந்திரன் ஃகோபத்துடன் கர்ஜித்தான்.

இச்சமயம் விநோதினி வெள்ளித்தட்டில் பலகாரங்களை வைத்து எடுத்து வந்து விஹாரியின் முன்பாக வைத்தாள். அவன், "என்ன இது? எனக்குப் பசியேயில்லையே" என்று மறுத்தான்.

விநோதினி: எங்கேயாவது உண்டா இப்படி? நீங்கள் சந்தோஷ மனத்துடன்தான் வெளியே போகவேண்டும்.

விஹாரி சிரித்துக்கொண்டே, "ஆனல் எனது வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டு விட்டதென்று நினைக்கிறேன். அதனுல்தான் இந்த உபசாரமெல்லாம் போலும்!" ?ன்.

விநோதினி புன்சிரிப்புடன், "நீங்களோ மைத்துனர். உபசாரம் பெற உங்களுக்கு உரிமையில்லையா? எங்கே உங்கள் வேண்டுகோள் ஏற்கப்படுமோ அங்கே வேண்டத் தடையென்ன? ஆதரவும் அன்பும் கேட்காமலே அடையலாம். இல்லையா, மஹேந்திர பாபு?" என்ருள்.

மஹேந்திரனுக்கோ மிதமிஞ்சிய கோபத்தால் பேசவே முடியவில்லை.

விநோ: விஹாரி பாபு, சாப்பிடச் சங்கோசமா அல்லது கோபமா? சாப்பிடச் செய்ய வேறு யாரையாவது கூப்பிடட்டுமா?

விஹாரி: அவசியமில்லை. கிடைத்ததே போதும்.

விநோதினி, "பரிஹாசத்தில்தான் உங்களை ஜயிப்பது கடினமென்று பலகாரத்தைக் கொண்டுவந்து முன்னே வைத்தால் அப்பொழுதும் வாய்மூடக் காணோமே!" என்று சொல்லிச் சிரித்தாள்.

அன்றிரவு சயன அறையில் ஆசா மஹேந்திரனிடம் அவனுடைய நண்பன் பேரில் தனக்குள்ள கோபத்தை நன்ருய்த் தெரிவித்துக் கொண்டாள். முன்போல் நண்பனுக்காகப் பரிந்து பேசாது மஹேந்திரனும் அவனைத் தூஷிப்பதில் அவளுடன் சேர்ந்துகொண்டான்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்திருந்து மஹேந்திரன் நண்பனிடம்சென்று, "விஹாரி, எத்தனைதான் ஆனுலும் விநோதினி நம் வீட்டுப் பெண்ணல்ல. உன்னெதிரில் வரவே அவளுக்கு இஷ்டமில்லை" என்ருன்.

விஹாரி: அப்படியாணுல் சரி. நான் இனி அவள் எதிரில் போவதில்லை.

விஷயம் இவ்வளவு சுலபமாய்த் தீர்ந்துவிடுமென மஹேந்திரன் எண்ணவில்லை. விஹாரி உடனே இணங்கி விட்டதும் அவனுக்குச் சற்றுக் கலக்கமாகவே யிருந்தது.

அன்றே விஹாரி மஹேந்திரனின் வீடு சென்று நேரே விநோதினியிடம் போய், "என்னை மன்னிக்க வேண்டும்" என்ருன்.

விநோ: ஏன்? எதற்காக?

விஹாரி: நீ என்னைக் காண விரும்பவில்லையென்று நண்பன் சொல்ல இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. திடீரென்று அன்று உனக்கு முன் வந்து நின்றது பற்றி என்மேல் உனக்கு வருத்தமாம். அதனுல்தான் மன்னிப்புக் கேட்க வந்தேன்.

"விஹாரி பாபு, நான் யார்? இன்று இருந்துவிட்டு நாளைக்குப் போகிறவள். எனக்காக இவ்வீட்டிற்கு நீங்கள் வராமல் இருப்பானேன்? இப்படியெல்லாம் சங்கடம் நேருமென்று தெரிந்திருந்தால் நான் இங்கு வந்தே யிருக்க மாட்டேன்" என்று சொல்வதற்குள் விநோதினியின் கண்களில் நீர் நிரம்பியது. சட்டென்று உள்ளே எழுந்து போய்விட்டாள்.

'மஹேந்திரனின் பேச்சை நம்பி நான் இவள் மனத்தை வீணாகப் புண்படுத்தினேனே!' என்று விஹாரி வருந்தினான்.

அன்று ராஜலக்ஷ்மி தன் மகனிடம், "மஹேன், விநோதினி தன் வீட்டிற்குப் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறாள்" என்றாள்.

அவன் மனோவேதனையுடன், "ஏனம்மா, அவளுக்கு இங்கே இருக்கக் கஷ்டமாயிருக்கிறதா?" என்றான்.

ராஜலக்ஷ்மி: கஷ்டம் ஒன்றுமில்லை. தன்னைப் போன்ற விதவைப் பெண் பிறர் வீட்டில் வெகுநாள் தங்கினால் ஊரார் ஏசுவார்கள் என்று பயப்படுகிறாள்.

மஹேந்திரன் துக்கத்துடன், "இதென்ன, பிறர் வீடா?" என்று கேட்டான்.

அப்பொழுது விஹாரியும் அங்கே இருந்தான். மஹேந்திரன் அவனை வெறுப்புடன் நோக்கினான்.

தான் விநோதினியின் மனம் புண்படும்படியாகப் பேசியதுதான் இதற்குக் காரணமென்று நினைத்து உள்ளூற வருந்தினான் விஹாரி.

விநோதினியிடம் மஹேந்திரனும் ஆசாவும், "நாங்கள் அன்னியர்களா? இவ்வளவு நாள் இங்கே தங்கியும்

விஹாரி......அவள் சொல்வதையெல்லாம் உற்றுக் கேட்டுக் கொண்டு வந்தான்.

—பக்கம் 106.

இவ்வளவு வேற்றுமையா?" என்று வருத்தத்துடன் கேட்டனர்.

விநோ: எப்பொழுதும் என்னை இங்கே வைத்துக் கொள்ள முடியுமா, என்ன?

மஹேந்: வைத்துக்கொள்ள எங்களுக்குச் சக்தி யில்லைதான்.

ஆசா: எங்கள் மனதையெல்லாம் கவர்ந்து நட்பைப் பெருக்கியதெல்லாம் இதற்காகவா?

அன்று எதுவும் நிச்சயமாகவில்லை. "தோழி, என்னால் இருக்க முடியாது. இரண்டுநாள் வாழ்விற்கு இவ்வளவு நட்புக் கொண்டாடுவது சரியல்லதான்" என்று கூறி விநோதினி மிக்க வியாகுலப் பார்வையுடன் மஹேந்திரனை நோக்கினாள்.

அடுத்தநாள் விஹாரி விநோதினியிடம், "அம்மா, நீ ஏன் போகவேண்டுமென்கிறாய்? நான் ஏதாவது அபராதம் செய்தேனா? அதற்கு ஒருவேளை இது தண்டனையோ?" என்றான்.

விநோதினி முகத்தைத் திருப்பிக்கொண்டு, "உங்கள் மேல் தோஷமில்லை. எல்லாம் என் துர்ப்பாக்கியந்தான்" என்றாள்.

விஹாரி: இப்போது புறப்பட்டுப் போனால் என் மேல் கோபித்துக்கொண்டு போவதாகத்தான் நான் எண்ணுவேன்.

விநோதினி சற்று இரக்கத்துடன், "நான் இங்கே யிருப்பது சரியாவென்று நீங்கள்தான் சொல்லுங்களேன்" என்றாள்.

இதற்குப் பதிலளிப்பது சங்கடமாய்விட்டது விஹாரிக்கு. இருப்பது சரி என்று சொல்லவும் முடியவில்லை. அவன், "போகத்தான்வேண்டும். ஆனால் சில தினங்கள் கழித்துப் போகிறதுதானே; அதனால் என்ன கெடுதி?" என்றான்.

விநோதினி தலை குனிந்து, "எல்லாரும் இவ்வளவு தூரம் வேண்டும்போது, மீறிக்கொண்டு புறப்பட என்றால் முடியவில்லை. ஆனால் நீங்கள் செய்வது சரியென்று எனக்குத் தோன்றவில்லை" என்றாள்.

விநோதினியின் அகன்ற கண்களினின்றும் முத்துப் போன்று நீர் துளித்து அவள் இரு கன்னங்களிலும் வழிந்தோடியது.

அந்நீர்த் துளிகள் விஹாரியை இன்னும் வருத்தின. அவன், "உன்னுடைய குணத்தினால் எல்லாரையும் வசீகரித்து விட்டாய். உன்னைப் போன்ற குணவதியை யார் போக விடுவார்கள்?" என்றான்.

ஆசா ஒருபுறம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு விநோதினி வீட்டை விட்டுப் போகும் பிரஸ்தாபம் நின்றுவிட்டது.

---

## பதினேழாம் அத்தியாயம்

நடுவில் நடந்த இந்த அமர்க்களங்களை மறப்பதற்காக ஒரு ஞாயிற்றுக்கிழமை கல்கத்தாவிற்கு அருகிலிருக்கும் தம்தம் (*Dum Dum*) பூந்தோட்டத்தில் யாவரும் வேடிக்கையாய்ப் போய்ச் சாப்பிட்டு வரலாமென்று மஹேந்திரன் தீர்மானித்தான். இதைக் கேட்டதும் ஆசாவிற்கு

ஒரே கொண்டாட்டம். ஆனால் விநோதினி வர இணங்கவில்லை. தங்களிடம் அவள் அதிகம் நெருங்காது தூர இருக்க விரும்புவதைக் காணும்போது மஹேந்திரனுக்கும் ஆசாவுக்கும் அவள்மேல் கோபம் உண்டாயிற்று.

அன்று விஹாரி வந்ததும் விநோதினி அவனிடம், "விஹாரி பாபு, வரும் ஞாயிற்றுக்கிழமை, தம்தம் பூஞ்சோலையில் போய் வேடிக்கையாய்ச் சாப்பிட்டு வரலாமென்று மஹேந்திர பாபு சொல்லுகிறார். கூட வர இஷ்டமில்லையென்று நான் சொன்னதற்காக இவர்களிருவரும் காலையிலிருந்து என்மேல் கோபித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றாள். விஹாரி, "கோபிப்பதற்குக் காரணமில்லாமலில்லை. நீ வராவிடில் என்ன ஏமாற்றமும் துக்கமும் ஏற்படும் என்பதை அவர்களே அறிவார்கள்" என்றான்.

விநோ: நல்லது, நீங்கள் வருவதாயிருந்தால் நானும் வருகிறேன்.

விஹாரி: நான் தயார். ஆனால் வீட்டு எஜமானனின் இஷ்டம் எப்படியோ?

விநோதினி அவனிடம் காட்டிய ஆதரவு மஹேந்திரனுக்குப் பிடிக்கவில்லை. விஹாரி தானும் வருவதாகச் சொன்னதுமே மஹேந்திரனுக்குப் பாதி உற்சாகம் குன்றி விட்டது. வேறு சமயமானால் நண்பன் வருவது விநோதினிக்கு இஷ்டமில்லை என்று சொல்லியிருப்பான். இப்பொழுதோ அதுவும் சாத்தியமில்லாது போயிற்று.

மஹேந்: நல்லது. ஆனால் நீ எங்கே வந்தாலும் கலாட்டாச் செய்யாமல் இருப்பதில்லை. தெருக்குழந்தைகளையெல்லாம் கூடக் கூட்டிவந்து உபத்திரவம் விளைவிப்பாயோ என்னவோ, யார் கண்டது?

விஹாரி: இதுதான் உலக விநோதம். எந்த நிமிஷம் என்ன பழி நம்மேல் சுமத்தப்படுமோ, யாருக்குத் தெரியும்? ஹூம்! இருக்கட்டும்! நான் எப்படியும் புறப்படும் நேரத்திற்குச் சரியாய் வந்து சேருகிறேன்.

ஞாயிற்றுக்கிழமை காலை இரண்டு கோச்சு வண்டிகள் கொண்டுவரப்பட்டன. ஒரு வண்டியில் சாப்பாட்டுச் சாமான்களுடன் வேலைக்காரர்கள் முன்னரே அனுப்பப்பட்டனர். விஹாரியும் ஒரு பெரிய பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். மஹேந்திரன், "இதென்னடா இது! இத்தனை பெரிய பெட்டியை எங்கே வைப்பது? இடங்கூட இல்லையே!" என்றான்.

விஹாரி, "பயப்படாதே அப்பா; நான் எல்லாம் சரியாய் வைக்கிறேன்" என்று சொல்லி அதை வண்டியின் மேல் வைத்துக் கட்டினான்.

ஆசாவும் விநோதினியும் வண்டியில் ஏறிக்கொண்டனர். விஹாரியை எங்கு உட்கார வைப்பதென்று மஹேந்திரனுக்குப் பெரிய யோசனையாகிவிட்டது. தானும் வண்டியில் ஏறாது அங்குமிங்கும் பார்த்து விழித்தான். இதற்குள் விஹாரி வெளியே வண்டி யோட்டுபவன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்துவிட்டான்.

மஹேந்திரன் பிழைத்தான்! ஏனெனில் வண்டிக்குள் விஹாரி ஏறுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. வேண்டாமென்று சொல்லவும் தயக்கம். அவனாகவே வெளியே உட்கார்ந்ததும் தான் உள்ளே ஏறிக்கொண்டான்.

விநோதினி திகிலுடன், "விஹாரி பாபு, பத்திரம். எங்கேயாவது விழுந்துவிடப் போகிறீர்கள்" என்று கூறினாள்.

விஹாரி: பயப்படவேண்டாம். நான் அப்படியெல்லாம் விழும் ஆசாமியல்ல.

வண்டி புறப்பட்டது. மஹேந்திரன் குத்தலாக, "ஏன், நான் வேண்டுமானால் வண்டியோட்டியின் பக்கத்தில் உட்காருகிறேன். விஹாரி உள்ளே வரட்டும்" என்றான். அதற்குள் ஆசா கணவனின் அங்கவஸ்திரத்தைப் பிடித்திழுத்து, "வேண்டாம்; நீங்கள் இங்கேயே உட்காருங்கள்" என்றாள்.

விநோ: வழக்கமில்லாதிருக்கும்போது, அங்கே உட்கார்ந்து பிறகு கீழே விழுந்து கஷ்டப்படுவதற்கா?

மஹேந்திரன் மிகவும் ஆத்திரமாய், "விழுவதா? ஒருகாலுமில்லை!" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

விநோதினி அதற்குள், "விஹாரி பாபுவைச் சொன்னீர்களே! இப்பொழுது நீங்களே முதலில் கலாட்டாச் செய்ய ஆரம்பித்து விட்டீர்களே?" என்றாள்.

மஹேந்திரன் முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு, "இல்லாவிட்டால் நான் இன்னொரு வண்டி கொண்டுவந்து அதில் ஏறிக்கொள்ளுகிறேன். விஹாரி இதில் உட்காரட்டும்" என்றான்.

ஆசா: அப்படியானால் நானும் உங்களுடன்கூடவே அந்த வண்டியில்தான் உட்காருவேன்.

விநோ: நான் வண்டியிலிருந்தே குதித்துவிடுவேன்.

இப்படி இது வேடிக்கையில் முடிந்தது. ஆனால் மஹேந்திரன் வழி முழுவதும் முகவாட்டத்துடனேயே இருந்தான். வண்டி தம்தம் பூந்தோட்டத்தை அடைந்தது.

முதலிலேயே புறப்பட்ட வேலைக்காரர்களின் வண்டி இன்னும் வரவில்லை. அது எங்கே சென்றதென்பதும் தெரியவில்லை.

வசந்த ருது. காலைநேரம் மிகவும் மனோரம்மியமாயிருந்தது. இளஞ்சூரியனின் ஒளியினால் மரங்களின் இலைகள் பிரகாசித்தன. மகிழமரத்தின் பூக்கள் கீழே உதிர்ந்து தோட்டம் முழுவதும் சுகந்தத்தைப் பரப்பின. வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்த ஆசா அத்தோட்டத்திற்குள் நுழைந்ததும் விடுபட்ட பக்ஷிபோல் ஆனந்தித்தாள். இங்குமங்கும் ஓடினாள். விநோதினியுடன் கூடப் பூக்களைப் பறித்து மடிநிறையக் கட்டிக்கொண்டாள். கனிகளைப் பறித்து வேண்டியமட்டும் தின்றாள். அங்குள்ள தடாகத்தில் இருவரும் நீந்தி விளையாடிக் குளித்தனர். இவ்விரு சுந்தரிகளின் ஆனந்தக் களியாட்டம் அப்பூஞ்சோலைக்கே ஒரு புதிய சோபையைத் தந்தது. இவர்கள் குளித்தான பிறகுங்கூட வேலைக்காரர்களின் வண்டி வரவில்லை. மஹேந்திரன் ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்து ஏதோ ஒரு விளம்பர நோட்டீசைப் படித்துக் கொண்டிருந்தான்.

விநோதினி அவனைப் பார்த்து, "விஹாரி பாபு எங்கே?" என்று கேட்டாள்.

மஹேந்திரனும் ஒரு வார்த்தையில், "தெரியாது" என்று பதிலளித்தான்.

விநோ: அப்படியானால் வாருங்கள்; அவரைத் தேடிப் பார்ப்போம்.

மஹேந்: அவனை ஒருவரும் தூக்கிக்கொண்டு போய் விடமாட்டார்கள். தேடாமலே வந்து சேருவான்.

விநோ: ஒருவேளை இப்பேர்ப்பட்ட அருமைத் தோழரைக் காணோமே என்று உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறாரோ என்னவோ? வாருங்கள் போய்ப் பார்க்கலாம்.

தோட்டத்தில் ஒரு கிணறு உண்டு. அதனருகில் ஓர் ஆலமரத்தின் நிழலில் ஒரு மண்டபம். விஹாரி அம்மண்டபத்தில் தனது பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு அதிலிருந்து 'ஸ்டோவ்' ஒன்றை எடுத்து டீ தயார் செய்துகொண்டிருந்தான். இவர்கள் யாவருக்கும் ஒவ்வொரு கோப்பை டீயும் ஒரு தட்டில் கொஞ்சம் மிட்டாயும் வைத்துக் கொடுத்தான்.

அதைச் சாப்பிட்டுக்கொண்டே விநோதினி அடிக்கடி, "விஹாரி பாபு இவற்றையெல்லாம் எடுத்துவந்தது நல்லதாயிற்று. இல்லாவிட்டால் டீ குடிக்காமல் மஹேந்திர பாபு தவிக்க நேரிட்டிருக்கும்" என்றாள்.

டீ குடித்தானதும் மஹேந்திரனுக்குச் சற்றுத் தெம்பு ஏற்பட்டது. ஆனாலும் அவன் விஹாரியை நோக்கி, "இங்கே எடுத்துவந்து சமைப்பதும் சாப்பிடுவதுமாகச் செய்து இன்றைய சந்தோஷத்தையே கெடுத்துவிட்டாய்" என்று குறை கூறினான்.

விஹாரி: அப்படியானால் எனது டீயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு நீ போய்ச் சந்தோஷத்தை அநுபவித்து வாடா அப்பா!

நடுப்பகலாயிற்று. இன்னமும் வேலைக்காரர்களின் வண்டி வந்தபாடில்லை. விஹாரியின் பெட்டியில் சமையலுக்கு வேண்டிய சகல சாமான்களும் போதிய அளவிற்கு மிக ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. விநோதினி இவை

யாவற்றையும் கண்டு ஆச்சரியத்துடன், "ஸ்திரீகளாகிய நாங்கள்கூட இதைக் கண்டு வெட்கிப்போகவேண்டும். விஹாரி பாபு, உங்கள் வீட்டிலோ பெண்பிள்ளைகளே இல்லை; இவை யாவும் எங்கே கற்றுக்கொண்டீர்கள்?" என்றாள்.

விஹாரி: என்ன செய்வது? இந்தப் பாழும் வயிற்றை வளர்க்க எல்லாந்தான் கற்றாக வேண்டியிருக்கிறது! எனக்கு நானேதான் எல்லாம் செய்துகொள்ளவேண்டும்.

விஹாரி இதை வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டே சொன்னாலும் விநோதினிக்கு அவன்மீது இரக்கம் உண்டாயிற்று.

விநோதினியும் விஹாரியுமாகச் சேர்ந்து சமைக்க ஆரம்பித்தார்கள். ஆசா சங்கோசத்துடன் ஏதாவது உதவி செய்ய வந்தாலும் விஹாரி வேண்டாமென்று சொல்லிவிட்டான். மஹேந்திரனுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதே தெரியாது. போதாக்குறைக்கு அவனுக்கு அன்று முழுவதும் மனக்குறையும் கோபமுந்தான். அங்கவஸ்திரத்தை விரித்துக்கொண்டு பேசாமற் படுத்துக்கொண்டான்.

சமையல் தயாராகி விட்டது. விநோதினி மஹேந்திரனிடம், "ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு எத்தனை நாழிகை படுத்திருப்பீர்கள்? போய்க் குளித்துவிட்டுச் சாப்பிட வாருங்கள்" என்றாள்.

இதற்குள் வேலையாட்களின் வண்டியும் வந்து சேர்ந்தது. வழியில் வண்டிச் சக்கரம் கழன்றுபோய் அவர்கள் வர இத்தனைநேரமாகிவிட்டதென்று தெரிந்தது. சாப்பாடும் முடிந்தது. ஆலமரத்தின் நிழலில் சதுரங்கம்

விளையாடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. என்ன சொல்லியும் மஹேந்திரன் ஆட வரமாட்டேன் என்று படுத்துத் தூங்க ஆரம்பித்தான். ஆசாவும் மண்டபத்திற்குள் போய்ப் படுத்துக்கொண்டாள். "நானும் போய்ப் படுத்துக்கொள்ளுகிறேன்" என்று விநோதினி கிளம்பினாள். விஹாரி அதற்குள், "வா. சற்றுப் பேசிக் கொண்டிருப்போமே. உங்கள் கிராமத்தைப் பற்றிய கதையெல்லாம் எனக்குச் சொல்லு" என்று அழைத்தான்.

காற்றினால் இலைகள் அசைந்துகொண்டிருந்தன. நதிக் கரையின் அருகிலுள்ள நாவல்மரத்தின்மீது இருந்து குயில் கூவிக்கொண்டிருந்தது. விநோதினி தனது பால்யம் முதற்கொண்டு நடந்த வரலாற்றையெல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொல்லிவந்தாள். தாய் தந்தையர், சிறுவயதுத் தோழிகள், இவர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டே வரும்போது அவளது யௌவன முகத்தின் காந்தி அதிகரித்தது. முன்பு அவளது அகன்ற அழகிய கண்களின் தீட்சண்யப் பார்வை விஹாரிக்கு அவள்மேல் சந்தேகத்தை எழுப்பியது; இப்பொழுது அக்கண்களில் சாந்தமும் அன்பும் குடிகொண்டிருந்தன. முழுவதும் மாறிய மனுஷியாக அவள் இப்பொழுது காணப்பட்டாள். விதவை வாழ்க்கையானது இன்பத்தையெல்லாம் பஸ்மமாக்கிவிட்ட போதிலும் அவளுடைய ஹிருதயத்தில் மாத்திரம் அன்புத்தாரை வற்றவில்லை. பதிஸேவை செய்யவேண்டுமென்ற ஆர்வம் இன்னமும் அவள் மனத்தில் இருந்தது. இதுவரை அவள் ஹிருதயத்தை மறைத்திருந்த திரை விலக்கப்பட்டது; அதனுள் அன்புமயக் காட்சியை விஹாரி இன்றே கண்டான். வெளிப்பார்வைக்கு உல்லாசப் பிரியையாகக் காணப்பட்ட போதிலும் அவள் உள்ளே எதையோ

அடைய விரும்பிப் பட்டினியுடன் கடுந்தவமிருப்பதை விஹாரி நன்கு அறிந்துகொண்டான். அவன் துக்கத்துடன் பெருமூச்செறிந்தான். தன்னையே நன்கு அறிந்து கொள்ளச் சக்தியற்ற மனிதன் பிறருள்ளத்தை எப்படி அறியப்போகிருன்? 'அப்படி யாவரையும் அறியும் சக்தி அந்தர்யாமியான அக்கடவுளுக்குத்தான் உண்டு. வெளித் தோற்றத்திலிருந்து மனிதர்களின் குணத்தை நிர்ணயிப்பது மிகவும் தவறு' என்று அவன் நினைத்தான்.

விஹாரி அவளுடன் நடுநடுவில் கேள்வி கேட்டுக் கொண்டே அவள் சொல்வதையெல்லாம் வெகுநேரம்வரை உற்றுக் கேட்டுக்கொண்டு வந்தான். விநோதினிக்குத் தன் கதையைக் கேட்கக்கூடியவர் இதுவரை யாரும் கிடைத்திலர். அதுவும் ஒரு யுவா புருஷனின் முன்பு தன்னை மறந்து மனம்விட்டு அவள் இதுவரை பேசியதே கிடையாது. பூரண அநுதாபத்துடன் கேட்கும் ஒருவனிடம் தன்னுள்ளத்தில் மறைந்து கிடந்ததையெல்லாம் அன்று வெளியிட்டுச் சொல்லிக்கொண்ட பிறகு மனத்திற்குச் சாந்தியும் திருப்தியும் ஏற்பட்டன.

அன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டதால் மஹேந்திரனின் தூக்கம் தடைப்பட்டிருந்தது. இப்பொழுது அதை நான்குமணி நேரம் விடாது தூங்கித் தீர்த்தான். சுமார் ஐந்து மணிக்கு விழித்துக்கொண்டான். எழுந்துவந்து சிடுசிடுப்புடன், "நேரமாகிவிட்டது. இனிப் புறப்படலாம்" என்றான்.

விநோ: இன்னும் சற்று நேரங் கழித்துத்தான் போவோமே?

மஹேந்: இந்தப் பக்கம் சாயங்கால வேளைகளில் ஸோல்ஜர்கள் குடித்துவிட்டுச் சுற்றிக் கொண்டிருப்பார்

கள். அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டால் தொல்லை தான்.

சாமான்களை யெல்லாம் எடுத்துக் கட்டுவதற்குள் இருட்டிவிட்டது. இதற்கிடையில் வேலையாட்கள் ஓடி வந்து, யாரோ வெள்ளைக்காரர் இரண்டு பேர் தங்களிட மிருந்து வண்டியைப் பலவந்தமாய்ப் பிடுங்கி எங்கோ ஓட்டிக்கொண்டு போய்விட்டதாகத் தெரிவித்தார்கள்.

உடனே வேறு வண்டி கொண்டுவர உத்தரவாயிற்று. அன்றைய ஸந்தோஷம் முழுவதும் பாழ்பட்டது பற்றி மஹேந்திரனுக்கு முதலிலேயே இருந்த ஆத்திரம் இப்பொழுது அடக்கமுடியாமற் போய்விட்டது.

வளர்பிறைச் சந்திரன் மரங்களின் மறைவிலிருந்து மெல்ல மெல்ல உயரக் கிளம்பிக்கொண்டிருந்தான். நிர்ஜனப் பிரதேசத்தில் அந்நிலவொளி மிக விசித்திரமாகக் காணப் பட்டது. மாயை சூழ்ந்த இவ்வுலகில் இன்று விநோ தினிக்கு ஓர் அபூர்வ அனுபவம் ஏற்பட்டது. செயற்கை அன்பு மறைந்து இயற்கை அன்புடன் அவள் ஆசாவின் தோளின்மீது கையைப் போட்டுக்கொண்டே உலவிக் கொண்டிருந்தாள். ஆசா தோழியை உற்று நோக்கினாள்; அவள் கண்களிலிருந்து தாரைதாரையாய் நீர் பெருகு வதைக் கண்டாள். உடனே மனம் கரைந்து, "நீ அழுவா னேன்?" என்று கேட்டாள்.

விநோ: ஒன்றுமில்லை, தோழி. இன்று என் வாழ்வில் மிகவும் நன்றாளென்று தோன்றுகிறது.

ஆசா: ஏன்? இன்று மாத்திரம் அப்படித் தோன்றக் காரணம் என்ன?

விநோ: தோழி, நான் இறந்துவிட்டதுபோலவும், இகலோகத்தில் எனக்குக் கிடைக்காத ஸகல சுகமும்

பரலோகத்தில் எனக்குக் கிடைத்தது போலவும் ஆனந்தம் ஏற்படுகிறது.

ஆசாவிற்கு இப்பேச்சின் அர்த்தமே புரியவில்லை. தன் அருமைத் தோழி இறப்பதாகச் சொன்னது மட்டும் அவளைத் துக்கத்தில் ஆழ்த்தியது. அவள், "சீச்சி! இது என்ன பேச்சு? இனி இப்படியெல்லாம் பேசாதே" என்றாள்.

வேறு வண்டி கிடைத்தது. விஹாரி முன்போலவே வெளியே வண்டிப் பெட்டியின் மீது உட்கார்ந்துகொண்டான். விநோதினி வண்டிக் கதவின் ஓரத்தில் உட்கார்ந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். நிலவொளியில் கறுத்து அடர்ந்த மர வரிசைகள் கூடவே தொடர்ந்து வருவன போல் காணப்பட்டன. ஆசா ஒரு மூலையில் சாய்ந்து தூங்கி வழிந்துகொண்டிருந்தாள். மஹேந்திரன் உற்சாகமற்று மனவெறுப்புடன் பாதிக் கண் மூடியபடியே யோசனையில் இருந்தான்.

---

## பதினெட்டாம் அத்தியாயம்

தோட்டச் சாப்பாடு நடந்த துர்த்தினத்திற்குப் பிறகு விநோதினியை மறுபடியும் தன் வசம் செய்து கொள்ள மஹேந்திரன் துடித்துக்கொண்டிருந்தான். ஆனால் அதற்கு மறுதினமே ராஜலக்ஷ்மிக்கு ஜுரம் வந்து விட்டது. வியாதி கடுமையாக இல்லாவிடினும் பலவீனம் அதிகமாயிருந்தது. விநோதினி இரவு பகலாக அவளருகில் இருந்து அவளுக்கு வேண்டியதைச் செய்து வரலானாள். மஹேந்திரன் அவளிடம், "இரவும் பகலும் இப்படிக் கஷ்டப்பட்டால் கடைசியில் நீயும் நோயாய்ப் படுத்துக்

கொள்வாய். அம்மாவைக் கவனித்துக்கொள்ள நான் வேறு ஒரு தாதியை ஏற்பாடு செய்கிறேன்” என்றான்.

மஹேந்திரன் நோயாளியின் அருகில் நிமிஷத்திற்கு ஒருமுறை வந்து போய்க்கொண்டிருந்தான். வேலையின்றிச் சும்மா அவன் அங்கு வந்து பொழுதை வீணாக்குவது விநோதினிக்கு அசங்கியமாயிருந்தது. அவள் இரண்டு மூன்று முறை மஹேந்திரனிடம் போய், “படிப்பதை விட்டு இப்படி இங்கே பொழுதைக் கழிப்பானேன்?” என்று வெறுப்புடன் கூறினாள்.

தன்னைச் சுற்றியே மஹேந்திரன் இப்படி வட்ட மிடுவது விநோதினிக்குப் பெருமையை உண்டாக்கிற்று. ஆனாலும் சமயாசமயமின்றி நோய் வாய்ப்பட்டிருக்கும் தாயின் முன்புகூட, அவன் இப்படித் தன்னைச் சுற்றுவது அவளுக்கே பிடிக்கவில்லை. அவள் இதை வெறுத்தாள். அவளுடைய சுபாவம், ஒரு காரியத்திற்குப் பொறுப் பேற்றுக்கொண்டால் அது முடியும்வரை கவனம் வேறு எதிலும் செல்லாது. ராஜலக்ஷ்மிக்குச் சேவை செய்வது தான் அவளது முக்கிய கடமையாயிருந்தது. இரவுபகல் அதிலேயே மூழ்ந்திருந்தாள். வேறு எதிலும் கவனம் செலுத்த அவள் விரும்பவில்லை.

விஹாரி அடிக்கடி ராஜலக்ஷ்மியைப் பார்க்க வந்து கொண்டிருந்தான். அவன் வந்ததுமே தானாகவே எல்லாம் தெரிந்துகொண்டு அவளுக்கு வேண்டிய சுச்ருஷை யெல்லாம் செய்வான். எப்படிச் செய்யவேண்டுமென் பதையும் சொல்லிப் போவான். தான் செய்யும் சுச்ருஷை யைப் பார்த்து அவன் திருப்தி அடைவதே தனக்கு ஒரு வெகுமதியென்று விநோதினி கருதினாள்.

மஹேந்திரன் தன்னைத் தானே நொந்துகொண்டான். இனி, தினமும் காலேஜிற்குப் போவதென்று நிச்சயித்துக்கொண்டான். அவனது உற்சாகம் குன்றியது. சதா கடுகடுப்பும் கோபமும் கொண்டான். வீட்டிலோ பெரிய மாறுதல். விநோதினி நோயாளியின் அருகிலேயே இருந்துவிடுவதால் வேளைக்குச் சமையல் ஆகாது. இன்று வண்டியோட்டியைக் காணவில்லை; நாளை கால் மேஜோடுகளைக் காணவில்லை. இப்படி அசௌகரியங்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றவே அவனது கோபம் அதிகரித்தது. முன்போல் இதிலெல்லாம் இப்பொழுது வேடிக்கை தோன்றவில்லை. சரியான சமயத்தில் தனக்கு வேண்டியவையெல்லாம் ஒழுங்காய்ச் சிலதினங்களாய் நடந்து வர அவற்றின் சுகத்தை அனுபவித்த அவன், இப்பொழுது எல்லாம் நேர்விரோதமாய் நடப்பதைக் கண்டு ஆசாவின் மேல் குறை கூற ஆரம்பித்தான்.

“ஆசா, உனக்கு எத்தனை முறைதான் நான் சொல்வது? ‘குளித்துவிட்டு வருமுன் துணிமணிகளை மடித்துத் தயாராக வை. கோட்டு, நிஜார் முதலியவைகளில் பொத்தான்கள் இல்லாமற்போனால் பார்த்துத் தைத்து வை’ என்றெல்லாம் எவ்வளவோ முறை சொல்லியாய்விட்டது. ஆனால் அது ஒருநாளாவது அப்படி நடப்பதில்லை. உடுப்புகளையெல்லாம் தேடி எடுத்துக்கொள்வதற்குள் எனக்குப் போதும் போதுமென்று ஆகிவிடுகிறது” என்று கடிந்து கொண்டான்.

இதைக் கேட்டு ஆசா வெட்கத்தாலும் துக்கத்தாலும் மனம் குன்றினாள். அவள் மெதுவாய், “நான் ஆளிடம் சொல்லியிருந்தேன்” என்ருள்.

மஹேந்: ஆளிடம் சொல்லிவிட்டாயா? ஏன் உன் கையால் செய்துவிட்டால் தவருே? நீ எந்த வேலைக்கும் உபயோகமில்லை.

இது ஆசாவுக்கு வஜ்ராயுதம் துளைத்தது போன்று இருந்தது. மஹேந்திரன் எப்பொழுதும் இம்மாதிரி சொன்னதில்லை. 'நீங்களே என்னை வேலை கற்கவிடாது இதுவரையில் தடுத்து வைத்தீர்கள்' என்று சொல்ல அவளுக்குத் தோன்றவில்லை. வீட்டு வேலையைத் திறம்படச் செய்யவும் பழக்கம் வேண்டுமென்பதை அவள் அறியாள். தான் ஒரு மூடம்; இதனால்தான் தன்னால் ஒன்றும் செய்து முடிக்கமுடியவில்லை யென்பது அவளது திடமான அபிப்பிராயம். மஹேந்திரன் விநோதினியின் திறமையைப் புகழ்ந்து ஆசாவை இகழும்போதெல்லாம் அப் பேதைச் சிறுமி பேசாது தாழ்மையுடன் அவற்றை ஏற்றுவந்தாள்.

ஆசா நோயுற்ற தன் மாமியின் அறையருகில் அடிக்கடி போவாள். வாசற்படியண்டை போனதும் வெட்கத்துடன் அங்கேயே நின்றுவிடுவாள். தானும் ஏதாவது சுசுருஷை செய்ய விரும்பினாள்; ஆனால் அதை விரும்புவார் ஒருவருமிலர். எந்த வேலையைச் செய்வது, எப்படித் தன்னைப் பயன்படுத்திக்கொள்வது, தனக்கும் ஒரு மதிக்கத் தகுந்த ஸ்தானத்தை எவ்விதம் ஏற்படுத்திக் கொள்வது என்பதைப்பற்றியெல்லாம் அவள் என்ன யோசித்தும் அவளுக்கு ஒன்றும் புலனாகவில்லை. தான் எதற்கும் தகுதியற்றிருப்பதுபற்றி வெட்கி அறைக்கு வெளியிலேயே சுற்றிக்கொண்டிருப்பாள். ஏதோ சொல்ல முடியாத வேதனை அவள் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. தனது இன்பவாழ்க்கை நாசமடைந்து வருவது அவளுக்குத் தெரிந்தது. ஆனால் அவ்வின்பம் எப்படிக்

கிடைத்தது, ஏன் நாசமடைகிறது, அதை நிலைத்து நிற்கச் செய்ய வழியெப்படி என்பவையெல்லாம் அவளுக்குத் தெரியவில்லை. "நான் சுத்த அசடு. எதற்கும் தகுதியற்றவள். என்போன்ற மூடம் இவ்வுலகத்திலேயே கிடையாது" என்று சொல்லி நன்றாய் அழுதுவிடவேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

முன்பெல்லாம் தம்பதிகள் இருவரும் பேசட்டும், பேசாதிருக்கட்டும், அவர்கள் ஒன்று சேர்ந்திருப்பதிலேயே சுகமும் சந்தோஷமும் இருந்தன. இப்பொழுதோ விநோதினியின்றி இவர்கள் இருவர் மட்டும் சேர்ந்தால் பேச விஷயமே அகப்படுவதில்லை. ஒன்றுமே பேசாது உட்கார்ந்திருப்பதும் மஹேந்திரனுக்குச் சரியென்று தோன்றவில்லை.

பிற்பகல் அவன் தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தான். வேலையாள் கையில் ஒரு கடிதத்துடன் வெளியே வந்தான். அது யாருக்கென்று மஹேந்திரன் கேட்டான்.

வேலையாள், "விஹாரி பாபுவுக்கு" என்றான்.

மஹேந்திரன், "யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டான்.

வேலையாள், "விநோதினி அம்மா" என்றான்.

"எங்கே பார்க்கலாம், கொடு" என்று சொல்லி மஹேந்திரன் கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டான். பிரித்துப் படிக்கவேண்டுமென்று ஆவல். ஆனால் வேலைக்காரன் எதிரில் அப்படிச் செய்ய வெட்கினான். திருப்பி திருப்பிப் பார்த்துவிட்டுக் கோபத்துடன் அவனெதிரில் எறிந்துவிட்டான். பிரித்துப் பார்த்திருந்தால் அதனுள்



மூர்ச்சையுற்றவன்போல் சற்றுநேரம் வரை கடிதத்தைக் கையில் பிடித்தவாறே படுத்திருந்தான். —பக்கம் 122.

"அம்மா காய்கறி குழம்பு சாப்பிடமாட்டேனென்கிறாள். அவளுக்குப் பருப்புக்கட்டு மாத்திரம் கொடுக்கலாமா?" என்று எழுதப்பட்டிருந்ததைத்தான் கண்டிருப்பான்.

ஆகாரம், மருந்து எதுவானாலும் விஹாரியின் சொற்படியே விநோதினி செய்துவந்தாள். வீட்டிலிருக்கும் மஹேந்திரனை ஒன்றும் கலந்து ஆலோசிப்பதில்லை.

மஹேந்திரன் சற்று நேரம் உலாவிக்கொண்டிருந்து விட்டு உள்ளே தன் அறைக்குச் சென்றான். சுவரில் மாட்டியிருந்த ஒரு படம் ஆணியுடன் பிய்த்துக்கொண்டு விழுந்து விடும்போல் இருந்தது. அவன் ஆசாவைக் கூப்பிட்டு, "சாமானெல்லாம் கவனிப்பாரின்றி இப்படி நாசமாய்ப் போகின்றன. உனக்கு ஒன்றுமே தெரிய வில்லை" என்று கடிந்தான். அறையிலிருந்த புஷ்பத் தொட்டிகளில், என்றோ விநோதினி கொண்டுவந்து வைத்த புஷ்பங்கள் வாடிக் கிடந்தன. அவற்றை எடுத்து எறிந்துவிட்டுப் புதுப்புஷ்பங்கள் கொண்டுவந்து வைப்பாரில்லை. அவையெல்லாம் இன்றுதான் மஹேந்திரனின் கண்ணிற் பட்டன. "விநோதினி இல்லை; இதை எடுத்தெறிவாரும் இல்லைபோல் இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே பித்தளைப் பூக்கிண்ணம் ஒன்றை எடுத்து வாடிய பூக்களுடன் வீசி விட்டெறிந்தான். அது மாடிப்படியிலிருந்து உருண்டு கீழேபோய் விழுந்தது.

"என் மனத்திற்குகந்தபடி நடந்துகொள்ளத் தெரியவில்லை! ஒரு வேலைக்கும் லாயக்கில்லை! எனக்கு ஸந்தோஷம் உண்டாக்கவும் தெரியவில்லை!" என்று பொருமிக் கொண்டே ஆசாவைத் திரும்பிப் பார்த்தான். முகம் கறுத்து அங்கம் பதறக் கட்டிலைப் பிடித்தவண்ணம்

நின்றுகொண்டிருந்த ஆசா, அவன் திரும்பிப் பார்க்கவே, பயத்தினால் நடுங்கிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

பிறகு மஹேந்திரன் தான் உருட்டித் தள்ளிய பூக்கிண்ணத்தைப்போய் எடுத்து வந்து வைத்தான். நாற்காலியில் உட்கார்ந்து மேஜைமீது முழங்கையை ஊன்றி இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்தவண்ணம் வெகுநேரம்வரை யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

இருட்டியதும் வேலைக்காரன் விளக்கேற்றிக்கொண்டு வந்து வைத்தான். ஆனால் ஆசா வரவில்லை. மஹேந்திரனின் மனம் சஞ்சலம் அடைந்தது. மாடிமீதே இங்கு மங்குமாக நடந்துகொண்டிருந்தான். மணி ஒன்பது அடித்தது. அப்பொழுதும் ஆசா வரவில்லை. மஹேந்திரன் அவளை வருமாறு சொல்லியனுப்பினான். ஆசா மெதுவாக வந்து ஸங்கோசத்துடன் வாயிற்படியண்டை நின்றுவிட்டாள். அதற்குமேல் உள்ளே செல்ல அவளுக்குத் தைரியம் வரவில்லை. மஹேந்திரன் அவளருகில் வந்து அவளை மார்போடு அணைத்துக்கொண்டான். இதுவரை அவளிடம் அடங்கியிருந்த துக்கம் கணவனின் ஆதரவைப் பெற்றதும் உடைத்துக்கொண்டு வெளிப்பட்டது. சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழலானாள். மஹேந்திரன் அவளைப் பன்முறையும் முத்தமிட்டான்; அருகில் அணைத்துக்கொண்டு வானிலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்த்தபடியே பேசாதிருந்தான்.

படுத்துக்கொண்ட பிறகு அவன், "ஆசா, என்னை இப்பொழுது ஆஸ்பத்திரியில் இரவுமுறை வேலை பார்ப்பதற்குப் போட்டிருக்கிறார்கள். இரவில் இங்கிருந்து

எழுந்து போவது கஷ்டமாயிருக்கும். ஆகையால் சில தினங்கள் வரை ஹாஸ்டலிலேயே இருக்கலாமென்று நினைத்திருக்கிறேன்" என்றான்.

'இன்னும் என்மீது கோபம் தணியவில்லைபோல் இருக்கிறது. அதனால் தூர இருக்க உத்தேசம் போலும். நான் எதற்கும் பிரயோஜனமற்றவள். நான் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல்' என்று ஆசா தன்னைத் தானே நொந்துகொண்டாள்.

ஆனால் மஹேந்திரன் பேச்சிலோ கோபத்தொனியே காணோம். ஆசா அவன் மடியில் படுத்தவாறே வெகு நேரம் வரை இருந்தாள். மஹேந்திரனும் அவளது முன் நெற்றியில் தொங்கும் கூந்தலை ஒதுக்கியபடியே உட்கார்ந்திருந்தான். முன்பெல்லாம் அவன் அன்புடன் இப்படிச் செய்வது வழக்கம். இன்று பதியின் அன்புப் பிரவாகத்தில் மூழ்கி ஆசா புளகிதமானாள்.

திடீரென்று ஆசாவின் நெற்றியின்மீது ஒரு பொட்டுக் கண்ணீர் விழுந்தது. மஹேந்திரன் அவள் முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு தழுதழுத்த குரலில், "ஆசா, நான் மிகவும் அபராதி. என்னை மன்னிக்கவேண்டும்" என்றான்.

ஆசா தன் மிருதுவான கரங்களால் அவன் முகத்தைப் பொத்திக்கொண்டு, "இல்லை இல்லை! நீங்கள் இப்படிச் சொல்லவே கூடாது. நீங்கள் ஒரு குற்றமும் செய்ய வில்லை. குற்றம் என்னுடையது. என்னை உங்கள் அடிமை யாகக் கருதி எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் விதியுங்கள். உங்கள் பாதசேவைக்குத் தகுதியாக என்னைச் செய்துகொள்ளுங்கள்" என்றாள்.

ஹாஸ்டலுக்குப் போகும் தினம் காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போதே மஹேந்திரன், "ஆசா, நீதான் என் வாழ்க்கையின் உயிர்நிலை. என் இருதயத்தின் மணி. உன்னை என் உள்ளத்தில் வைத்துப் போற்றுவேன். அங்கிருந்து உன்னை அகற்ற யாராலும் முடியாது" என்று உணர்ச்சி ததும்பக் கூறினான்.

கணவனைப் பிரிந்திருக்க ஆசா மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டாள். ஆனால் தனக்குத் தினம் ஒரு கடிதம் மாத்திரம் எழுதிக்கொண்டிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள்.

மஹேந்: நீயும் அதற்குப் பதில் எழுதுவாயல்லவா?

ஆசா: எனக்கு நன்றாக எழுதத் தெரியாதே.

மஹேந்: (அவளை அன்புடன் தட்டிக்கொடுத்து) நீதான் நளதமயந்தி கதை படித்திருக்கிறாயே?

ஆசா: போதும்; நீங்கள் என்னைக் கேலி செய்கிறீர்கள்!

ஆசா அன்று தனக்குத் தெரிந்தமட்டில் மஹேந்திரன் துணிமணிகளையெல்லாம் மடித்துப் பெட்டிக்குள் வைத்துக்கொண்டிருந்தாள். மஹேந்திரனும் அவளுக்கு உதவிசெய்ய வந்தான். எப்படியோ இருவருமாகச் சேர்ந்து ஒரு பெட்டிக்குள் அடங்கும் துணியை இரண்டு பெட்டிகள் நிறைய வைத்து அடைத்தனர்! அப்பொழுதும் சில துணிகள் பாக்கியிருந்தன. அவை சிறு மூட்டைகளாகக் கட்டப்பட்டன. சாமான்களைக் கட்டுவதில் தனது சாமர்த்தியமின்மையைக் குறித்து ஆசா வெட்கினாள். ஆனால் வேடிக்கை, அன்பு, குதூகலம் இவற்றில் அவ்வெண்ணம் மறைந்துபோய் முன் தினங்களைப் போன்ற

ஆனந்தத்தில் மூழ்கினாள். தானும் ஆசாவும் அடைந்த சந்தோஷத்தில் புறப்படவேண்டிய சமயத்தைக்கூட மஹேந்திரன் மறந்துவிட்டான். வண்டிக்காரன் வண்டி வெகு நேரமாக வந்து காத்திருப்பதாகச் சொன்னான். ஆனால் அது மஹேந்திரனின் காதில் விழவில்லை.

சாயங்காலமாயிற்று. ஆசாவிடம் அவள் தேகாரோக்கியத்தை நன்றாகக் கவனித்துக்கொள்ளுமாறு மஹேந்திரன் அடிக்கடி கூறினான். அவளும் அவனைக் கடிதம் எழுதுமாறு வேண்டிக்கொண்டாள். மனவருத்தத்துடன் இருவரும் ஒருவாறு பிரிந்தனர்.

இரண்டு தினங்களாய் ராஜலக்ஷ்மி சற்று எழுந்து உட்காரும் நிலையில் இருந்தாள். அன்று கம்பளியைப் போர்த்துக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்தபடியே சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தாள். அச்சமயம் மஹேந்திரன் வந்தான். விநோதினியின் பக்கம் அவன் திரும்பவேயில்லை. தாயிடம், "ஆஸ்பத்திரியில் இன்றையிலிருந்து எனக்கு இரவுமுறை. இங்கிருந்து தினம் போவது அசௌகரியமாயிருக்கும். ஆகையால் கொஞ்சநாள் ஹாஸ்டலிலேயே இருக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றான்.

தன்னைவிட்டு இச்சமயத்தில் மகன் போவதாகக் கூறியதைக் கேட்க ராஜலக்ஷ்மிக்கு உள்ளூறக் கோபம். "போயேன்! படிப்புக் கெட்டுவிடுமென்று தோன்றினால் இங்கே இருந்து என்ன செய்வது?" என்றாள்.

பிள்ளை வீட்டில் இருக்கப் போவதில்லை என்பதைக் கேட்டவுடன் குறைந்துவந்த ஜுரம் ஏறிவிட்டது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. "விநோதினி, அந்தத் தலையணையைச் சற்று எடு" என்றாள்.

விநோதினி அவளைச் சரியாய்ப் படுக்கவைத்து விசிறலானாள். மஹேந்திரன் தாயின் நெற்றியின்மேல் கையை வைத்துப் பார்த்தான். பிறகு நாடியைப் பிடித்துப் பார்த்தான். ராஜலக்ஷ்மி சட்டென்று கையை இழுத்துக் கொண்டு, "நாடி பார்த்து என்ன ஆகவேண்டும்? நீ போ; நான் எல்லாம் சௌக்கியமாய்த்தான் இருக்கிறேன்" என்றாள்.

---

## பத்தொன்பதாம் அத்தியாயம்

'என்ன காரணம்? கர்வமா, கோபமா, அல்லது பயமா? என்னைப் பொருட்படுத்தவில்லையென்று காண்பித்துக்கொள்வதாக எண்ணம்போலும்! நானும் பார்க்கிறேன், இது எவ்வளவு நாளைக்கு நடக்கிறதென்று!' என்று விநோதினி குமுறினாள்.

ஆனால் மஹேந்திரன் வீட்டை விட்டுப் போனது முதல் விநோதினியின் மனமும் நிம்மதியற்றது. தனது அற்புத சாமர்த்தியம், சௌந்தர்யம் இவற்றைக்கொண்டு மஹேந்திரனைத் தனது மாயாஜாலத்தில் விநோதினி சிக்க வைத்துக் கொண்டிருந்தாள். இதில் அவளை அறியாத ஆனந்தம் அவளுக்கு ஏற்பட்டது. ஆனால் அந்த ஆனந்தம் மஹேந்திரன் கூடவே போய்விட்டது. அவனின்றி அவளுக்கு அந்த வீடு சூன்யமாகக் காணப்பட்டது. குடி மயக்கம் தெளிந்த குடிகாரனைப் போன்று இருந்தது அவளது நிலைமை. மஹேந்திரனது சிநேகம் இல்லாமல் ஆசாவின் நட்பு அர்த்தமற்றதாகவும் ரஸமற்றதாகவும் தோன்றியது. யௌவன தம்பதிகளின் இன்பவாழ்க்கை அவள் மனத்தில் விரகத்தீயை மூட்டி வைத்திருந்தது.

கற்பனை யென்னும் நெய்யினால் அதைச் சுடர்விட்டு எரியச்செய்து வந்தாள். தன்னை நிராகரித்துத் தனது வாழ்க்கையைப் பயனற்றதாகச் செய்துவிட்டு ஆசா போன்ற ஒரு புத்தியற்ற பேதைச் சிறுமியைக் காதலிக்கும் மஹேந்திரன் மீது தனக்குள்ளது அன்பா, விரோதமா வென்பது விநோதினிக்கே புரியவில்லை. தனது உள்ளத்தை அவனுக்கு அர்ப்பணம் செய்வதா அல்லது அவனைக் கடுந்தண்டனைக்கு உள்ளாக்குவதா என்பதொன்றும் அவளுக்குத் தெரியவில்லை. மஹேந்திரனின் மனத்தில் மூட்டப்பட்ட தீ காதல்தீயா அல்லது துவேஷத் தீயா, அல்லது இரண்டும் சேர்ந்ததா என்பதை அவளால் அறிய முடியவில்லை. தானே ஒரு பயங்கரச்சிரிப்புச் சிரித்துக் கொண்டாள். 'ஏ கடவுளே, என் போன்ற நிலை பெண்ணாய்ப் பிறந்தவர் எவருக்கும் வாராதிருக்கட்டும்' என்று பிரார்த்தித்தாள். 'நாம் சாக விரும்புகிறோமா அல்லது பிறரைச் சாக அடிக்க விரும்புகிறோமா?' என்று தெரியாது திகைத்தாள்.

எரிப்பதற்கோ எரிக்கப்படுவதற்கோ எதற்கும் மஹேந்திரனின் சேர்க்கையின்றி முடியாதென்று நினைத்தாள். அவன் மீதன்றித் தனது விஷ அம்புகளை யார்மீது தொடுப்பது? அவனை நினைக்கும்போதெல்லாம் பெருமூச் செறிந்தாள். 'எங்கே போகிறான்? வந்தே விடுவான். அவன் என்னுடையவன்?' என்று சமாதானம் செய்து கொண்டாள்.

இரண்டு நாள் கழித்து மஹேந்திரனுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. விலாசம் எழுதியிருந்த கையெழுத்து அவனுக்குத் தெரிந்தவருடையதுதான். பகலில் வேலை அவ

சரத்தில் அவன் அதைப் பிரிக்க விரும்பவில்லை. வேலை முடிந்த பிறகு ஆர அமர அவ்வினிய கடிதத்தைப் படிக்க விரும்பி, அதைத் தனது கோட்டின் உட்புற ஜேபியில் வைத்துக்கொண்டான். காலேஜில் 'லெக்சர்' நடக்கும் போதும் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும்போதும் ஜேபியி லிருக்கும் அவ்வன்பின் உருவம் அவனைத் தீண்டுவது போலவே இருந்தது. அவ்வினிய குரலோசை செவியில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

சாயங்காலம் காலேஜிலிருந்து நேரே தன் அறைக்குச் சென்று கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டான். ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு ஜேபியிலிருந்த கடிதத்தை வெளியில் எடுத்தான். கடிதத்தைக் கையில் எடுத்ததும் தன்னை நினைந்து உருகும் அழகியின் உருவம் முன்வந்து நின்றது. கவரின்மேல் தனது பெயர் எழுதப் பட்டிருப்பதையே வெகுநேரம்வரை பார்த்துக்கொண் டிருந்தான். அதனுள் அதிக விஷயமொன்றும் இராது என்பது அவனுக்குத் தெரியும். ஏனெனில் ஆசாவுக்குத் தனது மனோபாவத்தை வெளியிடக்கூடிய கல்வியறிவு இல்லையென்பதை அவன் அறிவான். நான்கு வரிகள், சிறியனவும் பெரியனவுமான எழுத்துக்களில், கொச்சைப் பாஷையில் தனது அன்பை வெளியிட்டு எழுதப்பட் டிருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் உள்ளத்திலிருந்து எழும் அத்தெய்விக உண்மையன்பின் தன்மையை நினைந்து தானும் அதில் ஈடுபட்டுச் சிறிது நேரம் தன்னை மறந்து இன்பத்தில் ஆழ்ந்தான்.

ஸதா சேர்க்கையினால் ஏற்பட்ட அலுப்பு இரண்டு தினங்கள் பிரிந்திருந்த பிரிவிலேயே தீர்ந்துவிட்டது.

மனைவியுடன் தான் அனுபவித்த சுகவாழ்க்கை நீடித்து நடைபெற வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. ஆசாவின் அன்புருவம் ஸதா மனக்கண் முன் நின்றது. பிரிவானது அவனது காதலைப் பரிசுத்தப்படுத்தியது.

மஹேந்திரன் உறையைக் கிழித்துக் கடிதத்தை வெளியில் எடுத்தான். அதைப் பன்முறையும் முத்தமிட்டு உள்ளம் பூரித்தான். தான் எப்பொழுதோ ஆசாவுக்குப் பரிசாக அளித்த 'ஸெண்டி'ன் வாசனை அக்கடிதத்தி லிருந்து எழுந்து அவன் உள்ளத்தை ஊடுருவியது.

கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! எழுத்தென்னவோ ஆசாவினுடையதுதான்; ஆனல் விஷயம் அவள் மனத்திலிருந்து எழுந்ததல்ல. அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"என் அருமைக் காதல,

யாரை மறந்திருக்க எண்ணி வீட்டைவிட்டுப் போனீர்களோ அவளைக் கேவலம் கடிதத்தின் மூலம் எப்படி ஞாபகப்படுத்துவது? கொடியை வேரறுத்துவிட்டால் அதனல் எப்படி மரத்தைத் தழுவிக்கொண்டு படர முடியும்? அது ஏன் இன்னும் முழுதும் பட்டுப்போகவில்லையோ காணேன்!

நாதா, உள்ளத்தில் எனக்கும் சிறிது இடம் கொடுப்பதால் என்ன அபாயம் நேரிட்டுவிடும்? இப்படி மறந்துபோவது என்பது என் மனத்தை ஆயிரம் வேல்கொண்டு துளைப்பது போன்று இருக்கிறது. உண்ணும்போதும், உறங்கும்போதும், இரவும் பகலும் ஸதா உங்கள் நினைவே என்னை வருத்துகிறது. நாதா, நீங்கள் எப்படி என்னை மறந்திருக்கக் கற்றுக்கொண் டீர்களோ அவ்விஷயத்தை எனக்கும் சற்றுச் சொல்லிக் கொடுக்கலாகாதா?

நீங்கள் என்னிடம் அன்புகொண்டது எனது தவறு? இப்படி ஒரு பாக்கியம் கிடைக்குமென்று நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லை. நீங்கள் என்னைக் கண்ணெடுத்துப் பாராதிருந்திருப்பின் நான் வீட்டில் எந்த மூலையிலோ விழுந்து கிடந்திருப்பேன். இப்பொழுது நான் உங்கள் பேரில் தோஷம் கண்டு பிடிப்பேனா? என்னிடம் எதைக் கண்டு இப்படி என்மீது மோஹங்கொண்டீர்கள்? இவ்வளவு அன்பு காட்டக் காரணம் என்ன? மின்னலின்றி என்மேல் விழுந்த இடி என்னைச் சுட்டுவிட்டுப்போனது; என்னை ஏன் அது ஒரேயடியாய்ப் பஸ்மமாக்கவில்லையோ?

நானும் எவ்வளவோ யோசித்தேன். வீட்டில் இருந்து கொண்டே என்னைத் திரஸ்கரித்துவிட்டு நீங்கள் இருக்க முடியாதா? இதற்காக வீட்டைவிட்டுப் போவானேன்? நான் என்ன, வீட்டில் உங்களையே சதா சுற்றிக்கொண்டிருந்தேனா? எங்கோ ஒரு மூலையில் விழுந்து கிடக்கும் நான் உங்கள் கண்ணிலா தென்படப்போகிறேன்? அப்படி என்மேல் வெறுப்பிருந்தால் என்னை என் வீட்டைவிட்டுப் போகச் சொல்லக்கூடாது? எனக்கென்ன போகவா இடமில்லை? எப்படி வந்தேனோ அப்படியே போகிறேன்"

இம்மாதிரியான கடிதம், யாருடைய பாஷையென்பது அவனுக்குத் தெரியாதிருக்கவில்லை. மூர்ச்சையுற்றவன்போல் சற்று நேரம் வரை கடிதத்தைக் கையில் பிடித்தவாறே படுத்திருந்தான். வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கும் ரெயிலின்மீது எதிர்ப்புறமிருந்து அதே வேகத்தில் வந்துகொண்டிருந்த மற்றொரு ரெயில் மோதி, இரண்டும் சின்னபின்னமாய் நொறுங்கியது போன்று இருந்தது அவன் மனநிலை.

மஹேந்திரன் அக்கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்தான். இதுவரை புலனாகாமலிருந்தது இப்பொழுது

வெட்ட வெளிச்சமாய்ப் புலனாயிற்று. வாழ்க்கையின் ஒரு மூலையில் மறைந்துகிடந்த தூமகேது இப்பொழுது கொழுந்துவிட்டு ஜ்வாலையுடன் பிரகாசிப்பதைக் கண்டான்.

இக்கடிதமென்னவோ விநோதினியினுடையதே. பாவம்! பேதை ஆசா, அதைத் தன்னுடைய உணர்ச்சியைக் காட்டுவதாகப் பாவித்து எழுதியிருக்கிறாள். தனக்கு எழுதத் தோன்றாத விஷயங்களை வாக்கியம் வாக்கியமாக விநோதினி சொல்லத் தான் எழுதும்போது தன் மனோபாவத்தைத் தெரிவிப்பதாக ஆசா எண்ணினாள். கணவனின் பிரிவாற்றாது அவள் மனமும் துயருற்றது. ஆனால் அதை இவ்வளவு அழகாய் வருணித்தெழுதத் தனக்கு எங்கே தெரியும் என்று எண்ணினாள். தனது மனோவேதனையைத் தன் தோழி இவ்வளவு நன்றாக அறிந்துகொண்டிருப்பதைப் பார்த்து ஆசாவுக்கு அவள் மேலுள்ள பிரியம் அதிகரித்தது. ஏனெனில் அவள் மனத்தில் பிரிவுத் துக்கம் இருந்தது; அதை வெளியிடுவதற்குரிய பாஷையோ தோழியிடம் இருந்தது.

ஆசாவின் அறியாமையை நினைந்து மஹேந்திரன் மனமிரங்கினான். விநோதினியை இங்கிருந்தவாறே நொறுக்கி விடலாமா என்று கோபமெழுந்தது அவனுக்கு. சற்று நேரத்திற்கெல்லாம் அக்கோபம் ஆசாவின் மேல் திரும்பியது. 'அவள் சொல்வதை அப்படியே எழுதியது ஆசாவின் தவறுதானே? இப்படியும் ஒரு பேதை உண்டா?' என்று வருந்தினான். கடிதத்தை மற்றுமொரு முறை படித்தான். உள்ளூற ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. அதைத் தனது மனைவியே எழுதியிருப்பதாகப் பாவிக்க எவ்வளவோ முயன்றான். முடியவில்லை.

நான்கு வரிகளை படிக்கும்போதே குடிகாரனுக்குச் சாராயத்தைக் கண்டதும் ஏற்படும் ஆனந்தம் அவனுக்கு உண்டாயிற்று. மறைந்திருந்தும் எதிரிலிருப்பது போல வும், தூர இருந்தும் அருகிலிருப்பது போலவும், விஷக் கலப்பாயிருந்தும் அமிருதம்போலவும், மறக்க முயன்ற அந்நட்பு ஒரே சமயத்தில் மறுபடி கிளைத்து அவனை மயங்கச் செய்தது. தனது தேகத்தை ஒரு பாகத்தில் கத்தியால் கீறித் தன்னை அம்மயக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டாலென்ன என்றுகூட மஹேந்திரன் நினைத்தான்.

ஆத்திரத்துடன் நாற்காலியை விட்டு எழுந்தான். மேஜையின் மேல் ஓங்கிக் குத்தினான். "இதோ இக்கடிதத் தைக் கிழித்து நெருப்பில் போடுகிறேன் பார்!" என்றான். விளக்கண்டை கடிதத்தைக் கொண்டுபோனான். ஆனால் அதை எரிக்கவில்லை. பின்னும் ஒரு முறை படித்தான்.

மறுநாட் காலை அறையைச் சுத்தம் செய்ய வேலைக் காரன் வந்தபோது விளக்கினருகில் காகிதம் கொளுத்திய சாம்பலைக் கண்டான். ஆனால் அது ஆசாவின் விசித்திரக் கடிதத்தின் சாம்பலன்று; அதற்குப் பதிலளிக்க விரும்பி மஹேந்திரன் இரவு முழுதும் அநேகம் கடிதமெழுதிப் பிறகு கொளுத்தி வீணாக்கியதன் சாம்பல்தான் அது.

---

## இருபதாம் அத்தியாயம்

இதற்குப் பிறகு மற்றொரு கடிதமும் வந்து சேர்ந்தது. அது பின்வருமாறு:—

"காதல் கடிதத்திற்குப் பதிலே எழுதவில்லை. நல்லது. உண்மையை எழுதுவது கஷ்டந்தான். ஆனால் உங்களுடைய பதிலை நானாகவே அறிந்துகொண்டேன். பக்தன் கடவுளைக்

கதறி அழைக்கும்போது கடவுள் டேசிக்கொண்டேயா ஓடி வருகிறார்? எனது கடிதமலர் தங்கள் சாணாவிந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நான் அறிகிறேன்.

ஆனால் பக்தன் வேண்டிய வரத்தை அளிப்பதில் கடவுளின் தபோசக்திக்கே நஷ்டம் ஏற்படும்போலிருந்தால் அதற்காகப் பக்தனின் மேல் கோபம்கொள்ள வேண்டாம். வரமளிக்கட்டும் அளிக்காது போகட்டும், தன்னை ஏறெடுத்துப் பார்க்கட்டும் பார்க்காது போகட்டும், பக்தனால் கடவுளிடம் பக்தி செலுத்தாது என்னவோ இருக்கமுடியாது. ஆகையால் இன்னும் இரண்டு வரிகள் எழுதியனுப்புகிறேன். கல்நெஞ் சுடைய நாதா, கலங்கவேண்டாம் இதனால்!”

மஹேந்திரன் இதற்குப் பதிலெழுத உட்கார்ந்தான். ஆனால் அவனை அறியாமலே ஆசாவிற்கு எழுதுவதற்குப் பதிலாக விநோதினிக்குத்தான் பதிலெழுதக் கையோடியது. ஒளித்து மறைத்து எழுதவோ முடியவில்லை. பாதிராத்திரிவரை உட்கார்ந்து எவ்வளவோ முறை எழுதி எழுதிக் கிழித்துக் கடைசியில் ஒன்று எழுதி முடித்துக் கவரினுள் போட்டு மேலே ஆசாவின் பெயரை எழுத ஆரம்பிக்கும்போதே, தன்னைச் சவுக்கால் அடிப்பது போன்றிருந்தது மஹேந்திரனுக்கு. “ஹோ, நம்பிக் கைத் துரோகி! உன்னை நம்பியிருக்கும் பெண்ணிடமா இந்த வஞ்சகம்!” என்று யாரோ நிந்திப்பதுபோல் இருந்தது.

அவன் உடனே அக்கடிதத்தைத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிந்தான். இரவு முழுவதும் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மூன்றாவது கடிதமும் வந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"யாருக்கு மரியாதை தெரியவில்லையோ அவர்களுக்கு நேசிக்கவும் தெரியாது. அநாதரவும் அவமானமும் செய்யப் படும் எனது அன்பை உங்களுக்கு அர்ப்பணம் செய்வதுதான் எப்படி?

ஒரு வேளை நான் உங்களைச் சரியாக அறிந்துகொள்ள வில்லை போலும்! அதனுல்தான் இவ்வளவு துணிவு. நீங்கள் வீட்டைவிட்டுப் போனுலும் நானுகவே வலுவில் கடிதம் எழுதினேன். ஆனுலும் பதிலில்லை. எனது உள்ளத்தைத் திறந்து காட்டினேன். உங்களை அறிந்துகொள்ள நான் தவறிவிட்டேனுனல் அது என் தப்பிதமா? நான் சொல்பவை யாவும் சரியா அன்ருவென நீங்கள் நன்கு யோசித்துப் பாருங்கள்.

தப்போ சரியோ இதுவரை எழுதியதை நான் மறுத்து உரைக்க முடியாது. கொடுத்ததைத் திருப்பி வாங்க முடியாது. இதைத்தான் பச்சாதாபமென்பது. சீ! என்னைப் போன்ற மானங்கெட்ட கதி ஒரு ஸ்திரீக்கும் ஏற்படாதிருக்கட்டும்! ஆனுல் உங்களை மறக்க முடியுமென்று ஒருபோதும் நினைக்கா தீர்கள். ஒருவரிடம் அன்புகொண்ட பிறகு அவர் திரஸ்கரித் தாலும் அதைச் சகித்துக்கொள்ள வேண்டியதுதான். இக்கடிதம் உங்களுக்கு வெறுப்பாயிருந்து இதற்கும் பதி லளிக்காவிடில், உங்கள் இஷ்டப்படியே நடந்துகொள்ளுங் கள். அதுவும் சரிதான்."

மஹேந்திரனுல் மேலும் பொறுத்திருக்கமுடியவில்லை. ஆசாவின் கடிதங்களைக் காணச் சகியாது அவன் வீட்டிற் குத் திரும்பிவிட நினைத்தான். தவிர, தன்னை மறப்பதற்கா கவே வீட்டைவிட்டு வெளியிலிருப்பதாக விநோதினி எண்ணியிருப்பதையும் பொய்ப்படுத்த விரும்பினுன்.

இச்சமயம் விஹாரி வந்துசேர்ந்தான். மஹேந்திர னுக்கும் நண்பனைக் காணும்போது சந்தோஷமாயிருந்தது.

அவன் மீதிருந்த சந்தேகங்களையெல்லாம் சமீபத்தில் கிடைத்த கடிதங்கள் போக்கடித்துவிட்டன. ஆகையால் இன்று மிகவும் சந்தோஷத்துடன் நண்பனை வரவேற்று முதுகில் தட்டிக்கொடுத்துக்கொண்டே ஒரு நாற்காலியில் உட்கார வைத்தான்.

ஆனால் விஹாரியின் முகம் வாட்டமடைந்து காணப் பட்டது. 'ஒருவேளை வீட்டிற்குப் போயிருப்பான். விநோதினி இவனைச் சரியாக வரவேற்காது நிராகரித் திருப்பாள். அதுதான் இப்படி வாடிய முகத்துடன் இங்கு வந்திருக்கிறான்' என்று மஹேந்திரன் நினைத்து, "விஹாரி, வீட்டுப் பக்கம் போயிருந்தாயா?" என்றான்.

"இப்பொழுது அங்கிருந்துதான் வருகிறேன்" என்று அழுத்தமாகச் சொன்னான் விஹாரி. நண்பனின் மனோவேதனையை எண்ணிப்பார்க்கையில் மஹேந்திரனுக் குத் திருப்தியே உண்டாயிற்று. பாவம்! ஸ்திரீகளின் அன்பை அடையப் பாக்கியமற்றவனென்று மனத்தில் நினைத்துக்கொண்டான். இப்படி எண்ணித் தனது ஜேபியிலிருக்கும் கடிதங்களை ஒரு முறை தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

மஹேந்திரன்: வீட்டில் எல்லோரும் சௌக்கியந் தானே?

விஹாரி: சௌக்கியந்தான். வீட்டை விட்டு நீ ஏன் இங்கே வந்தாய்?

மஹேந்: இரவில் வேலையில் இருக்க வேண்டியிருக் கிறது. வீட்டிலிருந்து வரச் சௌகரியமாயில்லை.

விஹாரி: முன்பெல்லாம் கூட இரவுமுறை வேலை இருந்துகொண்டுதான் இருந்தது. அப்பொழுதெல்லாம் வீட்டைவிட்டு வரக்காணோமே?

மஹேந்திரன், "என்ன, என்மேல் ஏதாவது ஸந்தேகமோ?" என்று கேட்டுச் சிரித்தான்.

விஹாரி: இந்த வேடிக்கையெல்லாம் இருக்கட்டும். முதலில் நீ வீட்டிற்குப் போ!

வீடு திரும்ப மஹேந்திரன் தயாராய்த்தான் இருந்தான். ஆனால் நண்பனின் வேண்டுகோளைக் கேட்டதும் சற்றுப் பிகுவுடன் தனக்கு இஷ்டமில்லாதது போல், "எப்படி முடியும்? வீடுசென்றால் படிப்பிற்காக ஒரு வருஷமுழுதும் உழைத்தது வீணாகிவிடுமே" என்றான்.

விஹாரி: நண்பா, உன்னைச் சிறுவயதிலிருந்து நான் நன்றாக அறிவேன். என்னையே ஏமாற்றப் பார்க்கிறாயே? நீ செய்வது அநியாயம்.

மஹேந்: யாருக்கு என்ன அநியாயம் செய்துவிட்டேனப்பா? ஜட்ஜ் துரையே, சற்றுச் சொல் பார்ப்போம்!

விஹாரி சற்றுக் கோபத்துடன், "'நான்தான் எப்பொழுதும் மிக நற்குணமுடையவன்' என்று பெருமை அடித்துக்கொள்வாயே; இப்பொழுது அந்நற்குணம் எங்கே போயிற்று?" என்றான்.

மஹேந்: அது இப்பொழுது ஆஸ்பத்திரியில் இருக்கிறது.

விஹாரி: போதும், உன்னுடைய கேலியெல்லாம். இங்கே சிரிப்பும் கொண்டாட்டமுமாயிருக்கிறாய். அங்கே உன் ஆசா அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருக்கிறாள்.

ஆசா அழுதவண்ணம் இருக்கும் செய்தி மஹேந்திரனின் உள்ளத்தில் அம்பெனப் பாய்ந்தது. இவ்வுலகில் தன்னைத் தவிர வேறொருவருடைய சுகதுக்கத்திற்கும் தான் பொறுப்பாளி என்பதைப் புதுமயக்கத்தில் அவன்

மறந்தே இருந்தான். திடுக்கிட்டவன்போல் கிலேசத்துடன், "ஆசா எதற்காக அழுதுகொண்டிருக்கிறாள்?" என்றான்.

விஹாரி எரிச்சலுடன், "அது உனக்குத் தெரியாது, எனக்குத்தான் தெரியும்போலிருக்கிறது!" என்றான்.

மஹேந்திரன்: உன் மஹேன் எல்லாவற்றையும் அறிந்து சொல்லக்கூடிய ஸர்வக்ஞனல்ல. இதற்காக உனக்குக் கோபம்வந்தால் என்னைச் சிருஷ்டித்த கடவுளைத்தான் கோபிக்கவேண்டும்!

நண்பனது ஆத்திரத்தைக் காணும்போது மஹேந்திரனுக்கு ஆச்சரியமாயிருந்தது. விஹாரியின் இளகிய மனத்தை அவன் அறிவான். ஆனால் ஆசாவினிடம் அவன் இரக்கம் காட்டுவது ஏனோ, என்றையிலிருந்தோ என்று யோசித்தான். 'ஐயோ பாவம்! துர்ப்பாக்கியசாலி' என்று நண்பனுக்காக இரங்கினான்.

ஐயோ பாவமெனத் தோன்றியபோதிலும் குதூகலமும் இல்லாது போகவில்லை. ஆசாவின் பூர்ண அன்பைப் பெறும் பாக்கியம் தனதென்பதை நினைத்தும் கர்வங்கொண்டான். நண்பன் இச்சித்தும் அடையப் பெறாத வஸ்து தனது ஏகபோக பாக்கியமாகக் கிடைத்திருப்பதுபற்றி உள்ளம் பூரித்தான்.

கடைசியில், "நல்லது, வீட்டிற்குப் போகலாம். வண்டி கொண்டு வா" என்றான்.

---

## இருபத்தோராம் அத்தியாயம்

மஹேந்திரன் வீடுவந்து சேர்ந்தான். ஆசாவின் துயரமெல்லாம் நிமிஷத்தில் மறைந்தது. ஆனால் தான்

எழுதிய கடிதங்களை நினைக்கும்போது நாணமும் துக்கமும் கொண்டு கணவன் முகத்தைக் காணவும் வெட்கினாள். மஹேந்திரன் இனிய சொற்களாலேயே, "விட்டுப் போய் விட்டேன், மறந்துபோய்விட்டேன் என்றெல்லாம் கடிதம் எழுத உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது?" என்றான். கேட்டுக்கொண்டே ஜேபியிலிருந்த அம்மூன்று கடிதங் களையும் எடுத்தான்.

ஆசா மிகக் கிலேசத்துடன், "உங்கள் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறேன். தயவுசெய்து அக்கடிதங் களைக் கிழித்து எறிந்துவிடுங்களேன்" என்று வேண்டி னாள்.

ஆசா கடிதங்களைத் தானே பிடுங்கி எறிய முயன்றாள். மஹேந்திரன் அவற்றை அவள் கைக்கு அகப்படாதவாறு பத்திரமாய் மறுபடி ஜேபியினுள் வைத்துக்கொண்டே, "ஏதோ வேலை நிமித்தம் சில தினங்கள் வெளியே யிருந் தால் ஏதேதோ நினைத்துக்கொண்டு என் மேல் குற்றஞ் சாட்டுகிறாயே?" என்றான்.

ஆசாவினால் கண்ணீரை அடக்க முடியவில்லை. நெஞ் சும் பாவனையாக, "தயை செய்து இம்முறை மன்னியுங்கள். இனி எப்பொழுதும் இப்படிச் செய்யமாட்டேன்" என் றாள்.

மஹேந்: எப்பொழுதும் மாட்டாயே?

ஆசா: எப்பொழுதும் மாட்டேன்.

மஹேந்திரன் அவளை இழுத்து அன்புடன் முத்த மிட்டான். ஆசா, "கடிதங்களைக் கொடுத்து விடுங்கள். கிழித்தெறிந்து விடுகிறேன்" என்றாள்.

மஹேந்: பரவாயில்லை. அவை இருக்கட்டும்; விடு.

தான் செய்த குற்றத்திற்குத் தண்டனையாகவே கணவன் அவற்றை வைத்திருக்க விரும்புவதாக ஆசா எண்ணினாள்.

இப்படித் தன்னைக் கடிதங்கள் எழுதச் சொல்லிய தற்காக விநோதினியிடம் கோபங் கொண்டாள். கணவன் வந்த சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்கவும் அவளிடம் ஓடவில்லை. அவளாகப் பேச வந்தபோதும் முகங்கொடுத் துப் பேசவில்லை. இதன் காரணத்தை விநோதினியும் ஊகித் துக்கொண்டு தனது வேலையில் கவனமாய்த் தூரவே இருக் கலானாள்.

தன்னைக் கண்டதும் விநோதினி ஓடிவந்து எதிர் கொண்டழைத்துப் பேசுவாளென்று நினைத்திருந்த மஹேந்திரனும் ஏமாற்றமே அடைந்தான். பின் அக்கடி தங்களின் அர்த்தந்தான் என்னவென்று யோசித்தான்.

வீட்டை விட்டுப் போகுமுன் அவள் உள்ளத்தின் மர்மத்தை அறியத் தான் முயலக் கூடாதென்று உறுதி கொண்டிருந்தான்; அவளுடைய சகவாசத்தையே விலக்க வேண்டுமென்று நிச்சயித்திருந்தான். ஆனால் இப்பொ ழுதோ அது சரியென்று அவனுக்குத் தோன்றவில்லை; தங்கள் இருவருடைய மனோவிகாரத்தையும் அகற்றிச் சுத்தமான சகோதரபாவம் கொள்ள இருவரும் சகஜமாய்க் கலந்து பழகுவதுதான் உற்ற முறையென்று கருதினான்.

அவன் ஆசாவிடம், "என்ன? உன் தோழியின் தரி சனமே கிடைப்பதில்லை? என்னைக் காணுவதற்கே அவளுக் குக் கரிப்பா யிருக்கிறதுபோலும்!" என்றான்.

ஆசா உதாசீனத்துடன், "யாருக்குத் தெரியும்? அவளுக்கு என்ன வந்துவிட்டதோ?" என்றாள்.

இச்சமயம் ராஜலக்ஷ்மி வந்து, "விநோதினி தன் வீட்டிற்குச் செல்லவேண்டுமாம்; இனி இங்கிருக்க முடியாதென்று பிடிவாதம் செய்கிறாள்" என்று உணர்ச்சி மேலிடக் கூறினாள்.

இதைக் கேட்டு மஹேந்திரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் உடனே சமாளித்துக்கொண்டு, "ஏனம்மா போகவேண்டுமாம்?" என்றான்.

ராஜலக்ஷ்மி: எனக்கென்ன தெரியும்? என்ன சொல்லியும் கேட்கவில்லை. உனக்கோ பிறரை மதித்து நடந்து கொள்ளவே தெரிவதில்லை. 'ஏதடா, பிறர்வீட்டுப் பெண்ணொருத்தி நம் வீட்டில் வந்திருக்கிறாளே; அவளை மனுஷியாக மதித்துத் தக்க ஆதரவுடன் நடத்துவோம்' என்னும் எண்ணமும் உனக்குக் கிடையாது. பின் அவள் ஏன் இந்த வீட்டில் தங்க விரும்புவாள்?

விநோதினி எதிர்ப்புறம் ராஜலக்ஷ்மியின் படுக்கையறையில் உட்கார்ந்து ஒரு போர்வையைத் தைத்துக் கொண்டிருந்தாள். மஹேந்திரன் நேரே அவளிடம் சென்று, "என்ன மாயா விநோதினி?" என்று அழைத்தான். அவள் மிகவும் அழுத்தலாக, "யார்! ஸ்ரீயுத மஹேந்திர பாபுவா?" என்றாள்.

"எனக்கு இவ்வளவு மரியாதை எப்பொழுது முதல்?" என்றான் மஹேந்திரன்.

விநோதினி தையலை விட்டுக் கண்ணை எடுக்காது, "பின் என்னவென்று அழைப்பது?" என்றாள்.

மஹேந்: ஏன்? முன் போலத்தான்.

விநோதினி இதைக் கேட்டு முன்போல் வேடிக்கைப் பேச்சில் இறங்கவில்லை. அவள் பேசாமலே மேலும் தைக்கலானாள்.

மஹேந்: வரவர நமது நட்புக் குறைந்து வருகிறது போலும்!

விநோதினி தையலை முடித்து நூலை அறுத்துக் கொண்டே, "எனக்கென்ன தெரியும்? உங்களுக்கல்லவோ தெரியும்? ஆஸ்பத்திரியிலிருந்து ஏன் வந்துவிட்டீர்கள்?" என்றாள்.

மஹேந்: எவ்வளவு நாள்தான் செத்த பிணங்களை அறுத்துக்கொண்டு அங்கே கிடப்பது?

விநோதினி தைத்துக்கொண்டே, "ஓஹோ! இப்பொழுது உயிரோடிருப்பவர்களை அறுக்க வந்திருக்கிறீர்களாக்கும்!" என்றாள்.

சகஜமாகவும் வேடிக்கையாகவும் பேசி அவளது தப்பெண்ணத்தை அகற்ற நிச்சயித்திருந்த மஹேந்திரனுக்கு அவள் இப்படி முரண் செய்வது ஏமாற்றமாயிருந்தது. அவள் பேசாமல் இருக்க இருக்க அவன் மனம் அவள்பால் அதிகமாய் இழுக்கப்பட்டது. எப்படியாவது அவள் கோபத்தைத் தணிக்க நிச்சயித்தான்.

அவள் கேட்ட கேள்விக்குப் பதிலளியாது அவளருகில் போய் உட்கார்ந்து, "நீ ஏன் எங்களை விட்டுப் போக விரும்புகிறாய்? நான் ஏதாவது தப்பிதம் செய்தேனா?" என்றான்.

விநோதினி அவனருகிலிருந்து நகர்ந்து உட்கார்ந்து, "எல்லோரும் அவசியமான வேலையை முன்னிட்டுத்தான் போகிறார்கள். நீங்கள் யார்மேல் கோபித்துக்கொண்டு ஹாஸ்டலில் போய் இருந்தீர்கள்? அதேமாதிரிதான் எனக்கும் போகவேண்டும். எனக்குமாத்திரம் அவசியமான வேலை இல்லையா?" என்றாள்.

இதற்குத் தகுந்த பதில் வெகுநேரம் யோசித்தும் மஹேந்திரனுக்குத் தோன்றவில்லை. கடைசியில், "அப்படி நீயின்றி நடவாத என்ன முக்கிய வேலை உனக்கு இருக்கிறது?" என்றான்.

அவள் மிக்க கவனமாய் நூலைக் கோத்துக்கொண்டே, "முக்கியமோ, முக்கியமில்லையோ அது எனக்குத் தெரியும். உங்களுக்குத் தெரிந்து என்ன ஆகவேண்டும்?" என்றாள்.

சில நிமிஷங்கள்வரை பேச்சேயில்லை. மஹேந்திரன் தூரத்திலிருக்கும் மரத்தை நோக்கியவண்ணம் இருந்தான். விநோதினி தைத்துக்கொண்டேயிருந்தாள். ஒரே நிச்சப்தம். ஊசி விழுந்தால் கூடக் கேட்கும். திடீரென்று மஹேந்திரன் ஏதோ பேச ஆரம்பித்ததும் விநோதினி திடுக்கிட்டுத் திரும்பினாள். ஊசி கையில் தைத்துவிட்டது.

மஹேந்: கெஞ்சி வேண்டிக்கொண்டாலுங்கூட இருக்கமாட்டாயா?

கையிலிருந்து வெளிப்பட்ட ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே விநோதினி, "நான் இருந்தாலென்ன, போனாலென்ன? இதற்கு வேண்டுவானேன்? நான் இல்லாது உங்களுக்கு என்ன கெட்டுவிடும்?" என்று சொல்லும்போது துக்கம் தொண்டையை அடைக்கவே அவள் தலையைக் குனிந்துகொண்டு தைக்கலானாள். கண்ணீர் முத்துப்போல உதிர்ந்தது.

மஹேந்திரன் சட்டென்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு உணர்ச்சி மேலிட, "எனக்கு நீ இல்லாமல் கெட்டுத்தான் விடுமென்றால் அப்பொழுது இருப்பாயா?" என்றான்.

விநோதினி உடனே கையை விடுவித்துக்கொண்டு தூர நகர்ந்து உட்கார்ந்தாள். மஹேந்திரனின் மயக்கம்

தெளிந்தது. தன்னுடைய வார்த்தையின் கோரத்தன்மை அவன் செவியில் எதிரொலிப்பது போல இருந்தது. மேலும் இத்தகைய வார்த்தை வெளிப்படாமலிருக்க நாவை அடக்கிக்கொண்டான். பிறகு பேசவில்லை.

அதேசமயம் ஆசா அறையினுள் பிரவேசித்தாள். உடனே விநோதினி சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்துவதுபோல் சிரித்துக்கொண்டே மஹேந்திரனிடம், "நீங்கள் எல்லோரும் இவ்வளவு சொல்லும்போது உங்களைக் கோபத்திற்குள்ளாக்க என்றால் முடியாது. நீங்களாகப் போகச் சொல்லும்வரை நான் இனிப் போவதில்லை" என்றாள்.

ஆசா: தோழி, கடைசியில் இதற்குத்தானா இவ்வளவு பிடிவாதமும்? எனது பதியின் முன்பு நீ தோல்விதான் அடைய நேர்ந்தது!

விநோதினி புன்சிரிப்புடன் மஹேந்திரனைப் பார்த்து, "நிஜத்தைச் சொல்லுங்கள்: தோற்றது நானா, நீங்களா?" என்று கேட்டாள்.

அவன் இதுவரை பேசவில்லை. தனது தகாத செய்கை அவ்வீடு முழுவதும் பரவிக் களங்கமுற்றுக் காணப்பட்டதுபோல் இருந்தது அவனுக்கு. ஆசாவின் முன் இனி எப்படித் தலை நிமிர்ந்து பேசுவது என்று திகைத்தான். தனது தகாத செயலை ஒரு விநாடி மறைத்துக் கொண்டு, வேடிக்கையாய்ப் பேசுவதுபோல் அவனால் எப்படி வேஷம் போட முடியும்? ஏமாற்றும் இந்திரஜால வித்தையை அவனால் செய்யமுடியவில்லை. முகம் குன்றி வாய்குழற, "நான்தான் தோற்றேன்" என்று சொன்னதும் வெளியே சென்றுவிட்டான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவன் மறுபடி விநோதினியிடம் வந்து, "என்னை மன்னிக்க வேண்டும்" என்றான்.

விநோ: தப்பென்ன செய்துவிட்டீர்கள், நான் மன்னிப்பதற்கு?

மஹேந்: உன்னைப் போகவிடாது தடுத்து வைத்துக்கொள்வதற்கு எங்களுக்கு ஓர் அதிகாரமும் இல்லை.

விநோதினி சிரித்துக்கொண்டு, "என்னை நீங்கள் இருக்குமாறு பலவந்தம் ஒன்றும் செய்யவில்லை. சாதாரணமாகத்தான் சொன்னீர்கள். இது என்ன வற்புறுத்தலா? (ஆசாவைப் பார்த்து) சகோதரி, நீயே சொல். அன்பும் வற்புறுத்தலும் ஒன்றுதானா?" என்றாள்.

ஆசாவும் அவளுக்குப் பக்கபலமாக, "ஒருநாளும் இல்லை" என்றாள்.

விநோதினி: நான் போனால் உங்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்றெண்ணி என்னை இருக்கச் சொல்வதை நான் எனது பாக்யமாகக் கருதுகிறேன். (ஆசாவிடம்) சகோதரி, இவ்வுலகில் எனது சுகதுக்கத்தில் அனுதாபம் கொண்டு பகிர்ந்துகொள்ளக் கூடியவர் யார் இருக்கின்றனர்? அதிர்ஷ்டவசமாய் அப்படி ஒருவர் கிடைத்திருக்க அவரை விட்டுப் போக யாருக்குத்தான் மனம் வரும்?

மஹேந்திரன் பதிலொன்றும் சொல்லாது நிற்பதைக் காணவே ஆசாவுக்குச் சற்று வருத்தமாய்த்தான் இருந்தது. "சகோதரி, உன்னைப் பேச்சில் ஜயிக்க யாரால்தான் முடியும்?" என்று விநோதினியிடம் சொன்னாள் அவள்.

மஹேந்திரன் அங்கு நில்லாமல் வெளியே சென்றான். அப்பொழுதுதான் ராஜலக்ஷ்மியுடன் பேசிவிட்டு நண்ப

னைத் தேடிக்கொண்டு விஹாரி வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே மஹேந்திரன், "நண்பா, என்னைப் போன்ற நீசன் - கபடன் - இப்புவியில் யாரும் இருக்க மாட்டார்கள்!" என்று துக்கம் நெஞ்சை அடைக்கச் சொன்னான்.

அவன் சொன்னது விநோதினியின் செவியிலும் பட்டது. அதேசமயத்தில் அவளும், "விஹாரி பாபு!" என்று கூப்பிட்டாள்.

விஹாரி: இதோ வருகிறேன். சற்றுப் பொறு.

விநோ: சற்று இப்பொழுதே வந்து கேட்டுவிட்டுப் போங்களேன்.

விஹாரி உள்ளே நுழைந்ததுமே ஆசாவைப் பார்த்தான். அவள் உடனே எழுந்துபோக யத்தனித்தாள். ஆனால் விநோதினி அவளை நிறுத்திக்கொண்டு, "விஹாரி பாபு, உங்களைக் கண்டால் எனது சகி ஏன் இப்படி ஓடப் பார்க்கிறாள்? உங்களுக்குள் இவ்வளவு வேற்றுமை ஏன்?" என்றாள்.

ஆசா மிகவும் வெட்கித் தோழியின் முதுகில் மெல்ல அடித்தாள்.

விஹாரி சிரித்துக்கொண்டே, "பகவான் என்னை அழகாய்ப் படைக்கவில்லை. அதனால்தான் யாரும் என்னைப் பார்க்க விரும்புவதில்லை" என்றான்.

விநோ: கேட்டாயா, ஆசா! எப்படிச் சாதுர்யமாய்ப் பேசத் தெரிந்துகொண்டிருக்கிறார்! உன்னைத் தோஷம் கூறாது தம்மைப் படைத்த கடவுளையே குறை கூறுகிறார். சாக்ஷாத் லக்ஷ்மணர் போன்ற மைத்துனரைப் போற்றத் தெரியாத உனது மதிதான் என்னே!

விஹாரி: இதனால் உனக்காவது என்மேல் இரக்கம் ஏற்படுகிறதே; பின் எனக்கு என்ன குறை?

விநோ: சமுத்திரம் பெரிதாய்த்தான் இருக்கிறது. ஆனாலும் சக்ரவாக பக்ஷியின் தாகம் மழைநீரின்றித் தணியாதே!

அதற்கு மேல் ஆசாவினால் அங்கே நிற்க முடியவில்லை. விநோதினியின் பிடியிலிருந்து தனது கையை விடுவித்துக் கொண்டு ஓடிவிட்டாள். விஹாரியும் போக எழுந்திருந்தான். அச்சமயம் விநோதினி, "விஹாரி பாபு! உங்கள் சிநேகிதருக்கு என்ன வந்துவிட்டது? உங்களுக்குத் தெரியுமா?" என்றாள்.

இதைக் கேட்டதும் விஹாரி நின்றுவிட்டான். "எனக்கு ஒன்றும் தெரியாது. ஏன்? என்ன சமாசாரம்?" என்றான்.

விநோ: யாருக்குத் தெரியும்? எனக்கு ஒன்றும் அவரது மனப்போக்கு நன்றாய்த் தோன்றவில்லை.

விஹாரி கவலையுடன் உட்கார்ந்து முழுவிவரங்களையும் அறிய விரும்பினான். விநோதினியோ தைத்துக் கொண்டேயிருந்தாள். தானாக அவள் ஒன்றும் சொல்வதாகக் காணோம். பிறகு விஹாரியே, "மஹேந்திரனைப் பற்றி விசேஷ சங்கதி ஏதாவது கேள்விப்பட்டாயா? பார்த்தாயா?" என்று கேட்டான். விநோதினி மிகவும் சகஜமாய்ச் சொல்வதுபோல், "எனக்கென்ன தெரியும்? ஆனால் இருக்கும் மாதிரி ஒன்றும் சரியாயில்லை. எனக்கு என் பிரிய சகியைப்பற்றித்தான் கவலையாயிருக்கிறது" என்றாள். இதைச் சொல்லிப் பெருமூச்செறிந்தாள். தையலைத் தைத்துவிட்டு வெளியேபோக எழுந்து நின்றாள்.

விஹாரி மனக்கலக்கத்துடன், "சற்று உட்கார்" என்றான்.

விநோதினி ஜன்னற் கதவுகளையெல்லாம் நன்றாகத் திறந்து வைத்து விளக்குத் திரியையும் தூண்டிவிட்டு, மறுபடி தைக்கும் துணியை எடுத்துக்கொண்டு ஒருபுறம் உட்கார்ந்தாள். பிறகு விஹாரியிடம், "நான் எப்பொழுதும் இங்கிருக்க முடியாது. நான் போன பிறகு என் தோழிக்கு யாதொரு துக்கமும் நேராதவாறு நீங்களே பார்த்துக்கொள்ளவேண்டும்" என்றாள். இதைக் கூறிக் கொண்டே தனது துக்கத்தைச் சமாளித்துக்கொள்வது போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

விஹாரி உணர்ச்சி ததும்ப, "நீ இங்கிருக்கத்தான் வேண்டும். உன் தோழி எனக்கு வேறல்ல. அந்த மாசற்ற பேதைச் சிறுமியை உனது வசமே ஒப்புவிக்கிறேன். அவளை அநாதரவாய் விட்டுப் போகவேண்டாம்" என்று வேண்டினான்.

விநோ: விஹாரி பாபு, நீங்கள் உலக இயல்பை அறியவில்லை. நான் இங்கேயே இருந்தால் ஊரார் என்ன நினைப்பார்கள்?

விஹாரி: என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளட்டும்; நீ அதைக் கவனியாதே. அநாதையும் வெகுளியுமான அச்சிறுமியைக் காப்பது உனது பொறுப்பென்று நினை. விநோதினி, உன்னை நான் முதலில் அறிந்துகொள்ளாது உன்மேல் தப்பெண்ணம் கொண்டு சந்தேகித்தேன். அதற்காக என்னை மன்னிக்கவேண்டும். ஆசாவின் சுகத்தைக் காணச் சகியாது பொறாமைப்படுகிறாயென்று நினைத்தேன். இன்னும்....அவற்றைச் சொல்

வதும் பாவம்; நினைப்பதும் அடாது. உனது பரிசுத்த மான உள்ளத்தின் தன்மையை அன்றொருநாள் கண்டு கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. அதுமுதல் உன்மேல் எனக்குப் பக்தியும் சிரத்தையும் ஏற்பட்டிருக் கின்றன. எனது குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்காக உன்னிடம் மன்னிப்புப் பெற்றாலொழிய என் மனம் நிம் மதி அடையாது.

விநோதினி ஆனந்தத்தினால் மயிர்க்கூச்செறிந்தாள். தான் அவனை ஏமாற்றுவதை அறிந்தும் விஹாரியின் தன் மையை அவள் சந்தேகிக்கவில்லை. இம்மாதிரி தன்னிடம் பக்தியும் சிரத்தையும் காட்டக்கூடிய ஒருவரைத் தன் வாழ் வில் அவள் இதுவரை கண்டதில்லை. உண்மையிலேயே தான் பரிசுத்த உள்ளம் படைத்தவளென்று கணநேரம் அவளுக்குத் தோன்றியது. ஆசாவின் பேரில் அபார தயை பிறந்து அவள் கண்களினின்றும் இரண்டொரு நீர்த்துளிகளும் உதிர்ந்தன. அவள் அதை மறைத்துக் கொள்ளவில்லை.

விநோதினி அழுவதைப் பார்த்துத் தனக்குள்ள துக் கத்தை மறைத்துக் கொள்வதற்காக விஹாரி சட்டென்று அவ்விடத்தைவிட்டு அகன்றான். அதுவரை, "நான் கபடன், நான் நீசன்" என்று மஹேந்திரன் சொன்னதன் அர்த்தம் அவனுக்கு விளங்காதிருந்தது. மஹேந்திரனைத் தேடினான். அவன் வீட்டில் இல்லை. எங்கோ வெளியில் போயிருக்கிறானென்று தெரிந்தது. வேலையில்லாது வீட் டைவிட்டு உலாவப் போவதுகூட மஹேந்திரனுக்குப் பிடிக்காது. அப்படியிருக்க இருட்டிய பிறகு அந்நேரத்தில் அவன் வெளியே போனானென்பதைக் கேட்க விஹாரிக்கு ஆச்சரியமாயிருந்தது. அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

விநோதினி ஆசாவிடம் சென்று அவளைத் தழுவிக் கொண்டு, "சகோதரி, நான் மிகவும் துர்ப்பாக்கியசாலி! கோர ராக்ஷஸி" என்று அழுதாள்.

ஆசா மிக்க மனக்கலக்கத்துடனும் அன்புடனும், "தோழி, இப்படியெல்லாம் ஏன் பேசுகிறாய்?" என்றாள்.

விநோதினி சிறுகுழந்தையைப் போல் ஆசாவின்மேல் சாய்ந்து அழுதுகொண்டே, "சகோதரி, நான் இருக்குமிட மெல்லாம் கெடுதி நேரிடுமே தவிர நன்மை ஏற்படாது. நான் இவ்வீட்டை விட்டு ஒழியும்படி விட்டுவிடு. நான் எனது காட்டில் போய் வசித்துக் கொள்ளுகிறேன். அது தான் எனக்கேற்பட்ட இடம்" என்றாள்.

ஆசா ஆதரவுடன் அவள் முகத்தை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு, "தோழி, இம்மாதிரி சொல்லாதே. உன்னை விட்டுப் பிரிந்து இருக்கவே முடியாது என்னால்" என்றாள்.

விஹாரியின் மனம் என்ன யோசித்தும் நிம்மதியடையவில்லை. மஹேந்திரனுக்கும் ஆசாவுக்கும் இடையில் ஏற்பட்டு வரும் அன்புக் குறைவின் காரணத்தைத் தெரிந்துகொள்ள அவன் விரும்பினான். மஹேந்திரனை அன்று பார்க்க முடியாது போகவே, மறுநாள் அவனைத் தன் வீட்டிற்கே போஜனத்திற்கு அழைப்பதென்று நிச்சயித்துக்கொண்டான். இதை விநோதினியிடம் தெரிவிக்க எண்ணி அவள் அறைக்குள் வந்தான். அச்சமயம் இரு தோழிகளும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீர் பெருக நிற்கும் காட்சியைக் கண்டான். அவனைப் பார்த்ததும் ஆசாவுக்கு அவன் மீது சந்தேகம் ஏற்பட்டது. 'நம் தோழியின் துக்கத்திற்குக்

காரணம இவனுகத்தான் இருக்கவேண்டும்; அவள் மனத்தை இவனே புண்படுத்தியிருக்க வேண்டும்; இது அநியாயம். இவன் மனது பரிசுத்தமாயில்லை' என்று அவள் நினைக்கலானுள். அவள் விஹாரியைப் பார்க்க விரும்பாது உள்ளே சென்றுவிட்டாள்.

விஹாரிக்கு விநோதினியைப்பற்றிய நல்லெண்ணம் பின்னும் அதிகமாயிற்று. தான் சொல்ல நினைத்ததையும் மறந்து அப்படியே வீடு திரும்பினுன்.

அன்று இரவு மஹேந்திரன் ஆசாவிடம், "ஆசா, நான் நாளைக் காலையில் காசிக்குப் போகிறேன்" என்ருன்.

ஆசா திடுக்கிட்டு, "ஏன்?" என்ருள்.

மஹேந்: பெரியம்மாவைப் பார்த்து வெகு நாளாயிற்று. பார்த்துவர ஆவலாயிருக்கிறது.

ஆசா வெட்கிக் குன்றினுள். இவ்வெண்ணம் தனக்கல்லவோ முதலில் உதித்திருக்கவேண்டும்? தனது சுகதுக்கங்களையே பெரிதாக எண்ணித் தன் அன்பான சிற்றன்னையைத் தான் மறந்திருக்க, தன் கணவன் அந்தத் தபஸ்வினியை மறக்கவேயில்லை யென்பதை நினைத்துத் தனது கடின மனத்தை நொந்துகொண்டாள்.

மஹேந்: அவள் ஸர்வத்தையும் எனக்கே அளித்துச் சென்ருள். அவளைக் கண்டுவரப் பேரவாவாயிருக்கிறது.

மேலே அவனுல் பேசமுடியவில்லை. தனது அன்புமய ஆசீர்வாதத்தை அளிப்பதுபோல் ஆசாவின் நெற்றியையும் சிரசையும் மெதுவாய்த் தடவிக்கொடுத்தான். திடீரெனப் பெருகும் அவன் அன்பின் தன்மையை ஆசாவினுல் அறிந்துகொள்ள முடியவில்லை. அவள் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகியது. அன்று சாயந்திரம் விநோ

தினி தன்னிடம அபாரவாஞ்சை காட்டிப் பேசியது அவள் நினைவிற்கு வந்தது. தன் கணவன் காட்டும் அன்பிற்கும் விநோதினியின் பிரியத்திற்கும் என்ன காரணம், என்ன சம்பந்தம் என்பதொன்றும் அவளுக்குப் புரியவில்லை. ஏதோ தனது வாழ்வில் ஒரு புதிய மாறுதலுக்கு இவை அறிகுறியென்று நினைத்தாள். அது நன்மைக்கா தீமைக்கா என்று நினைத்தாள்.

தன்னை அறியாத பயம் அவள் மனத்தில் தோன்றியது. பதியிடம் அடைக்கலம் புகவேண்டி அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். அவளது மனோநிலையை அவனும் ஊகித்து அறிந்துகொண்டு, "ஆசா, பரிசுத்த ஆத்மாவான உன் சித்தியின் ஆசீர்வாதம் உனக்குப் பூரணமாய்க் கிடைத்திருக்கும்போது உனக்கு ஒரு தீமையும் நேரிடாது. நன்மையே ஏற்படும். வருநதாதே" என்று தைரியமூட்டினான்.

பயம், சமுசயம் எல்லாம் அகன்று ஆசா தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டாள்; பதியின் ஆசீர்வாதம் தன்னைப் பாதுகாத்து ரக்ஷிக்கும் கவசமென்று கருதினாள்.

தன் சித்தியைத் தன் மனக்கோயிலில் இருத்தி வணங்கினாள். தன் பதியின் நன்மையைக் கோரி ஆசீர்வதிக்குமாறு வேண்டிக்கொண்டாள்.

மறுநாட் காலை மஹேந்திரன் காசிக்குப் புறப்பட்டுச் சென்றான். விடைபெற்றுச் செல்ல அவன் விநோதினியிடம் வரவில்லை. இதைக்கண்டு அவள், 'தானே அநியாயம் செய்வது; பிறகு தானே கோபித்துக்கொள்வது! இம் மாதிரிப் புருஷனை நான் கண்டதேயில்லை. ஆனால் இந்த விரக்தியெல்லாம் எத்தனைநாளைக்கு? பார்க்கிறேன்!' என்று தன்னுள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

ஸம்ஸார பந்தனங்களிலிருந்து விடுபட்டுக் காசி க்ஷேத்திரத்தில் ஈசுவர பக்தியில் ஈடுபட்டுத் தன் காலத்தைக் கழித்துவந்தாள் அன்னபூரணி. எதிர்பாராது ஒருநாள் மஹேந்திரன் திடீரென்று வந்து சேர்ந்ததும் அவனைக் காண அவளுக்கு எல்லையற்ற சந்தோஷம் உண்டாயிற்று. கூடவே ஒரு சந்தேகமும் எழுந்தது: முன்போல எங்கே மனைவிக்காகப் பரிந்து தாயுடன் சண்டை போட்டுக்கொண்டு தன்னிடம் பிராதுசெய்ய வந்துவிட்டானே வென்பதுதான்.

அவனுடைய சுபாவம் அவளுக்கு நன்றாகத் தெரியும். ஏதாவது சங்கடம், கஷ்டம் அவனுக்கு நேரும்போதெல்லாம் அவன் பெரியம்மாவையே நாடி வருவான். யாருடனாவது சச்சரவிட்டுக்கொண்டு வந்தால் அவனை அவள் தனது இனிய சொற்களால் சாந்தப்படுத்துவாள். கஷ்டமானால் அதைச் சகித்துக்கொள்வதுதான் அழகென்று உபதேசிப்பாள். ஆனால் அவனுக்கு விவாஹமான பிறகு ஏற்பட்ட மாறுதலையும் சச்சரவையும் அவளால் தீர்க்க முடியாது போயிற்று. எந்தப்பக்கம் பேசினாலும், நியாயத்தையே எடுத்துச் சொன்னாலும் நன்மைக்குப் பதில் தீமையே ஏற்பட்டது; சச்சரவும் அதிகரித்தது. உடனே அவள் ஸம்ஸார பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தூர அகன்றாள். நோயுற்றிருக்கும் குழந்தைக்குப் பச்சைத் தண்ணீர் கொடுக்கக் கூடாதென்று சொல்லியிருக்கக் குழந்தை தாகமேலீட்டால் குளிர்ந்த ஜலமே

மஹேந்திரன் தன் அறையிலிருந்தே இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான்.

—பக்கம் 152.

வேண்டுமென்று பிடிவாதம் செய்து கெஞ்சுகிறது; தாய் குழந்தையின் பரிதாப நிலையைக் காணச் சகியாது அப்புறம் செல்கிறாள். அதைப்போலவே அன்னபூரணியும் மஹேந்திரனுக்காக வீட்டைவிட்டுச்சென்றாள். உலகப் பற்றை மறந்து ஈசுவர பக்தியில் மூழ்கியிருக்கும் தன்னிடம் புண்ணில் கோலிட்டாற் போல் செய்ய மறுபடி அவன் இச்சண்டைகளைக் கொண்டு வந்திருக்கிறானோ வென்று அவள் பயந்தாள்.

ஆனால் அவன் தன் மனைவிக்காகப் பரிந்தோ தாயைக் குறை கூறியோ ஒன்றும் பேசாதிருப்பதைக் கண்டதும் அவள் சந்தேகம் அகன்றது. 'மனைவியைச் சற்றுக் கூட விட்டுப் பிரிய இஷ்டமில்லாமல் காலேஜுக்குக் கூடச் செல்லாதிருந்த மஹேந்திரன் இப்பொழுது அவளை விட்டுத் தன்னைக் காண இவ்வளவு தூரம் வருவானேன்? ஒருவேளை தம்பதிகளுக்குள் பூசலா? அன்பு குறைந்துவிட்டதா?' என்றெல்லாம் எண்ணமிட்டாள் அன்னபூரணி. அவள் கவலையுடன் அவனை நோக்கி, "என்னடா மஹேன்? ஆசா எப்படி இருக்கிறாள்? நிஜமாய் உள்ளபடி சொல்" என்றாள்.

மஹேந்: ஆசா சௌக்கியமாகவே இருக்கிறாள்.

அன்ன: இன்னமும் அப்படியேதான் குழந்தைத் தனமாய் நடந்துகொள்ளுகிறீர்களோ? அல்லது குடித்தனத்தில் பொறுப்பாய் நடந்துகொள்ளுகிறீர்களோ?

மஹேந்: அந்தச் சிறுபிள்ளைத்தனமெல்லாவற்றையும் குழி வெட்டி மூடியாகிவிட்டது. கலகத்திற்கெல்லாம் காரணமாயிருந்த அந்த முதற் பாட புத்தகம் கண்ணிலேயே காணோம். எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வதில்

ஸ்திரீகள் எவ்வளவு அசட்டையாயிருக்க வேண்டுமோ அவ்விதிக்கு அவளும் விலக்கில்லையென்பதை நீ இருந்திருந்தால் பார்த்துச் சந்தோஷப்பட்டிருப்பாய்.

அன்ன: விஹாரி என்னசெய்துகொண்டிருக்கிறான்?

மஹேந்: தன் வேலையை விட்டுப் பிறர் வேலையையெல்லாம் தலைமேல் போட்டுக்கொண்டு அவற்றைச் செய்துகொண்டிருக்கிறான். ஏன் இப்படிச் செய்கிறானென்பதுதான் எனக்குப் புரியவில்லை. அவன் எப்பொழுதும் இப்படித்தான்: அவனது சொந்த அலுவலை மற்றவர்கள் கவனித்துக்கொள்ள விட்டுவிட்டு ஊரார் வேலையையெல்லாம் தான் ஏற்றுத் திரிவது!

அன்ன: சரிதான்; அவன் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லையா?

மஹேந்திரன் சிரித்துக்கொண்டே, "ஏது, அவன் விவாகம் செய்துகொள்வதாகத் தோன்றவில்லை" என்றான்.

இவ்விஷயம் அன்னபூரணியின் மனத்தை அம்பெனத் தாக்கியது. விஹாரி ஆசாவை மணந்துகொள்ள எவ்வளவோ ஆவலும் உற்சாகமும் கொண்டிருந்ததும், கடைசியில் அநியாயமாய் அவன் ஆசை மண்ணானதும், அச்சமயம் அவன் அடங்காத் துக்கத்துடன், "பெரியம்மா, இனி நீங்கள் என்னை எப்பொழுதும் விவாகம் செய்துகொள்ளும்படி சொல்லக்கூடாது" என்று கேட்டுக்கொண்டதும் ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்கு வந்து அவள் மனத்தை வருத்தின. அவள் விஹாரியைத் தன் புத்திரனைப்போல் நேசித்தாள். அச்சமயம் அவனைத் தேற்றிச் சாந்தப்படுத்தும் சக்தியில்லாது காசிக்கு வந்துவிட்டாள். 'ஆனால் இன்னுமா அவனால் ஆசாவை மறக்கமுடியவில்லை?' என்று கவலை கொண்டாள்.

மஹேந்திரன் வேடிக்கையாகவும் யதார்த்தமாகவும் ஆசாவையும் தன்னையும் பற்றி அநேக சங்கதிகள் அன்னபூரணியிடம் சொல்லிக்கொண்டான்; ஆனால் விநோதினியைப் பற்றிய பிரஸ்தாபமே எடுக்கவில்லை.

காலேஜ் திறந்திருக்கும் சமயம் அவன் காசிக்குப் புறப்பட்டு வந்துவிட்டதால் அவன் படிப்பதற்குத் தடை ஏற்பட்டது. சிலதினங்கள் தங்கி உடனே புறப்பட்டுவிட நினைத்தே வந்தான். ஆனால் சாந்தமூர்த்தியாகிய தன் பெரியன்னையின் தரிசனமும் இன்சொல்லும் அவனுடைய தேகபலம் மனோபலம் இரண்டையும் விருத்தி செய்தன வென்று தோற்றியது. சஞ்சலமடைந்த மனம் அமைதியடைந்தது. கடமையில் தவறாது மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்துகொள்ளத் திடமும் சக்தியும் அடைந்தவன் போலக் காணப்பட்டான். இனி விநோதினியாகட்டும், வேறு எவர்தாம் ஆகட்டும், நியாயநெறியினின்றும் கடமையினின்றும் தன்னை ஒருகாலும் அசைக்க முடியாதென்று தீர்மானித்தான்.

தனது படிப்பிற்குத் தடை ஏற்படுவதாகவும் சௌகரியப்பட்டபொழுது மறுபடி வருவதாகவும் சொல்லி அன்னபூரணியிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு அவன் கல்கத்தாவுக்குப் புறப்பட்டான்.

அவன் ஆசாவிடம் அன்னபூரணியின் க்ஷேம ஸமாசாரங்களையெல்லாம் தெரிவித்து, அவள் ஆசாவுக்கென்று அன்புடன் அளித்த ஒரு டப்பி குங்குமத்தையும் இரண்டு வளையல்களையும் கொடுத்தான். அன்னபூரணியின் மாறாத அன்பும், தன்னைப் பற்றிய சச்சரவின் காரணமாக அவள் வீட்டைவிட்டுப் போக நேர்ந்ததும் நினைவிற்கு வரவே

ஆசாவின் மனம் புண்பட்டது. "எனக்கும் அவளைப் பார்த்துவரவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. எப்படியாவது போகமுடியாதா?" என்று கேட்டாள்.

அவள் மனநிலையை அறிந்த மஹேந்திரனும் ஆசாவைச் சில தினங்களுக்கு அன்னபூரணியிடம் அனுப்பச் சம்மதித்தான். ஆனால் மறுபடி படிப்பிற்கு இடையூறாக ஆசாவைக் கொண்டு விட்டுவரக் காசிக்குச் செல்வதா என்று யோசித்தான்.

ஆசா: என் பெரியப்பா காசிக்குப் போகப் போகிறாரென்று தெரிகிறது. அவருடன் நானும் போனாலென்ன?

மஹேந்திரன் அதேதினம் தன் தாயிடம், "அம்மா, ஆசா 'பெரியம்மாவைப் பார்ப்பதற்குக் காசிக்குப் போகிறேன்' என்கிறாள்" என்றான்.

ராஜலக்ஷ்மி வேண்டாவெறுப்புடன், "போக வேண்டுமென்றால் போகட்டுமே! நீயும் போ; கொண்டுபோய் விட்டு விட்டு வா" என்றாள்.

அன்னபூரணியைப் பார்ப்பதற்காக முதலில் அவன் போனது, பிறகு ஆசா போகவேண்டுமென்பது இவை சிறிதும் ராஜலக்ஷ்மிக்குப் பிடிக்கவில்லை.

மஹேந்திரன் அவளிடம், "எனக்குக் காலேஜ் இருக்கிறது. நான் இப்பொழுது போகமுடியாது. அவள் பெரியப்பாவுடன் அவளை அனுப்புகிறேன்" என்றான்.

ராஜலக்ஷ்மி: இது இன்னும் ஒழுங்குதான்! அவர்களெல்லோரும் பெரிய மனிதர்கள். நம்மைத் திரும்பிக் கூடப்பார்ப்பதில்லை. அப்படிப்பட்டவர்களுடன் போனால் தானே நம் கௌரவம் அதிகரிக்கும்!

தாய் இப்படிக் குத்தலாகச் சொன்னது அவன் மனத்தை இன்னும் கடினமாக்கியது. ஆசாவை எப்படியும் காசிக்கு அனுப்புவதென்று நிச்சயித்துக்கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் விஹாரி ராஜலக்ஷ்மியைப் பார்க்க வந்தபோது அவள் அவனிடம், "விஹாரி, கேட்டாயா? நாட்டுப்பெண் காசிக்குப் பயணமாம்!" என்றாள்.

விஹாரி: ஏனம்மா? மறுபடியும் படிப்பைக் கெடுத்துக்கொண்டு மஹேந்திரன் காசிக்குப் போகப்போகிறானா?

ராஜலக்ஷ்மி: இல்லையடா, அவன் எங்கேபோகிறான்? அவன் போனால்தான் ஏதோ ஒரு மாதிரியாயிற்றே? அவன் இங்கே இருக்கிறதாம், அவள் தன் பெரியப்பாவுடன் போகிறதாம்! இக்காலத்தவர்களெல்லாம் துரையும் துரைசானிகளுமாயிருக்கிறார்கள்!

விஹாரி கலக்கமடைந்தான். துரை துரைசானி ஆவதைப் பற்றி அவன் பொருட்படுத்தவில்லை. விஷயமென்ன?—'மஹேந்திரன் காசிக்குப் போனான். ஆசா இங்கிருந்தாள். இப்பொழுது அவள் போகப் போகிறாள். இவன் இருக்கிறான். இவர்களிருவருக்கும் இடையில் என்ன நேர்ந்துவிட்டது? எவ்வளவு நாட்களுக்கு இப்படி இருப்பது? நான் இதற்கு ஓர் உபாயமும் காணாது தூர நின்று வேடிக்கை பார்ப்பதா?' என்ற யோசனையில் ஆழ்ந்தான்.

மஹேந்திரன் தாயினிடம் மனவருத்தமடைந்து எங்கும் போகாமல் தனது அறையிலேயே உட்கார்ந்திருந்தான். பக்கத்து அறையில் ஆசா தன் தோழியைக் கணவனுடன் முன்போல் பேசிக்கொண்டு சமரசமாய் இருக்குமாறு வற்புறுத்திக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் விஹாரி நண்பனிடம் வந்து, "என்ன? ஆசா காசிக்குச் செல்வது நிச்சயந்தானா?" என்றான்.

மஹேந்: ஆமாம். அவளைத் தடைப்படுத்துவானேன்?

விஹாரி: தடைப்படுத்துமாறு யார் சொன்னது? ஆனால் திடீரென்று இவ்வேற்பாடு தோன்றுவானேன்?

மஹேந்: தூர தேசத்திலிருக்கும் தன் சிற்றன்னையைக் காண ஆவல்கொண்டால் அதில் ஆச்சரியமென்ன?

விஹாரி: நீயும் கூடப் போகிறாயா?

தன் தாயைப் போலவே நண்பனும் ஆசாவை அவளுடைய பெரியப்பாவுடன் கூட அனுப்பக் கூடாதென்று சொல்லவே அவ்வளவு பீடிகையும் போடுகிறானென்று நினைத்தான் மஹேந்திரன். பேச்சை அதிகம் வளர்த்தாமல், "இல்லை" என்று பதிலளித்தான் அவன்.

நண்பனின் கோபம் விஹாரிக்குத் தெரியாமலில்லை. அவன் எண்ணத்தை மாற்ற முடியாது, தான் பிடித்த காரியத்தைச் சாதித்தே தீருவானென்பதும் அவனுக்குத் தெரியும். ஆகையால் அவன் தன் நண்பனை ஆசாவுடன் போகுமாறு வற்புறுத்தவில்லை. ஆனால் ஆசா ஏதோ மனக்குறையினால் காசிக்குச் செல்வதால் அவளுடன் கூட விநோதினியும் சென்றால் அவளுக்கு உற்சாகமாகவும் தைரியமாகவும் இருக்குமென்று யோசித்து நண்பனிடம், "அவளுடன் கூட விநோதினியும் சென்றால் என்ன?" என்றான்.

இதைக் கேட்டதும் மஹேந்திரன் கோபத்தால் துள்ளி எழுந்தான். அவன், "விஹாரி, இப்படி உள்ளொன்றும் புறமொன்றும் வைத்துப் பேசுவானேன்?

மனத்தை வெளியிட்டுத்தான் சொல்லிவிடேன். எனக்கு உன் எண்ணம் தெரியும். நான் விநோதினியை நேசிப்பதாக நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். அது சுத்தப் பொய். நான் அவளை ஒருபோதும் நேசிக்கவில்லை. நீ உன்னைப் பாதுகாத்துக்கொள். என்னைக் காக்கும் பொறுப்பு உனக்கு வேண்டியதில்லை. நீ உண்மை மித்திரனாயிருந்தால் உள்ளக் கருத்தை முன்பே வெளியிட்டிருப்பாய். நீதான் இன்னும் ஆசாவை நேசிக்கிறாயென்று நான் உன்னெதிரிலேயே கூசாது சொல்லுகிறேன்" என்று கர்ஜித்தான்.

அடியுண்ட சிங்கம் தன் எதிரியை எதிர்க்கத் தாவுவது போல் நாமும் நம் நண்பன்மேல் பாய்ந்து அவனைத் துவைத்து விடமாட்டோமா வென்று விஹாரி கோபவெறி கொண்டான். ஆனாலும் மறுவிநாடியே சமாளித்துக் கொண்டான். முகம் சிவந்தது; மனோவேகத்தை அடக்கியதன் காரணமாகக் கண்களினின்று நீர் பெருகியது. அவன் மஹேந்திரனைப் பார்த்து, "கடவுள் உன்னை மன்னிக்கட்டும். நான் போகிறேன்" என்று கூறிச் சட்டென்று வெளியே சென்றுவிட்டான்.

பக்கத்து அறையிலேயே ஆசாவும் விநோதினியும் இருந்தனர். அவன் போகும் சமயம் விநோதினி வெளியில் வந்து, "விஹாரிபாபு!" என்று கூப்பிட்டாள்.

தனது உணர்ச்சியை மறைக்க எண்ணிச் சிரிக்க முயன்று கொண்டே, "எதற்கு?" என்றான் விஹாரி.

விநோ: விஹாரி பாபு, நானும் ஆசாவுடன் காசிக்குப் போகிறேன்.

விஹாரி, "இல்லை யில்லை. அது முடியாது. நான் சொல்வது எதையும் நீ கவனிக்க வேண்டாமென்று நான்

உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வீட்டில் எனக்கு ஓர் அதிகாரமும் இல்லை. நான் இவ்வீட்டு விஷயங்களில் தலையிடுவதால் நன்மையொன்றுமில்லை. இதிலிருந்துவிலகி யிருக்க விரும்புகிறேன். நான் போகிறேன். நீ தேவதை. உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அப்படிச் செய்'' என்று கூறிச் சீக்கிரம் அவ்விடத்தை விட்டுச் செல்ல முயன்றான். ஆனால் விநோதினி அவனைத் தடுத்து, ''நான் தேவதையுமல்ல, ஒன்றுமல்ல. நீங்கள் இப்படிப் போவதால் யாருக்கும் நன்மை ஏற்படப் போவதில்லை. பிறகு என் மேல் தோஷம் சொல்லக் கூடாது. நான் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்'' என்றாள்.

விஹாரி வெளியே போய்விட்டான். மஹேந்திரன் தன் அறையிலிருந்தே இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான். விநோதினியின் கண்களினின்று அக் கினிமய வாணம் அவன் மீது பாய்ந்தது. விஹாரி தன்னை நேசிக்கிறான் என்னும் சொல் தன் கணவன் நாவிலிருந்து எழுவதை ஆசாவினால் கேட்கச் சகிக்க முடியவில்லை. வெட் கத்தினால் அவள் தேகம் குன்றியது. தலையெழவில்லை. அவளது நிலையைக்கண்டு விநோதினி சற்றும் மனமிரங்க வில்லை. அச்சமயம் அவள் முகத்தின் பயங்காத் தோற் றத்தை ஆசா தலை நிமிர்ந்து பார்த்திருப்பாளேயாயின் அவள் நிச்சயம் பயந்துபோயிருப்பாள். விநோதினியின் முகம் கொலையாளியின் முகத்தை ஒத்திருந்தது. ''இது பொய். என்னை ஒருவரும் விரும்பவில்லை. இந்த அநுபவ மற்ற மூடச் சிறுமியை யாவரும் விரும்புகின்றனர்'' என்று விநோதினி நினைத்துப் பொருமினாள்.

ஒரு நாள் ஆத்திரத்தில் மஹேநதரன தன நணப னிடம் தான் வஞ்சகன், நீசன் என்று யோசியாது சொல்லி

விட்டதை நினைத்து வருந்தினான். தனது மனோ துர்ப்பலத்தை அவன் அறிந்துகொண்டுவிட்டதாக நினைத்தான். தான் விநோதினியை நேசிக்கவில்லை; அப்படியிருந்தும் நண்பன் தன்னை நம்பவில்லை. இதை நினைக்கவே, விஹாரியிடம் அவனுக்கு அருவருப்பு ஏற்பட்டது. அவனைக் காணும்போதெல்லாம் அவன் தனதுள்ளத்தைப் படம் பிடிக்க முயல்வதுபோல் மஹேந்திரனுக்குத் தோன்றியது. உள்ளூறப் புகைந்து வந்த தீ இன்று பற்றியெரிய ஆரம்பித்துவிட்டது.

பக்கத்து அறையிலிருந்து விநோதினி வெளியே ஓடிவந்து விஹாரியை நிறுத்திக்கொண்டது, அவன் சொற்படியே தானும் காசிக்குப்போவதாகச் சொன்னது, அவள் அவனுக்குக் காட்டிய ஆதரவு இவையாவும் நிகழுமென்று அவன்சொப்பனத்திலும் நினைக்கவில்லை. அக்காட்சி அவன் மனத்தைத் தகர்த்துவிட்டது. தான் விநோதினியை நேசிக்கவில்லை யென்று தானே நண்பனிடம் கூறியபோதிலும் அதை அவளும் கேட்டு விட்டாளென்பது மஹேந்திரனை இன்னும் அதிகமாகக் கலங்கச் செய்தது.

---

## இருபத்துமூன்றாவது அத்தியாயம்

'விநோதினியை நான் நேசிக்கவில்லை யென்று சொன்னது என்னவோ நிஜந்தான். ஆனால் ஒரு ஸ்திரீக்கு அவ்வார்த்தை எவ்வளவு கர்ணகடூரமாய் இருந்திருக்கும்? எந்தப் பெண்மணியால்தான் அதைக் கேட்டுச் சகிக்க முடியும்? அதையே வேறுவிதமாய் மாற்றி அவள் மனம் புண்ணாகாதவாறு சொல்லியிருக்கலாமே? இனி அதை

எடுத்துச் சொல்லி அவளைச் சமாதானப்படுத்தச் சமயம் எப்படி, எங்கே கிடைக்கும்?' என்ற எண்ணங்கள் மஹேந்திரனின் மனத்தில் அலைபோல் எழுந்தன.

பெட்டியில் பத்திரமாய் வைத்திருந்த அம்மூன்று கடிதங்களையும் எடுத்து மறுபடி ஒருமுறை படித்தான். 'சந்தேகமின்றி அவள் என்னை நேசிக்கிறாள். ஆனால் நேற்று அவள் விஹாரியினிடம் அப்படி நடந்துகொள்வானேன்? என்னை அவமானப்படுத்துவதற்காகத்தான் இருக்கவேண்டும். ஆமாம். நான் அவளை விரும்பவில்லையென்று சொன்னால், அவள் மாத்திரம் என்னிடம் அன்பு காட்டுவாளென்று எப்படி எதிர்பார்ப்பது? தவறு என்னுடையதுதான். அவளுடையதல்ல' என்றெல்லாம் தானே சமாதானம் செய்துகொண்டான். தண்ணீரில் மூழ்கப்போகும் ஒருவன் ஒரு சிறு துரும்பும் தன்னைக் காப்பாற்ற உதவுமென்று நம்பி அதைப் பற்றிக்கொள்வதுபோல் தனது ஹிருதயத்தினின்றும் அகலவிருக்கும் ஆசாவை மறுபடி அங்கேயே நிலை நிறுத்திக்கொள்ள மஹேந்திரன் மிகவும் முயன்றான்.

அன்று இரவு தன்மடிமீது தலைவைத்துப் படுத்திருந்த ஆசாவிடம் அவன், "ஆசா, நிஜமாகச் சொல். என்மேல் உனக்குப் பூரண அன்பு இருக்கிறதா?" என்றான். பதியின் கேள்வி அவளைத் திடுக்கிடச்செய்தது. காலையில் விஹாரியினிடம் அவன் கூறிய விஷயங்கள் நினைவிற்கு வரவே அவள் லஜ்ஜையடைந்தாள். அதனால் தான் தன் புருஷன் இப்படிக் கேட்பதாக நினைத்து, "என்மேலுங்கூடச் சந்தேகமா?" என்றாள்.

ஆனால் அன்பிற்கு அத்தாட்சியாக அவள் வாயிலிருந்தே வார்த்தைகள் வரவழைக்க வேண்டுமென்று விரும்பி

மஹேந்திரன் மேலும், "பின் நீ ஏன் காசிக்குச் செல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

ஆசா உடனே, "நான் காசிக்குப் போகப் போகவில்லை; எங்கும் போகப் போவதில்லை" என்றாள்.

மஹேந்: அப்பொழுது என்னிடம் காசிக்குப் போக விரும்புவதாகச் சொன்னாயே?

ஆசா மிக வருத்தத்துடன் கெஞ்சும் பாவனையில், "நான் எதற்காகப் போக விரும்பினேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றாள்.

மஹேந்: என்னுடன் இருப்பதைக் காட்டிலும் காசியில் சந்தோஷமும் சுகமும் அதிகம்போலும்!

ஆசா: ஒருகாலுமில்லை. சுகம் சந்தோஷம் இவற்றை உத்தேசித்து நான் அங்கே போக விரும்பவில்லை.

மஹேந்: என்னைத் தவிர நீ வேறு யாரை மணந்து கொண்டிருந்தாலும் இதைவிட அதிக ஸந்தோஷமும் சுகமும் அடைந்திருப்பாயென்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

பதிவிரதையான ஆசாவினால் இச்சொல்லைக் கேட்டுச் சகிக்கமுடியவில்லை. கணவன் மடியிலிருந்து எழுந்திருந்து தலையணையில் முகத்தைவைத்துக் குப்புறப் படுத்துக்கொண்டு விக்கிவிக்கி அழலானாள். மஹேந்திரன் அவளைச் சாந்தப்படுத்தித் தனது மடியில் மறுபடி படுக்க வைத்துக்கொள்ள எவ்வளவோ முயன்றும் அவள் தலையணையை விட்டு எழுந்திருக்கவில்லை. மனைவியின் பரிசுத்தமான காதலை அறிந்துகொண்ட மஹேந்திரனின் உள்ளம், இன்பம் கர்வம் இவற்றால் பூரித்தது. அவள் மனத்தைப் புண்படுத்தியதற்காகத் தன்னையே நொந்துகொண்டான்.

அவன் தன் மனத்திலிருந்த சந்தேகத்தை வெளிப் படையாய்ச் சொல்லி ஏககாலத்தில் எல்லோர் உள்ளத்தி லும் ஒரு பிரளயத்தை உண்டாக்கிவிட்டான். விநோதினி யும் பலவாறு எண்ணமிட்டாள். 'மஹேந்திரன் ஆசாவைத் தன் நண்பன் நேசிப்பதாக அவன்மேல் குற்றம் சாட்டினு னென்று தெரிகிறது. அப்படி அது பொய்யானல் ஏன் விஹாரி பாபு மறுத்துக் கூறக் கூடாது? வேண்டும் அவ ருக்கு நன்ருக, இந்தச் சாட்டையடி! மஹேந்திரன் சரியா கத்தான் சொன்னுன்!—ஆனல் விஹாரி பாபு பரஸ்திரீ யைக் காதலிக்கும்படியான நீச சுபாவமுடையவரும் அன்று. போகட்டும்; இனி அவர் இங்கே நெருங்கமாட் டார். ஒரு கவலை விட்டது' என்ற முரண்பட்ட எண்ணங் கள் பல விநோதினியின் மனத்தைப் பாதித்தன.

ஆனல் துக்கத்தினுல் வாடிய விஹாரியின் முகததை அவளால் மறக்கவே முடியவில்லை. இரவும் பகலும் எந்த வேலையிலிருந்த போதிலும் அம்முகம் அவள் மனக்கண்ணை விட்டு அகலவேயில்லை. தாய் தனது நோயுற்ற குழந் தையை இடுப்பிலேயே வைத்துக்கொண்டு சகல வேலை களையும் செய்வதுபோல், விநோதினியும் விஹாரியின் துக்கம் குடிகொண்ட உருவத்தைத் தனது உள்ளத்தில் இருத்தித் தனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந் தாள். அத்துக்கத்தைப் போக்கி அம்முகத்தில் மறுபடி சந்தோஷமும் ஆனந்தமும் தாண்டவமாடத் தான் காண வேண்டுமென்று அவளது உள்ளம் துடித்தது.

இரண்டு மூன்று நாட்கள் பொறுத்தாள். பின்னும் மனோவேதனை அதிகரித்தது. இனிமேலும் அவளால் சகிக்கமுடியவில்லை. விஹாரியைச் சாந்தப்படுத்திப் பின்

வருமாறு ஒரு கடிதம் எழுதி ஆளிடம் கொடுத்து அவன் வீட்டிற்கு அனுப்பினாள் :—

"விஹாரி பாபு,

அன்று துக்கத்தால் பீடிக்கப்பட்ட தங்கள் வாடிய முகத்தைக் காண எனக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. அன்றையிலிருந்து தங்கள் மனம் சாந்தியடையட்டும், முன்போலாகட்டும் என்று நான் சதா பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். புன்சிரிப்புடன் கூடிய அம்முகத்தையும் அவ்வினிய சொற்களையும் என்று பார்ப்பேன்? என்று கேட்பேன்? க்ஷேம சமாசாரத்தைப் பற்றி இரண்டுவரி தயை செய்து எழுதியனுப்பப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் தாழ்மையுள்ள
விநோதினி"

மஹேந்திரனின் வாயினின்றும் அப்படிப்பட்ட சொற்கள் வருமென்று விஹாரி கனவிலும் நினைத்திருக்கவில்லை. 'ஆசாவை நாம் இன்னமும் நேசிக்கிறோமா?' என்னும் எண்ணமே அவனுக்கு இதுவரை எழுந்ததில்லை. ஆனால் இப்பொழுது நண்பனின் குற்றச்சாட்டு முழுவதும் பொய்யல்லவென்று அவனுக்குத் தோன்றியது. முதல்முதல் மஹேந்திரனுடன் தான் ஆசாவைப் பார்க்கச் சென்றதும், நாணத்தால் தலை குனிந்து நின்ற அவ்வழகிய சிறுமி தனக்குரியவளாகப் போகிறாளென்று நினைத்துத் தான் இன்பசாகரத்தில் மூழ்கியதும், பிறகு திடீரென்று அவள் தன்னிடமிருந்து அபகரிக்கப்பட்டதும், அதனால் தானடைந்த அபாரக் கிலேசமும் சோகமும் ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்கு வந்தன. மனத்தில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்தது போன்று இருந்தது. சொல்லமுடியாத வேதனை உள்ளத்தைக் கடைந்தது. மனத்தில் மறைந்து கிடந்த

ஓர் உருவம் மஹேந்திரனால் வெளிப்படுத்தப்பட்டு, இன்று ஸ்பஷ்டமாய் விஹாரியின் கண்முன் தோன்றியது. அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சி பொங்கி யெழுந்தது. தன்மேல் நண்பன் சாட்டிய குற்றம் மிகவும் சரியானது என்று அவனுக்குத் தோன்றியது. அவனிடம்போய் மன்னிப்புப் பெற்று, பிறகு அவ்வீட்டுக்குப் போகும் வழக்கத்தையே விட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்தான். 'தப்பு என்னிடமிருக்க நான் அவன்மேல் கோபித்துக் கொண்டு வந்தது சரியல்ல' என்று சொல்லிக்கொண்டான்.

இதற்குள்ளாக ஆசா காசிக்குப் புறப்பட்டுப் போயிருக்கக் கூடுமென்று நினைத்து விஹாரி ஒருநாள் சாயங்காலம் மஹேந்திரனின் வீட்டை அடைந்தான். ராஜலக்ஷ்மியைப் பார்க்க வந்திருந்த தூரபந்துவான ஒருவர் வாசல் திண்ணையில் உட்கார்ந்து தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தார். அவரிடம் விஹாரி, "வீட்டில்யாவரும் க்ஷேமமா? ஆசா காசிக்குச் சென்றுவிட்டாளா?" என்றுவிசாரித்தான்.

அவர், "எல்லாரும் க்ஷேமம். ஆனால் ஆசா காசிக்குப் போகவில்லை; போகப் போவதுமில்லையாம்" என்றதும் விஹாரியின் மனம், துஷ்டக்குதிரை எவ்வளவுதான் லகானைப் பிடித்திழுத்தபோதிலும் தனது லாயத்திற்கே திரும்பிச் செல்ல விரும்புவதுபோல், அவனை வீட்டினுள் செல்லத் தூண்டியது. ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு ஆசாவை இனிப்பார்ப்பது, வீட்டுப் பிள்ளையைப்போல் தாராளமாய் ராஜலக்ஷ்மியுடன் பேசுவது, வேடிக்கையாக ஆசாவுடன் சம்பாஷிப்பது? இவை இனித் துர்லபமென்று அவனுக்குத் தோன்றிய போதிலும், எது துர்லபமோ அதை அடையவே மனம் நாடியது.

அதற்குள், "அப்பா, ஏன் இருட்டில் நிற்கிறாய்? உள்ளே போ" என்றார் திண்ணையில் உட்கார்ந்திருந்தவர்.

விஹாரி உள்ளே நுழைந்தான். ஆனால் உடனே வெளியே வந்து வாசலில் இருப்பவரிடம், "ஓர் அவசிய மான வேலையிருக்கிறது. இப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது. நான் போகிறேன்" என்று கூறி வேகமாய்ச் சென்றுவிட்டான். அதே இரவு அவன் பிரயாகைக்குப் புறப்பட்டுச் சென்றான்.

வேலைக்காரன் விநோதினி கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டு விஹாரியின் வீடு சென்று பார்த்து அவனை அங்கே காணாது திரும்பி வந்துவிட்டான். தோட் டத்தில் உலாவிக் கொண்டிருந்த மஹேந்திரன் வேலைக்கா ரன் கையில் கடிதம் கொண்டு வருவதைப் பார்த்ததும், "யாருடையது?" என்று கேட்டான். வேலைக்காரன் யாவற் றையும் தெரிவித்தான். அவனிடமிருந்த கடிதத்தை மஹேந்திரன் வாங்கிக்கொண்டான்.

முதலில், கடிதத்தைத் தானே கொண்டுபோய் விநோ தினியின் கையில் கொடுத்துவிட்டு வேறொன்றும்பேசாமல், வெட்கத்தினால் -களங்கத்தினால்-அவள் முகம் அடையும் மாறுதலைக் கண்டு சந்தோஷிக்க வேண்டுமென்று நினைத் தான். பிறகு, 'அவள் எனது பார்வையில் இருக்கிறாள். அவளுடைய நன்மை தீமைக்கு நான்தான் பொறுப்பாளி. முன்பும் இப்படித்தான் விஹாரிக்குக் கடிதம் எழுதினாள்; இப்பொழுதும் ஏதோ விஷயமில்லாது கடிதம் எழுதி யிருக்க மாட்டாள். அவள் கெட்ட வழியில் திரும்பாது பார்த்துக் கொள்ள வேண்டியது எனது கடமை. அப்படி யிருக்க இக்கடிதத்தைப் பிரித்துத்தான் பார்ப்போமே' என்று எண்ணியவனாய்க் கடிதத்தைப் பிரித்தான்.

கடிதம் சிறியதாய் மிகவும் சகஜமாயதாகவே எழுதப் பட்டிருந்தது. ஆனால் அன்பும் ஆதரவும் ஒவ்வொரு வார்த்தையிலும் பதிந்திருந்தன. கடிதத்தைப் பன்முறை படித்தான். விநோதினியின் உண்மையான உள்ளக் கருத்தை அவனால் சரியாய் அறியமுடியவில்லை. 'நான் அவளை நேசிக்கவில்லை யென்று சொல்லி அவளை அநியாயமாய் அநாதரவு செய்தேன். அந்த விசனத்தாலும் கோபத்தாலும் அவள் என்னை வெறுத்துத் தன் மனத்தை வேறு பக்கம் திருப்ப முயன்று கொண்டிருக்கிறாள்' என்று நினைத்தான் மகேந்திரன்.

என்ன முயன்றும் அவனால் தன் மனத்தைத் திடப் படுத்திக்கொள்ள முடியவில்லை. தன்னை நாடிவந்த பெண்ணைத் தான் காலால் உதைத்துத் தள்ளிய மூர்க்கத்தனத்தை நினைத்து மனம் நொந்தான்.

'விநோதினி என்னை நேசித்தாளானால் அதனால அவளுக்கும் நன்மையே. ஏனெனில் ஆசாவை மனமாரக் காதலிக்கும் நான் விநோதினியிடம் முறை தவறி நடந்து கொள்ளமாட்டேன். என் மனம் என் வசத்தில் இருக்கிறது. அப்படியின்றிப் பிறரொருவரால் அவள் உள்ளம் கவரப்படுமாயின் ஸர்வநாசந்தான் ஏற்படும்' என்று எண்ணினான். தன் திடசித்தத்தில் மிக நம்பிக்கை கொண்டு அவளைத் தன்பால் வசீகரித்துக்கொள்ள நிச்சயித்தான்.

வாயிற்படியண்டையே அவள் யாருடையவரவையோ எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தாள். பொறாமையும் துவேஷமும் மகேந்திரனின் மனத்தைத் தகித்தன. "வீணில் ஏன் காத்திருக்கிறாய்? அவன் வரப்போவதில்லை.

இதோ உனது கடிதமும் திரும்பி வந்துவிட்டது!" என்று கடிதத்தைக் கொடுத்தான்.

விநோ: இதைத் திறந்தது யார்?

மஹேந்திரன் பதிலொன்றும் பேசாது போய்விட்டான். விஹாரி கடிதத்தைப் பார்த்துவிட்டுத்தான் பதிலொன்றும் கொடாது திருப்பியனுப்பிவிட்டதாக விநோதினி நினைத்தாள். மனமெரிந்தாள். கடிதத்தைக் கொண்டு போன வேலைக்காரனைக் கூப்பிட்டாள். அவன் வேறு வேலையாய் வெளியேபோயிருந்தான்; வீட்டில் இல்லை. இது வேறு எரியும் கொள்ளியை ஏறத் தள்ளியதுபோல் ஆயிற்று. தனது அறையில் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டாள். அக்கடிதத்தைத் துண்டுதுண்டாய்க் கிழித்தெறிந்தாள். ஆனாலும் மனம் சாந்தியடையவில்லை. தேனீ, கோபங்கொண்டிருக்கும்போது யார் தன்னெதிரில் வந்தாலும் கொட்டிவிடுகிறது. அதேபோல் அவளுடைய கோபம் மஹேந்திரன் மீது திரும்பிற்று. தனது கோபாக்கினியால் அவனுடைய சுகம் சாந்தி யாவற்றையும் அடியோடு சுட்டு அழித்து விடுவதென்று தீர்மானித்தாள். 'நான் எதைச் செய்ய நினைத்தாலும் அது நிறைவேறுவதில்லை. வெற்றி பெறுவதுமில்லை. நான் மட்டும் எதிலும் சுகம் அடையாதிருக்க என் வாழ்வையே கெடுத்த இவன் மாத்திரம் சுகமடைவானேன்? இவனுடையவாழ்வையும் கெடுத்து இனி என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதுதான் எனது முக்கிய நோக்கம்; எனது கடமை' என்று அவள் சங்கல்பம் செய்துகொண்டாள்.

# இருபத்துநான்காம் அத்தியாயம்

**சா**யங்கால வேளை. காற்று ஜில்லென வீசி மனத்தைப் பரவசப் படுத்தியது. ஆசா மாடித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து மாதப் பத்திரிகை யொன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். அதிலுள்ள சிறுகதை ஒன்று அவள் மனத்தைக் கவர்ந்தது. அதில் கதாநாயகன் வெகுநாட்கள் கழித்து ரஜா பெற்றுத் தூர தேசத்திலிருந்து தன் வீடு திரும்புகிறுன். வழியில் கள்வர் வழிமறித்து அவனைப் பிடித்துக்கொள்ளுகிறுர்கள். இந்த இடத்தில் ஆசாவின் தேகம் பதறியது. கதாநாயகி அதே சமயத்தில் நித்திரையில் கெட்ட கனவொன்று கண்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டு கனவின் பலனை நினைத்து அழுகிறுள். இந்தக் கட்டத்தில் ஆசா தானும் அழலானுள். ஆசாவுக்குக் கதையெல்லாம் உண்மையாகவே தோற்றும். கதாபாத்திரங்களின் சுகதுக்கங்களைத் தானும் பகிர்ந்துகொள்வாள். அவள் அடிக்கடி தான் படித்தவற்றை விநோதினியிடம் கொடுத்து, "இந்தக் கதையை நீயும் படி. எவ்வளவு நன்ருயிருக்கிறது பார்! இதைப் படிக்கும்போது என்னுல் அழாமல் இருக்க முடியவில்லை" என்பாள். ஆனுல் விநோதினி ஆசாவைப் போன்றவளல்ல. நன்மை தீமை தெரிந்த உலக அநுபவம்படைத்த ஸ்திரீ. அவள் கதையிலுள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுவாள். அதைக் கேட்டதும் ஆசாவின் உற்சாகம் உணர்ச்சி யாவும் சிதறிவிடும்.

இன்று இக்கதையைத் தன் கணவனிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லவேண்டுமென்று ஆசா எண்ணிக்கொண்டிருக்கையிலேயே அவனும் வந்து சேர்ந்தான். அவள் பதியைக் கண்டதும் ஆவலுடன் எழுந்தாள். அவன் தனது மனோவேதனையை மறைக்கவெண்ணிச் சிரிக்க முயன்று கொண்டே, "தனியாய் இங்கே உட்கார்ந்து எந்தப் பாக்கியவானைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறாய்?" என்றான்.

ஆசாவுக்குக் கதாநாயகன் நாயகியின் நினைவுமுற்றிலும் மறந்துபோயிற்று. அவள், "உங்களுக்கு உடம்பு சுகமில்லையா என்ன?" என்று கவலையுடன் வினவினாள்.

மஹேந்: உடம்பு ஒன்றுமில்லை.

ஆசா: ஏதோ உள்ளூறக் கவலையால் பீடிக்கப்படுவது நன்றாகத் தெரிகிறது. விஷயமென்ன?

அங்கே தட்டிலிருந்த வெற்றிலையை எடுத்துப் போட்டு மென்றுகொண்டே மஹேந்திரன், "பாவம்! பெரியம்மா உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாயிற்று? திடீரென்று ஒருநாள் நீ அவள் முன் போய் நின்றால் அவள் எவ்வளவு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைவாளென்று தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

ஆசா பதிலொன்றும் சொல்லாது கணவனையே உற்று நோக்கினாள். இன்று மறுபடியும் இவ்வெண்ணம் எழக் காரணமென்னவென்று அவளுக்குப் புரியவில்லை.

பதிலொன்றும்சொல்லாமல் அவள் தன்னையே கூர்ந்து நோக்கியதைக் கண்ட மஹேந்திரன், "ஏன், போக இஷ்டமில்லையா?" என்று கேட்டான்.

ஆசா அதற்கு என்ன பதிலளிப்பதென்று தெரியாது தயங்கினுள். அன்னபூரணியைப் பார்க்கவும் இச்சை; கணவனை விட்டுப் பிரியவும் இஷ்டமில்லை. அவளுக்கு உபய சங்கடமாயிருந்தது. சற்று யோசித்துப் பிறகு, "காலேஜ் லீவு விட்டதும் உங்களுக்கு ஒழிவு இருக்கும். உங்களுடன் கூடவே நானும் காசிக்கு வருகிறேன்" என்றுள்.

மஹேந்: அப்பொழுதும் என்றல் வரமுடியாது. பரீக்ஷை சமீபித்து விடுகிறது. லீவில் வீட்டிலேயே இருந்து நன்றாய்ப் படிக்கவேண்டும்.

ஆசா: அப்படியானுல் இப்பொழுது வேண்டாம். பிறகு பார்த்துக்கொள்ளுவோமே.

மஹேந்: பிறகு என்ன? போக விருப்பமுண்டானுல் இப்பொழுதே ஏன் போகக்கூடாது?

ஆசா: எனக்குப்போகக் கொஞ்சமும் விருப்பமில்லை.

மஹேந்: அன்று இஷ்டமிருந்தது. இன்று ஒரேயடியாய் இஷ்டமில்லையா? என்ன ஆச்சரியம்!

மறுபடியும் ஆசா மௌனம் சாதித்தாள். அவளால் பதில் சொல்ல முடியவில்லை. மஹேந்திரன் அவளை எப்படியாவது அனுப்பிவிட்டு விநோதினியுடன் மறுபடியும் சிநேகம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தான். ஆசாவின் மௌனம் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அகாரணமாய் அவளைச் சினந்துகொண்டு, "ஏன்? என்மேல் ஏதாகிலும் சந்தேகமோ? எனக்குக் காவலாக இங்கேயே இருக்க விரும்புகிருயோ?" என்றுன்.

ஆசாவின் ஸங்கோசம், தாழ்மை இவை யாவும் இச்சமயம் மஹேந்திரனுக்கு உசிதமின்றிக் காணப்பட்டன. "சித்தியைக் காண இச்சையிருந்தால் போகிறேன் அல்

லது இல்லையென்று சொன்னாலென்ன? ஒருமுறை சரி, ஒருமுறை இல்லை, இன்னொரு முறை பதிலேயில்லை! இது என்ன சஞ்சலபுத்தி?'' என்று மனைவியை உள்ளூறக்கடிந்து கொண்டான்.

திடீரென்று அவன் கோபங் கொண்டதைக் கண்டு ஆசா திகைப்பும் பயமும் அடைந்தாள். அவளுக்கு ஒரு பதிலும் சொல்லத் தோன்றவில்லை. அபாரப் பிரியமும் அபார கோபமும் மாறி மாறி அவன் அடையக் காரணம் ஒன்றும் அவளுக்குப் புலனாகவில்லை. கணவனைச் சந்தேகிப்பது என்னும் சொல் கர்ண கடூரமாயிருந்தது. இது என்ன வேடிக்கையா, வினையா? இதற்கு உசிதமான பதில் என்னவென்று அப்பேதையால் அறியமுடியவில்லை.

ஆசாவின் மௌனத்தை மஹேந்திரனால் பொறுக்க முடியவில்லை. அவன் சரேலென்று வெளியே சென்றுவிட்டான். ஆசாவின் கதாநாயகன் நாயகியெல்லாம் ஒருநொடியில் அவள் மனத்திலிருந்து அந்தர்த்தானமாயினர். சூரியன் மேற்கில் மறைந்தான். உல்லாசமான குளிர்ந்த காற்று வீசியது. ஆனால் ஆசா அங்கேயே வெகுநேரம்வரை விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள்.

இரவு வெகுநேரமாயிற்று. அறையில் போய்ப் பார்த்தால் மஹேந்திரன் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். 'என்மேல் தன் உயிரையே வைத்து வளர்த்த சித்தியிடங்கூட நான் இவ்வளவு பராமுகமாக இருப்பது என் புருஷருக்குப் பிடிக்கவில்லை. அவர் செய்தது சரியே. என் மேல்தான் தவறு. கல்நெஞ்சுடையவர்களைக் கண்டால் யாருக்குத் தான் பிடிக்கும்?' என்று ஆசா தன்னையே நொந்துகொண்டு தன் புருஷனிடம் மன்னிப்பைப் பெற

வேண்டி அவன் இரு பாதங்களையும் இறுகப் பிடித்துக் கொண்டு தன் கண்ணீரால் அவற்றைப் புனிதமாக்கினாள்.

மஹேந்திரன் திடுக்கிட்டான். அவன் மனம் கரைந்தது. வாரி எடுத்து அவளை முத்தமிட முயன்றான். ஆனால் அவன் முதலில் தன்னை மன்னித்து விட்டதாகச் சொன்னாலொழிய அவள் காலை விடுவதாயில்லை.

மஹேந்: ஆசா! நான் உன்னை மன்னிப்பதற்கு நீ என்ன குற்றம் செய்தாய்? கண்ணே, நான் மஹா பாவி; நீசன். காரணமின்றி உன்னைத் துன்புறுத்துகிறேன்.

தன் காலை விடுவித்துக்கொண்டு அவளைத் தன் மடியில் படுக்கவைத்துக்கொண்டான். மனம் சற்றுச் சாந்தமடைந்ததும் ஆசா, "என் சித்தியைக் காண எனக்கு ஆசையில்லையா? ஆனால் உங்களை விட்டுப் பிரிவதுதான் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. தயை செய்து இதற்காக என்னைக் கோபிக்கவேண்டாம்" என்றாள். மஹேந்திரன் அவளுடைய கண்களைத் துடைத்துக்கொண்டே, "ஆசா, கணவனை விட்டுப் பிரிய மனமில்லை யென்பதற்காக எந்த மூடனாவது கோபித்துக்கொள்வானா? நீ எங்கும் போக வேண்டாம்" என்றான்.

ஆசா: இல்லை. நான் காசிக்குப் போகத்தான் வேண்டும்.

மஹேந்: ஏன்?

ஆசா: உங்கள் மேல் சந்தேகப்படுவதாக நீங்கள் நினைத்திருப்பதைப் பொய்யாக்குவதற்காகவாவது நான் காசிக்குச் சில தினங்களேனும் போய்விட்டு வரவேண்டும்.

மஹேந்: நான் எவ்வளவு அதமன், நீசனென்பதை நீ அறியமாட்டாய்.

ஆசா: மறுபடி இதே பேச்சு! என்றால் இதைக் கேட்கச் சகிக்கவில்லை. இம்மாதிரி இனி என்னெதிரில் சொல்ல வேண்டாமென்று நான் உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மஹேந்திரன் பதிலே சொல்லவில்லை. மறுபடியும் ஆசா, "நான் காசிக்குப் போய் வருகிறேன்" என்றாள்.

மஹேந்திரன் சிரித்துக்கொண்டே, "சரி போகலாம். ஆனால் நீயின்றி நான் சீர்கெட்டால் என்ன செய்வாய்?" என்றான்.

ஆசா: ஏன் பயமுறுத்துகிறீர்கள்? அந்தச் சிந்தையே எனக்கு இல்லை.

மஹேந்: ஆசா, அப்படிச் சிந்திப்பது நலம். என் நடத்தை சீர்கெட்டால் பிறகு குற்றம் யாருடையது?

ஆசா: உங்களை நான் என்றும் குற்றம் கூறமாட்டேன். இதற்காக நீங்கள் கவலை கொள்ள வேண்டாம்.

மஹேந்: அப்படியானால் குற்றம் என்னைவிட்டுப் போகும் உன்னுடையது என்று ஒப்புக்கொள்ளுவாயா?

ஆசா: ஒரு முறையில்லை; நூறுமுறை ஒப்புக்கொள்வேன்.

மஹேந்: நல்லது நாளைக்கு, நான் உன் பெரியப்பாவைக் கண்டு பேசி இதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

பாதித் தூக்கத்தில் மஹேந்திரன் திடீரென்று விழித்துக்கொண்டு ஆசாவை நோக்கி, "ஆசா, நீ காசிக்குச் செல்லவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டான்.

ஆசா மிகவருத்தத்துடன், "இப்பொழுது ஏன் தடுக்கிறீர்கள்? உங்கள் சொல் என் உள்ளத்தை உறுத்து

கிறது. அதற்காகவே ஐந்தாறு தினங்களேனும் காசிக்குச் சென்று இருக்க விரும்புகிறேன். நான் அங்கே அதிக தினங்கள் தங்கப்போவதில்லை. தடை சொல்லாமல் அனுப்புங்கள்" என்றாள்.

அவன் "சரி" என்று சொல்லி மறுபடி தூங்கிவிட்டான்.

காசிக்குச் செல்வதற்கு முதல்நாள் ஆசா விநோதினியின் தோள்மீது கை போட்டுக்கொண்டு, "மாயா விநோதினி, சத்தியமாகச் சொல்: நான் ஒன்று கேட்கிறேன். அதை நிறைவேற்றுவாயா மாட்டாயா?" என்றாள்.

விநோதினி ஆசாவின்மோவாயைப் பிடித்துக்கொண்டு பிரியமாய், "ஏண்டீ, எப்பொழுதாவது நான் உன் பேச்சைத் தட்டியிருக்கிறேனா?" என்றாள்.

ஆசா: என்னவோ அம்மா, நீ இப்பொழுதெல்லாம் ஏதோ ஒருமாதிரி இருக்கிறாய். என் கணவரெதிரிலோ வருவதே கிடையாது.

விநோ: நான் ஏன் வருவதில்லையென்று உனக்குத் தெரியாதா? அன்று விஹாரிபாபுவிடம் அவர் சொன்னதை நீயுந்தான் கேட்டாயே? அம்மாதிரி அவச்சொல் கேட்ட பிறகுகூட அவர்எதிரில் போவதும் பேசுவதும் உசிதமா? நீயே சொல்.

இது ஆசாவுக்கும் தெரியும். இம்மாதிரி சொல்லால் ஒருகுலஸ்திரீயின் மனம் எவ்வாறு புண்படுமென்பதையும் அவள் அறியாமலில்லை. ஆனாலும் விநோதினியைச் சாந்தப்படுத்துவதற்காக, "சகோதரி, எவ்வளவோ இருக்கும். ஆனால் இதையெல்லாம் லக்ஷியம் செய்யலாமா? நட்பின் முன் இது பெரிதா? நீ

இவற்றை மறந்துவிடவேண்டும்” என்று வேண்டிக்கொண்டாள்.

விநோ: ஆகட்டும்; அப்படியே செய்கிறேன்.

ஆசா: சகோதரி, நான் நாளையதினம் காசிக்குச் செல்லுகிறேன். நான் இல்லாதிருக்கும் சமயம் என் புருஷருக்கு ஒரு தொந்தரவும் நேராமல் ஸகலபணிவிடைகளையும் நீயே கவனித்துச் செய்யவேண்டுமென்று உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி நீ தூர ஓடிக்கொண்டிருந்தாயானால் காரியம் நடவாது. அவரை நீ சந்தோஷமாய் வைத்திருக்கவேண்டும்.

விநோதினி பதிலொன்றும் பேசவில்லை. ஆசா அவள் கையைப் பிடித்துக்கொண்டு, “மாயா விநோதினி, என் மீது ஆணை! நீ இதைச் செய்யத்தான் வேண்டும்” என்றாள்.

விநோதினி “ஆகட்டும்” என்றாள்.

---

# இருபத்தைந்தாம் அத்தியாயம்

ஆசா காசிக்குச் சென்றாள். ஆனால் மஹேந்திரனின் மனோரதமென்னவோ நிறைவேறியபாடில்லை. விநோதினியின் தரிசனம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவள் கண்களில் படமாட்டாளாவென்று எதிர்பார்த்து உள்ளுக்கும் வெளிக்கும் நூறுமுறைபோவது, காரணமின்றித் தன் தாயின் அறைக்குள் அடிக்கடி போய் வருவது, இப்படியெல்லாம் செய்தும் அவனைக் கண்டதுமே விநோதினி அவ்விடத்தை விட்டு நழுவிவிடுவாள்.

அவனுடைய வாடிய சஞ்சலமடைந்த முகத்தைப் பார்த்து ராஜலக்ஷ்மி வருந்தினாள். மனைவியின் பிரிவுதான்

இதற்குக் காரணமென்று நினைத்தாள். விவாகத்திற்குப் பிறகு பிள்ளை தன்னை லக்ஷியம் செய்யாமல் இருந்ததையும், இரண்டு நாள் மனைவியைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு இவ்வளவு துக்கப்படுவதையும் காண அவள் மனம் பொருமியது. ஆனால் இவ்வெண்ணம் மறுக்ஷணமே மறைந்தது. அவனுடைய கவலைகொண்ட முகம் புத்திரவாஞ்சையை எழுப்பியது. அவள் தனது குறையை மறந்தாள். விநோதினியைக் கூப்பிட்டு, "விநோதினி, எனக்கோ தள்ளாமை அதிகரித்து வருகிறது. வியாதியும் தீருவதாயில்லை. மாடிப்படி ஏறி இறங்குவதற்குள் பெருமூச்சு வாங்குகிறது. மஹேந்திரனைக் கவனித்துக்கொள்ள வீட்டில் யாரும் இல்லை. சிறு வயதிலிருந்தே அவனது ஒவ்வொரு வேலையையும் பிறர் செய்தே வழக்கமாகிவிட்டது. இப்பொழுது நீதான் அவனுக்கு வேண்டிய சுசுருஷைகளைச் செய்ய வேண்டும். அவன் எப்படி இளைத்துத் துரும்பாகி விட்டான், பார். அந்த மஹாராஜி நாட்டுப் பெண்ணுக்கு அவனை விட்டுப் போக எப்படித்தான் மனம் வந்ததோ?" என்று சொன்னாள்.

இதைக் கேட்டதும் விநோதினி முகத்தைச்சுளித்துக் கொண்டாள். பதில் சொல்லாமல் படுக்கையைத் தட்டிப் போட்டுக்கொண்டிருந்தாள். "ஏன், என்ன யோசிக்கிறாய்? ஒன்றும் யோசனை வேண்டாம். யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ என்ன அன்னியமா?" என்றாள் ராஜலக்ஷ்மி.

விநோ: இது என்னால் முடியாது.

ராஜலக்ஷ்மி முகத்தைக் கடுத்துக்கொண்டு, "சரி, போகட்டும்; முடிந்தவரை நானே செய்கிறேன்" என்று

சொல்லி எழுந்திருக்க முயன்றாள். உடனே விநோதினி பரிதாபத்துடன், "வேண்டாம். நீங்கள் எழுந்திருந்தால் விழுந்துவிடுவீர்கள். உங்கள் தேகநிலை நன்றாயில்லை. இதோ நானே போகிறேன். நீங்கள் இட்ட கட்டளைப்படி நடக்கிறேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று வணங்கி நின்றாள்.

ராஜலக்ஷ்மிக்கு உலக அநுபவம் இல்லை. அதுவும் விதவையான பிறகு வெளி உலகத்தின் தொடர்பே அற்றுப் போயிற்று அவளுக்கு. தன் ஒரே பிள்ளையான மஹேந்திரன்தான் அவளுக்கு ஸர்வமும். அவனுக்குச் சுசுருஷை செய்தால் தன்னை ஊரார் நிந்திப்பரென்று விநோதினி நினைப்பது கூடத் தவறென்று ராஜலக்ஷ்மிக்குத் தோன்றியது. 'மஹேந்திரனின் குணம் எனக்குத் தெரியாதா? அவனைப் போன்ற நன்னடத்தையுள்ளவர்கள் உண்டா, உலகில்?' என்பது ராஜலக்ஷ்மியின் அபிப்பிராயம். அப்படியிருக்க அவன் பேரில் குற்றங் கூற யாரேனும் துணிவராகில் அவர் நாவறுந்து விழாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்! தனக்குப் பிடித்த ஒருவரை உலகமெல்லாம் பழித்தாலும் அதை ஏற்காத பிடிவாதம் ராஜலக்ஷ்மிக்கு உண்டு.

அன்று காலேஜிலிருந்து திரும்பிய மஹேந்திரன் தன் அறைக்குச் சென்றதும் பிரமித்து நின்றான். எல்லாம் புது மாதிரியாக இருந்தன! ஒரு தூசு கிடையாது. கதவு ஜன்னலுக்கெல்லாம் புதிய திரைகள் தொங்க விடப்பட்டிருந்தன. பூக்கிண்ணங்களில் அன்றலர்ந்த நறுமணரோஜா மலர்கள் ஜோடித்து வைக்கப்பட்டிருந்தன. அழுக்கடைந்த படுக்கை விரிப்புகளுக்குப் பதில் வெண்மையான படுக்கை

விரிப்புகளும் பட்டில் பூவேலை செய்யப்பட்ட மென்மையான தலையணை உறைகளும் கண்களைக் கவர்ந்தன. அத் தலையணை உறைகளை விநோதினி தைக்கும்போது ஆசா அவளை, "இவ்வளவு கஷ்டப்பட்டு இதை யாருக்காகத் தைக்கிறாய்?" என்று கேட்டதற்கு விநோதினி சிரித்துக் கொண்டே, "எனது பாடையை அலங்கரிப்பதற்காகத் தான்! சாவைவிட உற்ற நண்பன் வேறு யார் எனக்கு?" என்று சொல்லியிருந்தாள். சுவரில் தூசுபடிந்து மாட்டப் பட்டிருந்த மஹேந்திரனின் போட்டோ சுற்றிலும் ஜிகினாவினால் மிக அழகாய் வேலை செய்யப்பட்டுத் தகதகவெனப் பிரகாசித்தது. யாரோ பக்தியுடன் அதைப் பூஜித்துப் போயிருப்பதுபோல் தோன்றியது. அறை நடுவில் ஒரு திரை கட்டப்பட்டு இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பிரிவு படுக்கும் அறையாகவும் மற்றொரு பிரிவு படிக்கும் அறையாகவும் செய்யப்பட்டுக் கட்டில், மேஜை, நாற்காலி யாவும் சரியான இடத்தில் போடப்பட்டிருந்தன. முன்பு இருந்த அறைக்கும் இப்பொழுது இருப்பதற்கும் அடையாளமே தெரியாதவாறு மாறுபட்டு விளங்கியது. அவ்வறையை அலங்கரித்த கையின் திறமையை ஒவ்வொரு ஜடப்பொருளுங்கூட விளக்கியது போல் தோன்றியது.

மஹேந்திரன் களைப்புடன் சாய்வு நாற்காலியில்படுத்தான். அதிலிருந்த சதுரத் தலையணையிலிருந்து நறுமணம் வீசியது. மஹேந்திரன் தன்னை மறந்து கண்களை மூடியபடியே படுத்திருந்தான். அச்சமயம் சமையற்காரன் வெள்ளித்தட்டில் சிற்றுண்டியும் சர்பத்தும் கொண்டு வந்து முன்னே வைத்துப் போனான். பக்ஷணங்களும் அன்று புதுமாதிரியாய்ச் செய்யப்பட்டு அறுசுவையளித்

தன. மஹேந்திரன் திருப்தியுடன் யாவற்றையும் உண்டு முடித்தான்.

அதே சமயம் விநோதினி வெற்றிலைபாக்குத் தட்டுடன் உள்ளே பிரவேசித்தாள். புன்சிரிப்புடன் அவள் மஹேந்திரனை நோக்கி, "சில நாட்களாக நீங்கள் சாப்பிடும்போதுகூட எதிரே வருவதற்கு எனக்கு முடியவில்லை; மன்னிக்கவேணும். உங்களைக் கவனித்துக் கொள்ளவில்லையென்று என் தோழியிடம் மாத்திரம் தெரிவிக்கவேண்டாம். என்ன செய்வது! வீட்டு வேலையெல்லாம் நான் தான் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏதோ முடிந்தவரையில் செய்கிறேன்" என்றாள். வெற்றிலைத் தட்டை அவன் முன் வைத்தாள். பாக்குப் பொடியிலும் சுண்ணாம்பிலுங் கூட வாசனை கமழ்ந்தது.

மஹேந்: சுசுருஷை செய்வதிலும் குறையிருந்தால் தான் நலம்.

விநோ: ஏன்?

மஹேந்: ஏனா? குறையிருந்தால் தானே பிறகு அதை வட்டியுடன் வாங்கிக்கொள்ள முடியும்?

விநோ: அப்படியா! அப்படியானால் இதுவரை ஆகியிருக்கும் வட்டி எவ்வளவு, சேட்ஜீ?

மஹேந்: நான் சாப்பிடும்போது நீ ஆஜராவதில்லை. பிறகு வந்தாலுங்கூட அது இன்னும் பாக்கிதான்.

விநோதினி: அதிகக் கார்வட்டிதான் என்று தோன்றுகிறது. அப்படியானால் உங்களிடம் லேவாதேவி செய்து பிழைப்பது கடினந்தான்!

மஹேந்: கணக்குத்தான் மிச்சம். இதுவரை வசூலென்னவோ என்றால் சிறிதும் செய்யமுடியவில்லை.

விநோ: வசூலிப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது? அப்படியும் என்னைக் கைதுசெய்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இதைச் சொல்லி அவள் பெருமூச்செறிந்தாள்.

மஹேந்: கைதுசெய்துவைக்க இது என்ன சிறையா?

வேலைக்காரன் அச்சமயம் விளக்கேற்றிக் கொண்டு வந்து வைத்தான். அவன் போனதும் விநோதினி, "என்னவோ அதெல்லாம் தெரியாது; உங்களைப் பேச்சில் வெல்ல யாரால் முடியும்? நேரமாகிறது. எனக்கு வேலையிருக்கிறது" என்று வெளியே செல்ல ஆரம்பித்தாள்.

மஹேந்திரன் உடனே அவள்கரங்களைப் பிடித்திழுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு, "எப்பொழுதுகைதியென்று ஒப்புக்கொண்டாயோ அப்பொழுது ஓடுவது எங்கே?" என்றான்.

"சிச்சி! கையை விடுங்கள். ஓடுவதற்கு இடமற்றிருக்கும் என்னை இப்படிக் கட்டிப் பிடித்து நிறுத்தாதீர்கள்!" என்று சொல்லி விநோதினி தன் கையை உதறி விடுவித்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

*    *    *    *

வஸந்த ருது. மந்தமாருதம் வீசிக்கொண்டிருந்தது அது, "இதோ விநோதினி உன் வசமாகிவிட்டாள் உனக்கு ஆத்ம ஸமர்ப்பணம் செய்துவிட்டாள்" என்று சொல்வது போலிருந்தது. வீடு நிச்சப்த மாயிருந்தது. மஹேந்திரனின் மனம் மதங்கொண்ட யானையைப் போன்றிருந்தது. எழுந்திருந்து விளக்கை அணைத்துக் கதவைத் தாழிட்டான். படுப்பதற்குரிய நேரமாகாமற் போனாலும் படுக்கையில் போய்ப் படுத்தான். படுக்கையில் மனத்திற்கு

இன்பமூட்டும் சுகந்தம் வீசிக்கொண்டிருந்தது. பழைய சின்னம் ஏதாவது அகப்படாதாவென்று அறை முழுவதும் சுற்றி நோக்கினான். ஆனால் எங்கும் மாறுதல்தான்.

இரவு ஒன்பதுமணி. யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. "சாப்பாடு கொண்டுவந்திருக்கிறேன். கதவைத் திறவுங்கள்" என்று விநோதினி கூப்பிடுவது கேட்டது.

மஹேந்திரனின் மனம் கட்டுக்கடங்கவில்லை. அவள் குரலைக் கேட்டதும் கதவைத் திறக்க எழுந்தான். ஆனால் தாழ்ப்பாளைத் திறக்கக் கை மறுத்துவிட்டது. மறுபடி படுக்கையில் வந்து விழுந்தான். "எனக்குச் சாப்பாடு வேண்டாம்! பசியில்லை" என்று உள்ளிருந்தபடியே கூறி விட்டான்.

விநோதினி மனக்கலவரமடைந்து, "உடம்பு சரியில் லையா? வெந்நீராவது கொண்டுவரட்டுமா? என்ன வேண் டும்? சொல்லுங்கள்" என்றாள்.

மஹேந்: எனக்கு ஒன்றும் தேவையில்லை.

விநோ: எனது ஆணை! நீங்கள் பொய் சொல்லு கிறீர்கள். உடம்பு சரியாயிருந்தால் கதவைத் திறப்பதற் கென்ன?

மஹேந்திரன், "முடியவே முடியாது! நான் திறக்கப் போவதில்லை. நீ போகலாம்" என்று பிடிவாதமாய் மறுத்து விட்டான்.

அவன் மனம் குழம்பியது. தனது இருண்ட உள்ளத் தில் மறந்துபோன ஆசையைத் தேட முயன்றான். தூக்கம் வரவில்லை. உடனே அவளுக்குக் கடிதம் எழுதுவதென்று நிர்மாணிக்கு விளக்கண்டை போய் உட்கார்ந்தான்.

"என் அன்பிற்குரிய ஆசா!

என்னைத் தனித்திருக்க விட்டுவிட்டு அதிக நாள் தங்காதே. நீ தான் எனது வாழ்க்கைத் தெய்வம், வாழ்க்கைத் துணை எல்லாம். நீ அருகில் இராததால் எனது துர்ப்புத்தி என்னை எங்கெல்லாமோ இழுத்துச் செல்கிறது. நல்வழியிற் செல்ல மனம் விரும்பினாலும் அதற்கு வழிகாட்டும் வெளிச்சத்தைக் காணவில்லை. உனது அன்புமயமான புனித நேத்திரங்களே அதற்கு வழி காட்டும் ஜோதி. நீ சீக்கிரம் வா. எனது வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தும் சக்தி நீயே. உனது அன்பினால் என் உள்ளத்தைப் பூரணமாகச் செய். எனக்குத் திட சித்தத்தை அளி. உன்னை வஞ்சித்த பாபம் என்னைச் சாராதிருக்கட்டும். என்னை மஹா பாபத்திலிருந்து ரக்ஷி."

இந்தவிதமாகத் தன்மனத்தை வெளியிட்டுத் தன்னைத் தானே சபித்து ஒரு நீண்ட கடிதமெழுதி முடிப்பதற்குள் நடுநிசிக்கு மேலாயிற்று. மணிக்கூண்டிலிருக்கும் பெரிய கடிகாரம் மூன்றடித்தது கேட்டது. தெருவில் கட்டை வண்டிகள் போகும் சத்தம் கேட்டது. நாடகம் பார்த்துவிட்டுச் சிலர் அப்பொழுதுதான் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். அக்கடிதத்தை எழுதியதில் அவன் மனக்கொதிப்பு அடங்கிச் சற்றுச் சாந்தம் ஏற்பட்டது. படுக்கையில் படுத்து அப்படியே தூங்கி விட்டான்.

காலை சூரியோதயமாகி வெகுநேரத்திற்குப் பிறகு அவன் எழுந்திருந்தான். மனச் சஞ்சலம் சற்றுக்குறைவாயிருந்தது. முன்னிரவு ஆசாவுக்கு எழுதிய கடிதம் மேஜை மேல் மடித்துவைக்கப்பட்டிருந்தது. அதை மறுபடி எடுத்துப் படித்தான். "என்னவெல்லாம் உளறியிருக்கிறேன்! ஆசா இதைப் பார்த்து என்ன நினைப்பாள்! ஏதோ நாவல்

விஹாரி இருவர் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தான்.

—பக்கம் 185.

போல் இருக்கும். இக்கடிதத்தின் கருத்தைக்கூட அவளால் அறிந்துகொள்ள முடியாதே. நல்ல வேளை இதைத் தபாலில் போடாமலிருந்தேனே" என்று தன் கடிதத்தைப் பார்த்துத் தானே வெட்கினான். அதைக் கிழித்தெறிந்துவிட்டு வேறு ஒரு சுருக்கமான கடிதம் வரைந்தான்; "நீ வர இன்னும் எவ்வளவு நாட்களாகும்? உன் பெரியப்பா சீக்கிரம் திரும்பாவிடில் நானே வந்து உன்னை அழைத்து வருகிறேன். நீயில்லாது தனித்திருக்க எனக்குப் பிடிக்க வேயில்லை" என்று எழுதித் தபாலில் போட்டான்.

---

## இருபத்தாறுவது அத்தியாயம்

**ம**ஹேந்திரன் புறப்பட்டுச் சென்றதும், அதற்குப் பின் ஆசா காசிக்கு வந்ததும் அன்னபூரணியின் சந்தேகத்தை எழுப்பின. உண்மையை அறியவேண்டி அவள் ஆசாவிடம் பலவிதமாய் விசாரிக்கலானாள். இவர்கள் சம்பாஷணையில் விநோதினியின் பிரஸ்தாபமும் வந்தது. "உன் தோழி மாயாவிநோதினி அவ்வளவு இணையற்றவளா?" என்று அன்னபூரணி கேட்டாள்.

ஆசா: ஆமாம். ரூபத்திலும் புத்தியிலும் குணத்திலும் யாவற்றிலும் இணையற்றவள்.

அன்ன: உன் தோழியாதலால் நீ அவளைக் கொண்டாடுவது சரிதான். ஆனால் வீட்டில் மற்றவர்கள் அவளைப்பற்றி எவ்விதம் நினைக்கிறார்கள்?

ஆசா: மாமியார் சதா அவளைக் கொண்டாடுகிறார். அவள் ஊருக்குப் புறப்படும் பிரஸ்தாபம் எடுத்தாலே மாமியாருக்கு வருத்தமாயிருக்கிறது. என் தோழியைப்

போல் அவருக்குச் சேவை செய்ய வேறு யாராலும் முடியாது.

அன்ன: அவளைப்பற்றி மஹேந்திரனின் அபிப்பிராயம் என்ன?

ஆசா: அவர் வழக்கந்தான் உனக்குத் தெரியுமே. தமக்குப் பிடித்த இரண்டொருவரைத் தவிர வேறு யாரும் அவருக்குப் பிடிப்பதில்லை. வீட்டில் எல்லோராலும் அன்புடனும் ஆதரவுடனும் கொண்டாடப்படும் என் கோபியைக் கண்டால்கூட அவருக்குப் பிடிப்பதில்லை.

அன்ன: ஏன் அப்படி?

ஆசா: நான் எவ்வளவோ முயன்று அவர்களை இருவரையும் சந்திக்கச் செய்தேன். ஆனாலும் மிகவும் அபூர்வமாகத்தான் அவளோடு அவர் பேசுகிறார். தமக்குப் பிரியமான இரண்டொருவரைத் தவிர வேறு யாரிடமும் பேச்சு வார்த்தை கூட வைத்துக் கொள்வது இல்லை.

இதைச் சொல்லும்போது ஆசாவின் முகம் நாணத்தினால் சிவந்தது. தன் தலையைக் குனிந்து கொண்டாள். அன்னபூரணிக்கும் இதைக் காண உள்ளூறச் சந்தோஷம். அவள், "உண்மைதான். இதனால்தான் மஹேந்திரன் வந்திருந்தபோதுகூட விநோதினியின் பெயரையே எடுக்க இல்லை போலும்!" என்றாள்.

ஆசா: இதுதான் அவரது கெட்ட குணம். தமக்கு விருப்பமில்லாதவர்களைப் பற்றிப் பேசுவதுமில்லை; எதிரில் கண்டாலும் பராமுகமாயிருப்பார்.

அன்னபூரணி சிரித்துக்கொண்டே, "தனது அன்பிற்குப் பாத்திரமானவர்களே அவனுக்குச் சர்வமும். இல்லையா, ஆசா?" என்றாள்.

ஆசாவுக்கு நாணத்தினால் பதிலொன்றும் சொல்ல முடியவில்லை. அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

அன்னபூரணி பேச்சை மாற்றி, "விஹாரியைப்பற்றி என்ன சமாசாரம்? அவன் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லையா?" என்றாள்.

இதைக் கேட்டதும் ஆசாவின் முகம் மாறியது. அவள் பதிலொன்றும் சொல்லவில்லை.

அவள் முகக்குறியைக் கண்ட அன்னபூரணி திகிலுடன், "விஹாரி சௌக்கியமாயிருக்கிறானா? உண்மையைச் சொல்" என்றாள்.

அன்னபூரணிக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. தன் பிள்ளையைப் போல் விஹாரியை அவள் நேசித்தாள். அவளுக்கு வாழ்வில் ஒரே ஒரு குறைதான் இருந்தது; அது, விஹாரி விவாகம் செய்துகொண்டு சுகமாய் இருக்க வேண்டும் என்பதே.

ஆசா: சித்தி, விஹாரியைப்பற்றி மாத்திரம் என்னிடம் ஒன்றும் கேட்காதே.

அன்னபூரணி: (ஆச்சரியத்துடன்) ஏன்?

ஆசா: அவர் விஷயத்தை நான் பேசமாட்டேன்.

இதைச் சொல்லிவிட்டு ஆசா எழுந்து சென்றாள். அன்னபூரணி பலவித யோசனையில் ஆழ்ந்தாள். 'விஹாரி உயர்குணமுடையவன். நன்னடத்தையுள்ளவன். அவன் என்ன, அதற்குள்ளாகவா கெட்டுப்போய்விட்டான்! அப்படியில்லையானால் ஆசா அவன் பிரஸ்தாபம் எடுத்ததுமே ஏன் எழுந்துபோய்விட்டாள்? எல்லாம் கால சக்கரத்தின் மாறுபாடுபோலும்! அவனுக்காக ஆசா முதலில் நிச்சயம் செய்யப்படுவானேன்? மஹேந்திரன் பிடி

வாதம் பிடித்து அவளை அபகரித்துக்கொள்வானேன்?'— இப்படி எண்ணாத எண்ணமெல்லாம் எழ, அன்னபூரணி விஹாரியை நினைத்துக் கண்ணீர் பெருக்கினாள். 'தெரியாது ஏதாவது தவறு செய்திருக்கலாம். அவன் மிகவும் குண சீலன்' என்று ஆறுதல் செய்துகொண்டாள்.

அன்று சாயங்காலம் அவள் ஜபம் செய்துகொண்டிருக்கும் சமயம் வாயிலில் ஒரு வண்டி வந்து நின்றது. தன் உறவினர் யாரோ அன்று வருவதாக எழுதியிருந்தது சட்டென அவள் நினைவிற்கு வந்தது. தான் ஜபம் செய்துகொண்டிருப்பதால் ஆசாவை வாயிற்கதவைத் திறந்து யாரென்று பார்க்கும்படி கூறினாள். இருட்டாயிருந்ததால் விளக்கை எடுத்துக்கொண்டு ஆசா வாயிற்புறம் போய்க் கதவைத் திறந்தாள். அங்கே விஹாரி நிற்பதைக் கண்டு ஸர்ப்பம் தீண்டியவளைப்போல் பதறிக் கையிலிருந்த விளக்கையும் போட்டுவிட்டாள். "நீ காசிக்கு வரவில்லையென்று கேள்விப்பட்டேனே?" என்று விஹாரி கேட்டான். ஆசா பதிலொன்றும் சொல்லவில்லை. ஏதோ பேய் பிசாசைக் கண்டதுபோல் உள்ளே சித்தியிடம் ஓடி, "சித்தி, விஹாரி வந்திருக்கிறார். நான் உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்ளுகிறேன்: நீ அவரை உடனே இங்கிருந்து திரும்பிப் போகச் சொல்" என்று நடுக்கத்துடன் கெஞ்சினாள்.

இச்சொல் விஹாரியின் செவியிலும் நாராசம்போல் பாய்ந்தது. ஜீவசக்தியை இழந்தவன்போல் அப்படியே வாசலில் போய் உட்கார்ந்தான். அன்னபூரணி கையிலிருந்த ஜபமாலையைக் கீழே போட்டுவிட்டுக் கதவண்டை வந்து கோபத்தொனியுடன், "விஹாரி!" என்று கூப்பிட்டாள்.

அன்னபூரணியின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் நாடிவந்த விஹாரிக்கு இக்குரல் இடியிடித்தது போன்று இருந்தது. அவனுடைய சக்தியிழந்த சரீரத்தை இது ஊடுருவித் துளைத்தது. அவன் ஈனக்குரலில், "பெரியம்மா, நீங்கள் ஒன்றுஞ் சொல்லவேண்டாம். இதோ நானே போகிறேன்" என்று தூர இருந்தபடியே அவளை நமஸ்கரித்துவிட்டு வண்டியில் ஏறி மறைந்தான். நட்டாற்றில் குழந்தையைக் கைவிட்ட தாயைப்போல் அன்னபூரணியும் உள்ளே திரும்பினாள்.

அதே இரவு ஆசா தன் கணவனுக்கு விஹாரி காசிக்கு வந்திருந்த சங்கதியைத் தெரிவித்துத் தன்னை உடனே வந்து அழைத்துப் போகுமாறு கடிதம் எழுதினாள்.

---

## இருபத்தேழாவது அத்தியாயம்

இரவு முழுவதும் கண்விழித்தது, மனவெழுச்சி இவற்றால் மஹேந்திரனின் மனம் சிதறுண்டு கிடந்தது. சாதாரணமாய் அவன் தினமும் காலையில் எழுந்து படிப்பது வழக்கம். இன்றோ பொழுது விடிந்து வெகு நேரமாகியும் அவன் படுக்கையிலேயே படுத்திருந்தான். தெருவில் பழம் விற்பவன் கூவிக்கொண்டு போவது கேட்டது. ஆபீசுக்குச் செல்வோர், வண்டிகளிலோ நடந்தோ வெகு வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தனர். எதிரே புதிதாகக் கட்டப்படும் வீட்டில் வேலை செய்யும் கூலிக்காரச் சிறுமிகள் மண்ணும் கல்லும் சுமந்துகொண்டே பாடுவது காதில் விழுந்தது. அக்கோடை வெயிலில் வெளியே போவதை விட வீட்டிற்குள் சுகமாய்ப் படுத்திருக்கவே யாவரும் விரும்புவர்.

"மஹேந்திரன், உங்களுக்கு என்ன உடம்பு? குளிக்கப் போகிறதில்லையா? சாப்பாடுகூடத் தயாராய்விட்டதே. இன்னுமா படுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? என்ன தலைவலியா?" என்று கேட்டுக்கொண்டே விநோதினி அவன் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள்.

அவன் கண்களை மூடியவாறே தழுதழுத்த குரலில், "எனக்கு உடம்பு சரியில்லை. நான் குளிக்கப்போவதில்லை" என்றான்.

விநோ: குளிக்காவிடில் போகிறது. ஏதாவது சாப்பிடலாமே.

அவள் எப்படியோ அவனை வேண்டிக்கொண்டு வற்புறுத்திக் குளிக்கும்படி செய்து போஜனமும் செய்வித்தாள்.

சாப்பாடு முடிந்ததும் மஹேந்திரன் வந்து மறுபடி படுத்துக்கொண்டான். தலைமாட்டில் நின்று விநோதினி மெதுவாய் அவன் நெற்றியைத் தடவிக்கொண்டிருந்தாள். அவன், "நீ இன்னும் ஒன்றுமே சாப்பிடவில்லை. போய்ச் சாப்பிடு, போ" என்றான்.

விநோதினி அவன் சொல்வதைக் கவனிக்கவில்லை. பகல்வேளை யானாலும் வெளியிலிருந்து காற்று வந்து கொண்டிருந்தது. தலையருகில் நின்று அவள் பெருமூச்சுவிடுவது மஹேந்திரனின் நெற்றி முன்மயிரை அசைத்து விளையாடியது. விநோதினி வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. மஹேந்திரனின் உள்ளம் படபடத்தது. நடுச் சமுத்திரத்தில் புயற்காற்றில் தவிக்கும் ஒரு சிறு படகுபோன்று இருந்தது அவனது நிலை. படகு கரை சேருமா, மூழ்குமா என்று அவனுக்கே தெரியவில்லை.

விநோதினி, அவன் தலைமாட்டில் உட்கார்ந்து மெதுவாய் அவன் நெற்றியைத் தடவிக்கொண்டிருந்தாள். குனிந்தவாறு இருந்த அவள் முகத்தின் முன்னெற்றியில் சுருண்டு அசைந்தாடிக் கொண்டிருந்த அழகிய கேசம் மஹேந்திரனின் கன்னங்களைத் தொட்டது. உடனே அவனுடைய சரீர முழுவதும் ஒருவித உணர்ச்சி ஊடுருவியது. அவனுக்குச் சுவாசமே ஸ்தம்பித்து விட்டதுபோலத் தோன்றியது. மனத்தில் என்ன தோன்றியதோ, அவன் உடனே எழுந்து, "நான் காலேஜுக்குப் போகவேண்டும்" என்று விநோதினியின் பக்கங்கூடத் திரும்பிப்பாராமல் சொல்லிக்கொண்டே போக யத்தனித்தான்.

விநோதினி, "திகிலடையவேண்டாம். இதோ நானே உங்கள் உடுப்புகளைக் கொண்டுவருகிறேன்" என்று சொல்லி எழுந்து சென்றாள்.

அவள் கொண்டுவந்து கொடுத்த உடுப்புகளை மிகவும் வேகமாய் அணிந்துகொண்டு மஹேந்திரன் காலேஜிற்குச் சென்றான். ஆனால் எவ்வளவோ முயன்றும் படிப்பில் அவனுக்கு மனம் செல்லவேயில்லை. இரண்டுமணிக்கே வீடு திரும்பி விட்டான்.

அச்சமயம் விநோதினி படுத்துக்கொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். அவளது கருமையாக அடர்ந்த கேசம் அவிழ்ந்து தலையணையின் நாலுபுறமும் புரண்டுகிடந்தது. அவள் மஹேந்திரன் வந்ததைக் கவனிக்கவில்லை. புஸ்தகத்தைப் படித்துக் கொண்டே உணர்ச்சி ததும்பப் பெருமூச்சு விட்டாள்.

மஹேந்திரன் திடீரென்று அவள்முன் தோன்றி, 'சுந்தரி, எந்தக் கற்பனைப் புருஷனை நினைந்து வீணில்

மனம் பொருமுகிறாய்? எங்கே பார்க்கலாம் கொடு; என்ன புஸ்தகம் படித்துக்கொண்டிருக்கிறாய்?" என்றான்.

விநோதினி திடுக்கிட்டவளைப்போல் எழுந்து உட்கார்ந்து புஸ்தகத்தைத் தனது புடைவைத் தலைப்பிற்குள் மறைத்து வைத்துக்கொண்டாள். அதைப் பிடுங்க முயன்றான் மஹேந்திரன். சிறிது நேரம்வரை இதற்காக இழுபறிநடந்து கடைசியில் மஹேந்திரனே ஜயித்தான். அப்புஸ்தகம் பங்கிம் பாபுவின் 'விஷவிருக்ஷ' மாயிருக்கக் கண்டான். விநோதினி முகத்தைச் சுளித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மஹேந்திரனின் உள்ளம் படபடத்தது. அதை மறைத்துப் புன்சிரிப்புடன் அவன், "இவ்வளவுதானா? ஒளித்து வைத்துக் கொண்டதைப் பார்த்தால் நான் என்னவோ வென்றல்லவா நினைத்தேன்!" என்றான்.

விநோ: என்னிடம் ஒளிக்கும் வஸ்து வேறு என்ன இருக்கப் போகிறது?

மஹேந்: ஏன், விஹாரியிடமிருந்து வந்த கடிதமாயிருந்தால்?

இதைக் கேட்டவுடன் விநோதினியின் முகம் மாறியது; கண்கள் இரண்டும் கோபத்தினால் சிவந்தன. அவள் எழுந்து நின்று அக்கண்களினால் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள். அப்பார்வையை எதிர்த்து நிற்குந் துணிவு மஹேந்திரனுக்கு இல்லை. அவன் அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, "நான் அபராதம் செய்துவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சினான்.

விநோதினி தன் கைகளை வெடுக்கென இழுத்து விடு வித்துக்கொண்டு, "நீங்கள் யாரைப்பற்றி இவ்வளவு கேலி யாகப் பேசினீர்கள்? நீங்கள் விஹாரி பாபுவின் கால் தூசுக்கு ஈடுபெறமாட்டீர்கள்! அவருடைய நட்பைப் பெற நீங்கள் தகுதியற்றவர்! இழி குணம் படைத்த உங்களுக்கு அவரைப்பற்றிக் கேலியாகப் பேச வாய் வேறு?" என்று கூறி வெளியே செல்ல அடியெடுத்து வைத்தாள். மஹேந்திரன் அவளுடைய இரண்டு பாதங் களையும் பிடித்துக்கொண்டு தடுத்தான்.

அச்சமயம் பின்புறம் சுவரின்மேல் யாரோ ஒருவரது நிழல் தெரிவதைக் கண்டு மஹேந்திரன் சட்டென்று அவ ளுடைய பாதங்களை விட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே விஹாரி நின்றுகொண்டிருந்தான்!

விஹாரி இருவர் முகங்களையும் மாறி மாறிப் பார்த் தான். பிறகு நிதானமான குரலில், "வேளையற்ற வேளை யில் வந்துசேர்ந்தேன். ஆனாலும் நான் அதிகநேரம் இங்கே தங்கப் போவதில்லை. ஒரு சங்கதி சொல்லிப் போக வந்தேன்: நான் காசிக்குப் போயிருந்தேன். எனக்கு ஆசா அங்கே இருப்பது தெரியாது. என்னையும் அறி யாமல் நான் அவளுக்கு ஏதோ தவறு இழைத்திருக்கிறே னென்று தெரிகிறது. அங்கேயே அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள எனக்கு அவகாசமில்லை. ஆகையால் தான் உன்னிடம் இன்று வந்தேன். தெரிந்தோ தெரியா மலோ நான் என்ன தப்பிதம் செய்திருந்தாலும் என்னை மன்னிக்கவேண்டும். அதற்காக ஆசாவை ஒருபோதும் துன்புறுத்தாதே" என்றான்.

மஹேந்திரன் நண்பனுக்காக மனமிரங்கவில்லை. தனது குற்றமுள்ள நடத்தையை அவன் நேரில் கண்டு

விட்டானேயென்று மனம் புழுங்கினான். நண்பனைப் பார்த்து அவன் கேலியாக, "இது என்ன, அப்பா குதிருக்குள் இல்லையென்னும் சமாசாரமாயிருக்கிறது! குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படியோ அல்லது மறுக்கும்படியோ உன்னை யார் கேட்டது? நீ மிகவும் யோக்கியனென்று காட்டிக்கொள்ளத்தானே இப்படி மன்னிப்பு வேண்டுகிறாய்?" என்று குத்தலாகக் கேட்டான்.

இதைக் கேட்டதும் விஹாரி சிலைபோல் ஸ்தம்பித்துச் சிறிதுநேரம் அப்படியே இருந்தான். ஒருவாறு நிதானமடைந்து பேச வாயெடுத்தான்; அதற்குள் விநோதினி அவனை அடக்கி, "நீங்கள் பேசாதிருங்கள். ஒன்றும் சொல்லவேண்டாம். மஹேந்திர பாபு இப்பொழுது சொல்லியது ஒன்றும் உங்களைப் பாதியாது. அவர் தம் முகத்தில் தாமே கரியைப் பூசிக்கொண்டார்" என்றாள்.

விநோதினியின் சொற்கள் விஹாரியின் செவியில் பட்டனவோ இல்லையோ, தெரியாது. நித்திரையில் நடப்பவனைப்போல் ஒன்றையும் கவனியாமல் படியிறங்கி அவன் கீழே செல்லலானான்.

பதிலொன்றும் உரையாமல் அவன் அப்படிச் செல்லவே, விநோதினி அவன் முன்சென்று அவனை வழி மறித்து அவன் கரங்கள் இரண்டையும் பற்றிக்கொண்டாள். மிகவும் வெறுப்புடன் விஹாரி அவளைத் தூரத் தள்ளிவிட்டுத் திரும்பிக்கூடப் பாராமல் வேகமாய்ச் சென்றுவிட்டான். அவள் கீழே விழுந்து அவளுக்கு அடிபட்டது அவனுக்குத் தெரியாது.

அவள் விழுந்த சப்தம் கேட்டு மஹேந்திரன் ஓடி வந்தான். விநோதினியின் இடது முழங்கை எலும்பு

முறிந்து அக்காயத்திலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருக்கக் கண்டான். "ஐயோ, அடி பலமாய்ப் பட்டுவிட்டது போலிருக்கிறதே!" என்று கூறிப் பதைத்தான். உடனே தன் அங்கவஸ்திரத்தைக் கிழித்துக் காயத்தைக் கட்ட முயன்றான். ஆனால் விநோதினி அவன் கையைத் தூரத் தள்ளிக் கட்ட விடாது தடுத்துவிட்டாள்.

"நான் ஒரு மருந்துபோட்டுக் காயத்தைக் கட்டினேனானால் கை சீக்கிரம் குணமாகிவிடும்" என்று மஹேந்திரன் சொல்லிப்பார்த்தும் அவள் இணங்கவில்லை; "காயம் குணமாகாமல் அப்படியே இருக்கவேண்டுமென்றே நான் விரும்புகிறேன்" என்று கூறிவிட்டாள்.

மஹேந்திரன், "எனது முட்டாள்தனத்தாலன்றோ இன்று நீ வேறொருவரால் இப்படி அவமானமடையும்படி நேர்ந்தது? என்னை இதற்காக க்ஷமிக்கமாட்டாயா?" என்று வேண்டினான்.

விநோ: எதற்காக க்ஷமிப்பது? நல்லதாயிற்று! நான் எதற்கும் அஞ்சவில்லை. யாரையும் பொருட்படுத்தவும் இல்லை. என் காலில் விழுந்து வேண்டுபவர்களை விட்டுவிட்டு, என்னைத் தூர உதறித் தள்ளியவர்களைத்தானா நான் விரும்பப் போகிறேன்? ஒருகாலும் இல்லை.

மஹேந்திரன் ஆனந்தத்தால் பூரித்தான். தழுதழுத்த குரலில் அவன், "விநோதினி, அப்படியானால் எனது அன்பை ஏற்றுக்கொள்வாயா?" என்று கேட்டான்.

"ஏற்பதா! அதைக் கிடைத்தற்கரிய ரத்தினமாக நினைத்துப் போற்றுவேன். என் வாழ்வில் கிட்டாத அன்பை நான் பெறும்போது அதை அலக்ஷியமாய் மறுக்க என்னால் இயலாது" என்று விநோதினி மொழிந்தாள்.

மஹேந்திரன் விநோதினியின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு கொஞ்சும் பாவனையாக, "வா, நாம் இருவரும் அறைக்குள் செல்லலாம். நாம் இதுவரையில் மனச் சஞ்சலத்திற்கு ஆளாகியது போதும். இனியாவது சந்தோஷத்தோடும் அமைதியோடும் இருப்போம்" என்றான்.

விநோ: இல்லை இல்லை! இன்று என்னை விட்டுவிடுங்கள். உங்களுடைய மனம் வருந்த நான் ஏதாவது செய்திருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்.

மஹேந்: நீயும் என்னை மன்னிப்பாயா? இல்லாவிடில் இன்று எனக்குத் தூக்கமே வராது.

விநோ: மன்னித்தேன்.

தான் அன்று அடைந்த ஆனந்தத்திற்கும் அன்பிற்கும் அடையாளமாக எதையோ பெறவேண்டி மஹேந்திரன் விநோதினியின் முகத்தை நோக்கினான். ஆனால் அவள் முகக்குறிப்பிலிருந்து அவனுக்கு மேலே பேசத் தெரியவில்லை. தான் வேண்டுவது கிட்டுமெனவும் தோன்றவில்லை. விநோதினி கீழே இறங்கிச் சென்றாள். அன்று நடந்தவை யாவும் மஹேந்திரனின் மனத்தில் ஒவ்வொன்றாய் எழுந்தன; 'விஹாரிக்கு நம் விஷயம் தெரிந்தது நல்லதேயாயிற்று. இம்மாதிரி விஷயங்களை மறைத்து வைப்பதும் கடினம். அது எவ்வளவு நாளைக்குத்தான் முடியும்? நான் மஹா பரிசுத்தமானவனென்று சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. எனது வாழ்வின் ஒரே நோக்கம் இப்பொழுது அன்பு, காதல் இவையே. இவற்றை நான் அடைய விரும்புகிறேன். உலகம்என்ன வேண்டுமானாலும் என்னைப்பற்றி நினைக்கட்டும். எனக்கு அது ஒரு பொருட்டன்று' என்று தனது தவறான நடத்தையைப் பற்றியும்

அவன் அன்று பெருமைமயே கொண்டான். விநோதினி யின் சுந்தரவடிவம் அவன் உள்ளத்தில் குடிகொண்டது. அகம் புறம் எங்கும் அவளது உருவமே தோன்றி அவனை மயக்கியது.

---

## இருபத்தெட்டாவது அத்தியாயம்

**ம**றுநாள் பொழுது விடிந்தது; அன்று எழுந்திருக் கும்போதே மஹேந்திரனின் மனத்தில் விவரிக்க முடியாத இன்ப உணர்ச்சி ஊறியது. இளஞ் சூரியனின் கிரணங்க ளால் அவனுடைய அகம் புறம் யாவும் சுவர்ணமயமாய்த் திகழ்ந்தன போலத்தோன்றின. தான் காணும் ஒவ்வொரு வஸ்துவும் புதுமையும் ஸௌந்தர்யமும் பெற்றுப் பிர காசிப்பதுபோன்று இருந்தது. சாதாரணக் காற்றிலும் நறுமணம் கலந்துவீசி மனத்தைக் கொள்ளைகொள்வது போல் அவனுக்குத் தோன்றியது. அதிகாலையில் வாயிலில் ஒரு வைஷ்ணவப் பிச்சைக்காரன் (தாதன்) சேகண்டி அடித்த வண்ணம் பாடிக்கொண்டே வந்தான். வழக்கம் போல் வேலையாட்கள் அவனை வெளியே துரத்த முயன்றார் கள். ஆனால் மஹேந்திரன் அவர்களைப் பேசாதிருக்கச் செய்து ஒரு முழு ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத் துப் போகச்சொன்னான். படுக்கையறையிலிருந்து லாந் தரை எடுக்கவந்த வேலையாள் அதைக் கைதவறிக் கீழே போட்டு உடைத்துவிட்டான். அவன் பயந்து நடுங்கி அப்படியே நின்றுவிட்டான். மஹேந்திரன் அவனைக் கோபிக்கக்கூட இல்லை; சிரித்த முகத்துடன் கண்ணாடித் துண்டுகளை எடுத்து வெளியே எறியுமாறு சொல்லிப் போனான். எங்கும் அன்பு மயமாகக் காணப்பட்டது அவனுக்கு அன்று. 'ஆஹா! இந்தப் புதுமையும் எங்கும்

வியாபித்திருக்கும் ஸௌந்தர்யமும் இன்றுவரை எங்கே மறைந்திருந்தன?' என்று ஆச்சரியமடைந்தான்.

'ஆமாம்! இன்று விநோதினியைச் சந்திப்பது மற்றத் தினங்களைப்போல் இராது. அவளுடைய பேச்சும் நடத்தையும், ஆஹா! கவிகளன்றோ வர்ணிக்கத் தகுந்தவையாக இருக்கும்!' என்று அகமகிழ்ந்தான். எப்பொழுது அவளைச் சந்திப்போமென்ற ஒரே ஆர்வம் அவன் மனத்தில் குடிகொண்டிருந்தது. காலேஜிற்குச் செல்லவும் தோன்றவில்லை. விநோதினி சமையலறையில் பேசும் சப்தம் கேட்டது. இன்று அவள் இப்படி வீட்டு வேலையில் மூழ்கியிருப்பது அவனுக்குப் பிடிக்கவேயில்லை. இன்று அவள் அவன் உள்ளத்திலன்றோ குடிகொண்டிருக்கிறாள்!

அவனுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. ஸ்நானமாயிற்று; சாப்பாடாயிற்று. வீட்டுவேலை யாவும் முடிந்து சந்தடியற்று இருந்தது. ஆனாலும் விநோதினி மாத்திரம் வரக்காணவில்லை. அவன் மனம் துடித்தது. முன் தினம் விநோதினியிடமிருந்து சண்டைபோட்டுப் பிடுங்கிய 'விஷ விருக்ஷம்' என்னும் நாவல் கண்முன்னேயே கிடந்தது. முந்தின தினம் நடந்த சம்பவங்கள் யாவும் கண்முன் தோன்றின. மயிர் சிலிர்த்தது. அப்புஸ்தகத்தைக் கையிலெடுத்துப் படிக்க ஆரம்பித்தான். படிப்பில் கவனம் செல்லவே, பொழுது சென்றதே தெரியவில்லை. பிற்பகல் மணி ஐந்தாயிற்று. மிட்டாய், பழம் இவற்றைத் தட்டில் எடுத்துக்கொண்டு விநோதினி உள்ளே நுழைந்தவண்ணம், "மணி ஐந்தாகி விட்டது. இன்னுமா படிக்கை? வெளியே எங்கும் போகவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே தட்டை அவன் முன்னே வைத்தாள்.

மஹேந்திரனின் முகம் சின்னதாகிவிட்டது. 'என்ன! ஏன் வெளியில் செல்லவில்லையென்பதற்குக் காரணம் இவளுக்குத் தெரியாதா? மற்றத்தினங்களைப் போலவா இன்றும்? எனது மன நிலையை இவள் அறியவில்லையா?' என்று எண்ணி ஏங்கினான். எங்கே தனது சகல நம்பிக்கையும் குலைந்துவிடுமோவென்று அஞ்சி முன் தினம் நடந்த சம்பாஷணையை ஞாபகமூட்டவும் துணிவின்றிப் பேசாதிருந்தான்.

தட்டிலிருக்கும் சிற்றுண்டிகளை அருந்தலானான். வெளியே காயவைத்திருந்த அவனுடைய துணிமணிகளையெல்லாம் எடுத்துவந்து ஒழுங்காய் மடித்து அவற்றை அலமாரிக்குள் அடுக்கி வைத்துக்கொண்டிருந்தாள் விநோதினி.

மஹேந்: விநோதினி, சற்றுப் பொறு. இதோ நானும் வந்து உனக்கு உதவிபுரிகிறேன்.

விநோ: தயை செய்து நீங்கள் என் உதவிக்கு மாத்திரம் வரவேண்டாம். வேறு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.

"என்னை எதற்கும் கையாலாகாதவனென்று நினைத்துவிட்டாய்போல் இருக்கிறது! அதையும் பரீக்ஷித்துப் பார்த்துவிடலாம்" என்று சொல்லி எழுந்து துணிகளைத் தாறுமாறாக மடிக்க ஆரம்பித்தான். அதைப் பார்த்து விநோதினி, "போதும், நீங்கள் உதவிபுரியும் அழகு! எனக்கு ஒரு வேலைக்கு இருவேலை வைத்தீர்கள்?" என்று அவள் அத்துணியை வாங்கித் தானே மடித்து வைத்தாள்.

"சரி. நீ செய்வதைப் பார்த்தாவது நான் கற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லி மஹேந்திரன் அலமாரி

யின் அருகில் போய் உட்கார்ந்தான். துணிகளை அலமாரியில் அடுக்கிவைக்கும் பாவனையாக விநோதினியும் அவன் பக்கமாய்க் குனிந்து குனிந்து துணிகளை வைத்துக்கொண்டிருந்தாள்.

அன்றைய சந்திப்பு இப்படி ஆரம்பமாகுமென்று மஹேந்திரன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுடைய கற்பனையின்படி எதுவும் நடக்குமென்று தோன்றவில்லை. அது கவிகள் வருணிக்கக் கூடியதாகவும் இருக்கவில்லை. ஆனாலும் அவன் முழுவதும் ஏமாற்றம் அடையவில்லை. அவள் அருகிலிருப்பதே அவனுக்குச் சுகத்தை அளித்தது. தனது மனோரதம் எப்படி ஈடேறும், அதற்கு எந்த உபாயத்தைக் கைக்கொள்ளலாம், எப்படிப் பேசவேண்டும், எப்படி நடக்கவேண்டும் என்றெல்லாம் அவன் மனத்தில் ஒத்திக்கை நடந்துகொண்டிருந்தது.

அச்சமயம் திடீரென்று ராஜலக்ஷ்மி உள்ளே பிரவேசித்து மஹேந்திரனைப் பார்த்து, "அவள் துணியை மடித்து வைத்துக் கொண்டிருக்கிறாள். நீ உட்கார்ந்து என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

அதற்குள் விநோதினி, "பாருங்கள் அம்மா, வேண்டுமென்றுவது நான் செய்யும் வேலையையும் கெடுத்துக் கொண்டு இங்கே உட்கார்ந்திருப்பதை!" என்றாள்.

மஹேந்: ஓஹோ! நான் உட்கார்ந்து உதவி செய்து கொண்டிருந்தால்....?

ராஜலக்ஷ்மி: போதும்! நீ உதவி செய்வது எனக்குத் தெரியாதா? செல்வப் பிள்ளையாக வளர்ந்த உனக்குச் சிறு வயது முதலே ஒரு வேலையும் செய்யத் தெரியாது.

தன் மகன் இப்படி வளர்ந்திருப்பதுபற்றி ராஜ லக்ஷ்மிக்குப் பெருமையே. தனது சக்தியற்ற நிலையில் புத்திரனுக்குச் செய்யவேண்டிய சகல சுசுருஷைகளையும் விநோதினியிடம் ஒப்பித்துவிட்டு அவள் கவலையற்று இருக்கலானாள். இப்பொழுது மஹேந்திரனும் முன்போல் இல்லாது விநோதினியிடம் ஆதரவாய் நடந்துகொள்ளுவதையும், அவள் ஊருக்குப்போகிறேனென்றபோது கூட அவளைத் தடைசெய்து நிறுத்தியதையும் காண ராஜலக்ஷ்மிக்கு மிகவும் சந்தோஷம். அவள் விநோதினியைப் பார்த்து, "இப்போது தைத்து வந்திருக்கும் அவனுடைய புதிய உடுப்புகளுக்கெல்லாம் உட்புறம் பெயர்க்குறி போட்டு வை. ஹும். நீ இந்த வீட்டில் அடியெடுத்து வைத்தது முதல் உனக்கு ஓய்வோ சுகமோ கிடையாது. சதா உழைப்பும் கஷ்டமுந்தான்" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

விநோ: நீங்கள் இப்படிச் சொல்லும்போது ஏதோ என்னை வேறாகப் பாவிப்பதுபோலப் படுகிறது.

ராஜலக்ஷ்மி அன்புடன், "இல்லையடீ; உன்னைப்போல் செய்யக்கூடியவர்கள் எனக்கு வேறு யார் இருக்கின்றனர்?" என்றாள்.

துணிகளெல்லாம் ஒழுங்காய் வைத்தானதும் ராஜ லக்ஷ்மி, "விநோதினி, இன்று சில பக்ஷணங்கள் செய்ய வேண்டும். அடுப்பைப் பற்றவைக்கட்டுமா? அல்லது உனக்கு வேறு ஏதேனும் வேலையிருக்கிறதோ?" என்று கேட்டாள்.

"வேலை ஒன்றுமில்லை. போகலாம் வாருங்கள்" என்று சொல்லி விநோதினி உடனே அவ்விடத்தை விட்டுச் செல்ல ஆயத்தமானாள்.

அதற்குள் மஹேந்திரன், "என்ன அம்மா, இப்பொழுதுதானே விநோதினி சதா வேலை செய்து கஷ்டப்படுவதாகக் கூறிப் பரிதாபப்பட்டாய்? உடனே நீயே அவளை வேலை செய்ய இழுத்துச் செல்கிறாயே?" என்றான்.

ராஜலக்ஷ்மி அன்புடன் விநோதினியின் மோவாயைப் பிடித்துக்கொண்டு, "என் விநோதினி தங்கமான பெண்ணன்றோ! அவளுக்கு எப்பொழுதும் வேலை செய்வதில் தான் விருப்பம்" என்றாள்.

மஹேந்: இன்று சாயங்காலம் வேறு வேலையொன்றும் இல்லாவிடில் விநோதினிக்கு ஒரு புஸ்தகம் படித்துக் காட்டலாம் என்று இருக்கிறேன்.

விநோ: மிகவும் சரி! அம்மா, நீங்களும் வாருங்கள்; நானும் வருகிறேன். சற்று நேரங்கழித்து இருவருமாக மஹேன் படிப்பதைக் கேட்கலாம்.

'பாவம்! அவன் தனியாயிருக்கிறான். அவனுக்குச் சந்தோஷமாய்ப் பொழுது போகவேண்டி நாமும் போய் உட்காரலாம்' என்று ராஜலக்ஷ்மி நினைத்துத் தானும் வரச் சம்மதித்தாள். ஆனால் மஹேந்திரனின் உற்சாகமெல்லாம் அன்று மண்ணாயிற்று. ராஜலக்ஷ்மியும் விநோதினியும் உள்ளே எழுந்துசென்றனர். மஹேந்திரன், "சாயங்காலம் வீட்டிலேயே இருக்கப்போவதில்லை நான். எங்காவது சென்று விடுகிறேன்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். உடனே அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொண்டான். ஆனால் வெளியே செல்லவும் மனம் வரவில்லை. கூட்டில் அடைபட்ட புலிபோல் மாடி வராந்தாவிலேயே சுற்றிக்கொண்டிருந்தான். அடிக்கடி யாருடைய

வரவையோ எதிர்பார்த்து மாடிப்படியை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். கடைசியில் அலுத்துப்போய் நாற்காலியில் சாய்ந்தான். "இந்த அம்மா எவ்வளவு நேரந்தான் பக்ஷணங்கள் செய்வாள்? நான் இன்று அவைகளில் ஒன்றையும் தொடப்போவதில்லை. அப்பொழுதுதான் அவளுக்குப் புத்திவரும்" என்று தாயைக் கடிந்துகொண்டான்.

அன்று சாப்பிடும் சமயம் விநோதினியுடன் கூட ராஜலக்ஷ்மியும் இருந்தாள். மஹேந்திரன் முகத்தைச் சுளித்துக்கொண்டு கோபத்துடன் சாப்பிட உட்கார்ந்தான்.

"இது என்ன மஹேன், ஒன்றையுமே தொட வில்லையே?" என்றாள் விநோதினி. அதற்குள் ராஜலக்ஷ்மி கவலையுடன், "உடம்பு சரியாயில்லையா?" என்றாள்.

விநோதினி, "இவ்வளவு சிரமப்பட்டு நான் சமையல் செய்திருக்கிறேன். கொஞ்சம் சாப்பிடத்தான் வேண்டும் —ஒருவேளை நன்றாய்ச் செய்யவில்லையோ என்னவோ? அப்படியானால் வேண்டாம்; எறிந்துவிடுங்கள். நான் சொல்வதற்காகப் பலவந்தமாய்ச் சாப்பிடவேண்டாம்" என்று இவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும்போதே மஹேந்திரன் தட்டில் ஒன்றுவிடாது எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்து, "எனக்குப் பிடித்தவாறு இவ்வளவு பக்குவமாய் எல்லாம் செய்திருக்கும்போது நீ சாப்பிடாதே யென்றாலும் நான் கேட்பேனா?" என்று சொல்லி ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

போஜனம் முடிந்து மூவரும் உட்கார்ந்திருந்தனர். மஹேந்திரன் புஸ்தகம் படித்துக் காட்டுவதாகச் சொன்ன பிரஸ்தாபத்தை எடுக்கவில்லை.

ராஜலக்ஷ்மி: மஹேந்ரன், ஏதோ படித்துக் காட்டப் போவதாகச் சொன்னாயே; என்ன படிக்கப்போகிறாய்?

மஹேந்: அம்மா, அந்தப் புஸ்தகத்தில் ராமர், கிருஷ்ணர், பகவான் யாரைப்பற்றியும் ஒன்றும் இராது. உனக்கு அதெல்லாம் பிடிக்கவும் பிடிக்காது.

பிடிக்காதாவது! பாவம், மகன் தனியாயிருக்கிறான். அவனைச் சந்தோஷமாயிருக்கச் செய்வது தனது கடமை. அவன் படிப்பது புரியட்டும் புரியாதிருக்கட்டும்; அது எந்தப் பாஷையாகவாவது இருக்கட்டும்; அன்று உட்கார்ந்து கேட்பதென்று நிச்சயித்திருந்தாள் ராஜலக்ஷ்மி.

விநோ: மஹேந்ரன், நான் சொல்வதைக் கேளுங்கள். சித்தியின் அறையில் வங்காளி சாந்தி சதகம் இருக்கிறது. மற்றப் புஸ்தகங்கள் எல்லாம் வேண்டியதில்லை. அதைப் படித்தால் சித்திக்கும் பிடிக்கும்; பொழுதும் போகும்.

மஹேந்திரன் பரிதபித்த பார்வையுடன் அவளை நோக்கினான். அச்சமயம் வேலைக்காரி வந்து பக்கத்து வீட்டுப் பாட்டி ராஜலக்ஷ்மியைக் காண வந்திருப்பதாகச் சொன்னாள். அக்கிழவி ராஜலக்ஷ்மியின் பரம சிநேகிதி. தினம் ஒருமுறை அவளைக் காணாவிடில் ராஜலக்ஷ்மிக்குத் தூக்கமே வராது. அப்படியிருந்தும் இன்று அவள் தன் புத்திரனைச் சந்தோஷப்படுத்த வேண்டி, "இன்று காண முடியாது. நாளைக்கு அவளை அவசியம் நான் வரச் சொல்வதாகச் சொல்" என்று ஆளிடம் சொல்லியனுப்பி விட்டாள்.

மஹேந்திரன் உடனே, "ஏன். அம்மா? போய்ப் பார்த்துப் பேசிவிட்டுத்தான் வாயேன்" என்றான்.

விநோதினி, "அம்மா, நீங்கள் இங்கேயே இருங்கள். நானே கீழேபோய் அவனுடன் பேசிவிட்டு வருகிறேன்" என்று சொல்லி எழுந்தாள்.

ராஜலக்ஷ்மியால் அந்தப் பாட்டியைப் பாராதிருக்கவும் முடியவில்லை. "இல்லை, இல்லை. நீ இங்கேயே இரு. மஹேந்திரன் படிக்க ஆரம்பிக்கட்டும். நான் போய் இரண்டொரு வார்த்தைகள் பேசி அவனை அனுப்பிவிட்டுவரப் பார்க்கிறேன். எனக்காகக் காத்துக்கொண்டு இருக்கவேண்டாம்" என்று சொல்லி எழுந்து போனாள்.

மஹேந்திரனால் பொறுக்கமுடியவில்லை. "விநோதினி, வேண்டுமென்றே என்னை ஏன் இப்படி வருத்துகிறாய்?" என்றான்.

விநோதினி ஆச்சரியத்துடன், "வருத்துகிறேனா! நான் இங்கிருப்பதே உங்களுக்குக் கஷ்டமாயிருந்தால் இதோ நான் போய்விடுகிறேன்" என்று எழுந்தாள்.

மஹேந்திரன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "இந்தமாதிரியேதான் நீ என்னை வாட்டி எரிக்கிறாய்" என்றான்.

விநோ: அடேயப்பா, எரிக்கும் சக்திகூட எனக்கு இருக்கிறதா! நீங்களும் ஒன்றும் சாமானியரல்ல. எதையும் தாங்கக்கூடிய வன்னெஞ்சமுடையவரே. முகத்தைப் பார்த்தால் ஒன்றும் வாடி வருந்திப் போய்விட்டதாகத் தெரியக் காணோம்.

மஹேந்திரன் துடிக்கும் தன் மார்பின்மீது விநோதினியின் கைகளைப் பிடித்து இழுத்துவைத்து, "முகத்தில் என்ன தெரியும்? இதோ பார்" என்றான்.

விநோதினி வீரிட்டுக் கத்தியதும் மஹேந்திரன் பயந்துபோய் அவள் கையை விட்டு விட்டு, "என்ன? என்ன?" என்று பரபரப்புடன் கேட்டான்.

விஹாரி வந்த அன்று அவளுக்குப் பட்ட காயத்திலிருந்து இன்னமும் ரத்தம் வடிவதைக் கண்டு மனம் பதைக்க, "நான் பார்க்கவில்லை; மறந்துவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும். இதோ இப்பொழுதே மருந்து கொண்டுவந்து போடுகிறேன்" என்றான்.

விநோதினி பிடிவாதமாய், "மருந்து ஒன்றும் வேண்டாம். அது தானே ஆறட்டும்" என்றாள்.

மஹேந்: ஏன்?

விநோ: அதைப்பற்றி உங்களுக்கு என்ன? அடி பட்டது அப்படியே இருக்கட்டும்.

"ஆமாம், ஸ்திரீகளின் மன ஆழத்தை அறியக் கடவுளாலும் முடியாதென்பது உண்மைதான்! அப்படியிருக்கச் சாதாரண மனிதனால் எங்கே முடியப்போகிறது?" என்று தானே சொல்லிக்கொண்டான் மஹேந்திரன்.

விநோதினி போகும்போது மஹேந்திரன் அவளைத் தடுக்கவில்லை. அவளும் உள்ளே வேலையிருக்கிறதென்று சொல்லிப் போய்விட்டாள். உடனே, 'ஏன் அவளைப் போகவிட்டோம்! கீழேபோய்க் கூட்டி வரலாமா மறுபடியும்?' என்று நினைத்து ஓர் அடி எடுத்துவைத்தான். அதற்குள் மனம் மாறியது. அறைக்குள்ளேயே முன்னும் பின்னும் உலாவியவாறு யோசிக்கலானான்.

தான் மஹா பரிசுத்தமானவன், தன்னை அசைக்க யாராலும் முடியாதென்றிருந்த எண்ணமெல்லாம் இப்பொழுது பறந்து போயின. அதோடு தனக்குப் பிறரை

வசப்படுத்தக்கூடிய சக்தி இருப்பதாக இறுமாந்ததும் மண்ணாயிற்று. 'விநோதினி நம்மைத் தன் இஷ்டப்படி யெல்லாம் ஆட்டிவைத்தும் தன் அருகே மாத்திரம் நெருங்க விடவில்லை. நாம் இது ஒன்றில்தான் தோற்று விட்டோம். நம்முடைய மரியாதையை இழந்தும் பிரதி பலன் ஒன்றையும் காணோம்' என்று நினைத்தான்.

விஹாரிக்கு அடிக்கடி அவன் இலாகாவில் நல்லதேன் கிடைக்கும். அதை அவன் ராஜலக்ஷ்மிக்கும் கொண்டு வந்து கொடுப்பதுண்டு. இப்பொழுதும் அவன் அப்படியே ஆளிடம் கொடுத்தனுப்பியிருந்தான். விநோதினி தேனை வாங்கி உள்ளே வைத்துவிட்டு ராஜலக்ஷ்மியிடம் இதைத் தெரிவித்து மிகவும் அனுதாபத்துடன், "அம்மா, விஹாரி பாபுவுக்கு உற்றார், உறவினர், பெற்றோர், எவரும் இல்லை. அவர் சிறுவயது முதல் உங்களையே தாயென்று மதிக்கப் போற்றி வருகிறார்" என்றாள்.

ராஜலக்ஷ்மி விஹாரியை நேசித்தாலும் மஹேந்திரனை நேசிப்பது போன்று ஒருநாளும் அவனிடம் அன்பு பாராட்டியதில்லை. இன்று விநோதினி 'நீதான் அவனுக்குத் தாய்' என்று சொன்னது அவளுக்கு அவன்பாலுள்ள அன்பை அதிகரிக்கச் செய்தது. தான் சற்று நோயுற்றாலும் அவன் குறிப்பறிந்து பணிவிடை செய்ததெல்லாம் அவள் ஞாபகத்திற்கு வந்தன. சிறிதும் நன்றியறிதல் இன்றித் தான் இப்படி அவனை மறந்திருப்பதற்காகத் தன்னையே நொந்து கொண்டாள் ராஜலக்ஷ்மி. வீட்டிலிருந்தவரை அன்னபூர்ணி விஹாரியிடம் மிகவும் அன்புகாட்டியது ராஜலக்ஷ்மியின் கண்ணை உறுத்தியது. இப்பொழுதோ தன் குற்றம் தன்னையே சுடவே ராஜலக்ஷ்மி பெருமூச்செறிந்து

கொண்டே, "விஹாரிக்கு நான் மிகவுட —மைப்பட்டிருக் கிறேன். என் புத்திரனைக் காட்டிலும் அவன் எனக்கு அதிக அன்புடனும் ஆதரவுடனும் ஊழியம் புரிந்திருக் கிறான். யாதொரு பிரதிபலனும் அடையாவிடினும் அவ னுக்கு என்மீது பக்தியும் அன்பும் ஒருநாளும் மாறியது இல்லை" என்று உள்ளுறச் சொல்லிக்கொண்டாள்.

விநோதினி, "அம்மா, உங்கள் கைச்சமையல் என்றால் அவருக்கு எவ்வளவு இஷ்டம்!" என்றாள்.

இதைக் கேட்டதும் ராஜலக்ஷ்மிக்குப் பெருமை தாங்கவில்லை. அவள் உடனே, "அவனுக்கு வேறு யாரு டைய சமையலும் பிடிக்காது" என்று மொழிந்தாள். வெகுநாட்களாக விஹாரி வீட்டுப்பக்கம் வராதது அவள் மனத்தை வருத்தியது. "இதற்குக் காரணம் ஏதா யிருக்கலாம்?" என்று அவள் விநோதினியைக் கேட் டாள்.

விநோதினி, "நானும் அதேதான் யோசித்துக் கொண் டிருக்கிறேன். உங்கள் பிள்ளையோ விவாகமானது முதல் மனைவியின் வலையில் மயங்கி விழுந்து உற்றார் நண்பர் யாரையும் கவனிப்பது இல்லை. அப்படியிருந்தால் யார் வருவார்கள்?" என்றாள்.

ராஜலக்ஷ்மிக்கும் அவள் சொல்வது சரியென்றே தோன்றியது. அவளுடைய எண்ணத்திற்கும் அனுபவத் திற்கும் இது ஒத்ததாயிருந்தது. தன்னலம் சிறிதுமின்றி மஹேந்திரனது நன்மைக்காகவே உழைத்த விஹாரியி னிடம் அவளுக்கு இரக்கம் அதிகரித்தது. அவனிடம் மஹேந்திரன் இப்படிப் பராமுகமாயிருப்பது அநியாய மென்று கருதினாள்.

விநோதினி, "நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. அவரை இங்கேயே சாப்பிட வருமாறு அழைத்தால் அவருக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்" என்றாள்.

ராஜலக்ஷ்மி: நீ சொல்வது மிகவும் சரி. மஹேந்திரனிடம் சொல்லி அவனுக்கு ஒரு சீட்டு எழுதி அனுப்பச் சொல்லலாம்.

விநோ: நீங்களே அனுப்பிவிடுங்களேன்.

ராஜலக்ஷ்மி: எனக்கு என்ன எழுதப் படிக்கவா தெரியும்?

விநோதினி, "உங்களுக்காக நானே எழுதுகிறேன்" என்று சொல்லி ராஜலக்ஷ்மியின் பெயரால் தானே ஒரு கடிதம் எழுதி விஹாரிக்கு அனுப்பிவைத்தாள்.

மஹேந்திரன் அந்த ஞாயிற்றுக்கிழமையை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். சனிக்கிழமை இரவிலிருந்தே அவன் அதைப்பற்றிக் கற்பனை செய்து ஆனந்தித்தான். அவனது மனோரதம் எதுவும் இதுவரை ஈடேறாவிடினும் அவன் அதனால் ஏமாற்றமடையவில்லை. ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்திருந்ததுமே எல்லாம் ஆனந்தமயமாகவும் ரம்மியமாகவும் காணப்பட்டன அவனுக்கு.

ஆனால் இது என்ன விசேஷம் இன்று? இன்று நோன்பு, பண்டிகை ஒன்றும் இல்லாதிருக்கவும் ராஜலக்ஷ்மி என்றுமில்லாத சுறுசுறுப்போடு விநோதினியுடன் சமையலறையில் வேலை செய்துகொண்டிருக்கக் கண்டான். தடபுடலாய் வேலை நடந்துகொண்டிருந்தது. மணி பத்தடித்தும் விநோதினியின் தரிசனம் ஒரு முறையாவது கிடைக்கவில்லை. மஹேந்திரனால் பொறுக்க முடியவில்லை. கீழே

இறங்கிவந்தான். ராஜலக்ஷ்மி விதவிதமாய்ப் பக்ஷணங்கள் செய்துகொண்டிருந்தாள். விநோதினி ஓடியாடி ஒரு நிமிஷம் நில்லாமல் அவளுக்கு வேண்டிய உதவி செய்துகொண்டிருந்தாள். "என்ன விசேஷம் இன்று? இவ்வளவு தடபுடல் எதற்கு?" என்று கேட்டான் மஹேந்திரன்.

ராஜலக்ஷ்மி ஆச்சரியத்துடன், "என்ன, விநோதினி உனக்குச் சொல்லவில்லையா! விஹாரிக்கு இங்கே இன்று விருந்து" என்றாள்.

இதைக் கேட்டதும் மஹேந்திரனுக்குத் தேகம் முழுவதும் பற்றியெரிவதுபோல் இருந்தது. "அம்மா, நான் இன்று இங்கே இருக்கமுடியாது" என்றான்.

ராஜலக்ஷ்மி திடுக்கிட்டு, "ஏன், எங்கே போக வேண்டும்?" என்று கேட்டாள்.

மஹேந்: முக்கிய வேலையாய்ச் சிநேகிதன் ஒருவன் வீட்டிற்குச் செல்லவேண்டும்.

ராஜலக்ஷ்மி: இதோ சமையலாகிவிட்டது. சாப்பிட்டே போகலாம்.

மஹேந்: எனக்குச் சாப்பாடும் இன்று அங்கேயே தான்.

விநோதினி மஹேந்திரனை ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டு ராஜலக்ஷ்மியிடம், "சிநேகிதர் வீட்டில் விருந்துக்கு அழைத்திருந்தால் போகட்டுமே. விஹாரி பாபு மாத்திரம் தனியாகவே சாப்பிடுகிறார்" என்றாள்.

ஆனால் தாயின் மனம் கேட்கவில்லை. தன் கையால் அன்று விதவிதமாய்ச் சமைத்திருக்க, மஹேந்திரன் அவற்றை உண்ணவிடில் அவளுக்குத் திருப்தியேது? பல

விதமாய் அவனை வேண்டினாள். அவள் வேண்ட வேண்ட மஹேந்திரனும் பிடிவாதமாய், "நான் சிநேகிதன் வீட்டிற்குத்தான் சாப்பாட்டிற்குப் போவேன்" என்றான்.

"விஹாரியை அழைப்பதற்கு முன் எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை?" என்றெல்லாம் தாயைக் கடிந்து கொண்டான்.

தன் தாயைத் தண்டிக்கவேண்டியே மஹேந்திரன் இப்படிப் பேசினான். ராஜலக்ஷ்மிக்கு அன்றிருந்த உற்சாகமெல்லாம் பறந்து போயிற்று. அவள் மனமொடிந்தாள்.

"அம்மா, நீங்கள் வருந்தாதேயுங்கள். மஹேன் சொல்வதெல்லாம் வீண்புரட்டு. அவர் இன்று வெளியில் எங்கும் போஜனத்திற்காகச் செல்லப் போவதில்லை" என்றாள் விநோதினி.

ராஜலக்ஷ்மி: உனக்கு அவன் குணம் தெரியாது. அவன் பிடித்ததைச் சாதித்தே தீருவான்.

ஆனால் முடிவில் விநோதினி சொன்னதுதான் நடந்தது. ராஜலக்ஷ்மியைக் காட்டிலும் அவள் மஹேந்திரனை நன்கு அறிந்திருந்தாள். அவள்தான் அன்றைய விருந்திற்குக் காரணமென்று மஹேந்திரன் நன்றாய் அறிந்து கொள்ளவே, அவன் மனத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அன்று விஹாரியும் விநோதினியும் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ளுகிறார் என்பதைப் பார்ப்பதற்காகவாவது அவன் வீட்டில் இருக்க வேண்டுமல்லவா? அதனால் இன்னும் மனமெரிந்தாலும் பாதகமில்லை, வீட்டிலேயேதான் இருப்பது என்று நிச்சயித்துக் கொண்டான்.

வெகுநாட் கழித்துப் புதுவிருந்தாளி போல் விஹாரி அன்று வந்து சேர்ந்தான். அவ்வீட்டுப் பிள்ளையைப் போல் வளர்ந்த இடம், விளையாடிய இடம் இவற்றைக் காண அவனுக்கு மனவெழுச்சி ஏற்பட்டது. தன்னை அறியாமல் அவன் கண்களில் நீர் பெருகியது. உடனே கண்களைத் துடைத்துக்கொண்டு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான். முகத்தில் புன்னகை தவழ உள்ளே நுழைந்தான். ராஜலக்ஷ்மியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். தினமும் வந்துகொண்டிருந்த நாட்களில் அவன் இப்படிச் செய்ததில்லை. வெகுநாளைக்குப் பிறகு இன்று அவளைக் கண்டது அவனை அப்படிச் செய்யத் தூண்டியது. ராஜலக்ஷ்மியும் அவனை மனமார ஆசீர்வதித்து வாழ்த்தி, "விஹாரி, இவ்வளவு நாட்களாய் ஏன் வரவில்லை? ஒவ்வொருநாளும் நீ வரமாட்டாயாவென்று நான் எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தேனே" என்றாள்.

விஹாரி சிரித்துக்கொண்டே, "தினமும் வந்தால் என்னை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கமாட்டீர்களல்லவா? மஹேந்திரன் எங்கே?" என்றான்.

ராஜலக்ஷ்மி முகவாட்டத்துடன், "தவிர்க்கமுடியாத முக்கிய அலுவலாய் வேறு எங்கோ சாப்பிடப் போயிருக்கிறான்" என்றாள்.

விஹாரியின் மனம் புண்பட்டது. சிறுவயது முதல் கொண்ட தோழமைக்கு இதுதானா பலன் என்று வருந்தினான். தனது வருத்தத்தை மறைக்க முயன்றான். "அம்மா, இன்று எனக்காக என்ன என்ன செய்திருக்கிறீர்கள்? சொல்லுங்களேன், கேட்போம்" என்று வேடிக்கையாக மொழிந்தான்.

ராஜலக்ஷ்மியின் சமையலைப்பற்றிப் புகழ்வதில் அவனுக்கு எப்பொழுதும் ஒரு தனி ஸந்தோஷம். இதில் ராஜலக்ஷ்மிக்கும் அபார ஸந்தோஷம். இன்றும் அவன் வழக்கம்போல் இப்படியே பேசி ராஜலக்ஷ்மியைக் களிப்பித்தான்.

அச்சமயம் மஹேந்திரன் அங்கே தோன்றி, "என்ன விஹாரி, சௌக்கியமா?" என்று கேட்டான்.

ராஜலக்ஷ்மி திடுக்கிட்டு, "நீ இன்னும் சாப்பிடப் போகவில்லையா?" என்றாள்.

மஹேந்திரனுக்கு வெட்கம். ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு, "இல்லை; 'வரமுடியாது, முக்கிய வேலை யிருக்கிறது' என்று எழுதி அனுப்பிவிட்டேன்" என்றான்.

விநோதினியும் அப்பொழுது வந்துசேர்ந்தாள். ஆனால் விஹாரி அவளுடன் ஒன்றும் பேசவில்லை. மஹேந்திரனும் விநோதினியும் சேர்ந்து அளித்த அன்றைய காட்சி விஹாரியின் மனத்தைவிட்டு அகலவில்லை.

விநோதினி விஹாரியின் அருகில் நின்றுகொண்டு, "என்னை அடையாளமே தெரியவில்லைபோல் இருக்கிறது!" என்றாள்.

விஹாரி: எல்லாரையுமா எப்படி நினைவில் வைத்துக் கொள்ள முடியும்?

விநோ: முடியாமல் என்ன? மனமுண்டானால் முடியும்!

நண்பர்கள் இருவரும் போஜனத்திற்கு உட்கார்ந்தனர். ராஜலக்ஷ்மி பக்கத்தில் உட்கார்ந்து அவர்களுக்கு எல்லாம் பரிமாறும்படி சொல்லிக்கொண்டிருந்தாள்.

விநோதினி பரிமாறிக்கொண்டிருந்தாள். மஹேந்திரனது மனம் அன்று சாப்பாட்டின் மீது செல்லவில்லை. விநோதினி விஹாரிக்கு எப்படிப் பரிமாறுகிறாள், அவனுக்கு எதைது அதிகம் போடுகிறாள், எவ்வளவு ஆதரவுடன் போடுகிறாள், அதனால் அவள் அடையும் இன்பம் என்ன, இவற்றையே கவனித்துக்கொண்டிருந்தான். விஹாரிக்கு அதிக உபசாரம் நடப்பதைக் காணும்போது அவனுக்குப் பொறாமை உண்டாயிற்று. ஆனால் தான் வீட்டிலேயே இருப்பவன், விஹாரியோ விருந்தாளி என்று இதற்குச் சமாதானம் கூறப்படும் என்பதை அவன் அறிவான்.

அன்று அதிகமாயிருந்த அரிதான தின்பண்டமொன்றை விநோதினி விஹாரியின் இலையில் போடப் போனாள். அதற்குள் அவன், "மஹேந்திரனுக்கு இது அதிகம் பிடிக்கும். எனக்கு வேண்டாம்; அவனுக்குப் போடு" என்றான்.

மஹேந்திரன போட்டுக்கொள்வான்! அவன், "எனக்கு வேண்டாம்" என்றான். கடைசியில் விநோதினி அதை விஹாரிக்கே போட்டுவிட்டாள். மஹேந்திரனின் மனத்தை இதுவும் சேர்ந்து உறுத்தியது.

சாப்பாடு முடிந்தது. விஹாரி வீட்டிற்குச் செல்ல எழுந்திருந்தான். அதற்குள் விநோதினி, "விஹாரிபாபு, இப்பொழுதே போகவேண்டாம். சற்று மாடியில் போய் உட்காருங்கள்" என்றாள்.

விஹாரி: இன்னும் சாப்பிடப் போகவில்லையா?

விநோ: இல்லை. இன்று ஏகாதசி.

விஹாரியின் முகத்தில் ஒரு பரிகாசச் சிரிப்புக் காணப்பட்டது. விநோதினியைப் பார்த்து 'உனக்கு இதுவும் வேண்டியிருக்கிறதா?' என்று சொல்வதுபோல் இருந்தது அச்சிரிப்பு.

விநோதினி அதை அறியாமலில்லை. அவனால் தனது கையில் ஏற்பட்ட காயத்தை எப்படிச் சகித்துக்கொண்டாளோ அப்படியே அதையும் பொறுத்துக்கொண்டாள். அவள், அவனை எப்படியாவது சற்றுநேரம் இருந்துவிட்டுப் போகுமாறு வேண்டினாள். அதற்குள் மஹேந்திரன் சினத்துடன், "உங்களுக்கெல்லாம் புத்தியே கிடையாது. வேலையோ வேலையில்லையோ, விருப்பமோ விருப்பமில்லையோ, நீங்கள் சொல்வதுபோலெல்லாம் செய்தாக வேண்டும்போலிருக்கிறது. இவ்வளவு அதிக ஆதரவிற்கு அர்த்தமே எனக்குப் புரியவில்லை" என்றான் விநோதினியைப் பார்த்து.

விநோதினி உரக்கச் சிரித்து விஹாரியினிடம், "கேட்டீர்களா, உங்கள் நண்பர் பேச்சை? ஆதரவிற்கு அர்த்தம் தெரியவில்லையாம்! அகராதியில் ஆதரவிற்கு அர்த்தம் ஆதரவுதான்! வேறென்ன? (மஹேந்திரனைப் பார்த்து) அதிக ஆதரவிற்கு அர்த்தமும் உங்களுக்குத் தெரியாமலிராதென்று நம்புகிறேன்" என்றாள்.

விஹாரி விநோதினிக்கு ஒரு பதிலும் சொல்லவில்லை. "உன்னிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும். சற்று வெளியே வா" என்று மஹேந்திரனை அழைத்துக்கொண்டு அவன் வெளியே சென்றான். விநோதினி வெட்டவெளியைப் பார்த்துக்கொண்டு அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

வெளியே வந்த விஹாரி, "நண்பா, நமது நட்பு இப்படியா முறிய வேண்டும்?" என்று வருந்திக் கேட்டான்.

விநோதினியின் சொற்களால் மஹேந்திரனின் மனம் இன்னமும் புழுங்கிக்கொண்டிருந்தது. அவன் எரிச்சலுடன், "நட்பு முறிந்தால் உனக்கு நல்லதுதான். ஆனால் எனக்கு அப்படியில்லை. ஆனாலும் எனது வீட்டு விஷயங்களில் பிறரொருவரும் தலையிட நான் இடங்கொடுக்கப் போவதில்லை" என்றான்.

விஹாரி பதில் பேசாமல் சென்றுவிட்டான்.

மஹேந்திரன் உள்ளத்தில் பொறாமைத்தீ சுடர்விட்டு எரிந்தது. இனி விநோதினியின் முகத்திலேயே விழிக்கக் கூடாதென்று நினைத்தான். ஆனால் அவ்வளவு மனோதிடம் ஏது? சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வெண்ணம் மாயமாய் மறைந்தது. அவளைக் காண்பதற்கு மனம் துடித்தது. குட்டிபோட்ட பூனைபோல் மேலுக்கும் கீழிற்கும் சுற்றிக் கொண்டிருந்தான்.

---

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

"சித்தி, எப்பொழுதாவது நீ சித்தப்பாவைப் பற்றி நினைப்பதுண்டா?" என்று ஆசா அன்னபூரணியைக் கேட்டாள்.

அன்ன: அம்மா, நான் பதினோராவது வயதிலேயே விதவையாகிவிட்டேன். என் புருஷரின் உருவச் சாயை கனவிலே கண்டதுபோல் ஞாபகத்திற்கு வருகிறது.

ஆசா: பின் நீ யாரைப்பற்றிய தியானத்தில் சதா ஆழ்ந்திருக்கிறாய்?

அன்ன: என் புருஷர் யாருடைய சரணாரவிந்தத்தை அடைந்தாரோ அப்பகவானைப் பற்றித்தான் சதா தியானிக்கிறேன்.

ஆசா: இதனால் உனக்கு என்ன சுகம் கிடைக்கிறது?

அன்னபூரணி, ஆசாவின் தோள்மேல் அன்புடன் கையைவைத்து, "குழந்தாய், எனது மனோநிலையை நீ எப்படி அறிவாய்? நான் எப்படிப் பகவானை அறிகிறேனோ அப்படியே அவரும் என்னை அறிகிறார்" என்றாள்.

'நானும் இரவு பகலாக என் புருஷரைப்பற்றிய நினைவாகவே இருக்கிறேன்; ஆனால் அவர் என் மனோ நிலையை அறிவாரா? எனக்கு நன்றாகக் கடிதம் எழுதக் கூடத் தெரியவில்லை யென்றுதான் பதில்கூட எழுத வில்லையோ?' என்று ஆசா சிந்திக்கலானாள்.

அவளுக்கு மஹேந்திரனிடமிருந்து கடிதமே வர வில்லை. 'ஆஹா, என் தோழி மாத்திரம் என் அருகில் இருந்தால் என்மனோநிலையை அறிந்து அப்படியே கடிதம் எழுதிவைத்திருப்பாளே' என்று ஆசா எண்ணி வருந் தினாள்.

மனத்தில் இருப்பதை அப்படியே எடுத்து விளக்கி நன்றாய்க் கடிதம் எழுதவேண்டுமென்று ஆசா எவ்வளவோ முயன்றாள். எழுத்து நன்றா யிருக்க வேண்டுமென்று எவ்வளவு பாடுபட்டும் அது சர்வகோணலாகவே வரும். தனது மன நிலையை விளக்கவோ அவளுக்கு வார்த்தைகளே அகப்படா. 'என் காதல்' என்று ஆரம்பித்து உடனே கீழே கையெழுத்தும் போட்டுத் தான் எழுதும் கடிதங்

களிலிருந்து அவளது உள்ளத்தை அறியக்கூடிய சக்தி மஹேந்திரனுக்கு இருக்குமானல் அப்போது அவற்றால் பயனுண்டு என்று ஆசா நினைத்தாள். இவ்வளவு அன்பை யளித்த பகவான் அதைச் சொற்களால் விளக்க அவளுக்குப் பாஷா ஞானம் ஏன் அளிக்கவில்லையோ?

சாயங்கால ஜபம் முடிந்து அன்னபூரணி உட்கார்ந்திருந்தாள். அருகில் மெள்ள அவள் காலைப் பிடித்துக் கொண்டு ஆசாவும் உட்கார்ந்திருந்தாள். சிறிதுநேரம் பேசாதிருந்து பிறகு அவள், "சித்தி, புருஷனைத் தெய்வமென்று நினைத்து வழிபட வேண்டுமென்று நீ சொல்லுகிறாயே. மனைவி அறிவற்றவளாயும் கணவனை வழிபடத் தெரியாத மூடமாயுமிருந்தால் என்ன செய்வது?" என்று கேட்டாள்.

அன்னபூரணி ஆசாவின் முகத்தைச் சற்று உற்று நோக்கினாள். பிறகு அன்பு ததும்ப, "குழந்தாய், நானும் அறிவிலிதான்; ஆனாலும் கடவுளைப் பூஜித்து வழிபட்டுத்தான் வருகிறேன்" என்றாள்.

ஆசா: கடவுள் உன் மனத்தை அறிவார்போல் இருக்கிறது. அதனால் உனது வழிபாட்டால் அவர் சந்தோஷம் அடையலாம். வேறு ஒரு முழுமூடத்தின் பக்தியால் அவர் சந்தோஷமடையா விட்டாலோ?

அன்ன: எல்லாரையும் திருப்திப்படுத்துவதென்பது யாவராலும் முடியாது. பத்தினி தன் பதிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை வழுவின்றிப் பக்தியுடன் செய்வாளானால் ஒருவேளை அக்கணவன் அவளது சேவையைத் திரஸ்கரித்தாலும், கடவுள் அச்சமயம் அதைத் தாமே ஏற்று அவ்வுத்தமியை ரட்சிப்பார்.

ஆசா பதில் பேசவில்லை. அன்னபூரணி சொல்வதன் அர்த்தமே அவளுக்கு விளங்கவில்லை. அதனால் அவள் மனத்திற்குச் சாந்தியோ சமாதானமோ ஏற்படவில்லை. கணவன் திரஸ்கரித்த சேவையைக் கடவுள் எப்படி ஏற்கக் கூடுமென்று திகைத்தாள்.

அன்னபூரணி அவளை அருகில் அணைத்து முத்த மிட்டு, "கண்ணே, கஷ்டத்தினால் ஏற்படும் அநுபவமும் நீதியும் பேசிக் கேட்பதனால் மட்டும் ஒருநாளும் ஏற்படா. உன்னைப்போன்ற வயதில் நானும் வாழ்வில் அநேக கஷ்டங் களை அனுபவித்தேன். எவ்வளவோ பாடுபட்டும் எனது சேவையால் யாரும் திருப்தியடைந்ததாக எனக்குத் தெரிய வில்லை. நான் நன்மையையே செய்தாலும் அது அவர் களுக்குத் தீமையாகவே தோன்றும். எனது பிரயாசை யெல்லாம் வீணென்று தோன்றவே வாழ்விலேயேவெறுப்பு உண்டாயிற்று. குடும்ப பந்தத்திலிருந்து விலகிக் காசிக்கு வந்துவிட்டேன். ஆனால் இப்பொழுது என் எண்ணம் அப்படியில்லை. எனது மனச்சாட்சிக்கு விரோதமாக நான் எதுவும் செய்யவில்லை. நான் எனது கடமையைச் சரிவர நிறைவேற்றிவிட்டேன். இனிக் கடவுளின் ஆக்ஞைப்படி நடக்கட்டும். என்னையே நான் கடவுளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். இனி எனக்குச் சுகதுக்கம் எல்லாம் ஒன்றுதான்" என்றாள்.

அன்று இரவு முழுதும் ஆசாவுக்கு ஒரே குழப்பந் தான். அன்னபூரணி சொல்லியதில் அநேக விஷயம் அவள் புத்திக்கு எட்டவில்லை. ஆனாலும், மனித யத்தனத்தையும் மீறிய சக்தி ஒன்று இருப்பதையும் அதுதான் கடவுள் என்பதையும் அறிந்தாள். சர்வவல்லமையுள்ள அக்கடவு ளைப் பன்முறையும் மனமார வணங்கினாள். களங்கமற்ற

தன்மையுடன் அவள், "ஹே சர்வரக்ஷகா, எனக்கு உன்னை அறியும் சக்தி இல்லை. எனக்கு என் பதிதான் தெய்வம். நான் இப்படி நினைப்பது தவறானால் க்ஷமிக்கவேண்டும். என் பணிவிடையை ஏற்குமாறு என் கணவருக்கு நீதான் புத்தி புகட்டவேண்டும். அவர் அதை ஏற்காவிடில் நான் மனமுடைந்து மரிக்கவேண்டியதுதான். என் சித்தியைப் போல் நான் புண்ணியாத்மா அல்ல. உன்னையே சரணமென்று நம்பி வாழ எனக்குத் தெரியாது. எனது மனோரதத்தை ஈடேற்றவேண்டும்" என்று கடவுளைத் துதித்தாள்.

அவளுடைய பெரியப்பா கல்கத்தாவுக்குத் திரும்பி வரப் புறப்பட்டார். ஆசாவும் அவர்கூடப் புறப்படத் தயாரானாள். புறப்படுவதற்குமுன் அன்னபூரணி அவளைத் தழுவி முத்தமிட்டு, "ஆசா, உலகத்தின் கஷ்ட துக்கங்கள் உன்னை அணுகாமல் தடுக்க எனக்குச் சக்தியில்லை. ஒன்று மாத்திரம் மறக்காதே; என்ன கஷ்டம் வந்தபோதிலும் தைரியத்தைமட்டும் இழக்காமல் திடமாய் உனது கடமையைச் செய்து வா" என்றாள்.

"உன் ஆசீர்வாதத்தால் அப்படியே நடப்பேன்" என்று சொல்லி ஆசா அன்னபூரணியை நமஸ்கரிக்கப் புறப்பட்டாள்.

---

## முப்பதாம் அத்தியாயம்

ஆசா கல்கத்தா வந்து சேர்ந்தாள். "இத்தனை நாள் ஊருக்குப் போய் இருந்தாய்; ஒரு கடிதம் எழுதினால் என்ன?" என்றாள் விநோதினி.

ஆசா: நீ ஏன் எழுதவில்லை?

விநோ: நான் ஏன் எழுதுவேன்? நீ தானே முதலில் எழுதுவதாகச் சொன்னாய்?

ஆசா வெட்கித் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டாள். "சகோதரி, எனக்கு நன்றாய் எழுதத் தெரியாதென்று உனக்குத்தான் தெரியுமே. அதுவும் கல்வியில் தேர்ந்த உன்போன்றவளுக்கு எழுத எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றாள்.

தோழிகள் இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டனர்.

விநோ: சதா கணவருடன் கூடவே யிருந்து நீ அவரை நன்றாகக் கெடுத்து வைத்திருக்கிறாயடீ, அம்மா! அதனால்தான் அவர் யாராவது தம்மோடு இருந்து கொண்டே இருக்கவேண்டும் என்கிறார்.

ஆசா: நான் உன்னிடம் அவரை ஒப்பித்தது அதற்காகத்தான்; கூட இருந்து என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்பதெல்லாம் உனக்குத் தெரியுமென்றுதான்.

விநோ: பகலில் என்னவோ காலேஜிற்குச் சென்றுவிடுவார். சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பிவிட்டால் பாடுதான். படிக்கவேண்டும், பேசவேண்டும், கூடவேயிருக்கவேண்டும்; சதா இதுதான்!

ஆசா: நீ யாவரையும் வசீகரித்து விடுவாய். உன்னை விட்டுப் பிரிய யாருக்குத்தான் மனம் வரும்.

விநோ: பத்திரம்! உன் புருஷனின் நடத்தையைக் காணும்போது எனக்கும் ஒவ்வொரு சமயம் வசீகரண வித்தை நாம் கற்றிருக்கிறோமோ வென்றுகூடச் சந்தேகமாய்த்தான் இருக்கிறது.

ஆசா உரக்கச் சிரித்து, "உனக்கு அந்த வித்தை தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? எனக்கு மாத்திரம் அது சிறிதாவது தெரிந்திருந்தால்—" என்று சொல்லும்போது விநோதினி, "உனக்கு எதற்கு? யார் குடியைக் கெடுக்க? உனக்குக் கிடைத்தவரை நீ ஜாக்ரதை யாகக் காப்பாற்றிக்கொள், போதும். பிறரை வசீகரித்து உனக்கு என்ன ஆகவேண்டும்? அதனால் துன்பந்தான்" என்றாள்.

ஆசா விநோதினியின் வாயைப் பொத்தி, "என்ன உளறுகிறாய்? போதும் வாயை மூடு!" என்றாள்.

காசியிலிருந்து திரும்பிய பிறகு ஆசா மஹேந்திரனைச் சந்தித்ததும் அவன், "சித்தியிடம் போயிருந்த சந்தோஷத்தில் ஒரு சுற்றுப் பருத்து வந்திருக்கிறாயே?" என்றான்.

நாணத்தினால் ஆசாவின் முகம் சிவந்தது. தான் பருத்ததும் அவனுக்கு ஒரு தவறு எனத் தோன்றியது. அவள் பட்ட மனக்கவலை அவனுக்குத் தெரியும். அப்படி யிருந்தும் அம்மோசக்கார சரீரம் தன்னையும் ஏமாற்றிப் பருத்துவிட்டதாக அவள் நினைத்தாள். மனநிலையை வெளியிடச் சொற் சாதுரியந்தான் இல்லையென்றால் சரீரமுமா இப்படி ஏமாற்றவேண்டும் என்று வெட்கி வருந்தினாள். என்ன பேசுவதென்று அவளுக்குத் தெரிய வில்லை. மெள்ள, "நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?" என்றாள்.

முன்பு இப்படி அவள் கேட்டிருந்தால், "நீயின்றி உயிர்தரிக்க முடியவில்லை. செத்தே போய்விட்டேன்" என்றெல்லாம் மஹேந்திரன் வேடிக்கையாகச் சொல்லி

யிருப்பான். ஆனால் இன்று அவனால் வேடிக்கையோ சிரிப்போ கொள்ள முடியவில்லை. "நன்றாய்த்தான் இருக்கிறேன்" என்று சொல்லி நிறுத்திக்கொண்டான்.

ஆசா தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள். முகம் வாடி இளைத்திருந்தான் அவன். சொல்ல முடியாத வேதனையால் வருந்துபவனைப் போல் காணப்பட்டான்.

ஆசாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'நான் ஏன் இவரைவிட்டுக் காசிக்குச் சென்றேன். எனது பிரிவின் துக்கமன்றோ இவரை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது?' என்று தன்னையே நொந்து சபித்துக்கொண்டாள்.

மஹேந்திரனுக்கோ அவளுடன் என்ன பேசுவதென்று தோன்றவில்லை. கடைசியில், "சித்தி சௌக்கியமாயிருக்கிறாளா?" என்றான்.

அதற்குமேல் பேச அவனுக்கு வார்த்தைகளே அகப்படவில்லை. பக்கத்தில் கிடந்த ஒரு பழைய பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு படிப்பது போல் பாவனை செய்தான். தலையைக் குனிந்தவண்ணம் ஆசா மனத்திற்குள்ளாகவே, 'இவ்வளவு நாட்கழித்துச் சந்தித்திருக்கிறோம். மனம் விட்டுப் பேசவுமில்லை. என்பக்கம் திரும்பிக்கூடச் சரியாய்ப் பார்க்கவுமில்லை. என்ன காரணம்? கடிதம் எழுதவில்லையென்று கோபமோ? அல்லது சித்தியிடம் வெகுநாள் தங்கி விட்டேனென்றோ?' என்று எண்ணிக் குற்றம் யாவும் தனதாகவே கருதி வருந்தினாள்.

மஹேந்திரன் காலேஜிற்குப் போய்த் திரும்பியும் வந்துவிட்டான். அன்று ராஜலக்ஷ்மியே அவனுக்குச் சிற்றுண்டி எடுத்துவந்தாள். அவன் வழக்கம்போல்

அன்று உண்ணுததைக் கண்டு ராஜலக்ஷ்மி, "உடம்பு சரியில்லையா?" என்று கேட்டாள்.

மஹேந்திரன் அலக்ஷியமாய், "உடம்பு ஒன்றும் இல்லை" என்றான்.

ராஜலக்ஷ்மி: ஒன்றுமே சாப்பிடவில்லையே; கொண்டு வந்தது அப்படியே இருக்கிறதே?

மஹேந்திரன் சற்றுக் கோபத்துடன், "சாப்பிட்டுக் கொண்டுதானே இருக்கிறேன்!" என்றான்.

சாயங்காலமாயிற்று. அவன் ஒவ்வொரு நிமிஷமும் விநோதினியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். 'ஆனந்தமடம்' என்னும் புத்தகத்தில் இன்னும் இரண்டு மூன்று அத்தியாயங்களே பாக்கியிருந்தன. வழக்கம்போல் படித்துக் காட்டுவதற்கு விநோதினி வருவாளென்றே அவன் நம்பியிருந்தான். அந்திப்பொழுது கழிந்து இரவு வந்துவிட்டது. ஆயினும் விநோதினியைக் காணவில்லை. அவன் ஏமாற்றத்துடன் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டான்.

அன்றிரவு ஆசா மிகவும் வெட்கத்துடன் மெள்ள அறைக்குள் நுழைந்தாள். மஹேந்திரன் அதற்குள்ளாகவே படுத்துத் தூங்கிப் போய்விட்டதைக் கண்டாள். பிரிவிற்குப் பிறகு சயன அறைக்குள் இன்று பிரவேசிப்பது அவளுக்குக் கூச்சமும் நாணமுமாயிருந்தது. அழையாது எப்படிப் புருஷனருகில் போவது எனத் தயங்கினாள். வெகுநேரம் தூரவே நின்றிருந்தாள். மஹேந்திரன் எழுந்திருக்கும் வழியாயில்லை. மெள்ள ஒவ்வோர் அடியாக எடுத்துவைத்துக் கட்டிலின் அருகில் சென்றாள். எங்கே சப்தம் கேட்டு அவன் விழித்துக்கொள்கிறானோ வென்று

பயம். ஓடிப்போய் வேறு அறையில் படுத்துக்கொண்டால் என்னவென்று யோசித்தாள். அதற்கும் மனம் இடங் கொடுக்கவில்லை. கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண் டாள். என்னதான் நித்திரையில் இருந்தபோதிலும் ஆசா பக்கத்தில் படுத்ததை அறியாமல் எப்படி இருக்க முடியும்? ஆனால் மஹேந்திரன் தூங்குவதாகப் பாசாங்கு செய்தானே தவிரத் தூங்கவில்லை. மறுபுறம் திரும்பிக் கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தான். பார்க்காவிடி னும் ஆசா தன் பக்கத்தில் அழுதுகொண்டே படுத் திருப்பதை அவன் உணர்ந்தான். தனது இரக்கமற்ற தன்மை அவன் மனத்தையே பிளந்தது. ஆனாலும் அவளிடம் அன்பாய்ப் பேசுவது எப்படி என்று தவித் தான். தான் இழைக்கும் தவற்றை உணர்ந்தும் அதிலிருந்து விடுபெற வகையறியாது உழன்றான். 'இப் பொழுதாவது தூங்குவதாகப் பாசாங்கு செய்துவிடலாம்; பொழுது விடிந்ததும் அவள் முகத்தில் விழிப்பதெப்படி? பேசுவதெப்படி?' என்று அஞ்சினான்.

அவனை இச்சங்கடத்திலிருந்து விடுவிக்க வேண்டியே போலும், ஆசா பொழுது விடிவதற்கு முன்னமேயே எழுந்து போய் விட்டாள்.

---

## முப்பத்தோராம் அத்தியாயம்

'இப்படியிருக்க என்ன காரணம்? நான் என்ன குற்றம் செய்தேன்?' இவ்வாறு ஆசா எவ்வளவுதான் யோசித்தும் அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை; உண்மைக் காரணம் அவளுக்குப் புலப்படவில்லை. தன் புருஷன் விநோதினியை நேசிக்கிறானென்று அவள் கனவிலும்

எண்ணவில்லை. அநுபவமற்ற பேதைச் சிறுமி; உலக மாயையை அறியாதவள்! தன்னை முழுமனத்துடன் காதலித்த கணவன் வேறொருத்தியைப் பற்றி நினைக்கக் கூடுமென்பது கூட அவள் மனத்தில் எழவில்லை.

மஹேந்திரன் சற்று முன்னதாகவே அன்று காலேஜிற்குப் புறப்பட்டுவிட்டான். அவன் காலேஜ் போக வண்டியேறியதும் ஆசா ஓடிப்போய் ஜன்னலண்டை வந்து, வண்டி கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டு நிற்பது வழக்கம். இன்றும் அப்படியே போய் நின்றாள். மஹேந்திரன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்வது வழக்கம். தற்செயலாய் அவன் அவளை இன்றும் பார்த்தான். அவளுடைய முகம் வாடிக் களையற்றுக் காணப்பட்டது. ஒரு விநாடிதான் அவளைப் பார்த்தான். உடனே தலையைக் குனிந்து கையிலிருந்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான். அவன் முகத்தில் முன்பிருந்த அந்தப் புன்சிரிப்பு, அவ்வன்பு நிறைந்த பார்வை எல்லாம் எங்கோ மாயமாய்ப் போய்விட்டன!

வண்டி மறைந்தது. ஆசா மனம்முறிந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள். அச்சமயம் அவளுக்கு இவ்வுலகமே சாரமற்றதாகவும் சூன்யமாகவும் தோன்றியது. மணி பத்துக்குமேல் ஆயிற்று. கல்கத்தா நகரத் தெருக்களில் வண்டியும் டிராமும் ஜனங்கள் நிறைந்து போய்க் கொண்டிருந்தன. ஆனால் அச்சிறுமியின் மனோவேகம் அப்படியே தடைப்பட்டு நின்றுவிட்டது. மனங்கலங்கி வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

திடீரென்று அவள் மனத்தில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. 'ஓஹோ தெரிந்தது! விஹாரி காசிக்கு வந்தது

தான் இதற்குக் காரணமா யிருக்கவேண்டும். ஏதோ முன் ஏற்பாட்டின்படி அவர் அங்கு வந்ததாக என் புருஷர் நினைத்திருக்க வேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு கோபம் போலும்! சீச்சீ, இதென்ன சந்தேகம்? வெட்கக் கேடு!'—இதை நினைக்கும்போது ஆசாவின் தேகம் குன்றியது; மனம் பதறியது. 'அப்படியானால் அதை ஏன் வாய்விட்டுச் சொல்லவில்லை? என் முகத்தைக் காணவே கூசுவதுபோல் பதுங்கி ஓடுவானேன்? முகத்திலோ கோபக் குறியையும் காணேம். குற்றவாளியைப்போல் அவர் இருப்பதற்குக் காரண மென்ன? ஏதோ தவறு செய்து அதை என்னெதிரில் ஒப்புக்கொள்ளவும் வெட்கப் படுவதுபோல் நடந்துகொள்வானேன்?' என்ற எண்ணங்கள் அலைபோல் மனத்தில் எழுந்து அவளை எரித்தன.

வண்டியிலிருந்து தான் கண்ட ஆசாவின் ஒளியிழந்த முகம் மஹேந்திரன் கண் முன்பாகவே நின்று உறுத்தியது. காலேஜில் அன்று முழுவதும் படிப்பில் அவன் மனம் செல்லவில்லை. காலேஜ் விட்டதும் 'பார்க்' பக்கமாய் உலாவப்போனுன். அப்பொழுதும் ஆசாவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற ஒரே யோசனைதான் அவனுக்கு. 'இப்பொழுதும் எனக்கு ஆசாவின்பால் அன்பில்லாது போகவில்லை. ஒரு புருஷன் தன் மனைவியிடம் காட்டும் அன்பைவிட அதிகமாகவே நான் ஆசாவிடம் அன்பு கொண்டிருக்கிறேன். இதைப்பெற்றே ஏன் அவள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கக்கூடாது? என் மனத்தில் ஆசா, விநோதினி இருவருக்கும் இடம் இருக்கிறது. விநோதினியை நேசிப்பதனுல் எங்கள் தாம்பத்ய வாழ்விற்கு இடையூறு ஏன் ஏற்படவேண்டும்? எனது அன்பை இருவரும் பெறட்டும். நான் ஒருவரையும் புறக்

கணிக்கப்போவதில்லை' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டான். அன்றிரவு அன்பாய்க் கொஞ்சி விளையாடி ஆசாவின் வியாகுலத்தை நீக்குவது எனத் தீர்மானித்து வீடு சென்றான்.

சாப்பிடும் சமயம் ஆசா அவன் எதிரிலேயே வரவில்லை. எப்படியும் படுக்கையறையில் காணலாமென்று நம்பித் தான் போய்ப் படுத்துக் கொண்டான். ஆனால் அவன் உள்ளத்தில் ஆசாவிற்கு இடமேது? அதை வேறொருத்தி பூரணமாய் ஆட்கொண்டிருந்தாள். தான் விநோதினி யுடன் நடத்திய செயல்கள் ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்கு வந்தன. அவள் கையிலிருந்து புத்தகத்தைப் பிடுங்கச் சண்டையிட்டது, அவள் தினமும் வந்து உட்கார்ந்து படித்தது இரவில் எல்லோரும் தூங்கிய பிறகும்கூட அவள் உரத்துப்படிக்க அந்த மிருதுவான குரலோசை யின்பத்தில் தான் மெய்ம்மறந்து படுத்துக் கேட்டுக்கொண் டிருந்தது, அவள் திடீரெனப் புத்தகத்தைமூடி வைத்து விட்டுப் போக எழுந்ததும் படிவரை அவளைக் கொண்டு விடத் தானும் தினம் போய்வந்தது, இவையாவும் படத் தில் சித்திரித்தாற்போல் அவன் மனக்கண்முன் தோன்றின. அவன் மனத்தில் இன்ப உணர்ச்சி ஊடுருவியது; சரீரம் புளகித்தது. இப்படி வெகுநேரம் கழிந்தது. ஆனால் ஆசா வரக்காணவில்லை.

நடு நிசி. மணி ஒன்று அடித்தது. மனம் இருப்புக் கொள்ளவில்லை. அறையை விட்டு வெளியே வராந்தாவில் வந்து நின்றான் மஹேந்திரன். பால்போன்ற நிலவொளி. மனத்தைப் பரவசப்படுத்தும் மந்தமாருதம். மனத்தின் கண் குமுறிக் கொண்டிருந்த காமத்தீ இவ்வியற்கைக் காட்சியினால் தூண்டப்பட்டுச் சுடர்விட்டு எரிந்தது.

ஆசா காசியிலிருந்து வந்ததுமுதல் விநோதினி மஹேந்திரன் கண்ணில் தென்படவேயில்லை. அவன் மனம் வெறி கொண்டதுபோன்று கட்டுக்கடங்காதுபோயிற்று. ஏதோ ஒரு சக்தி அவனை விநோதினியின் பால் இழுப்பது போன்று இருந்தது. கீழே இறங்கிச் சென்றான். நேரே விநோதினி படுத்துறங்கும் அறைக்குள் சென்று பார்க்க, அங்கு அவளைக் காணவில்லை. படுக்கைமாத்திரம் விரித்த படி இருந்தது. உள்ளே காற்றே இல்லாமையால் அன்று ராஜலக்ஷ்மியும் விநோதினியும் திறந்த வெளிமுற்றத்தில் பாயை மாத்திரம் விரித்துப் படுத்திருந்தனர். காலடிச் சப்தம் கேட்டு விநோதினி, "யாரது?" என்று அங்கிருந்த வாறே கேட்டாள். "நான்தான், விநோதினி!" என்று கூறிக்கொண்டே மஹேந்திரன் அவளருகில் போய் நின்றான். பக்கத்தில் படுத்திருந்த ராஜலக்ஷ்மி திடுக்கிட்டு, "மஹேனு? இந்நேரத்தில் எழுந்து இங்கே எதற்காக வந்தாய்?" என்றாள்.

கண்களில் நெருப்புப் பொறி பறக்க விநோதினி அவனை விழித்துப்பார்த்தாள். பதில்பேசாமல் மஹேந்திரன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

---

## முப்பத்திரண்டாம் அத்தியாயம்

**வா**னம் மேகங்களால் சூழப்பட்டுக் கறுத்திருந்தது. அன்றும் வெகு சீக்கிரமாகவே மஹேந்திரன் காலேஜிற்குச் சென்றுவிட்டான். வண்ணானுக்குப் போடுவதற்காக ஆசா துணிகளைப் பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்தாள். மஹேந்திரனுக்கு மறதி அதிகம். சட்டைப் பைகளில்

பணம் காசு வைத்து அப்படியே மறந்து விடுவதுண்டு. ஆதலால் வண்ணானுக்குத் துணி போடும் சமயம் கோட்டு, நிஜார் இவற்றின் ஜேபிகளை ஆராய்ந்து பார்த்துவிட்டுப் போடுவது வழக்கம். அன்றும் ஆசா ஒவ்வொரு ஜேபியாய்ப் பார்த்துப் போட்டுக்கொண்டிருந்தாள். ஒரு ஜேபியிலிருந்து திறந்த கடிதம் ஒன்று அகப்பட்டது. எழுத்து விநோதினியினுடையதா யிருந்தது. அதைக் கையிலெடுத்ததும் சர்ப்பம் தீண்டியதுபோல் ஆசாவின் முகம் கறுத்து உள்ளம் பதைத்தது. சர்ப்பமாயிருந்தாலும் விஷம் தீண்டி உயிரைக் கொள்ளைகொள்ளும். ஆனால் இதுவோ உள்ளத்தைச் சிதைத்துச் சித்திரவதை செய்வதுபோன்று இருந்தது. கடிதம் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"நீ என்னையா விரும்புகிறாய்? அன்பாம்! இவ்வன்புப் பிச்சையிட உனக்கு ஏன் தோன்றியதோ? பிறந்ததுமுதல் அன்புச் செல்வத்தைப் பூரணமாய் அடைந்து அநுபவிக்கும் உனக்கு இன்னும் ஏன் இந்தப் பேராசை? உன் வேடிக்கை, களியாட்டம் இவற்றிற்கெல்லாம் நானும் போனால் போகட்டுமென்று சற்று இடங்கொடுத்தால் இதற்கென்ன முடிவே கிடையாதா? இதோ வேறு ஒரு குரல் உன்னைக் கூவி அழைக்கிறது. இனி அன்பை அங்கே செலுத்து. என்னைத் தனியே விட்டுவிடு.

"உன்னை நேசிக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறாய். வேடிக்கை விளையாட்டானால் ஏதோ போகட்டுமென்று இருக்கலாம். ஆனால் உண்மையில் எனக்கு உன்மீது நம்பிக்கையில்லை. ஆசா ஒருத்தியைத்தான் காதலித்து விரும்புவதாக நீ சொல்லிப் பெருமையடைந்தாய். அதுவும் பொய்! இப்பொழுது என்னை விரும்புவதாகச் சொல்லுகிறாய். இதுவும் பொய். உனக்குச் சுயநலந்தான் பெரிது.

"உண்மை அன்பைப் பெற என் உள்ளம் ஏங்கித் தவிக்கிறது. ஆனால் அவ்வேட்கையைத் தணிக்கும் வஸ்து உன்னிடம் இல்லை என்பதை நான் வெகுநாட்களுக்கு முன்பே கண்டுகொண்டேன். என்னை விட்டுவிடு. இனி என் பின்னே வட்டமிடாதே. வீணாய் உனது மானத்தையும் துறந்து என் மானத்தையும் போக்கடிக்காதே! எனது கடைசிப்பதில் இதுதான். என்னைக் கல்நெஞ்சுடையவள் என்று எழுதுகிறாய். அது ஓரளவு உண்மையே. ஆனால் எனது உள்ளத்திலும் சற்றுத் தயை இருக்கிறது. அதனால்தான் உன்னை இதோடு இன்று விடுகிறேன். இக்கடிதத்திற்கு நீ பதிலெழுதினால் உன்னிடமிருந்து தப்ப இவ்வீட்டை விட்டு ஓடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

"நேற்றிரவு நீ செய்த அக்கிரமமே போதாதா? வேலைக்காரி கையில் கடிதம் வேறு இன்று கொடுத்தனுப்ப உனக்கு வெட்கமில்லையா? அவள் என்ன நினைக்கமாட்டாள்? நான் யாருக்கும் முகத்தைக் காண்பிக்க யோக்கியதை யற்றவள் ஆகவேண்டு மென்பது உனது விருப்பம் போலும்!"

கடிதத்தைப் படித்ததும் ஆசாவுக்குத் தலை கிர்ரென்று சுழன்றது; கண்கள் இருண்டன. மூச்சுப் படபடத்தது. உணர்வின்றி அப்படியே கீழே விழுந்தாள். மறுபடி உணர்வெய்த வெகுநேரமாயிற்று. கையிலிருந்த கடிதத்தை மறுமுறை படிக்க முயன்றாள். ஆனால் ஒரே குழப்பம். ஒன்றும் தெளிவாய் விளங்கவில்லை. ஒவ்வோர் அக்ஷரமும் ஒரு கறுத்த பேய்போல் அவள் கண்முன் கூத்தாடியது. ஐயோ, இது என்ன! எப்படி விளைந்தது? இந்த ஸர்வநாசத்திற்குக் காரணமென்ன? என்ன செய்வது? யாரிடம் போய் முறையிடுவது? ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை. தண்ணீரிலிருந்து கரையில் எடுத்துப்போட்ட மச்சத்தைப் போல் துடித்தாள். நட்டாற்றில் முழுகுபவன் ஒரு சிறு

துரும்பின் ஆதாரமாவது கிடைக்காதாவெனத் தேடுவது போல் இந்தச் சூன்யமய அந்தகாரத்திலிருந்து வெளியேற ஓர் ஆதாரம் அகப்படாதாவெனத் தவித்தாள். கடைசியில் அவளையும் அறியாது வாயிலிருந்து 'சித்தி' என்ற சப்தம் கிளம்பியது. அன்னபூரணியின் அன்பான உபதேசம் அவள் நினைவிற்கு வந்தது. கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் பெருகியது. விக்கி விக்கி அழுதாள்.

'இக்கடிதத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? இது என் கையில் அகப்பட்டது தெரிந்தால் அவருக்கும் லஜ்ஜையாயிருக்கும்' என்று நினைக்கும்போது அவள் மனம் துக்கத்தில் ஆழ்ந்தது. கடிதத்தைத் திரும்பவும் கோட்டு ஜேபியிலேயே வைத்துவிடுவது, வண்ணானுக்குக் கோட்டைப் போடுவதில்லையெனத் தீர்மானித்தாள்.

கடிதத்தை வைக்கப் போகும்போது, "சகோதரி" என்று கூப்பிடும் குரல் கேட்டது. ஆசா கடிதத்தைச் சட்டென மறைத்துக்கொண்டாள். விநோதினி உள்ளே வந்து, "வண்ணானுக்குப் போடுவதற்கு முன் இன்னும் சில துணிகளுக்குக் குறி போடவேண்டும். அதற்காகத் தான் வந்தேன்" என்றாள்.

ஆசாவுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. எங்கே தனது முகக்குறிப்பால் தன் மனோநிலைமை வெளியாகி விடுமோவென்று விநோதினியைப் பாராது ஜன்னலுக்கு வெளியே பார்ப்பதுபோல் திரும்பிக்கொண்டாள். அவள் அதரம் துடித்தது. அழுகையை வெகு பிரயாசையுடன் அடக்கிக்கொண்டாள்.

'ஓஹோ! நேற்று இரவு நடந்த சமாசாரம் தெரிந்து விட்டாற்போல் இருக்கிறது. அதுதான் இப்படியிருக்

விநோதினி அறையில் வந்து நின்றாள்.

—பக்கம் 234.

கிருள். ஆனால் தவறு முழுவதும் என்னுடைய தென்று என்மேல் கோபித்து என்ன பயன்?' என்று நினைத்து ஆசாவுடன் பேசக்கூட இயலாமல் குறிப்பிடவேண்டிய துணிகளைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே சென்று விட்டாள் விநோதினி.

இன்றுவரை அவளன்றோ தன் தோழியாயிருந்தவள்! இதை நினைக்க வெட்கமும் துக்கமும் ஆசாவை ஒருங்கே வதைத்தன. ஆஹா! அவளைப்பற்றித் தான் கொண்டிருந்த உயர்வான எண்ணமென்ன, இக்கடிதம் அதற்கு நேர்விரோதமாய் நிரூபித்ததென்ன? இதை நினைக்கவே, கடிதத்தை மீண்டும் ஒருமுறை படிக்க ஆசாவுக்கு ஆவல் எழுந்தது.

கடிதத்தைக் கையில் எடுத்ததும் மஹேந்திரன் அவசரமாய் உள்ளே பிரவேசித்தான். அங்கே ஆசாவைக் கண்டு சற்றுத் திகைத்து நின்றான். எதையோ அறை முழுவதும் தேடலானான். ஆசாவுக்கு அவன் எதைத் தேடுகிறானென்று நன்றாகத் தெரியும். அவள் மனம் பொறுக்கவில்லை. கடிதத்தையும் கோட்டையும் கட்டிலின் மேல் விட்டெறிந்துவிட்டு முகத்தை மூடிக்கொண்டு மறுபுறம் திரும்பிக்கொண்டாள். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மஹேந்திரன் கடிதத்தை எடுத்துக்கொண்டு ஒரு விநாடி ஆசா இருந்தபக்கம் திரும்பி நோக்கினான். உடனே அவசர அவசரமாய்க் கீழே இறங்கிப் போய்விட்டான். இதற்குள், "அம்மா, நேரமாகிவிட்டது. துணி போடவில்லையா?" என்று வண்ணான் குரல்கேட்டது.

# முப்பத்துமூன்றாம் அத்தியாயம்

ராஜலக்ஷ்மி காலையிலிருந்து விநோதினியை எதற்கும் கூப்பிடவேயில்லை. வழக்கம்போல் அன்றும் விநோதினி தன் தினசரி வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். தன் முகத்தைக் காணவும் ராஜலக்ஷ்மி விரும்பவில்லை என்பது அவளுக்குத் தெரிந்தது. ஆனாலும் அவள், "அம்மா, உங்கள் தேகசுகம் மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. காரணமில்லாமலும் இல்லை. உங்கள் பிள்ளை நேற்றிரவு பயித்தியம் போல் புத்தியற்று அப்படி ஓடிவந்தார். எனக்கு அதற்குப் பிறகு நித்திரையே பிடிக்கவில்லை" என்றாள்.

ராஜலக்ஷ்மியோ அவளைப்பார்க்கவு மில்லை; பதில் பேசவுமில்லை. விநோதினி மறுபடியும், "ஒருகால் மனைவியுடன் ஏதாவது சச்சரவா யிருக்கலாம். அதை மத்தியஸ்தம் செய்துவைக்கவோ தீர்க்கவோ என்னைக் கூப்பிட வந்திருக்கலாம். என்ன சண்டை சச்சரவானால்தான் என்ன? பொழுது விடியும் வரை பொறுத்தால் என்ன வந்தது? நீங்கள் என்னவேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைக்கு என்ன குணம் இருக்கிறதோ இல்லையோ, மனோதிடம் மாத்திரம் கிடையவே கிடையாது. எனக்கு அவரைக் கண்டால் பிடிக்கிறதே யில்லை" என்றாள்.

ராஜலக்ஷ்மி கோபத்துடன், "ஏன் பொய்யும் புளுகும் அளக்கிறாய்? உன் பேச்சு ஒன்றும் எனக்கு இன்று பிடிக்கவில்லை, போ!" என்றாள்.

விநோதினி, "எனக்குந்தான் ஒன்றும் பிடிக்கவில்லை. பிள்ளையின்மீது தோஷம் கூறினால் உங்களுக்குக் கோபம் வருமேயென்று பயந்து இதுவரையில் நான் வாயை திறக்கவில்லை. இப்பொழுதுதான் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டதே" என்றாள்.

கண்களில் கோபப்பொறி பறக்க ராஜலக்ஷ்மி, "என் பிள்ளையின் நல்லகுணம் கெட்டகுணம் யாவும் நான் நன்றாய் அறிவேன்; ஆனால் நீ இம்மாதிரி மோசக்காரி யென்று நான் தெரிந்து கொள்ளவில்லை" என்றாள்.

விநோதினி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். உடனே நாவை அடக்கிப் பேச்சை மாற்றி, "உண்மைதான்! ஒருவரை யொருவர் எப்படி அறியமுடியும்? தம்மையே தாம் அறிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள் பிறரை அறிவ தெப்படி? மருமகளிடம் கோபித்துக்கொண்டு மகனிடம் போய் உறவு கொண்டாடுமாறு நீங்களே என்னை எவ்வளவு முறை தூண்டியிருக்கிறீர்கள்? சற்று யோசித்துப் பாருங்கள்" என்றாள்.

ராஜலக்ஷ்மியால் கோபத்தை அடக்கமுடியவில்லை. "அடி அதிர்ஷ்டம் கெட்டவளே, பிள்ளையைக் கெடுத்த தாகத் தாயின்மீதே பழிசுமத்தத் துணிந்து விட்டாயா? உன் நாக்கு அறுந்து விழ!" என்று கர்ஜித்தாள்.

விநோதினி அவள் கோபத்திற்குச் சற்றும் அஞ்சாது மேலும், "அம்மா, ஸ்திரீ ஜாதியே மோசக்கார மாயாவினி ஜாதிதான். என்னிடமிருந்த மோசம் எனக்கே தெரிய வில்லை; அது உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதே மாதிரி நீங்கள் அறியாத உங்கள் மோசத்தை நானும் அறிந்துகொண்டேன். மோசமின்றி இப்படிப்பட்ட

சம்பவம் நேரமுடியாது. தெரிந்தோ தெரியாமலோ நீங்களும் என்னை இவ்வலையில் சிக்க வைத்தீர்கள்; நானும் சிக்கிக்கொண்டேன். நாம் யாவரும் மாயாவினிகளே" என்றாள்.

கோபம் பொங்கியெழுந்தது ராஜலக்ஷ்மிக்கு. வாயைத் திறந்து பேசவும் முடியவில்லை அவளால். அவள் சரே லென்று வெளியே சென்றுவிட்டாள். விநோதினிக்கும் சினத்தால் முகம் சிவந்தது.

ராஜலக்ஷ்மி மஹேந்திரனைக் கூப்பிட்டனுப்பினாள். இரவு நடந்த விஷயத்தைப்பற்றிக் கேட்கத்தான் அவள் கூப்பிடுகிறாள் என்பது மஹேந்திரனுக்கு நன்றாய்த் தெரியும். அச்சமயந்தான் விநோதினியின் கடிதமும் கிடைத்திருந்தது. அதைப் படித்து அவன் மனம் தத்தளித்தது. எண்ணங்கள் அலைபோன்று எழுந்து ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அந்த அலைகள் ஒரு க்ஷணம் அவன் உள்ளத்தை விநோதினியின்பால் இழுத்துச் சென்றன; மறுக்ஷணம் பின்னே தள்ளின. மறுபடி பன்மடங்கு வேகத்துடன் அவளிடமே கொண்டுதள்ளின. மனத்தில் கோரயுத்தம் நடந்து கொண்டிருந்தது. அச்சமயம் தாயுடன் விவாதம் நடத்த அவன் தயாராயில்லை. 'நான் விநோதினியைப்பற்றிய பிரஸ்தாப மெடுத்தாலே அவளும் கோபத்தால் ஏதாவது சொல்ல, எல்லாம் வெளியாகி வீடு ஓரே அமர்க்கள மாகிவிடும்; சற்று வெளியே போய் வருகிறேன்; மனக்கலவரம் அடங்கிய பிறகு பேசிக்கொள்ளலாம்' என்று யோசித்து மஹேந்திரன் வேலையாளிடம், "இன்று காலேஜிற்கு அவசரமாய்ப் போகவேண்டி யிருக்கிறது. திரும்பி வந்தபிறகு அம்மா

வைப் பார்ப்பதாகச் சொல்லு" என்று சொல்லியனுப்பி விட்டு அவசர அவசரமாய் உடை அணிந்து வெளியே சென்று விட்டான். இந்தக் கலவரத்தில்தான் அவன் விநோதினியின் கடிதத்தைக் கோட்டுஜேபியில் மறந்து வைத்துவிட்டுப் போனன்.

மழை பெய்து ஓய்ந்து விட்டது. ஆனாலும் வானம் மேகம் சூழ்ந்து இருண்டிருந்தது. கோபம், அவமானம் இவற்றால் விநோதினியின் மனம் கொதித்தெழுந்தது. இம்மாதிரியான சமயங்களில் விநோதினி உட்கார்ந்து வீண் யோசனை செய்வதில்லை. அப்பொழுதுதான் பின்னும் சுறுசுறுப்பாய் வேலை செய்வாள். வண்ணானுக்குப் போட வேண்டிய அழுக்குத் துணிகள் யாவற்றிற்கும் குறிபோட்டுக் கொண்டிருந்தாள். துணியெடுக்கப்போன சமயம் ஆசாவின் முகக்குறிப்பையும் பார்த்தபிறகு எரிச்சல் பன் மடங்காயிற்று. 'நான்தான் குற்றம் இழைத்துவிட்டது போல யாவரும் சொல்லுகிறார்கள். குற்றத்தினால் ஏற் படும் பழியை ஏற்று அனுபவிக்கும்போது பயனையும் சுகத்தையும்மாத்திரம் கைவிடுவானேன்?' என்று யோசித் தாள்.

அச்சமயம் திடீரென்று மஹேந்திரன் அவள் முன் தோன்றினன். அங்கு நின்றிருந்த வேலைக்காரி அவனைக் கண்டதும் சட்டென்று வெளியே போய் விட்டாள். விநோதினி கண்களில் தீப்பொறி பறக்கக் கையிலிருந்த துணியை விட்டெறிந்துவிட்டு எழுந்து நின்று அவனை நோக்கி, "போ, வெளியே போ! என் எதிரில்வராதே!" என்று கர்ஜித்தாள்.

மஹேந்: ஏன்? நான் என்ன செய்துவிட்டேன்?

விநோதினி கோபத்துடன், "என்ன செய்தாயா? பயங்கொள்ளி! ஆண்மையற்றவன்! நீ செய்வதென்ன இருக்கிறது? கடமையைச் செய்யச் சக்தியற்ற நீ காதலென்பது என்னவென்று கண்டாய்! ஊர்ப்பழிக்கு என்னை ஏன் ஆளாக்குகிறாய்?" என்றாள்.

மஹேந்திரன் தீனக்குரலுடன், "உன்னை நான் காதலிக்கவில்லையென்றா சொல்லுகிறாய்?" என்றான்.

விநோ: ஆமாம்! அப்படித்தான் சொல்லுகிறேன்! உன் ஒளிவு மறைவான திருட்டு நடவடிக்கையை நான் வெறுக்கிறேன். போ! என்னெதிரில் நில்லாதே!

மஹேந்திரனின் மனம் மோஹத்தால் கட்டுண்டு கிடந்தது. அவன் பரிதபித்து, "விநோதினி, என்னை வெறுக்கிறாயா நீ?" என்றான்.

விநோ: ஆமாம், உன்னைத்தான் வெறுக்கிறேன்!

விநாடியில் மஹேந்திரனின் மனம் மாறியது. அவன், "விநோதினி, பேச்சை வளர்த்துவதில் பயனில்லை. பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டிய சமயம் வந்துவிட்டது. இந்த இரண்டுங் கெட்ட நிலையில் இனி என்னால் இருக்க முடியாது. சகலத்தையும் துறந்து நான் இன்றே இவ் வீட்டை விட்டு வெளியேறினால் நீ என்னுடன் வரத் தயாராயிருக்கிறாயா? சொல்!" என்றான்.

அவன் அவள் கைகளை இறுகப்பிடித்துத் தன் அருகே இழுத்துக்கொள்ள முயன்றான். "ஐயோ! விட்டுவிடு! நீ செய்வது நன்றாயில்லை" என்று விநோதினி கத்தினாள்.

மஹேந்: அதிருக்கட்டும். நீ என்னுடன் வருவாயா மாட்டாயா? அதைச் சொல் முதலில்.

விநோ: நான் மாட்டேன்!

மஹேந்திரன் உணர்ச்சி மேலிட, "ஏன் மாட்டாய்? என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டு நீ மாத்திரம் தப்பிச் செல்லப் பார்க்கிறாயோ? அது ஒருகாலும் முடியாது! நீ என்னுடன் வரத்தான் வேண்டும்" என்று கூறி அவளைப் பலவந்தமாக இழுத்து அணைத்துக்கொண்டு, "நீ என்னை வெறுத்தாலும் சரி; உன்னையும் கூட அழைத்தே செல்வேன். நீ என்னை விரும்பித்தான் ஆகவேண்டும்" என்றான்.

விநோதினி அவன் பிடியிலிருந்து திமிறித் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

மஹேந்: எனது உள்ளத்தில் பெருந்தீயை மூட்டி விட்டாய். உன்னால் இனி அதை அணைக்கவும் முடியாது. நீயும் என்னிடமிருந்து தப்பி ஓடமுடியாது. (ஆவேசத்துடன்) ஏன் இப்படி ஒரு லீலை புரிந்தாய்? இதை லீலை என்று சொல்வது! நம்மிருவருடைய வாழ்வும் சாவும் இனி ஒருமித்தே இருக்கும்!

அதேசமயம் ராஜலக்ஷ்மி உள்ளே நுழைந்து, "மஹேன்! இதென்ன?" என்றாள். அவன் உன்மத்தம் பிடித்தவன்போல் தன் தாயையும் விநோதினியையும் மாறி மாறிப் பார்த்தான். கடைசியில் விநோதினியை நோக்கி, "எல்லாவற்றையும் துறந்து விடுகிறேன்; சொல்: என்னுடன் வருவாயா மாட்டாயா?" என்றான்.

விநோதினி கோபத்துடன் ராஜலக்ஷ்மியை ஒருமுறை விழித்துப் பார்த்தாள். உடனே சற்றும் தடுமாற்றமோ சங்கோசமோ இன்றி மஹேந்திரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "வருகிறேன்" என்றாள்.

மஹேந்திரன், "சரி! இன்று மாத்திரம் சற்றுப் பொறு. நாளையிலிருந்து இவ்வுலகில் நீதான் எனக்குச் சகலமும்" என்று கூறி வெளியே சென்றுவிட்டான்.

அச்சமயம் வண்ணான், "அம்மா! எவ்வளவுநேரம் நான் காத்திருப்பது? நான் போய் நாளைக்காவது வரட்டுமா?" என்று கத்தினான்.

குதிரைக்குக் கொள் இல்லையென்று வேலையாள் வந்து கூறி நின்றான்.

வீட்டிலோ வெளியிலோ ஒரு வேலையும் நிற்கக் காணும். எல்லாம் வழக்கம்போல் நடந்துகொண்டிருந்தன.

---

## முப்பத்துநான்காம் அத்தியாயம்

விஹாரி வைத்தியக் கல்லூரியில் படித்துவந்தான். திடீரென்று பரீக்ஷைக்குச் சில தினங்களுக்கு முன்பாக அவன் படிப்பை நிறுத்தியது யாவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. யாரேனும் கேட்டால், "பிறருக்கு வைத்தியம் செய்வதற்கு முன் எனது தேக சௌக்கியத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டாமா?" என்று சொல்லி விட்டான்.

அவன் ஒரு நிமிஷங்கூட வீணில் கழிக்கக் கூடியவனல்ல. தன்னலமற்றவன். செல்வம், கீர்த்தி இவற்றை எதிர்பார்த்து ஊழியம் செய்பவனல்ல. பி. ஏ., பட்டம் பெற்றதும் எஞ்ஜினீரிங் கல்லூரியில் படித்துவந்தான். அவன் அதிக உழைப்பாளி. அங்கே படிப்பு முடிந்ததும் உடனே வைத்தியக் கல்லூரியில் வந்து சேர்ந்தான். மஹேந்திரன் அவனுக்கு ஒரு வருஷம் முன்பாகவே

சேர்ந்திருந்தான். இவ்விரு நண்பர்களின் நட்பு காலேஜ் முழுவதும் பிரசித்தம். பையன்கள் இவர்களை ராம லக்ஷ்மணரென்றும், அச்வினி தேவதைகளென்றும் வேடிக்கையாய்க் கூப்பிடுவதுண்டு. திடீரென்று இவர்கள் நட்புமுறிந்தது யாவருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. இருவரும் முன்போல் பேசுவதில்லை; சேருவதில்லை. இதைச் சகபாடிகள் கவனித்து ஜாடையாய்ப் பேசிக் கொள்வர். விஹாரி மிகவும் புத்திசாலி. பரீக்ஷையில் தேறிச் சன்மானமும் பெறுவானென்று ஆசிரியர்கள் யாவரும் எதிர்பார்த்திருந்தனர். யாவரும் ஏமாறும் வண்ணம் அவன் பரீக்ஷையில் உட்காரவே யில்லை. படிப்பையே நிறுத்திவிட்டான்.

அவன் வீட்டிற்கு அருகில் ராஜேந்திர சக்கரவர்த்தி என்ற அச்சுக்கோக்கும் ஏழைப் பிராம்மணர் ஒருவர் வசித்துவந்தார். மாதச்சம்பளம் பன்னிரண்டு. மிகவும் கஷ்டத்துடன் ஜீவனம் நடத்திவந்தார்.

அவரிடம் விஹாரி, "உங்கள் பையனை என்னிடம் விட்டு விடுங்கள்; நானே அவனுக்குக் கல்வி கற்பித்துச் சம்ரக்ஷிக்கிறேன்" என்றான்.

அவ்வேழை அந்தணர் சந்தோஷத்துடன் சம்மதித்து வஸந்தன் என்ற தம் எட்டு வயதுப் பையனை விஹாரியிடம் ஒப்பித்துவிட்டார்.

'பையனுக்குப் பத்து வயதாகும் வரை எழுதவே கற்பிப்பதில்லை. முதலில் எல்லாம் வாய்ப்பாடமாகவே நடத்துவது' என விஹாரி நிச்சயித்தான்.

அதுமுதல் அச்சிறுவனோடு விளையாடியவாறே, அவனைக் கோட்டைமைதானம், ம்யூஸியம், ஆலிபுரம்

மிருகக் காட்சிச்சாலை, சிவபுரத்துப் பூந்தோட்டம் முதலிய இடங்களுக்கு அழைத்துப் போய்ப் பாடம் கற்பிப்பது, சரித்திரக் கதைகள் சொல்வது இவையே விஹாரியின் முக்கிய அலுவல்களாயிருந்தன.

அன்று ஸாயங்காலம் வெளியே செல்ல முடியவில்லை. மத்தியானம் மழை சற்று நின்று மாலையில் மீண்டும் பெய்ய ஆரம்பித்துவிட்டது. விஹாரி தன் வீட்டில் பெரிய அறையில் விளக்கேற்றிக்கொண்டு உட்கார்ந்து வஸந்தனுக்குத் தன் நூதன வழியில் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தான்.

விஹாரி: வஸந்தா, இவ்வீட்டில் எவ்வளவு வாயிற் படிகள் இருக்கின்றன? சீக்கிரம் சொல்லவேண்டும்; எண்ணக்கூடாது.

வஸந்தன்: இருபது.

விஹாரி: தப்பு; பதினெட்டே!

"அந்த ஜன்னலில் எவ்வளவு கம்பிகள் இருக்கின்றன? சீக்கிரம் சொல்" என்றான் விஹாரி.

வஸந்தன்: ஆறு.

விஹாரி, "நீ ஜயித்தாய்! இந்தப் பெஞ்சு எவ்வளவு அடி நீளம்? அந்தப் புத்தகம் எவ்வளவு கனம்?" என்றெல்லாம் சிறுவனைக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கும் ஸமயம் வேலைக்காரன் வெளியே யாரோ ஒரு மாது விஹாரியைக் காண வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே விநோதினி அறையில் வந்து நின்றாள். விஹாரி ஆச்சரியத்துடன், "என்ன விசேஷம் இன்று?" என்று கேட்டான்.

விநோ: வீட்டில் ஸ்திரீகள் யாரும் இல்லையா?

விஹாரி: வீட்டிலுமில்லை, வெளியிலுமில்லை. அத்தைக்கிழவி ஒருத்தி இருக்கிறாள். அவளும் கிராமத்தில் வசிக்கிறாள்; இங்கே இல்லை.

விநோ: அப்படியானால் என்னை உங்கள் கிராம வீட்டிற்கு அனுப்பி வையுங்கள்.

விஹாரி: உன்னை யாரென்று சொல்லி அத்தையிடம் அறிமுகப்படுத்துவது?

விநோ: வேலைக்காரி என்று சொல்லுங்கள். நான் அவளுக்கு வேண்டிய ஊழியம் யாவும் புரிகிறேன்.

விஹாரி: தனக்கு வேலைக்கு ஆள்வேண்டுமென்று என் அத்தை என்னைக் கேட்டாலன்றோ நான் அனுப்பலாம்? அது கிடக்கட்டும். சமாசாரம் என்ன? வந்த காரணத்தை முதலில் தெரிவி.

பிறகு விஹாரி வஸந்தனைப் பார்த்து, "எழுந்து போய்ப் படுத்துத் தூங்கு அப்பா" என்று சொன்னான். சிறுவனும் அப்பால் சென்றான்.

விநோ: நீங்கள் கண்டவற்றிலிருந்து உங்களுக்கே யாவும் தெரிந்திருக்கவேண்டும்.

விஹாரி: தெரிந்ததாகவே இருக்கட்டும். அதனாலென்ன இப்பொழுது?

விநோ: நானே வேண்டுமானால் சொல்லுகிறேன்; கேளுங்கள் மஹேந்திரன் என்னை இச்சிக்கிறான்.

விஹாரி: இது ஒன்றும் புதிதல்ல; எனக்கு இதைக் கேட்கவும் இஷ்டமில்லை.

விநோ: எனக்கும் உங்களிடம் இதை அடிக்கடி தெரிவிக்க இஷ்டமில்லை. அதனால்தான் இன்று உங்களிடம் அடைக்கலம் புக வந்திருக்கிறேன்.

விஹாரி: உனது விருப்பமின்றி இந்த அனர்த்தம் எப்படி விளைந்தது? நல்வழியில் சென்ற அவன் மனத்தைத் திருப்பிக் கெடுத்தது யார்?

விநோ: நான்தான்! ஆமாம், நான் கெட்டவள் தான்! நான் அதை ஒளிக்கவில்லை. என் உள்ளத்தைத் திறந்து பாருங்கள். அங்கே எரியும் தீயினாலேயே நான் மஹேந்திரனின் வீட்டிலும் தீயிட்டேன். அவன்மேல் அன்பு கொண்டதாக நான் எண்ணிய எண்ணம் தவறு என்று பிறகுதான் அறிந்துகொண்டேன்.

விஹாரி: அன்பு இருக்குமானால் இப்படிக் குடியைக் கெடுப்பாயா என்ன?

விநோ: விஹாரி பாபு, சாஸ்திரம் நியதி இவற்றைத் தூரவைத்துவிட்டு அந்தர்யாமியைப் போல் எனது இருதயத்தினுட்புகுந்து பார்க்கும் சக்தி மாத்திரம் உங்களுக்கு இருக்குமானால் எனது உள்ளத்தை விண்டு காட்டவும் நான் சித்தமாயிருக்கிறேன். உங்களிடம் நான் எதையும் மறைக்க விரும்பவில்லை.

விஹாரி: உள்ளத்தின் மர்மத்தை அறியப் பகவானே வல்லவர். மனிதர்களாகிய நாம், சாஸ்திரம் விதி இவற்றிற்குக் கட்டுப்பட்டு நடந்தால்தான் மனத்தை நிலைநிறுத்தி வாழ முடியும்.

விநோ: இருக்கட்டும். நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள்: இக்காரியத்திலிருந்து நீங்கள் என்னை முன்பே தடுத்திருக்கக் கூடும். மஹேந்திரன் என்னை இச்சிக்கிறான்.

ஆனால் அவன் மூடன், காமாந்தகன். என்னை அவன் அறியவில்லை. நீங்கள் என் உள்ளத்தை உள்ளபடி அறிந்து கொண்டதாக ஒரு சமயம் எனக்குப் புலப்பட்டது. அப்பொழுது நீங்கள் என்னை மதித்துப் போற்றினீர்கள். நிஜத்தைச் சொல்லுங்கள். இது வாஸ்தவமா இல்லையா?

விஹாரி: நிஜந்தான். உண்மையாகவே அன்று உன்னிடத்தில் எனக்குச் சிரத்தை ஏற்பட்டது.

விநோ: அப்பொழுது நீங்கள் என்னைப் பற்றிக் கொண்ட அபிப்பிராயம் ஒன்றும் தவறல்ல. என்னிடம் அன்றுகொண்ட சிரத்தையை ஏன் விட்டுவிட்டீர்கள்? பெண்களுக்குரிய வெட்கம் மானம் யாவற்றையும் துறந்து நான் உங்களிடம் இன்று ஓடிவந்திருக்கிறேன். நீங்கள் ஏன் என்மேல் அன்பு கொள்ளவில்லை? அது எனது துர்ப்பாக்கியந்தான்! உங்கள் அன்பு ஆசாவின் பால் இருந்தது. கோபிக்க வேண்டாம்; பொறுங்கள். உங்கள் மனத்தை நான் அறிவேன். அவளிடம் என்ன அபூர்வ குணம் மோஹிக்கத் தக்கதாயிருக்கிறது? ஒன்றையும் காணேம்! புருஷர்களுக்குப் பிரும்மா புறக்கண்ணை அளித்தாரேதவிர அகக்கண்களை அளிக்கவில்லைபோலும்!

இதற்குள் விஹாரி எழுந்து நின்று, "இதோ நீ எது வேண்டுமானாலும் சொல்; கேட்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் சம்பந்தமற்ற தகாத சொற்களை மாத்திரம் சொல்ல வேண்டாம்" என்றான்.

விநோ: யாரைப்பற்றிப் பேசினால் உங்கள் மனம் புண்படுமென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், விஹாரிபாபு, இவ்விரவில் வெட்கம், பயம், யாவும் துறந்து

உங்களிடம் ஓடிவர என் மனம் எவ்வளவு புண்பட்டிருக்க வேண்டுமென்பதைச் சற்றே நினைத்துப் பாருங்கள்! நீங்கள் ஆசாவிடம் அன்புகொண்டிராவிடில், நான் இப்பொல்லாத் தீங்கு ஒரு நாளும் விளைவித்திருக்க மாட்டேனென்பது நிச்சயம்.

விஹாரியின் முகம் வெளுத்தது. அவன் மனம் பதைக்க, "ஆசாவிற்கு என்ன செய்தாய்? அவள் என்ன வானாள்?" என்று கேட்டான்.

விநோ: மஹேந்திரன் வீடு வாசல் மனைவி எல்லா வற்றையும் துறந்து என்னோடு வரத் தயாராயிருக்கிறான்.

"ஒருகாலும் கூடாது! இது நடக்கவே கூடாது!" என்று விஹாரி கர்ஜித்தான்.

விநோ: ஏன் கூடாது? மஹேந்திரனை இனிமேல் தடுக்கக்கூடியவர் யார்?

விஹாரி: உன்னால் தடுக்கமுடியும்.

விநோதினி ரோஷத்துடன், "எதற்காக நான தடுக்க வேண்டும்? உங்கள் ஆசாவுக்காகவா? என் சுகதுக்கத்தைக் கவனிக்கவேண்டாம் போலும்! மஹேந்திரனின் குடும்பத்தில் சுகமும் சாந்தியும் நிலவியிருக்கவேண்டி நான் என் சுகத்தைப் பலியிட வேண்டும் போலும்! இல்லை, இல்லை! நான் அவ்வளவு தியாகியல்ல. நான் இம்மாதிரியான தர்ம சாஸ்திரம் படித்ததில்லை. தியாகத்திற்குப் பிரதிபலன் எனக்கு என்ன கிடைக்கிறது?" என்றாள்.

இதைக் கேட்கவே, விஹாரியின் இருதயம் கல்லாயிற்று. அவள்பால் அவனுக்குச் சற்றும் இரக்கம் ஏற்படவில்லை. அவன், "ஏதேதோ நீயும் இதுவரை சொன்னாய். அதிகப் படிப்பு உன்னைக் கெடுத்துவிட்டது போல் இருக்

கிறது! உனது செய்கை, உனது பேச்சு, உனது நடிப்பு யாவும் நாடகமாடுவதற்கும் நாவல் எழுதுவதற்குமே தகுந்தவை" என்றான்.

விநோ: நாடகமா! நாவலா!!

விஹாரி, "ஆமாம்! அதுவும் உத்தம வகுப்பைச் சேர்ந்ததல்ல! ஒன்றும் தெரியாத பேதைப் பெண்ணாயிருந்தாலே நன்றாயிருந்திருக்கும். அப்பொழுது உண்மை அன்பைப் பெற்றிருக்கக் கூடும். ஆனால் நடிகையோ அரங்கத்தில்தான் சோபிப்பாள்; வீட்டில் இருக்கத் தகுதியற்றவள்" என்று வெறுப்புடன் கூறினான்.

விநோதினி சர்வநாடியும் ஒடுங்கியவள்போல் சிறிது நேரம்வரை பேசாது தலைகுனிந்து நின்றாள். பிறகு குனிந்தவாறே, "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்றாள்.

விஹாரி: அசம்பாவிதமான எண்ணங்களை விட்டு நற்புத்தியுடன் உன் கிராமத்தில் போய் வசி.

விநோ: எப்படிப் போவது?

விஹாரி: நானே உன்னை ரெயிலிலுள்ள பெண்கள் வண்டியில் ஏற்றி உன் கிராமம் வரை கொண்டுவிட்டு வருகிறேன்.

விநோ: அப்படியானால் இரவு நான் இங்கேயே இருக்கிறேன்.

விஹாரி: இங்கே வேண்டாம். என்மீதே எனக்கு நம்பிக்கை இல்லை.

இதைக் கேட்டதும் விநோதினி அவனுடைய இரு பாதங்களையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "விஹாரிபாபு, என்மீது சற்றாவது கருணை இருக்கட்டும்!

இருதயத்தைக் கல்லாகச் செய்துகொள்ள வேண்டாம்! பாவியிடம் சிறிது அன்புகொண்டதனால் உங்களுக்கும் துளி பாவம் சம்பவித்தாலும் பாதகமில்லை" என்று கூறி அவன் பாதங்களைப் பன்முறையும் முத்தமிட்டாள்.

விஹாரிக்கு அவளுடைய செய்கையால் ஏற்பட்ட உணர்ச்சி அடங்க ஒரு நிமிஷமாயிற்று. அவன் மனம் இரங்குவதை முகக் குறிப்பால் உணர்ந்த விநோதினி அவனருகில் மண்டியிட்ட வண்ணம், "பிராணேசுவரா! உங்களை நான் என்றும் அடைய முடியாதென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் இன்று ஒரு நாழிகை என்னைக் காதலியுங்கள். அது போதும். என் உயிருள்ளளவும் அதை நான் மறவேன். பிறகு அப்பாழடைந்த கிராமத்தில் போய் ஆயுள் முழுவதும் வசிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று கூறி அவன்பாதத்தைப் பிடித்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

விஹாரி பெருமூச்சுவிட்டான். அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அவள் பிடியிலிருந்து கால்களை விடுவித்துக் கொண்டு எழுந்து தழுதழுத்த குரலில், "இரவு ஒருமணிக்குப் பாஸஞ்சர் வண்டி புறப்படுகிறது" என்றான்.

விநோதினியும் தீனக்குரலில், "அதிலேயே நான் புறப்பட்டுச் செல்கிறேன்" என்றாள். அச்சமயம் சிறுவன் வஸந்தன் விழித்தெழுந்து மஹேந்திரன் அருகில் வந்து நின்றுகொண்டு விநோதினியை உற்று உற்று நோக்கினான்.

விஹாரி, "தூங்கப்போகவில்லையாடா?" என்று கேட்டதைக்கூடக் கவனியாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் வஸந்தன்.

அவனுக்கு வெகுநாட்களாகத் தெரிந்த தபாற்காரக் கிழவன் அவ்வழியே வந்தான்.

—பக்கம் 249.

சிறுவனின் களங்கமற்ற அழகிய முகம் விநோதினியை வசீகரித்தது. அவனை வாரி அணைத்துக்கொள்ள இரு கைகளையும் நீட்டினாள். வஸந்தன் ஒரு நிமிஷம் யோசித்தான். பிறகு அவளருகில் வந்து நின்றான். அவனை வாரியெடுத்து முத்தமிட்டுத் தன் கண்ணீரால் அவ்வழகிய குழந்தையின் முகத்தை நனைத்தாள் விநோதினி.

---

## முப்பத்தைந்தாம் அத்தியாயம்

எதிர்பாராத சம்பவங்கள் நேருவதும், சகித்தற்கரிய துன்பங்கள் நிகழ்ந்தும் அதைச் சகித்துக் கொள்வதும் வாழ்க்கையியல்பு. அன்றைய இரவு மஹேந்திரன் வீட்டில் எவ்விதமோ கழிந்தது. மறுநாள் விநோதினியை அழைத்துப் போவதாகச் சொல்லி அன்று சாயரட்சை வெளியே சென்ற மஹேந்திரன் இரவு வீட்டிற்கு வரவேயில்லை. ஹாஸ்டலில் தன் நண்பன் ஒருவனுடன் அன்று இரவைக் கழித்தான். மறுநாள் புறப்படத் தயாரா யிருக்குமாறு ஒரு கடிதம் விநோதினிக்கு எழுதித் தபாலில் போட்டு விட்டான்.

மறுதினம் காலைத் தபாலில் மஹேந்திரன் வீட்டிற்கு அக்கடிதம் கிடைத்தது. ஆசா சக்தியிழந்து சோர்வுற்று இன்னமும் படுக்கையை விட்டு எழுந்திருக்க வில்லை. "அம்மா, கடிதம் வந்திருக்கிறது" என்று வேலைக்காரன் கடிதத்தை ஆசாவின் கையில் கொடுத்தான்.

கடிதம் என்றதும் அவள் மனம் இடிந்தது. கை நடுங்கக் கடிதத்தை வாங்கிப் பார்த்தாள். மஹேந்திரனின் கையெழுத்து! விநோதினியின் விலாசத்திற்கு எழுதப் பட்டிருந்தது. அவள் உணர்விழந்தவள்போல் ஆனாள்.

கடிதத்தை அப்படியே வேலையாள் கையில் கொடுத்து விட்டாள்.

அவன் திகைத்து, "இதை யாரிடம் கொடுக்கட்டும்?" என்றான். "எனக்குத் தெரியாது" என்றாள் ஆசா.

இரவு எட்டு மணியிருக்கும். ஆத்திரத்துடன் மஹேந்திரன் வீட்டினுள் பிரவேசித்தான். நேரே விநோதினியின் அறைப்பக்கம் சென்றான். ஒரே இருட்டு. சப்தமே இல்லை. விளக்கை ஏற்றினான். அவ்வறையில் யாருமில்லை. ஒவ்வோர் இடமாய்த் தேடிப் பார்த்தான். எங்கும் அவளைக் காணாது கலவரமடைந்தான். 'என்ன முட்டாள் தனம் செய்தேன்! நான் அவளைக் கூடவே அழைத்துப் போயிருக்க வேண்டும். நான் இல்லாதிருக்கும் சமயம் அம்மா அவளை வைது திட்டியிருப்பாள். அவள் அதைப் பொறுக்காது எங்கோ சென்றுவிட்டாள்' எனத் தன்னையே நொந்து கொண்டான். அவன் கோபம் தாயின்மீது சென்றது. அவளிடம்போய், "விநோதினி எங்கே? அவளை என்ன சொன்னாய்?" என்று கேட்டான்.

ராஜலக்ஷ்மி: எனக்கு என்ன தெரியும்? அவளை நான் ஒன்றும் சொல்லவில்லை.

மஹேந்திரன் இதை நம்பவில்லை. "தெரியாதா இருக்கட்டும். நான் அவளைக் கண்டு பிடிக்காது விடப் போவதில்லை" என்று கூறிச் சரேலென வெளியே சென்றான். ராஜலக்ஷ்மி என்ன கூப்பிட்டும் அவன் திரும்பிப் பார்க்கவேயில்லை. வேலைக்காரனிடம் போய் "விநோதினியம்மா எங்கே சென்றாள் தெரியுமா?" என்று கேட்டான்.

"எங்களிடம் ஒன்றும் சொல்லவில்லையே அந்த அம்மாள்! எனக்குத் தெரியாது ஒன்றும்" என்றான் வேலையாள்.

மஹேந்திரனுக்குக் கோபம் மேலிட்டது. வீட்டில் யாவரும் சேர்ந்து தன்னை ஏமாற்றச் சதி செய்வதாக நினைத்தான். எப்படியாவது விநோதினியைத் தேடிக் கண்டு பிடிக்க நிச்சயித்து வெளியே சென்றான்.

---

## முப்பத்தாறும் அத்தியாயம்

விஹாரி பரோபகாரி. பிறருக்கு உதவி செய்வதே அவனுக்குச் சந்தோஷம். தன் சுகதுக்கத்தைச் சற்றும் பாராட்டாதவன். விநோதினியை அவளது கிராமத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு அன்றுதான் திரும்பி வந்தான். திடசித்தமுடைய அவன்கூட அன்று துயரமே உருவெடுத்ததுபோல் தன் வீட்டு மாடியில் உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருந்தான். மனத்தில் சொல்லமுடியாத வேதனை. உலகமே தன்னைக் கைவிடத் தான் மாத்திரம் அதில் தனித்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. மனம் எதிலும் செல்லவில்லை. வஸந்தனுக்கும் அன்று பாடம் கற்பிக்கவில்லை. அச்சிறுவன் படுத்துத் தூங்கி விட்டான். இரவுமணி ஒன்பது அடித்தும் விஹாரி இன்னமும் உட்கார்ந்து கொண்டேயிருந்தான். யாரைப்பற்றி நினைக்கவும் கூடாதென அவன் திடசங்கல்பம் செய்து கொண்டிருந்தானே அவளைப்பற்றியே நினைக்க மனம் தூண்டியது. அவன் மனோதிடம் எங்கோ மாயமாய்ப் போயிற்று. சிறுவயதில் தான் மஹேந்திரனிடம் நட்புக் கொண்ட காலத்திலிருந்து அன்றுவரை நடந்த ஒவ்வொரு

சம்பவமும் மனத்திரையில் எழுதிய சித்திரமபோல் வரிசையாய்த் தோன்றி மறைந்தது. தங்கள் இருவரின் நட்பிற்கு முதல்பங்கம் எப்பொழுது, எப்படி ஏற்பட்டது என்று யோசித்தான். உடனே தான் விவாகத்திற்காகப் பெண் பார்க்கப் போனது, ஆசாவின் அழகிய களங்கமற்ற முகம், நாணித் தலை கவிழ்ந்த அவள் உருவம், தன் நண்பனின் சுகத்திற்காகத் தனது ஆசையைத் துறந்தது, நண்பனின் சுகமய தாம்பத்திய வாழ்க்கை, தம்பதிகளுக்கு மத்தியில் நல்ல மரத்தில் புல்லுருவிபோல் விநோதினி தோன்றியது, அவளால் சர்வநாசம்—இவை யாவும் அவன் மனக்கண்முன் தோன்றின.

விவாஹமான புதிதில் மஹேந்திரனும் ஆசாவும சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோ, விஹாரியின் மேஜைமீது வைக்கப் பட்டிருந்தது. அதன்மேல் அவன் பார்வை சென்றது. அதைக் கையிலெடுத்து ஒருமுறை பார்த்தான். பரிசுத்தமான காதலின் இன்ப வாழ்க்கை அவ்விளம் தம்பதிகளின் முகத்தில் பிரதிபலித்துப் பிரகாசித்தது. அவ்வாழ்க்கை மண்ணாய்ப் போனதற்குக் காரணமாயிருந்த விநோதினியின்மீது வெறுப்பும் கோபமும் ஏற்பட்டன விஹாரிக்கு. அவளைத் தன் மனத்திலிருந்து அறவே அகற்ற முயன்றான். ஆனால் என்ன ஆச்சரியம்! தன்னால் ஒருநாளும் அப்படிச் செய்ய முடியாதென்பதை அவன் அப்பொழுதுதான் உணர்ந்தான். கடைசியாக விநோதினி தன்னிடம் அன்புப் பிச்சை வேண்டி ஏங்கின்றது இன்னமும் கண்முன் நடப்பது போன்று இருந்தது; தன் பாதங்களைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு அவள் முத்தமிடுவது போலவே யிருந்தது. அவள்பாலிருந்த துவேஷமெல்லாம் நொடி

யில் மறைந்தது. தான் காண்பது கனவோ நனவோவென வியந்தான்.

கையில் ஆசாவின் போட்டோ அப்படியே இருந்தது. யாரோ வந்த சப்தம் கேட்டுத்திடுக்கிட்டுத் திரும்பினான். மஹேந்திரன் வந்திருந்தான். உடனே எழுந்ததில் போட்டோ கீழே விழுந்ததைக் கூட அவன் கவனிக்க வில்லை.

மஹேந்திரன் வந்ததுமே, "விநோதினி எங்கே?" என்றான்.

விஹாரி நண்பனருகில் சென்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "மஹேன், சற்று உட்கார். உன்னோடு கொஞ்சம் பேசவேண்டும்" என்றான்.

மஹேந்: எனக்கு இப்பொழுது உட்கார்ந்து பேசச் சமயமில்லை. விநோதினி எங்கே? சொல்!

விஹாரி: நீ கேட்கும் கேள்விக்கு அவ்வளவு லகுவில் பதில் சொல்லிவிடமுடியாது. சற்று உட்கார்ந்து கேட்டால்தான் முடியும்.

மஹேந்: எனக்கு ஏதாவது உபதேசிக்கப் போகிறா யாக்கும்! எனக்கு அதெல்லாம் தெரியும். நீ ஒன்றும் சொல்லவேண்டியதில்லை.

விஹாரி: உபதேசம் ஒன்றுமில்லை. உபதேசிக்க எனக்கு அதிகாரமும் இல்லை; யோக்கியதையும் இல்லை.

மஹேந்: இல்லாவிடில் என்னைத் தூஷித்து நிந்திக் கப்போகிறாயாக்கும்! ஆமாம்! நான் நீசன்; அதமன்; மூடன்; எல்லாந்தான்! ஆனால் விநோதினி எங்கே? அதைச் சொல். அவள் இருப்பிடம் உனக்குத் தெரியுமா?

விஹாரி: தெரியும்.

மஹேந்: அதைத் தெரிவிப்பாயா, மாட்டாயா?

விஹாரி: மாட்டேன்.

மஹேந்: தெரிவித்துத்தான் ஆகவேண்டும். நீ அவளை மயக்கி ஏமாற்றி அழைத்துவந்து ஒளித்து வைத்திருக்கிறாய்! அவள் எனக்குச் சொந்தம்; என்னிடம் உடனே ஒப்படை!

விஹாரி துணிவுடன், "அவள் உனக்குச் சொந்தமில்லை. அவளை நான் ஏமாற்றி அழைத்து வரவுமில்லை. தானாகவே அவள் என்னிடம் வந்தாள்" என்றான்.

"எல்லாம் பொய்!" என்று மஹேந்திரன் கர்ஜித்தான். பிறகு, "விநோதினி! விநோதினி!" எனக் கூவிக்கொண்டே அவ்வீடு முழுவதும் தேடிச் சோதனையிட்டான். ஓர் அறையிலிருந்து யாரோ அழும் சப்தம் கேட்டது. கதவு தாழிடப்பட்டிருந்தது. "விநோதினி! இதோ நான் வந்துவிட்டேன். பயப்படாதே, அழாதே!" என்று சொல்லிக்கொண்டே பலங் கொண்டமட்டும் கதவை உதைத்துத் தள்ளினான். கதவு திறந்து கொண்டது. யாரோ கட்டிலில் படுத்திருப்பது தெரிந்தது. விளக்கை ஏற்றினான். அதற்குள் விஹாரி ஓடிவந்து, கட்டிலில் பயத்தினால் நடுநடுங்கி அழுதுகொண்டிருக்கும் வஸந்தனை எடுத்து மடியில் படுக்கவைத்துக்கொண்டு தேறுதல் கூறிச் சாந்தப்படுத்தினான்.

மஹேந்திரன் திகைத்து மறுபடியும், "விநோதினியை எங்கே வைத்திருக்கிறாய்? சொல்" என்றான்.

விஹாரி: நண்பா, ஏன் இப்படி அமர்க்களம் செய்கிறாய்? இக்குழந்தையை வீணில் நடுங்க வைத்துவிட்

டாய். இவனுக்கு ஜுரங்கூட வந்துவிடும்போல் இருக்கிறது. நான்தான் சொன்னேனே, விநோதினியினால் உனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லையென்று.

மஹேந்திரன் கோபத்தினால் பற்களை நறநறவெனக் கடித்து, "ஹே சாது! மஹாத்மா! மிக்க யோக்கியன் போல் நடிப்பதை நிறுத்து! என் மனைவியின் போட்டோவைக் கையில் வைத்துக்கொண்டு என்ன மந்திரம் ஜபித்துக்கொண்டிருந்தாய்? பாவி! மோசக்காரா!" என்று கத்தினான். அங்கே விழுந்து கிடந்த போட்டோவை எடுத்து விட்டெறிந்தான். அதைச் செருப்பால் மிதித்துக் கண்ணாடியைத் தூளாக்கினான்; படத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தான்.

விஹாரியின் மனம் சிதைந்தது. பேச நா எழவில்லை. வாசற்புறம் சுட்டிக் காட்டி, "போ!" என்றான்.

மஹேந்திரன் ஆத்திரத்துடன் வெளியே சென்று விட்டான்.

---

## முப்பத்தேழாம் அத்தியாயம்

விநோதினி தனது கிராமம் வந்தடைந்தாள். மனத்தை எவ்வளவோ திடப்படுத்திக்கொண்டாள்; 'சீ, இனி நான் ஏதும் வேண்டேன்! உலகசுகத்தை யெல்லாம் வெறுத்து, மறந்துவிட்டு எஞ்சிய வாழ்க்கையைப் பிறர் அறியாது நிம்மதியுடன் கழித்துவிடுகிறேன். புண்ணியக் கதைகளைப் படிப்பது, ஒழிந்த நேரத்தில் கிராமத்தினருக்கு முடிந்த உதவியைச் செய்வது, இப்படிக் காலத்தைக் கழிக்க வேண்டும்' என்று முடிவு செய்துகொண்டாள். அவள் குடிசையை அடையும்போது சாயங்காலமாகிவிட்டது.

அந்த மண்குடிசை ஜனப்பழக்கமற்றுப் பாழடைந்து பார்க்கப் பயங்கரமாகக் காணப்பட்டது. விஹாரி அவளை ஸ்டேஷனிலேயே இறக்கிவிட்டுப் போய்விட்டான். பூட்டிக் கிடந்ததால் கதவைத் திறந்ததும் குப்பென நாற்றம் வீசியது. விநோதினி தன் மனத்தை எவ்வளவோ திடப்படுத்திக்கொண்டு வந்தும் அக்குடிசைக்குள் அடியெடுத்து வைக்கப் பின்வாங்கினாள். அவ்விடத்தைக் காணவே அசங்கியமாக இருந்தது. உள்ளே ஒரே இருட்டு. ஒரு மூலையில் கிடந்த தகர மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றினாள். புகை சூழ்ந்திருந்த அந்த மங்கலான வெளிச்சத்தில் குடிசையின் அலங்கோலம் பின்னும் பயங்கரமாகப் புலப்பட்டது. சுவர், சாமான், யாவும் செல்லரித்துக் கிடந்தன. எங்கே பார்த்தாலும் எலிவளைகள் தோண்டப்பட்டு மண் குவிந்து கிடந்தது. முன்பு அவளுடன் வசித்துவந்த தூரபந்துவான ஒரு கிழவியும் தன் பெண்ணைப் போய்ப் பார்த்துவர மருமகன் வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

விநோதினிக்கு அக்குடிசையில் தனித்திருக்கவே பிடிக்கவில்லை. அண்டை வீட்டிற்குச் சற்றுப்போய் வருவோமென்று சென்றாள். அவளைத் தூரத்தில் பார்த்ததுமே கிராமத்து ஸ்திரீகள், மோவாயில் கையை வைத்துக்கொண்டு, "விநோதினியைப் பார்த்தாயோடீ? என்ன நன்றாய் வெளுத்துக் குண்டுமாதிரி வந்திருக்கிறாள்! அவள் புடைவையும் அவள் அதை உடுத்தும் மாதிரியும் பறங்கிக்காரச்சி போலன்றோ இருக்கின்றன!" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். விநோதினியின் காதிலும் இது விழாமலில்லை. கிராமத்தினருக்கு அவளிடம் நெருங்கவே விருப்பமில்லையென்பதை அவள் சீக்கிரமே

கண்டுகொண்டாள். தான் வசித்த கிராமத்திலேயே தான் இப்படிப் பகிஷ்கரிக்கப்பட்டவள் போல் நடத்தப் பட்டது அவள் மனத்தைப் பின்னும் புண்படுத்தியது.

விஹாரியை அவள் தனக்கு வாரத்திற்கு ஒரு கடிதமாவது இரண்டு வரிகள் தவறாது எழுதுமாறு மிகவும் வேண்டிக் கொண்டிருந்தாள். வந்து இரண்டு நாட்களே ஆனபோதிலும் விஹாரியினிடமிருந்து கடிதம் கிடைக்காதாவென எதிர்பார்த்து ஏங்கித் தவித்தாள். குளத்தில் குளிக்கப் போகும் சமயம் அவளுக்கு வெகு நாட்களாகத் தெரிந்த தபாற்காரக் கிழவன் அவ்வழியே வந்தான். ஆவலுடன் விநோதினி தலைப்பை இழுத்து நன்றாக உடம்பை மூடிக்கொண்டு, "எனக்கு ஏதாவது கடிதம் இருக்கிறதா?" என்று அவனைக் கேட்டாள். அவன், "இல்லை" என்று சொன்னான். "இருக்கிறதா என்று பார்க்கிறேன்" என்று சொல்லி அந்த ஊருக்கு வந்த நாலைந்து கடிதங்களை அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்துவிட்டுத் தனக்கு ஒரு கடிதமும் இராது போகவே முகம் தொங்கிக் குளத்திற்குத் திரும்பிவந்தாள். அப்பொழுது அவள் தோழி ஒருத்தி ஆச்சரியத்தினால் கண்கள் விரிய, "ஏண்டி விநோதினி, கடிதத்திற்காக இவ்வளவு ஆத்திரப் படுவானேன்?" என்று கேட்டாள். அதற்குள் மற்றொருத்தி, "வாஸ்தவந்தானடீ. கடிதம் வருவதற்கும் கொடுத்துவைத்திருக்க வேண்டுமோ இல்லை யோடீ! நம்ம பந்துக்கள்கூட உத்யோகந்தான் பார்க் கிறார்கள். ஆனால் ஒரு கடுதாசியாவது போடுகிறார் களா?" என்றாள். இப்படியெல்லாம் எல்லோரும் பரிஹஸிக்க ஆரம்பித்து விட்டனர் விநோதினியை. மஹேந்திரனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு அவ்

வூராருக்கு எவ்விதமோ எட்டிவிடவே அவர்கள் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டி ஏசிப் பேசத் தொடங்கினர். ஒருவர் முகத்திலும் விழிக்காமல் தூர இருப்போமென்றாலும் அச்சிறு கிராமத்தில் விநோதினிக்கு அது எப்படிச் சாத்தியமாகும்? மனநிம்மதிக்காக இங்கு ஓடிவந்தால் இங்கும் அவளுக்கு அமைதியில்லை. கிராமத்தார் நடத்தையும் பேச்சும் புண்ணில் கோலிடுவதுபோன்று இருந்தன.

இரண்டாம் நாளும் விஹாரியிடமிருந்து கடிதம் கிடைக்காது போகவே அவள் மிகவும் ஏமாற்றமுற்றாள். உடனே அவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்:

"விஹாரி பாபு,

ஏதோ காதற்கடிதமென்று நினைத்துப் பயப்படவேண்டாம். என்னைக் காக்குந் தெய்வமென்று நான் தங்களை வழிபடுகிறேன். ஆகையால்தான் நான் பாபியானாலும் தாங்கள் அதற்கு விதித்த கொடுந்தண்டனையையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டேன். நான்படுந் துன்பத்தைத் தாங்கள் கண்ணாரக் கண்டால் தங்கள் மனமும் கரைந்துவிடும். ஆனால் எனக்கு அத்தகைய பாக்கியம் ஏது? எத்தகைய துன்பத்தையும் தங்கள் சரணாரவிந்தத்தை ஸ்மரித்தே சகித்துக்கொள்ள நான் சித்தமாயிருக்கிறேன். ஹே பிரபோ, சிறையில் இருக்கும் குற்றவாளிக்குங்கூடச் சிறிதளவு, உயிர்வாழப் போதுமான அளவாவது உணவு கிடைக்கிறது. துர்ப்பாக்கியவதியான எனக்குத் தங்கள் கைப்பட இரண்டு வரிக் கடிதந்தான் உயிர் வாழ உணவுக்குச் சமானம். எனது இந்த அற்ப வேண்டுகோளைக் கூட ஏற்கமாட்டீர்களா?

எனது அகங்காரத்திற்குரிய தண்டனை கிடைத்துவிட்டது. இப்படிப் பிறரெதிரில் தலைகுனிய நேரிடுமென்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. இப்பொழுது என்மீது தாங்கள் வெற்றி கொண்டதை நான் அங்கீகரிக்கிறேன். ஆனால்

பிரபுவே, என் மீது சற்று இரக்கங் கொள்ளுங்கள். நான் வேண்டுவதெல்லாம் உயிர்வாழச் சிறு ஆதாரம். அதைத் தாங்கள் எனக்கு அளித்தால் போதுமானது. எனது வேதனை நிரம்பிய மனம் வெடித்துவிடும்போல் இருக்கிறது. ஆனால் எதையும் தங்களிடம் வெளியிடுவதில்லையென்று சங்கற்பித்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள்
விநோதினி"

கடிதத்தைத் தானே கொண்டுபோய்த் தபாலில் போட்டு வந்தாள். இதைப் பார்த்த கிராமத்தாரின் வம்பிற்குக் கேட்பானேன்; "சீச்சீ! என்ன மானங் கெட்டவள்! கதவைச் சாத்திக்கொண்டு கடிதம் எழுதுவது, அதை எடுத்துக்கொண்டு தபாலாபீஸிற்குப் போய்ப்போடுவது! கல்கத்தா சென்று வெட்கம் மானம் யாவற்றையும் துறந்துவிட்டாள்" என்று இகழ்ந்தனர்.

கொந்தளிக்கும் கடலில் அகப்பட்ட மரக்கலம் போன்றிருந்தது அவள் நிலை. மனத்தை நிலை நிறுத்த ஒரு சிறு ஆதாரமாவது அகப்படாதா வென்று தவித்தாள். விஹாரியின் ஞாபகச் சின்னமாகத் தன்னிடம் ஒன்றுமில்லையே என வருந்தினாள். அவன் கையெழுத்திட்ட ஒரு துண்டுக் கடிதமானாலுங் கூட அது தனக்குப் பெரிய ஆதாரமாகவும் துணையாகவும் இருக்குமென அவளுக்குத் தோன்றியது. சதா ஒருவரைத் தியானித்தால் அவர் நம்மால் இழுக்கப்படுவாரென்று சொல்லிக் கேட்டதுண்டு. அவளும் கண்களை மூடிக் கைகளைக் கூப்பி விஹாரியின் உருவத்தை மனத்தில் இருத்தி, "ஹே பிரபோ, எனக்கு எங்கும் சூன்யமயமாகவே காண்கிறது. வாழ்க்கையும் அப்படியே. இதற்கிடையே தங்கள் தரிச

னத்தை ஒரே ஒருமுறை வேண்டுகிறேன். தாங்கள் வரத்தான் வேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். இதில் அவளுக்கு ஒருவகைச் சாந்தியும் மனோபலமும் ஏற்பட்டதுபோல் தோன்றியது. அவ்விருண்ட குடிசையில் அவள் வெகுநேரம்வரை விஹாரியைப்பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தாள்.

அச்சமயம் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. தனது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதி ஓடிப்போய்க் கதவைத் திறந்து கொண்டே, "பிரபுவே! வந்து விட்டீர்களா?" என்று மனவெழுச்சியுடன் கூறி நின்றாள்.

"ஆமாம், வந்துவிட்டேன், விநோதினி!" என்று கூவிக்கொண்டே மஹேந்திரன் உள்ளே நுழைந்தான்.

விநோதினி வெறுப்புடன் அவனைச் சபித்துக் கொண்டே, "நீ ஏன் இங்கு வந்தாய்? வெளியே போ! ஒரு நிமிஷமும் இங்கே நில்லாதே!" என்று கர்ஜித்தாள்.

மஹேந்திரன் திகைத்து ஸ்தம்பித்து நின்று விட்டான். தற்செயலாய் அங்கு விநோதினியுடன் ஏதோ பேசவந்த அண்டைவீட்டுப் பாட்டி ஒருத்தி மஹேந்திரனைப் பார்த்துவிட்டு, "ஐயோ! அடியம்மா!" என்று சொல்லித் தலையில் முட்டாக்கைச் சரியாகப் போட்டுக் கொண்டு தெருவை நோக்கி ஓட்டம் பிடித்தாள்.

# முப்பத்தெட்டாம் அத்தியாயம்

கிராமமுழுவதும் ஒரு நொடியில் இச்சங்கதி பரவியது. கிராமச் சாவடியில் கிராமத்துப் பெரியோர்களின் 'மகாசபை' கூடியது. "அந்த வெட்கங்கெட்ட பிரஷ்டை கல்கத்தாவில் கூத்தடித்தது போதாதென்று கடிதம் எழுதி அவனை இங்கேயும் வரவழைத்து விட்டாளாமே! என்ன துணிச்சல் அவளுக்கு? இனிச் சும்மா இருக்கக் கூடாது. அவளை விரட்டியடிக்கவேண்டும்" என்று பேசிக்கொண்டிருந்தனர்.

விஹாரியின் கடிதத்தைக் கடைசிவரை எதிர்பார்த்தும் ஒரு வரியுள்ள கார்டும் கிடைக்காது போகவே ஏமாற்றத்தினால் விநோதினியின் மனம் மாறியது. 'நான் எதற்காக அவர் ஆக்ஞைப்படி நடக்கவேண்டும்? அவமானம், உலகநிந்தனை, இந்த வனவாசம், சுகமற்ற வாழ்க்கை இவை யாவற்றையும் சகித்து ஏன் அனுபவிக்க வேண்டும்? ஆசா சுகமடையவேண்டி நான் கஷ்டப் படுவது என்ன நியாயம்? அவள் சுகவாழ்க்கையைக் குலைக்கவேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டிருந் தேனே; அதையேன் நிறைவேற்றாது ஓடிவந்தேன்? என்னை இவ்வளவு துச்சமாக நினைக்கும் விஹாரியிடம் நான் ஏன் அடைக்கலம் புகுந்தேன்? என் மனம் அவரை ஏன் நாடியது? எல்லாம் எனது தவறு. எனது புத்தி ஏன் இப்படிப் போயிற்றோ!' என்றெல்லாம் எண்ணித் தன்னையே நொந்துகொண்டாள்.

அதேசமயம் மருமகனைப் பார்க்கச் சென்றிருந்த அவனுடைய ஒன்றுவிட்ட மாமியார் வந்து சேர்ந்தாள். வந்ததும் விநோதினியைத் தூஷிக்க ஆரம்பித்தாள். "வெட்கங்கெட்ட பெண்ணே, ஊரெல்லாம் உன் பேச்சே அடிபடுகிறதே; என்னடீ இது?" என்றாள்.

"அவை யாவும் உண்மையே" என்றாள் விநோதினி.

"சீச்சீ! உனது ஜன்மத்தைக் கொளுத்த! இங்கே ஏன் திரும்பிவந்தாய்? எல்லாரும் இறந்தொழிந்தனர். உனது இச்சீர்கெட்ட நிலையைக் காணவே நான் ஜீவித்திருக்கிறேன் போலிருக்கிறது! என்னால் சகிக்க முடியவில்லை. ஊரார் முகத்தில் நான் எப்படி இனி விழிப்பது! நீ ஒழிந்து போ, இவ்விடத்தை விட்டு!" என்று கத்தினாள் அக்கிழவி.

"நான் இப்பொழுதே போய்விடுகிறேன்" என்றாள் விநோதினி.

விநோதினியின் கடுஞ்சொற்களைக் கேட்டதும் மஹேந்திரன் திரும்பி ரெயில்வே ஸ்டேஷனுக்கே சென்று இரவு முழுவதும் அங்கேயே கழித்தான். அவன் எப்படியும் விநோதினியை அழைத்தே செல்வதெனத் தீர்மானித்தான். 'விஷயம் ஊரறிந்துவிட்டது. இனிப் பின்வாங்குவானேன்? மனோரதத்தைப் பூர்த்தி செய்துகொண்டே விடுவது' என நிச்சயித்தான். இரவு முழுவதும் நித்திரையில்லை. அன்ன ஆஹாரமில்லை. முகம் வெறிகொண்டவனது போல் இருந்தது. பொழுது விடிந்ததும் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு விநோதினியின் வீட்டை அடைந்தான்.

"விநோதினி, நான் நீ நினைப்பதுபோல் அவ்வளவு நீசனல்ல. உன்னை மாத்திரம் ஊர் அபவாதத்திற்கு

ஆளாக்கிவிட்டு நான் அதிலிருந்து தப்ப விரும்பவில்லை. நான் உன்னை அழைத்தே செல்வேன். முதலில் நீ இங்கிருந்து புறப்படு. பிறகு உன் இஷ்டப்படியெல்லாம் நான் நடக்கத் தயார்" என்றான்.

"உன்னுடன்கூடவே வருகிறேன். அழைத்துச் செல்" என்றாள் விநோதினி. அப்பொழுது விநோதினியின் ஒன்றுவிட்ட மாமியார் மஹேந்திரனிடம் வந்து, "மஹேன், என்னை அடையாளம் தெரியவில்லையா உனக்கு? நான் உனக்கு ஒன்று விட்ட சித்தியாக வேண்டும். நானும் உன் தாய் ராஜலக்ஷ்மியும் இதே கிராமத்தில் பிறந்து ஒன்றாக வளர்ந்தவர்கள். தாயை விட்டு, மனைவியை விட்டு, அறிவிழந்து என்ன காரியம் செய்கிறாய்? நான்குபேர் மத்தியில் இனி நீ தலையெடுப்பது எப்படி?" என்று புத்தி கூறினாள். மஹேந்திரனின் வெறிகொண்ட மனத்திலும் அவள் வார்த்தை ஊடுருவியது. கனவினின்றும் விழித்தது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. தாயைவிட்டு, மனைவியைவிட்டு, ஓர் உயர் குடும்பத்தில் பிறந்த விதவையுடன் தான் வீட்டை விட்டு ஓடுவது அப்பொழுதே நினைவிற்கு வந்தாற்போல் இருந்தது. அவன் பேசாது நின்றிருந்தான்.

கிழவி மறுபடியும், "ஏன் நிற்கிறாய்? பேசாமல் புறப்பட்டுச் செல்" என்றாள்.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே விநோதினி வண்டியில்போய் ஏறிக்கொண்டாள். மஹேந்திரனும் ஏறப் போனான். ஆனால் விநோதினி அவனைத் தடுத்து, "ஸ்டேஷன் அதிகத் தூரமில்லை. நீ நடந்தே வா" என்றாள்.

"கிராமத்தார் முன்னிலையிலா?" என்றான் மஹேந்திரன். "இன்னும் வெட்கம் மானம் பாக்கியிருக்கின்றனவா?" என்றாள் விநோதினி.

வண்டி புறப்பட்டுச் சென்றது. அக்கிரகாரத்தின் வழியாகச் செல்லாது குறுக்கே தோப்புகளில் புகுந்து சென்று மஹேந்திரன் ஸ்டேஷனை அடைந்தான்.

---

## முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

ராஜலக்ஷ்மி, மஹேந்திரன் வீட்டை விட்டுச் சென்றதுமுதல் மனக்கிலேசமுற்று ஊண் உறக்கம் யாவுமொழிந்து படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். எங்கெங்கே தேடியும், விசாரித்தும் அவன் போன இடம் தெரியவில்லை.

இதற்கிடையில் மஹேந்திரன் விநோதினியை அழைத்துக்கொண்டு கல்கத்தா வந்துசேர்ந்தான். ஒரு வீடு குடிக்கூலிக்குப் பேசி அதில் அவளை விட்டுத் தான் மாத்திரம் வீட்டிற்கு வந்தான். தாய் அதிகமாக நோயுற்றுப் படுத்திருப்பதையும் ஆசா அவளருகில் உட்கார்ந்து காலைப் பிடித்துக்கொண்டிருப்பதையும் கண்டான்.

அவனைக் கண்டதும் ஆசா திடுக்கிட்டு எழுந்து உடனே அறையை விட்டு வெளியே போய்விட்டாள். மஹேந்திரன் அன்னையின் அருகில் சென்று, "அம்மா, வீட்டில் இருப்பது படிப்பிற்கு இடையூறாக இருக்கின்றது. காலேஜிற்குப் பக்கத்திலேயே ஓர் அறை வாடகைக்கு எடுத்துக்கொண்டு இனி அங்கிருந்து படிக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றான்.

ராஜலக்ஷ்மி அவனைத் தன் அருகில் வந்து உட்காரு மாறு சைகை செய்தாள். அவனும் மிகச் சங்கோசத் துடன் தாயின் அருகில் போய் உட்கார்ந்தான்.

"மஹேஹறன், நீ எங்கே வேண்டுமானாலும் இரு. ஆனால் என் ஆசாவின் மனத்தை மாத்திரம் வருத்தாதே. இதுவரை அவளது நற்குணத்தை அறியாமல் நான் என்ன தவறு செய்தேன்! நீ எல்லாம் தெரிந்தவனு யிருந்தும் அவளை இக்கோர துக்கத்திற்கு ஆளாக்க எப்படி மனந்துணிந்தாய்? இன்று இரவாவது வீட்டில் இருப்பாயோ மாட்டாயோ?" எனக் கூறிக் கண்ணீர் பெருக அவன் முகத்தை நோக்கினுள் ராஜலக்ஷ்மி.

எழுந்து ஓட முடிந்திருந்தால் மஹேஹறந்திரன் ஓடி போயிருப்பான். ஆனால் அச்சமயம் அதுவும் முடி வில்லை. "இரவு இருக்கப் போவதில்லை" என்றான் "என்ன? ஆசாவுடன் ஒன்றும் பேசக்கூடப் போ தில்லையா? பாவம்! அவள் இந்த மூன்று தினங்களாய் படும் மனோவேதனையை ஈசனே அறிவார்! உனது லஜ்ஜை யற்ற செய்கையைக் கண்டு என் உள்ளம் வெடித்து விட்டது" என்று கூறி வேரற்ற மரம்போல் படுக்கையில் சாய்ந்தாள்.

இதுதான் சமயமென்று மஹேஹறந்திரன் மெள்ள அவ் வறையைவிட்டு நழுவினுன். மாடி மீதிருக்கும் தனது அறைக்குச் சென்றான். அங்கே ஆசாவைச் சந்திக்கக் கூடுமென்று அவன் எதிர்பார்க்கவும் இல்லை; அவன் அதை விரும்பவும் இல்லை.

ஆசா ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். அவன் படியேறிவரும் சப்தம் அவள் செவியில் படவில்லை.

எதிரே வந்ததும் திடுக்கிட்டு எழுந்து ஒதுங்கி நின்றாள். அடியெடுத்து வைக்கக் கால்கள் மறுத்தன.

"ஆசா!" என்று அவன் ஒருமுறை அழைத்திருந்தால் கூடப்போதும்; உடனே நடந்தவை யாவற்றையும் மறந்து அவனை மன்னித்துத் தனது துக்கம் தீர அவனைக் கண்ணீரால் அபிஷேகம் செய்வித்திருப்பாள். ஆனால் அவன் அவள் பெயரைச் சொல்லவும் அஞ்சினான். அவளுடன் பேச எவ்வளவோ முயன்றும் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. மனத்தில் ஒன்றும் வாயில் ஒன்றுமாகப் பேச அவனால் முடியவில்லை. தானே விளைவித்த அனர்த்தத்தைத் தானே தவிர்த்துக்கொள்வது முடியாதென்று உணர்ந்தான். விநோதினிக்கும் தனக்கும் ஏற்பட்ட பிணைப்பு இனி அறுபட முடியாததென்று நினைத்தான். 'காரியம் கைமீறிவிட்டது. இனி அவளுக்கு இவ்வுலகில் என்னைத் தவிர வேறு கதியில்லை. இனி விரும்பட்டும் விரும்பாது போகட்டும், அவளைக் காக்கும் பொறுப்பு என் தலையில்தான்' எனத் தீர்மானித்தான். தான் அதே மாடி அறையில் ஆசாவுடன் அநுபவித்த சுகங்களெல்லாம் ஒருமித்து நினைவிற்கு வரவே ஒரு நிமிஷம் ஸ்தம்பித்துப் பேசாது நின்றான். 'இல்லை! இனி நான் அவற்றையெல்லாம் மறந்துவிடவேண்டும். நினைத்துப் பயனில்லை. அப்பிணைப்பை என் கையால் நானே அறுத்துப்போட்ட பிறகு வருந்திப் பயனென்ன?' என்று சமாதானம் செய்துகொண்டான்.

ஒருமுறை ஆசாவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். அவள் அவனைப் பார்க்கவுமில்லை; அவ்விடத்தைவிட்டு அசையவுமில்லை. பதுமை போன்று நின்றாள். வாய்

விட்டு அழத் தோன்றியது அவளுக்கு. ஆனால் வெகு கஷ்டத்துடன் அதை அடக்கிக்கொண்டிருந்தாள். அவ் விருண்ட இரவு அவளது வேதனைநிரம்பிய முகத்திற்குத் திரையிட விரும்பியதுபோல் அதை ஒருவாறு மறைத்தது.

என்ன நினைத்துக்கொண்டோ மஹேந்திரன் அவளரு கில் வந்தான். ஆசாவிற்குத் தேகத்தில் ரத்த ஓட்டமே நின்றுவிட்டது போல் தோன்றியது. அவள் தன் கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவன் சொல்ல நினைத்தது என்னவோ! பேசாதுதிரும்பவும் மனமில்லை. கடைசியில் என்ன கேட்பதென்று தெரியாமல், "கொத்துச் சாவி எங்கே?" என்றான்.

அது படுக்கையடியில் இருந்தது. ஆசா கட்டிலருகில் சென்றாள். மஹேந்திரனும் கூடவே சென்றான். தலையணை அடியிலிருந்து சாவிக்கொத்தை எடுத்து அவன் முன்பு வைத்தாள். அதை எடுத்துக்கொண்டு அவன் தனது அலமாரியைத் திறக்க ஒவ்வொரு சாவியாய்ப் போட்டுப் பார்த்தான். ஒன்றும் திறக்கவில்லை.

ஆசாவினால் இதைப் பார்த்துக்கொண்டே பேசாது நிற்கமுடியவில்லை. "இந்த அலமாரியின் திறவுகோல் என்னிடம் இல்லை" என்றாள். வேறு யாரிடம் இருக்கிற தென்பதை அவளால் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவும் முடியவில்லை. அவன் அதை அறிந்து கொண்டான். ஆசாவினால் துக்கத்தை அடக்க முடியாது போயிற்று. சரேலென வெளியே சென்று அவ்வளவு நேரம் தடுத்த வெள்ளம் கரைபுரண்டோடியதுபோல் விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

ஆனால் அதிகநேரம் அழவும் முடியவில்லை. மஹேந் திரனின் சாப்பாட்டு நேரமாகிவிட்டது நினைவிற்கு வரவே

அவசர அவசரமாய்க் கீழே இறங்கி வந்தாள். "மகேந்திரன் எங்கே இருக்கிறான்? அம்மா" என்று வினவினாள் ராஜலக்ஷ்மி.

ஆசா: மேலே இருக்கிறார்.

ராஜலக்ஷ்மி: பின் நீ ஏன் கீழே வந்துவிட்டாய்?

ஆசா தலைகுனிந்து, "அவருக்குச் சாப்பாடு. . . ." என்றாள்.

"சாப்பாடு எல்லாம் நான் தயார் செய்து அனுப்புகிறேன். நீ சீக்கிரம் சென்று இக்கிழிந்த புடைவையை அவிழ்த்துவிட்டு வேறு நல்லதாக ஒன்று உடுத்திக் கொண்டு முகத்தைக் கழுவிக்கொண்டுவா. நான் தலை வாரிப் பின்னுகிறேன்" என்றாள்.

ஆசாவுக்குத் தன்னைச் சிங்காரித்துக்கொள்ள வெட்கம் ஒரு புறம், துக்கம் மறுபுறம். மாமியார் சொல்வதையும் தடுக்க முடியவில்லை. அவள் சொல்லியபடியே செய்து கொண்டாள். மெள்ள மாடியேறி எட்டிப் பார்த்தாள். அவனைக் காணவில்லை. ஒவ்வோர் அறையாகச் சென்று பார்த்தாள்; எங்கும் காணவில்லை. அலமாரிப் பூட்டு உடைபட்டுக் கீழே கிடந்தது. அதிலிருந்து சில துணிகளை எடுத்துப் போயிருந்தான் மகேந்திரன்.

மறுதினம் ஏகாதசி. ராஜலக்ஷ்மி மிகவும் களைப்புற்றுப் படுத்திருந்தாள். ஆசா மெள்ள அவளது தேகத்தை வருடிக்கொண்டே, "அம்மா, பால் பழம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்; சாப்பிடுகிறீர்களா?" என்றாள்.

ராஜலக்ஷ்மிக்கு இந்த அன்புப் பணிவிடையினால் ஆனந்தக்கண்ணீர் பெருகியது. அவள் ஆசாவை அருகில்

இழுத்து முத்தமிட்டு, "மஹேன் என்ன அம்மா செய்து கொண்டிருக்கிறான்?" என்றாள்.

வெட்கமும் துக்கமும் ஆசாவின் நெஞ்சை அடைத்தன. "நேற்றிரவே எங்கோ போய்விட்டார்" என்றாள்.

இதைக் கேட்டு ராஜலக்ஷ்மியின் உற்சாகமெல்லாம் பறந்தது.

---

## நாற்பதாம் அத்தியாயம்

மஹேந்திரன் சில துணிகளும் புத்தகங்களும் எடுத்துப்போக வீட்டிற்கு வந்தசமயம் விநோதினி அவ்வாடகை வீட்டில் தனிமையாய் உட்கார்ந்து யோசிக்கலானாள். வாழ்வில் அவளது நலத்தைக் கோருபவர் வெகு சொற்பம். தனது செய்கையினால் அச்சிலரையும் இப்பொழுது அவள் இழந்துவிட்டாள். கொந்தளிக்கும் கடலின் மத்தியி லுள்ள ஒரு சிறு படகு, படகோட்டி சாவதானமாக இராவிடில் எந்த நிமிஷத்திலும் கவிழ்ந்து அவனைக் கடலுள் அமிழ்த்தி விடக்கூடும். மஹேந்திரனை அப்படகாகவும் தன்னைப் படகோட்டிக்குச் சமானமாகவும் பாவித்துத் தனது நிலைமையை ஒப்பிட்டுக் கொண்டாள். திடசித்த மற்ற அவனிடம் தன்வாழ்வை ஒப்பிப்பதால் ஏற்படும் அபாயத்தை நினைக்கவே அவள் மனம் கலங்கியது. அவனிடம் அவளுக்கு நம்பிக்கையில்லை. தன்னைப் போன்ற பால்ய விதவை ஆதரவின்றித் தன்னந்தனியாய் இவ்வகண்ட உலகில் வாழ்க்கை நடத்தப் புறப்படுவதன் அனர்த்தத்தையும் அவள் அறியாமல் இல்லை. நம்பிக்கையான ஆச்ரயம் அளிக்கக் கூடியவர் ஒரே ஒருவர்தாம் உண்டு. இது

விஹாரியினுல்தான் முடியுமென்பதை அவள் நன்ருக அறிந்தாள்.

விஹாரி அதே ஊரில் இரண்டு தெருக்களுக்கு அடுத் தாற்போல் வசிப்பதை அவள் அறிவாள். அவனது சுத்த மான வீடு, அவன் சிறுவன் வஸந்தனுக்குக் கல்வி கற்பிப் பது, அச்சிறுவனின் அழகிய குழந்தை முகம், தான் அவ் விடம் ஒருநாள் சென்றது, அன்று நடந்த சம்பவம் யாவும் இப்பொழுதும் கண்முன் நடப்பனபோல் தோன்றின.

இதை நினைக்கவே அவள் தேகம் சிலிர்த்தது; உணர்ச்சி பொங்கியது. இப்பொழுதும் நினைத்தமாத்திரத் தில் அவள் அங்கே செல்லக்கூடும். ஆனல் இப்பொழுது முன்போல் ஆத்திரப்பட்டு அவள் எதையும் செய்ய விரும்ப வில்லை. தனது உத்தேசம் கைகூட ஆர அமர யோசித்து வகை செய்ய விரும்பினுள். தனது கடிதத்திற்குப் பதிலை எதிர்பார்த்தாள். அதைப் பார்த்துக்கொண்டுதான் ஒரு வித முடிவிற்கு வருவது உசிதமென்று அவளுக்குத் தோன் றியது. 'வீணில் ஆத்திரப்பட்டு விஹாரியின் மனத்தைக் கெடுப்பது நலமன்று' எனக் கூறிக்கொண்டாள்.

தனது பெயருக்கு ஏதாவது கடிதம் வருமாகில் அதைக் கல்கத்தா விலாசத்திற்கு அனுப்புமாறு தன் கிராமத் தபாலாபீசில் ஏற்பாடுசெய்துவிட்டு வந்திருந் தாள். தனக்கு எப்படியும் விஹாரி பதிலெழுதுவான் என்பது அவளது முடிவான நம்பிக்கை. இவ்வாற முடி விற்குள் பதில் வராவிடில் பிறகு பார்த்துக்கொள்ளுவோ மென்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டாள்.

இச்சமயம் மஹேந்திரனும் அங்கு வந்துசேர்ந்தான். மூன்று நான்கு தினங்களாய் வேளைக்கு ஆகாரமில்லை;

நித்திரையில்லை. மனக்கிலேசம், அலைச்சல் எல்லாமாகச் சேர்ந்து அவனைக் கேவலம் நடைப்பிணமாகச் செய்து விட்டன. விநோதினி இருக்கும் வீட்டு வாயிற்கதவு தாழிடப்பட்டிருந்தது. தெருவில் போவோர் வருவோர் முன்னிலையில் வாயிலில் நின்று கதவைத் தட்டிக் கூப்பிட அவனுக்கு வெட்கமாயிருந்தது. புதுவேலையாள் படுத்துத் தூங்கிவிட்டான்போல் இருந்தது; பலமாய் இடித்துத் தட்டிக் கூவிய பிறகுதான் கதவு திறக்கப்பட்டது.

மஹேந்திரன் செல்வம் மிகுந்த வீட்டுப் புத்திரன். தாய்க்கு ஒரே அருமை மகன். சுகபோகத்திற்குக் குறை வில்லை. வீடு நிறைய ஆட்கள். குடும்பநிர்வாகம், பொறுப்பு ஒன்றுமே அறியாதவன். இவ்வீட்டில் காலடி வைத்த துமே, தான் இனி முன்போல் இருக்க முடியாதென்று அவனுக்குத் தோன்றியது. வீடு இருண்டு கிடந்தது; போதிய வெளிச்சமில்லை. மாடிப்படி, தரை எல்லாம் இடிந்து பெயர்ந்து கிடந்தன. வாயிற்புறம் இரண்டு கடைகள். "வீட்டிற்கு நல்ல பிரகாசமான விளக்குகள் வாங்கவேண்டும். வீட்டை 'ரிபேர்' செய்துகொடுக்க வீட்டுக்காரனை உடனே போய்த் தூண்டவேண்டும். வாசலில் இருக்கும் கடையை அப்புறப் படுத்திவிடவேண் டும். அதன் வாடகையையும் வேண்டுமானால் நானே கொடுத்துவிடுகிறேன்" என்றெல்லாம் நினைத்தான். இவை யெல்லாம் தன் பொறுப்பென்று நினைக்கும்போதே பெரிய பாரமாய்த் தோன்றியது.

மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான் அவன். எவளை அடையவேண்டி இவ்வளவு பாடுபட்டானோ அந்த விநோதினி இன்று அவனிடமே இருந்தும் மனவமைதி யில்லை.

கதவு தட்டிய சப்தத்திலிருந்தே விநோதினிக்கு வந்திருப்பது யாரெனத் தெரியும். சட்டென்று ஒரு துணியை எடுத்துக்கொண்டு தைக்க ஆரம்பித்தாள். தனது மனோநிலையை மறைக்க இது ஓர் உபாயமெனக் கைக்கொண்டாள்.

மஹேந்திரன் உள்ளே வந்ததும், "இந்த வீடு உனக்கு மிகவும் அசௌகரியமாயிருக்கும்" என்றான்.

தைத்துக்கொண்டே விநோதினி, "எனக்கு ஓர் அசௌகரியமும் தெரியவில்லை" என்றாள்.

மஹேந்: இரண்டு நாள் எப்படியோ பொறுத்துக் கொள். அதற்குள் வேண்டிய சாமான் யாவும் வரவழைத்துச் சௌகரியமாய்ச் செய்து விடுகிறேன்.

விநோ: இங்கே இப்பொழுதிருக்கும் சாமான்களே யதேஷ்டம். இன்னும் வேறு வாங்கவேண்டாம்.

மஹேந்திரன் சிரித்துக்கொண்டே, "அப்படியானால் என்னைக்கூட அதிகப்படி உருப்படிகளில் ஒன்றென்று நினைப்பாயோ?" என்றான்.

நிச்சப்தமான இடத்தில் விளக்கினருகில் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருக்கும் விநோதினியின் முகவசீகரம் அவனை மோகத்தில் ஆழ்த்தியது. வேறு நிலையில் அவள் சுதந்திரத்துடன் இருந்தால் ஓடிப்போய் அவளை அணைத்துக்கொண்டிருப்பான். ஆனால் கூட்டில் அடைபட்ட பக்ஷிபோல் அவள் தன் கையில் அகப்பட்டிருக்கும் சமயத்தில், அவள் இச்சைக்கு விரோதமாக அவன் ஏதும் செய்ய விரும்பவில்லை.

விநோ: துணிமணிகளையும் புத்தகங்களையும் எடுத்து வந்திருக்கிறாயா?

மஹேந்: அவசியமென்று நினைத்துத்தான் கொண்டு வந்தேன். அவைகளும் அதிகப்படியென்று நினைக்கிறாயா?

விநோ: அவசியமென்பது தெரியும். ஆனால் இங்கே ஏன் கொண்டுவரவேண்டும்?

மஹேந்: உண்மைதான். இங்கே அவை வேண்டிய தில்லைதான்! விநோதினி, இதோ அவற்றை உன்னிடமே கொடுத்துவிடுகிறேன். நீ அவற்றைத் தூரவிட்டெறிந்தா லும் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் என்னை மாத்திரம் 'தூரப் போ' என்று சொல்லிவிடாதே.

அவள் தலை நிமிரவில்லை. தைத்துக்கொண்டே, "நீ இங்கே இருப்பது கூடாது" என்றாள்.

இச்சொல் கொடியபாணம் போன்று அவன் உள்ளத் தில் ஊடுருவிப் பாய்ந்தது. அவன், "விநோதினி, நான் ஏன் போகவேண்டும்? உனக்காகவன்றோ யாவற்றையும் துறந்தேன்? அதற்கு இதுதானா பிரதிபலன்?" என்றான்.

விநோதினி, "எனக்காக ஒன்றையும் துறக்க நான் உன்னை விடமாட்டேன்" என்றாள்.

மஹேந்திரன் பதற்றத்துடன், "காரியம் கை மீறி விட்டது. இப்பொழுது நீ செய்வதற்கு ஒன்றுமில்லை. வீடு வாசல் குடும்பம் யாவற்றையும் கைவிட்டு வந்தா யிற்று. இப்பொழுது நீதான் எனக்குத் துணை, கதி எல்லாம். விநோதினி, விநோதினி!" என்று அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

விநோதினி தன் கைகளை விடுவித்துக்கொண்டு எழுந்து நின்று, "மஹேன், என்னை இங்கு அழைத்து வருமுன் என்ன சொன்னாய்? ஞாபகமில்லையா?" என்றாள்.

அதற்குள் மஹேந்திரன் சமாளித்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "ஞாபகம் இருக்கிறது: உனது இஷ்டத்திற்கு விரோதமாக எதுவும் செய்வதில்லை என்று சொன்னேன். இப்பொழுதும் சொற்படி நடக்க நான் தயார். என்ன செய்யவேண்டும்? சொல்" என்றான்.

விநோ: நீ உன் வீட்டில் போய் வசிக்கவேண்டும்.

மஹேந்திரன், "உனது விருப்பம் இதுதான் என்றால் என்னை ஏன் இதுவரை இழுத்துவந்தாய்? பிடிக்காவிடில் என்னை ஏன் பின்பற்றி வந்தாய்? இதற்குக் காரணம் நீயா நானென்று யோசித்து நிஜத்தைச் சொல். நீ ஆட்டி வைக்கும் விதமெல்லாம் நான் ஆடும் விளையாட்டுக் கருவியா? இருக்கட்டும். நான் எனது சொல்லைக் காப்பாற்ற இதைவிட்டுச் செல்கிறேன். எந்த வீட்டை நாசமாக்கி இனி அதில் கால் வைப்பதில்லையென்று நினைத்து வந்தேனோ அங்கேயே மறுபடி போகிறேன். ஆஹா! என்ன கடின இருதயம்! எனது துர்ப்பாக்கியமன்றோ உன்மேல் அன்பு கொள்ளச் செய்தது!" என்று கூறி வெளியே சென்றான்.

விநோதினி இன்னும் தையலிலேயே தனது கவனத்தைச் செலுத்தி அவனுக்குப் பதில் சொல்லாதிருந்தாள். அவள் அவனைப் பார்க்கவும் இல்லை.

அவன் வாயில்வரை சென்று மறுபடி உள்ளே திரும்பி வந்து, "நீ இங்கே தனியாய் எப்படி இருப்பாய்? துணையின்றி நீ பயப்படுவாய். நான் இங்கேயே இருக்கிறேன்" என்றான்.

விநோ: அதைப்பற்றி நீ கவலைகொள்ளவேண்டாம். நம் வீட்டுப் பழைய வேலைக்காரியை அம்மா கோபித்துத் துரத்தி விட்டார்களாம். அவளை நான் இன்று முதல்

என்னிடமே வேலைக்கு அமர்த்திக்கொள்வதாகச் சொல்லி விட்டேன். அவள் எனக்குத் துணையாக இருப்பாள். கதவைத் தாழிட்டுக்கொண்டுவிட்டால் எங்களுக்குப் பயம் ஒன்றுமில்லை.

மஹேந்திரன் உடனே வெளியே போய்விட்டான். அவள் எவ்வளவுதான் அவனைக் கடிந்து விலக்கிய போதிலும், அவன் மனம் பின்னும் அதிகமாய் அவளை நாடியது.

வேறு சகாயமின்றி இருக்கும் இந்நிலையில்கூட அவள் தன்னை இப்படி அவமானப்படுத்துவதை நினைக்கும் போது அவன் மனம் பதைத்தது. 'நான் அவ்வளவு துச்சமா? என்னை இப்படி நடத்த அவளுக்கு இவ்வளவு துணிவு எங்கிருந்து வந்தது? என்னைத் தவிர அவளுக்குச் சகாயம் யார் செய்யக்கூடும்?' எனப் பலவாறு எண்ண மிட்டான்.

'ஆம்; விஹாரி இருக்கிறான்!' என்று திடீரென்று நினைவிற்கு வந்தது. மனம் கொதித்தெழுந்தது. 'விநோதினி அவனைத்தான் விரும்புகிறாள். அவளுடைய நோக்கம் அவனை அடைவதுதான். அதற்கு என்னை ஒரு சாதனமாகக் கொள்ள விரும்புகிறாள்போலும்! அவனுடன் அவள் கடிதப் போக்குவரத்துக்கூட வைத்துக்கொண் டிருக்கலாம். இல்லாவிடில் அவள் என்னை வெறுக்கக் காரணமில்லை' என்று நிச்சயப்படுத்திக்கொண்டு விஹாரி யின் வீட்டிற்கு விரைந்து சென்றான்.

வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது. "எஜமான் வீட்டில் இல்லை" என்று வெளியில் உட்கார்ந்திருந்த வேலைக்காரன் சொன்னான்.

மஹேந்திரன் வியப்புற்றான். 'நான் முட்டாள்போல் இங்கும் அங்கும் திரிந்துகொண்டிருக்கும் சமயம் விஹாரி அவளைச் சந்திக்கச் சென்றிருக்கக்கூடும்' என நினைத்தான். வேலைக்காரனிடம், "எஜமான் எப்பொழுது வெளியில் சென்றார்?" என்று கேட்டான்.

"அவர் மேற்கே ஏதோ ஓர் ஊருக்குப் போவதாகச் சொல்லிப் புறப்பட்டுச் சென்று நான்கு ஐந்து நாட்களாகின்றன" என்றான் வேலையாள்.

மஹேந்திரனின் சந்தேகம் நீங்கியது. பழைய வேலைக்காரன் மஹேந்திரனை நன்கு அறிவான். கதவைத் திறக்கச் சொல்லி மஹேந்திரன் உள்ளே போய்ப் படுத்துக்கொண்டான். அன்று இரவை அங்கேயே கழிப்பதென்று நிச்சயித்தான்.

விஹாரியிடம் மஹேந்திரன் வந்து விநோதினியைப் பற்றி விசாரித்து உபத்திரவித்த மறுதினமே விஹாரி ஊரைவிட்டுப் போய்விட்டான். மஹேந்திரனை அடிக்கடி சந்திக்க நேரிடுவதையும் அதனால் விரோதம் இன்னும் முற்றி வருவதையும் தடுக்கவே அவன் அவ்வாறு செய்தான். அதோடு தனது துக்கத்தையும் மறந்து சாந்தியடையச் சுற்றுப் பிரயாணம் செய்வது நலமென்று அவனுக்குத் தோன்றியது.

விஹாரியின் வீட்டில் போய்ப் படுத்த மஹேந்திரன் அலுத்துப் போய் மறுதினம் காலை பதினொருமணி வரை நித்திரையினின்றும் எழுந்திருக்கவில்லை. வீட்டில் யஜமானன் இல்லாவிட்டாலும் மஹேந்திரன் அவ்வீட்டிற்குப் புதியவனல்லவாதலால் வேலைக்காரன் அவனுக்காகச் சிற்றுண்டி வரவழைத்துத் தயாராக வைத்

திருந்தான். அவன் எழுந்து பல் துலக்கிச் சிற்றுண்டி அருந்திவிட்டு மேஜையின் அருகில் போய் உட்கார்ந்தான். அங்கே முதலில் அவன் கண்ணில் பட்டது விநோதினி விஹாரிக்கு எழுதிய கடிதந்தான். கடிதம் பிரிக்கப் படாமல் அப்படியே இருந்தது. இதற்குத்தான் விநோதினி பிரதிதினமும் பதில் எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள்.

கடிதத்தைக் கையில் எடுத்ததும் மஹேந்திரனுக்கு ஆயிரம் தேள் கொட்டுவது போன்று இருந்தது. கவரை உடைத்துக் கடிதத்தைப் படித்தான். விநோதினியின் மனோபாவத்தை அறிய இனி இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்! அவனுக்கு எல்லாம் சந்தேகமற விளங்கிவிட்டது. கடிதத்தைச் சில்முறை படித்தான்.

'சீ, இனி அவள் முகத்திலேயே விழிக்கக்கூடாது' என்று முதலில் நினைத்தான். உடனேயே வேறு எண்ணம் தோன்றியது. 'கடிதத்திற்குப் பதில் கிடைக்காது போகவே அவனை நேரிலேயே காண விநோதினி வந்தா லும் வருவாள். அப்பொழுது அவன் ஊரில் இல்லாத சமாசாரம் தெரிந்தால் அவள் அவன்பால் கோபங் கொள்ளக் காரணமே இராது. இம்மாதிரி நடக்க நான் விடவேமாட்டேன்' என நிச்சயித்தான். கடிதத்தை ஜேபியில் போட்டுக்கொண்டு மறுபடி விநோதினி வசிக்கும் வீட்டை அடைந்தான்.

அவனது வாடிய முகத்தைக் கண்டு விநோதினி இரவு முழுவதும் அவன் ஊண் உறக்கமற்று அலைந்து திரிந்திருப்பானென்று நினைத்தாள். அவள் மனம்

இறங்கியது. "இரவு வீட்டிற்குச் சென்றிருந்தாயா?" என்றாள்.

மஹேந்திரன், "இல்லை" என்றான்.

உடனே அவள் அவனுக்குப் போஜனத்திற்கு ஏற்பாடு செய்ய எழுந்தாள்.

மஹேந்: எனக்காக ஒன்றும் செய்யவேண்டாம். சாப்பிட்டாயிற்று நான்.

விநோ: எங்கே சாப்பிட்டாய்?

மஹேந்: விஹாரியின் வீட்டில்.

விநோதினியின் முகம் சிறுத்தது. தனது உணர்ச்சியை மறைத்துக்கொண்டு, "விஹாரி சௌக்கியந்தானே?" என்றாள்.

மஹேந்: சௌக்கியந்தான். மேற்கே சுற்றுப் பிரயாணத்திற்குச் சென்றிருக்கிறான்.

ஏதோ விஹாரி அன்றுதான் சென்றதுபோல் மஹேந்திரன் இதைத் தெரிவித்தான்.

விநோ: என்ன விசித்திர சுபாவம்! நமது சங்கதி அவருக்கும் எட்டியிருக்குமென்று நினைக்கிறேன். இதைப்பற்றி மிகக் கோபமாயிருக்கிறாரோ?

மஹேந்திரன், "சொல்வதற்கென்ன இருக்கிறது? இதோ உனது கடிதம்" என்று சொல்லிக் கடிதத்தை அவள் கையில் கொடுத்து அவள் முகமாறுதலை உற்றுக் கவனித்தான்.

கடிதம் பிரிக்கப்பட்டிருந்தது. விநோதினி அதைத் திருப்பி நிமிர்த்திப் பார்த்தாள். விஹாரி அதிலேயே ஏதாவது எழுதியிருக்கக்கூடுமென்பது அவளது

நம்பிக்கை. ஆனால் அவனுடைய எழுத்து ஒன்றும் காணப்படவில்லை. சற்றுப் பேசாதிருந்து பிறகு, "கடிதத்தை நீ படித்தாயா?" என்று கேட்டாள்.

அவள் முகமாறுதலைக் கண்ட மஹேந்திரனுக்கு, "ஆம்" என்று சொல்லப் பயம். "இல்லை" என்று புளுகினான்.

அவள் அக்கடிதத்தைச் சுக்குநூறாகக் கிழித்து வெளியில் எறிந்தாள்.

மஹேந்திரன், "நான் வீட்டிற்குச் செல்கிறேன்" என்றான். அவளிடமிருந்து பதிலேயில்லை. அவன் மறுபடியும், "உனது விருப்பப்படி நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். இன்னும் ஒரு வாரம் வரை நான் எனது வீட்டிலேயே இருக்கிறேன். தினம் ஒரு முறை காலேஜிற்குச் செல்லும்போது வந்து விசாரித்துப் போகிறேன்" என்றான்.

அவன் சொல்லியது ஒன்றும் அவள் செவியில் பட்டதாகவே தெரியவில்லை. அவள் பதில் பேசவுமில்லை. அவன் வெளியே சென்றுவிட்டான்.

வெகுநேரம் வரை உணர்வற்றுப் பதுமைபோல் விநோதினி அங்கே உட்கார்ந்திருந்தாள். கடைசியில் துக்கம் பொறுக்கமுடியவில்லை. அடியுண்ட பக்ஷியைப் போல் கீழே தொப்பென்று விழுந்தாள். விக்கி விக்கி அழுதாள். வேலைக்காரி வந்து பார்த்து ஏதும் சொல்ல அஞ்சித் திரும்பிப் போய்விட்டாள். அன்று முழுதும் விநோதினி வெறுந்தரையில் அப்படியே படுத்திருந்தாள்.

காலையில் எழுந்ததும் ஒருவேளை மஹேந்திரன் பொய் சொல்லியிருப்பானோவெனச் சந்தேகம் தோன்றவே,

வேலைக்காரியை விஹாரியின் வீட்டிற்கு அனுப்பி அவன் இருக்கிறானா இல்லையாவெனத் தெரிந்துகொண்டு வரச் சொன்னாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் வேலைக்காரி திரும்பிவந்து, "வீடு பூட்டியிருக்கிறது. வேலையாள் 'அவர் ஊரில் இல்லை. சற்றுப் பிரயாணம் போயிருக்கிறார்' என்று சொன்னான்" எனத் தெரிவித்தாள்.

விநோதினியின் சந்தேகம் நீங்கியது.

---

## நாற்பத்தோராம் அத்தியாயம்

'இராத்திரியே மஹேந்திரன் வெளியே போய்விட்டான். அதற்குக் காரணம் நம் மருமகளாகத்தான் இருக்கவேண்டும். அவள் கோபித்துப் பிணங்கியிருக்கக் கூடும். இல்லாவிடில் அவன் ஏன் செல்கிறான்?' என்று ராஜலக்ஷ்மி யோசித்தாள்.

ஆசாவைக் கூப்பிட்டு, "அவன் ஏன் சென்றுவிட்டான்?" என்றாள்.

ஆசா, "அதுவும் எனக்குத் தெரியாது" என்றாள்.

ராஜலக்ஷ்மி ஆத்திரத்துடன், "உனக்கு ஒன்றும் தெரியாது. பாவம், பச்சைக் குழந்தை! எல்லாம் உன்னால் விளைந்ததுதான்!" என்றாள்.

இந்த அபவாதத்தை ஆசாவினால் பொறுக்க முடியவில்லை. தனது அறைக்குள் சென்று அழுதாள். கணவன் வீட்டைவிட்டுச் சென்ற குற்றம் யாருடையதென்று அவளுக்கே விளங்கவில்லை. புருஷன் தன்மேல் முதலில் அதிக அன்பு பாராட்டியதும் அதைத் தான்

இழந்ததும் ஏன், அவ்வன்பைத் தான் திரும்ப அடைவது எப்படியென எவ்வளவு யோசித்தும் மனம் பின்னும் குழம்பியதே தவிரத் தெளிவடையவில்லை.

தன்னைக் காதலிக்கும் ஒருவனை எவ்விதம் தானும் காதலால் திருப்தி செய்வதென்பதை மனமும் போதிக்கிறது. ஆனால் தன்னை விரும்பாதவனை, வெறுப்பவனைக் காதல் கொள்ளச் செய்வது எப்படியென்பது ஆசாவுக்குப் புரியவேயில்லை. மனத்தைப் பிறரிடம் பறிகொடுத்த கணவனிடம் அன்பை யாசிப்பது வெட்கங்கெட்ட செய்கையென்றே அவளுக்குத் தோன்றியது.

ராஜலக்ஷ்மிக்கு ஜோசியம், மந்திரம் முதலியவற்றிலெல்லாம் நம்பிக்கையுண்டு. அவள் ஒரு தேர்ந்த ஜோசியரை வரவழைத்து ஆசாவின் ஜாதகத்தைப் பார்க்கச் சொன்னாள். புருஷனை வசப்படுத்த ஏதாவது பீடா பரிஹாரம், சாந்தி முதலியவை செய்யவேண்டுமா வெனக் கேட்டாள். ஆசாவைக் கூப்பிட்டு அவரிடம் கையைக் காண்பிக்கச் சொன்னாள்.

ஆசாவை வெட்கமும் துக்கமும் வதைத்தன. இஷ்டமில்லாவிடினும் மாமியார் சொல்வதை மறுக்கத் தைரியமில்லை. மிகவும் வெட்கத்துடன் கையை ஜோசியரிடம் நீட்டினாள்.

அச்சமயம் யாரோ பக்கத்து அறையைத் திறந்து கொண்டு நுழையும் சப்தம் கேட்டது. ராஜலக்ஷ்மி, "யாரது?" என்று கேட்டாள். பதிலில்லை. மறுபடியும் உரத்துக் கத்தவே பதிலொன்றும் சொல்லாது மெள்ள மஹேந்திரன் உள்ளே வந்தான்.

அவன் முகத்தில் வெட்கம் குடிகொண்டிருந்ததைக் காண ஆசாவின் மனம் குன்றியது.

அவனுக்குத் தன்னுடைய தாயும் மனைவியுமாகச் சேர்ந்து தன்னை வசியப்படுத்தவேண்டிக் குறிபார்ப்பது, ஜோசியம் கேட்பது இவை யெல்லாம் மிகவும் அநாகரிக மாகவும் வெட்கக்கேடாகவும் தோன்றின. அவனால் அங்கு நிற்கவும் பொறுக்கவில்லை. "நான் மாடிக்குப் போகிறேன்" என்று சொல்லிச் சென்றுவிட்டான்.

ஆசாவைத் தேடி அவளுடன் தனியாய்ப் பேசத்தான் அவன் மாடிக்குப் போகிறான் என ராஜலக்ஷ்மி நினைத்துச் சமையலறைக்குச் சென்ற ஆசாவைக் கூப்பிட்டு, "மாடிக் குச் சீக்கிரம் போ. மஹேந்திரனுக்கு ஏதோ வேண்டும் போல் இருக்கிறது" என்றாள்.

சங்கோசம் மேலிட மார்பு படபடக்க, மஹேந்திரன் தான் தன்னை வரச்சொல்லி அனுப்பியிருக்க வேண்டுமென நினைத்து ஆசா மேலே சென்றாள். உள்ளே செல்லக் கால் எழவில்லை. மஹேந்திரன் என்ன செய்துகொண்டிருக்கிறா னென்று மெள்ள எட்டிப்பார்த்தாள். சாய்வு நாற்காலி யில் படுத்தவண்ணம் அவன் ஆழ்ந்த யோசனையில் இருந் தான்.

ஆசா இருட்டில் நின்று அவனையே கவனித்துக்கொண் டிருந்தாள். அவன் விநோதினியிடமிருந்துதான் வந்திருக் கிறான். அவன் சரீரத்தில் அவள் கரஸ்பர்சம், அவன் செவிகளில் அவள் குரலொலி, கண்களில் அவள் உருவம், உள்ளத்தில் அவளைப்பற்றிய எண்ணம் இவையே நிறைந்து காணப்படுவனபோல் அவளுக்குத் தோன்றியது. இப்படித் தன்னையே விநோதினிக்கு அர்ப்பணம் செய்துவிட்ட அவ னிடம் தான் எப்படிப் பக்தி செலுத்திப் பூஜிப்பது எனப் பெருமூச்சுவிட்டாள்.

சித்தியின் உபதேசம், புராணக் கதைகளில் போதிக்கப்படும் நீதி, சாஸ்திரம் இவற்றில் ஒன்றையும் அச்சமயம் அவள் மனம் ஏற்கவில்லை. தாம்பத்திய சுவர்க்கத்திலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்ட மஹேந்திரனைத் தனது மனக் கோயிலில் வைத்து வணங்குவது எப்படி? விநோதினியின் மஹேந்திரன் இன்று ஆசாவுக்குப் பரபுருஷனைப்போல் தோன்றினான். தனது இருதயத்திலிருந்து அவனை அறவே அகற்றுவதுதான் சரியென்று அவளுக்குத்தோன்றியது.

அவன் இருந்த அறையில் சுவரில் அவள் போட்டோ ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அவன் அதை உற்றுநோக்குவதைக் க்வனித்தாள். உடனே ஓடிப்போய் அது அவன் கண்ணில் படாதவாறு எடுத்துத் தூர எறிந்து வந்துவிடலாமாவென்று நினைத்தாள் ஆசா. அவன் அதைப் பார்த்துக் கேலி செய்வதுபோல் இருந்தது.

அடுத்த நிமிஷம் அவனது பார்வை அங்கிருந்த சிறு மேஜை மீது சென்றது. தனது படிப்பை அபிவிருத்தி செய்துகொள்வதற்காக ஆசா ஒழிந்த நேரத்தில் மஹேந்திரனுக்குச் சிறிய சிறிய கதைகள், மாதப் பத்திரிகைகள் இவை படித்துக் காட்டிவந்தாள். அவற்றில் சில புத்தகங்களும் பத்திரிகைகளும் அம்மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்தன. ஏதோ யோசித்தவண்ணம் மஹேந்திரன் அதில் ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துப் பக்கங்களைப் புரட்டினான். தனது அசங்கியமான கையெழுத்தை அவன் பார்ப்பானென்று நினைத்ததுமே அவளால் அங்கு நிற்கமுடியவில்லை. கீழே இறங்கி வந்துவிட்டாள்.

பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் பேசிக்கொண்டிருப்பதாக நினைத்து ராஜலக்ஷ்மி மஹேந்திரனைச் சாப்பாட்டிற்

குக் கூட அழையாது காத்திருந்தாள். ஆசா கீழேயிறங்கி வந்துவிட்டதைக் கண்டதும் அவனைப் போஜனமருந்தக் கூப்பிட்டாள். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஆசா மாடி அறையிலிருந்து தன் போட்டோவை யும் புத்தகங்களையும் அப்புறப்படுத்தி விட்டாள்.

மஹேந்திரன் சாப்பிட்டுக் கைகழுவி மேலே போனு ளோ இல்லையோ, இங்கு ராஜலக்ஷ்மி மறுபடியும் ஆசாவை அவனுடன் கூடப் போயிருந்து பேசுமாறு வற்புறுத்த ஆரம்பித்துவிட்டாள். "அவன் அந்த மாயாவினியிட மிருந்து விடுபெற்றுச் சற்றுநேரம் வீட்டிற்கு வந்திருந்தா லுங்கூட நீ முகங் கொடுத்துப் பேசாவிடில் அவன் மறுபடி அவளிடமே போய்விடுவதில் ஆச்சரியமென்ன இருக்கி றது? புருஷன் கெட்டவழியிற் சென்றாலும் தனது சாமர்த் தியம், புத்தி சாதுரியம் இவற்றால் அவனை நன்மார்க்கத்திற் குக் கொண்டுவரவேண்டியது ஸ்திரீயின் கடமையன்றோ?" என்றெல்லாம் ராஜலக்ஷ்மி அவளுக்கு உபதேசித்தாள்.

ஆசாவினால் அவள் சொல்வதை மறுத்துக் கூறவும் முடியவில்லை. அபராதம் செய்தவள்போல் தலை குனிந்து நேரே தன் கணவனின் அறைக்குள் சென்றாள்.

சஞ்சல சித்தமுடைய மஹேந்திரனின் மனம் அச் சமயம் விநோதினிக்குப் பிரதிகூலமாயிருந்தது. 'விநோ தினி என்னை ஒரு பொருளாகவே மதியாது அடிமைபோ லன்றோ நடத்துகிறாள்? நான் மனந்திரும்பி முன்போல் ஆசாவின்பேரில் அன்புடன் எனது கடமையைச் செலுத்து வேனாகில் இன்று விநோதினியின் கதி என்னவாகும்? அவ ளிடம் நான் அடைந்த அவமானத்திற்குப் பிரதியாகச் சிறிது அன்பாவது பெற்றேனா? அதுவுமில்லை! இனி விநோதினிக்குப் புத்தி புகட்டும்படியாக ஆசாவையே நான்

நேசிப்பேன்' எனக் கூறிக்கொண்டான். அதேசமயந்தான் ஆசாவும் அங்கு வந்தாள்.

அவளுடன் என்ன பேசுவது, எப்படி ஆரம்பிப்பது என்பதே மஹேந்திரனுக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது. மிகச் சிரமப்பட்டு முகத்தில் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கடைசியில், "என்னைப் போலவே படிப்பில் நீயும் முனைந்திருக்கிறாய்போல் இருக்கிறது? இப்பொழுது நான் இங்கே உன் புஸ்தகங்களைப் பார்த்தேன். அதற்குள் அவை எங்கே போயின?" என்று கேட்டான்.

ஆசாவுக்கு இக்கேள்வி வேடிக்கையாகத் தோன்றவில்லை. தனக்குக் கல்வியறிவு இல்லையென்பதும் அதைத் தான் அடைய விரும்புவது பரிஹாசத்திற்கு இடமென்பதும் அவளுடைய அபிப்பிராயம். அப்படியிருக்கச் சில தினங்களாகப் பேசாமலிருந்த மஹேந்திரன் தன்னை முதன் முதல் இப்படிக் கேட்பது தனது கல்வியின்மையைச் சுட்டிக் காண்பித்து ஏளனம் செய்வதுபோல் அவளுக்குத் தோன்றியது. அவள் பதிலே சொல்லவில்லை.

தான் இப்படிக் கேட்டது உசிதமல்லவென்று மஹேந்திரனுக்கும் பிறகு தோன்றியது. ஆனால் வேறு என்ன தான் பேசுவதெனவும் தெரியாது திகைத்தான். முன்போல் மனம்விட்டுப் பேசவோ அவனால் முடியவில்லை. நாடக பாத்திரங்கள் அரங்கத்தில் ஏறி நடிக்குமுன் ஒத்திகை நடத்திப் பார்த்துக்கொள்வதுபோல் அவன் மனத்திலும் தான் பேசவேண்டியதைப்பற்றி ஒத்திகை நடந்தது. இவ்விதம் யோசனை செய்துகொண்டிருக்கையில், மிகவும் மெதுவான சப்தம் ஒன்று கேட்கவே திரும்பிப்பார்த்தான். ஆசா அறையைவிட்டுச் சென்றுவிட்டதைக் கண்டான்.

# நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

மறுதினம் மஹேந்திரன், "அம்மா, எனக்கு நிம்மதியாய்ப் படிப்பதற்கு ஒரு தனியறை வேண்டும். பெரியம்மா இருந்த அறையை எனக்குக் கொடுத்துவிடு" என்றான்.

'பிள்ளை வீட்டிலேயே இருக்கத் தீர்மானித்துவிட்டான். தம்பதிகள் மனஸ்தாபம் நீங்கி அன்னியோன்னியம் கொண்டு விட்டனர்போல் இருக்கிறது. என் மருமகள் தங்கமான பெண்ணல்லவா? அவள் லக்ஷ்மியின் அவதாரமன்றோ! அவளை விட்டுப் போக யாருக்குத்தான் மனம் வரும்!' என்றெல்லாம் நினைத்து ராஜலக்ஷ்மி பூரித்தாள். உடனே ஆசாவைக் கூப்பிட்டு உத்தரவிட்டாள். வெகு நாட்களாகப் பூட்டப்பட்டிருந்த அன்னபூரணியின் அறை திறக்கப்பட்டது. பெருக்குவதும் கழுவுவதும் மேஜை நாற்காலிகள் கொண்டுவந்து போடுவதுமாய் மாமியும் மருமகளுமாய்ச் சேர்ந்து பெரிய அரசனுக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு செய்வதுபோல் செய்தனர். மஹேந்திரன் இவை யொன்றையும் கவனிக்கவில்லை. புத்தகங்களுடன் தனது புது அறையில் பிரவேசித்து ஒரு நிமிஷமும் வீணாக்காது படிப்பில் மும்முரமாய் ஈடுபட்டிருப்பது போல் இருந்தான். சாயங்காலமாயிற்று. வழக்கம்போல் மாடியறையில் படுக்கப்போகிறானா அல்லது கீழேயே தூங்கப்போகிறானாவென்று ராஜலக்ஷ்மிக்கு விசாரம். தானே அன்று ஆசாவுக்குத் தலைவாரிச் சிங்காரித்தாள். "படிக்

கையை எங்கே போடுவதென்று மஹேந்திரனைப் போய்க் கேட்டு வா" எனத் தூண்டினாள். ஆசாவிற்கு என்ன சொல்வதெனத் தெரியவில்லை. அப்படியே பூமி இரண்டாகப் பிளந்து தன்னை விழுங்காதாவென்று ஏங்கிப் பரிதவித்தாள். குனிந்த தலை நிமிரவில்லை.

ராஜலக்ஷ்மி கோபிக்கலானாள். வேறு விதியின்றி மெள்ள மஹேந்திரன் படிக்கும் அறைக் கதவுவரை சென்றாள். அதற்கு மேல் அவளால் செல்ல முடியவில்லை. அங்கேயே நின்றுவிட்டாள். தூரத்திலேயே நின்று பார்த்துக்கொண்டிருந்த ராஜலக்ஷ்மி உள்ளேபோகுமாறு சைகை செய்தாள். விசையினால் தள்ளப்படும் பதுமைபோல் ஆசா உள்ளே நுழைந்தாள். காலடிச் சத்தம்கேட்டும் மஹேந்திரன் அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை; கையிலிருக்கும் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டே, "இரவு வெகு நேரம் வரை படிக்கவேண்டும். பிறகு விடியற்காலையிலும் படிக்கவேண்டும். ஆகையால் இங்கேயே படுத்துக்கொள்ளப்போகிறேன்" என்றான்.

வெட்கக் கேடு! மாடி அறையில் தான் படுக்க வேண்டுமென்று ஆசா என்ன வேண்டிக்கொள்ளவா வந்தாள்?

ஆசா வெளியில் வந்ததுமே ராஜலக்ஷ்மி பரபரப்புடன், "என்ன சொன்னான் மஹேந்திரன்?" என்றாள்.

ஆசா மிகவும் தீனக்குரலில், "கீழேயே படுத்துக்கொள்கிறாராம்" என்றாள். இதைச் சொல்லிவிட்டு ஆசா அவமானம் பொறுக்காது தன் படுக்கையில் போய் விழுந்து மனமுடைந்து அழுதாள். தனக்கு இனி ஒரு க்ஷணமும் சுகம் கிடையாதாவென்று நினைத்துத் தரையில் விழுந்து புழுப்போல் துடித்தாள்.

நடுநிசியில் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டு ஆசா எழுந்து கதவைத் திறந்தாள். படியேறி வந்ததால் மூச்சுத் திணற ராஜலக்ஷ்மி பேசமுடியாமல் ஆசாவின் அருகில் வந்து உட்கார்ந்தாள். சிறிது நேரம் சமாளித்துக் கொண்டபிறகு மெள்ள, "ஆசா, என்ன இப்படிச் செய்கிறாய்? இங்கே வந்து கதவையும் தாழிட்டுக்கொண்டு படுத்திருக்கிறாயே? கோபத்தைக் காட்டவும் சண்டை போடவும் இதுதானா சமயம்? இவ்வளவு பட்டுங்கூட உனக்கு இன்னும் புத்திவரவில்லை! போ, கீழே அவன் இருக்குமிடத்திற்குப் போ!" என்றாள்.

"தனியாயிருக்க வேண்டுமென்று அவர் சொன்னார்" என்றாள் ஆசா.

ராஜலக்ஷ்மி: அவன் சொல்வதும் நீ கேட்பதும் நன்றாயிருக்கின்றன! கோபத்தில் அவன்தான் ஏதோ இரண்டு வார்த்தை சொல்லிவிட்டால் நீயும் இப்படி வந்து விடுவதாக்கும்! இச்சமயம் இவ்வளவு மானம் மரியாதை பார்த்தால் முடியுமா? போ, சீக்கிரம் போ!

துக்க காலத்தில் மாமியார் மருமகள் என்ற பேதமெல்லாம் பறந்துவிட்டது. தன்னால் முடிந்தவரை பாடுபட்டுப் பிள்ளைக்கும் மருமகளுக்கும் ஒற்றுமையுண்டாக்கிப் பிள்ளையை வீட்டில் நிலைக்கச் செய்ய வேண்டுமென்று ராஜலக்ஷ்மி நிச்சயித்தாள். அவளால் அதிகம் பேசமுடியவில்லை. மூச்சு வாங்கியது. ஆசா அவள் கையைப் பிடித்து மெதுவாய்க் கீழே அழைத்து வந்தாள். அவள் படுக்கையில் தலையணைகளையெல்லாம் ஒழுங்காகத் தட்டி எடுத்து வைத்தாள்.

ராஜலக்ஷ்மி, "அதெல்லாம் அப்படியே இருக்கட்டும்; ஆசா, வேலைக்காரியை என்னிடம் அனுப்பிவிட்டு நீ அவனிடம் செல்; சீக்கிரம் போ; தாமதியாதே" என்றாள்.

ஆசா சற்றும் அதைரியமடையவில்லை. நேரே மஹேந்திரன் இருக்கும் அறையினுள் பிரவேசித்தாள். இரவு நெடுநேரமாகியும் இன்னும் அவன் தூங்கவில்லை. புத்தகம் விரித்தபடியே மேஜை மீது கிடந்தது. இரண்டு கால்களையும் மேஜைமீது நீட்டியவாறு யோசித்தபடி நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். காலடிச் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். தன் மனத்தில் தியானிக்கும் தேவதைதான் கருணைகொண்டு தன்னெதிரில் பிரத்யக்ஷமாகிவிட்டதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது. ஆனால் அப்பிரமை ஒரு நொடியில் அகன்றது. வந்தது ஆசாவென அறிந்தான். மேஜைமீதிருந்து கால்களை இழுத்துக்கொண்டு மறுபடி புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டான்.

இப்படிச் சங்கோசமின்றி ஆசா என்றும் அவனிடம் வந்ததில்லை. அவனுக்கு இது ஆச்சரியத்தை அளித்தது. இரவு அந்நேரத்தில் அவள் அங்கு வந்து சிறிதும் தயக்கமின்றி நிற்பதையும், ஏதோ பேசவே அவள் அங்கு நிற்கிறாளென்பதையும் அவன் அறிந்துகொண்டு அவள் முகத்தை நோக்கினான்.

ஆசா, "அம்மா மூச்சு விடமுடியாது திணறுகிறார். சற்று வந்து பார்த்தால் நல்லது" என்று குரலில் சிறிதும் சலனமின்றி உரைத்தாள்.

மஹேந்: அம்மா எங்கே இருக்கிறாள்?

ஆசா: படுக்கையறையில். அவரால் தூங்கமுடியவில்லை.

மஹேந்: வா, போகலாம்.

வெகு நாட்களுக்குப் பிறகு ஆசாவுடன் இவ்வளவு பேசியதும் மனத்திலிருந்த பெரிய பாரம் குறைந்தது

போன்று இருந்தது அவனுக்கு. தனக்கும் அவளுக்கும் இடையில் எழுப்பப்பட்டிருக்கும் சுவரை உடைத்தெறியக் கூடிய ஆயுதம் அவனிடம் இல்லை. அவ்வாயுதத்தை இன்று ஆசாவே தன் கையில் அளித்தது போன்று இருந்தது அவனுக்கு.

ஆசா தான் வெளியிலேயே நின்றுகொண்டு மஹேந்திரனை மாத்திரம் உள்ளே போகச் சொன்னாள். இவ்வேளையில் அவன் தன்னிடம் வருவதன் காரணம் என்னவோவென ராஜலக்ஷ்மி பயந்தாள். ஒருகால் ஆசாவுடன் ஏதாவது சண்டையிட்டுக் கொண்டு வந்திருப்பானோவெனச் சந்தேகித்தாள்.

மஹேந்திரன் அவள் அருகில் வந்து, "அம்மா, மூச்சு விடக் கஷ்டமாயிருக்கிறதா?" என்றான்.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவனிடமிருந்து இப்படி ஓர் அன்பான சொல்லைக் கேட்டுத் தாயின் மனம் புத்திர வாஞ்சையால் புளகித்தது. மிக்க பிரயாசையுடன் சமாளித்துக் கொண்டு, "அப்பா, நீ போய்ப் படுத்துத் தூங்கு. எனக்கு இது நித்திய ரோகந்தானே? புதிதா என்ன?" என்றாள்.

மஹேந்: இல்லையம்மா; இது சாதாரண வியாதியல்ல. நன்றாய்ச் சிகித்ஸை செய்துகொள்ள வேண்டும்.

தாயின் முகக்குறி வியாதி அதிகரித்து வருவதைத் தெளிவாய்த் தெரிவித்தது. அதைக் காணவே மஹேந்திர சற்றுக் கவலை கொண்டான்.

ராஜலக்ஷ்மி: கவனிப்பதற்கு என்ன இருக்கிறது? இது குணமடையும் நோயாயிருந்தாலன்றோ அக்கவலை?

மஹேந்: எதற்கும் இப்பொழுது தூக்கம் வரு வதற்கு ஒரு மருந்து கொடுக்கிறேன். அதைச் சாப்பிடு. நாளைக்குத் தேகநிலையைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ராஜலக்ஷ்மி: எவ்வளவோ மருந்து குடித்தாய் விட் டது. அதனால் என்ன குணங்கண்டது? நீ போய்ப் படுத்துக் கொள், அப்பா. நேரமாகிவிட்டது.

மஹேந்: உனக்கு மூச்சுத் திணறுவது சற்று நிற் கட்டும். பிறகு நான் போகிறேன்.

ராஜலக்ஷ்மி வாயிற்படியண்டை நின்றிருக்கும் ஆசா வைப் பார்த்துக் கோபிப்பதுபோல், "ஆசா, இந் நடுநிசியில் அவனை ஏன் எழுப்பி இங்கே கூட்டி வந்தாய்?" என்றாள்.

அவ்வளவு பேசியதே ராஜலக்ஷ்மிக்குக் கஷ்டமாகி விட்டது. மேல் மூச்சு வாங்க ஆரம்பித்தது. ஆசா அவன் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, "நீங்கள் போங் கள்; நான் அம்மாவினருகில் இருந்து கவனித்துக் கொள்ளு கிறேன்" என்று மஹேந்திரனிடம் கூறினாள்.

மஹேந்திரன் ஆசாவைச் சற்று அப்பால் அழைத்து, "நான் இரண்டு அவுன்ஸ் மருந்து கொடுக்கிறேன். அம் மாவுக்கு ஓர் அவுன்ஸ் அதில் இப்பொழுதே கொடு. தூங்காவிட்டால் சற்று நேரம் கழித்து இன்னோர் அவுன் ஸையும் கொடுத்து விடு. அப்படியும் அவள் இரவு மிக வும் கஷ்டப்பட்டால் என்னிடம் வந்து தெரிவி" எனச் சொல்லிப் போனான்.

ஆசாவின் அன்றைய நடத்தை மஹேந்திரனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. அவளிடம் சங்கோசமில்லை; தீனக்குரலுடன் அவனிடம் அவள் எதையும் யாசிக்க வில்லை. தன் அதிகாரத்தையும் பொறுப்பையும் உணர்ந்த

வள்போல் அவள் நடந்து கொண்டதைக் காண மஹேந்திரன் அவளிடம் என்றுமில்லாத மதிப்புக் கொண்டான்.

தன் நாட்டுப்பெண்ணிற்குத் தன்னிடம் இவ்வளவு அன்பும் ஆதரவும் இருப்பதைக் காண ராஜலக்ஷ்மிக்கு உள்ளூறப் பெருமையும் சந்தோஷமும் உண்டாயின. அவள், "உன்னைத் தூங்கப் போகச்சொன்னால் நீயும் தூங்காது அவனையும் எழுப்பிக் கூட்டி வந்து விட்டாயே? வெகு நேரமாகிவிட்டது. நீ போய்ச் சற்றுத் தூங்கு" என்று ஆசாவைப் பார்த்துச் சொன்னாள்.

ஆசா, ராஜலக்ஷ்மிக்கு விசிறிக்கொண்டே, "என்னை இங்கேயேதான் இருக்கச் சொல்லியிருக்கிறார்" என்று மெதுவாகக் கூறினாள். தாயின் சுசுருஷைக்காக மஹேந்திரன் அங்கு இருக்கச் சொன்னதாகச் சொன்னால் ராஜலக்ஷ்மிக்குச் சந்தோஷமாயிருக்குமென்பது அவளுக்குத் தெரியும்.

---

## நாற்பத்துமூன்றும் அத்தியாயம்

தம்பதிகளுக்குள் ஒற்றுமையில்லையென்பது ராஜலக்ஷ்மிக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. கடைசியில் தான் நோயுற்றிருப்பதை உத்தேசித்தாவது மஹேந்திரன் வீட்டைவிட்டுச் செல்லாதிருக்கட்டுமென்று யோசித்தாள். இதற்காக நோய் குணமடையாதிருக்க வேண்டி, கொடுக்கும் மருந்தையெல்லாம் ஆசாவுக்குத் தெரியாமல் தூரக் கொட்டிவிடுவாள்.

மஹேந்திரனோ தாயைக் கவனிப்பதாகக் காணோம். நோய் முற்றிவருவதைக் காணும்போது ஆசா கவலை

கொண்டாள். மஹேந்திரன் தன் தாயின் விஷயத்திலும் இப்படி உதாசீனமா யிருப்பது அவள் மனத்தை மேலும் வருத்தியது. 'அவர் மனம் இப்படியா மாறிக் கெடவேண்டும்?' என்று நொந்தாள்.

வியாதியின் உபத்திரவம் அதிகரித்தது. ராஜலக்ஷ்மிக்கு அச்சமயம் விஹாரியின் நினைவு வந்தது. சதா இக்குடும்பத்தின் நன்மையைக் கோரி உதவும் விஹாரி இச்சமயம் தன்னருகில் இல்லையே யென்று வருந்தினாள். அவன் மஹேந்திரனைப்போல் கடின நெஞ்சுடையவனல்ல என்பதை அறிவாள். ஆசாவிடம், "விஹாரி எங்கே இருக்கிறானென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள். உடனே, "ஒருவேளை மஹேந்திரன் அவன் கூடவும் சண்டையிட்டிருப்பான். அதனால்தான் அவன் இப்பொழுதெல்லாம் இங்கு வருவதில்லைபோலும்! மஹேந்திரனின் நடத்தை ஒன்றும் நன்றாயில்லை. விஹாரியைப் போன்ற நல்ல நண்பன் கிடைப்பது துர்லபம்" என்று சொல்லி ராஜலக்ஷ்மி கண்ணீருகுத்தாள்.

ஆசாவுக்கு அப்பொழுது விஹாரியைப் பற்றிய அநேக விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்தன. எவ்வளவோ முறை விஹாரி ஆசாவின் அறியாமையை எடுத்துக் காட்டி உண்மையை விளக்க முயன்றும் அவள் அதை அறிந்து கொள்ளும் சக்தியற்ற பேதையாயிருந்ததன்றி அவன்மேல் கோபங்கொண்டதும் நினைவிற்கு வரவே, அவள் தன்னையே நொந்துகொண்டாள். நிரபராதியான விஹாரியின் மனத்தை வருந்தச் செய்ததற்காகவே கடவுள் தனக்குத் தகுந்த தண்டனை விதித்ததாக எண்ணினாள்.

இடையில் ராஜலக்ஷ்மி மறுபடியும், "ஆசா, விஹாரி மாத்திரம் இருந்திருந்தால் வீட்டில் இந்த நிகழ்ச்சிகள்

நடக்கும்படி விடமாட்டான். அவன் இதைத் தடுத்துக் கட்டாயம் நம்மைப் பாதுகாத்திருப்பான்" என்றாள்.

ராஜலக்ஷ்மிக்குச் சுவாசிப்பது கஷ்டமாய் விடவே சற்று நிதானித்துச் சமாளித்துக்கொண்டு, "நான் இவ்வளவு நோயுற்றுப் படுத்திருக்கும் செய்தி அவனுக்குத் தெரிந்தால் அவன் வராமல் இருக்கவே மாட்டான்" என்றாள்.

விஹாரியைக் காண்பதற்கு ராஜலக்ஷ்மி மிகவும் ஆவலாயிருப்பதும், அவனின்றி அவள் உடம்பு குணமடையாதென்பதும் ஆசாவுக்கு நன்றாகத் தெரிந்தன.

விளக்கை அணைத்துவிட்டு நிலவொளியில் வெளியே வந்து உட்கார்ந்து மஹேந்திரன் யோசித்துக் கொண்டிருந்தான். வீட்டிலோ சுகமில்லை; நிம்மதியில்லை. மனம் வேறுபடும்போது பரம மித்திரர்களும் பரம சத்துருக்களாகவே தோன்றுவது சகஜம். தாயிடம் நெருங்கவே அவனுக்கு மனமில்லை. ஆசாவைச் சந்தித்தாலோ என்ன பேசுவதெனத் தெரியவில்லை. பேசாதிருக்கவும் மனச்சாட்சி இடமளிப்பதில்லை. இச்சங்கட நிலையில் வீட்டில் ஒரு நிமிஷம் கழிவது ஒரு யுகம்போலத் தோன்றியது. ஒரு வாரம் பொறுப்பதாக விநோதினிக்கு வாக்களித்திருந்தான். இன்னும் இரண்டே தினங்கள் பாக்கி இருந்தன.

ஆசா அங்கு வந்து நின்றதை அவன் பார்த்தும் பாராதவன் போல் திரும்பிக்கொண்டிருந்தான். அவளும் அவன் மனோபாவத்தை அறியாமலில்லை. அவள் திரும்பிப் போகவும் இல்லை. உறுதியான குரலில், "ஒரு சங்கதி தெரிவிக்கவே வந்தேன். அதைச் சொல்லிவிட்டு நான் போய்விடுகிறேன்" என்றாள்.

மஹேந்: போவானேன்? உட்கார்ந்து சொல்லக் கூடாதா என்ன?

இந்த மரியாதைச் சொல்லை அவள் கவனிக்காமல் நின்று கொண்டே, "அம்மாவின் நோயைப் பற்றிய சங்கதியை விஹாரி பாபுவுக்குத் தெரிவிப்பது உசிதம்" என்றாள்.

அவன் பெயரைக் கேட்டதுமே மஹேந்திரனுக்கு மனத்தில் சுருக்கெனத் தைத்தது. அவன், "ஏன்? எதற்காக? நான் செய்யும் வைத்தியத்தில் உனக்கு நம்பிக்கையில்லையா?" என்று கேட்டான்.

அவன் கவனித்து வைத்தியம் செய்யவில்லையென்பது தான் ஆசாவின் எண்ணமும். "ஆமாம், வியாதிதான் முற்றி வருகிறதே?" என்றாள். ஆசா இம்மாதிரி அவனை இது வரையில் தாக்கிப் பேசியதே கிடையாது. கோபம் பொங்கியெழ அவன், "உன்னிடமிருந்துதான் நான் இனி வைத்தியம் கற்றுக்கொள்ளவேண்டும் போல் இருக்கிறது!" என்றான்.

இக்கேள்வி ஆசாவுக்குப் புண்ணில் கோலிடுவது போன்று இருந்தது. அவள் உடனே, "வைத்தியம் மாத்திரமல்ல; தாய்க்கு எவ்விதம் பணிவிடை செய்ய வேண்டுமென்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்" என்று என்றுமில்லாத துடுக்குடன் மொழிந்தாள்.

மஹேந்திரனுக்கு அவளுடைய வார்த்தை ஒவ்வொன்றும் ஆச்சரியத்தை விளைவித்தது. ஒன்றுமேயறியாத, வெளுத்ததெல்லாம் பாலென நம்பும் பேதையான ஆசா, சிறிதும் பயமின்றித் தன் முன் இப்படிப் பேசுவாளென அவன் கனவிலும் நினைக்கவில்லை! அவளை மட்டந்

தட்ட வேண்டுமென நினைத்து, "உன் விஹாரியை இங்கே வரவிடாமல் தடுத்தது எதற்காகவென்று உனக்குத் தெரியாதோ? அப்படியும் அவனை நீ இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறாய்போல் இருக்கிறது!" என்றான்.

ஆசா சரேலென்று அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள். வெட்கத்தால் அவள் தேகம் குன்றியது. தன் செயலுக்காக வெட்கமில்லை; செய்யத் தகாத செய்கையையும் செய்துவிட்டுத் தன்னையும் தூஷிக்க வாய் வேறு என்பதை நினைக்கவே அவள் வெட்கினாள்.

அவள் போய் விட்டதுமே மஹேந்திரனும் தனது தவற்றை உணர்ந்தான். தோல்வியும் அவமானமும் அடைந்தவன் போல் அவன் மனம் சிறுத்தது. எந்த இருதய சிம்மாசனத்தில் தான் இதுவரை வீற்றிருந்தானோ அது இன்று மண்ணோடு மண்ணாய் மடிந்தது போல் அவனுக்குத் தோன்றித் திடுக்கிடச் செய்தது. அதற்குப் பதில் அவ்வுள்ளத்தில் எங்கே துவேஷம் குடிகொண்டு விடுமோவென்று அஞ்சினான்.

விஹாரியின் நினைவு வேறு அவனை வதைத்தது. 'நான் இங்கிருக்கும்போது ஒரு வேளை விஹாரி ஊருக்குத் திரும்பி வந்திருந்தால் கட்டாயம் விநோதினி அவனைக் கண்டு பேசியிருப்பாள்' என்று நினைக்கவே அவன் மனம் பதறியது. வாக்குறுதியைக் காப்பாற்றுவது அவனுக்குக் கடினமாகிவிட்டது.

ராஜலக்ஷ்மிக்கு இரவு மூச்சுத் திணறல் அதிகமாகி விட்டது. அவள் மஹேந்திரனைக் கூப்பிட்டனுப்பினாள். வந்ததும் அவனிடம், "மஹேன், எனக்கு விஹாரியைக் காண வெகு ஆவலாயிருக்கிறது. அவன் வீட்டிற்கு வந்து வெகு நாட்களாயின" என்றாள்.

ஆசா தலையைக் குனிந்துகொண்டு ராஜலக்ஷ்மிக்கு விசிறிக் கொண்டிருந்தாள். "அவன் ஊரில் இல்லை. எங்கோ வெளியூருக்குச் சென்றிருக்கிறானும்" என்றான் மஹேந்திரன்.

ராஜலக்ஷ்மி: அவன் ஊரிலேயேதான் இருக்கிறான். ஏதோ உன் மீதுள்ள மனத்தாங்கலால் அவன் இங்கே வருவதில்லை. எனதாணை: நீ அவனை நாளைக்குச் சென்று காணவேண்டும்.

மஹேந்: ஆகட்டும், போகிறேன்.

'ஒவ்வொருவரும் விஹாரியையே வேண்டுகின்றனர், அழைக்கின்றனர். இவ்வுலகில் என்னை விரும்புவார் யாரும் இல்லையா?' என மஹேந்திரன் பரிதவித்தான்.

---

## நாற்பத்துநான்காம் அத்தியாயம்

மறுதினம் அதிகாலையிலேயே மஹேந்திரன் வண்டியிலேறி விஹாரியின் வீட்டை அடைந்தான். அவன் வீட்டு வாசலில் வரிசையாய் மாட்டுவண்டிகள் நின்றன. ஆட்கள் வீட்டுச் சாமானையெல்லாம் அதில் ஏற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு மஹேந்திரன் வியப்புற்று, "சாமான்களெல்லாம் எங்கே போகின்றன?" என்று வேலைக்காரனைக் கேட்டான்.

"எஜமான் கங்கைக்கரையில் பாலி என்ற இடத்தில் பெரிய தோட்டமும் வீடும் வாங்கியிருக்கிறார். சாமான்களெல்லாம் அங்கே போகின்றன" என்றான் வேலையாள்.

"எஜமான் இப்பொழுது வந்திருக்கிறாரா?" என்று கேட்டான் மஹேந்திரன். "வந்து இரண்டு தினங்கள்

இருந்துவிட்டு நேற்றுத்தான் திரும்பிச் சென்றார்'' என்று பதிலளித்தான் வேலையாள்.

'சரிதான்! அப்படியானால் நிச்சயம் விநோதினியைப் பார்த்திருக்கக்கூடும். ஒரு வேளை அவளும் அவனுடன் புறப்பட்டு விட்டாளோ?' என்ற சங்கை யெழவே தலை தெறிக்க வண்டியில் ஏறி விநோதினி இருந்த வீட்டுப் பக்கம் வண்டியை விடச்சொன்னான். வழியில் வண்டியை வேகமாய் விடவில்லையெனக் கோபித்து வைதான். வண்டி அவ்வீட்டு வாசலில் போய் நின்றதோ இல்லையோ, இறங்கிக் குதித்து ஓடிப்போய் வேலைக்காரனிடம், விநோதினி வீட்டில் இருக்கிறாளாவென விசாரித்தான். அவன் ஆமாம் என்று சொன்ன பிறகுதான் மஹேந்திரன் மூச்சு விட்டான்.

விநோதினி குளிக்கப் போயிருந்தாள். படுக்கை விரித்தபடியே இருந்தது. மஹேந்திரன் களைப்புத் தீர அதில் போய்ப் படுத்தான். அது விநோதினி படுத்திருந்த படுக்கை யென்பதே மஹேந்திரனுக்குச் சுகமய உணர்ச்சியை ஊட்டக் கூடியதாயிருந்தது. அவள் வருவதற்கு முன்னதாகவே எழுந்து அவளை எதிர்பார்த்து உலாவிக்கொண்டிருந்தான். சட்டெனப் படுக்கைக்கருகில் கிடந்த ஒரு சமாசாரப் பத்திரிகையின் மீது அவன் கவனம் சென்றது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதில் ஒரு மூலையில் இருந்த விஹாரியின் பெயர் அவனது கவனத்தைக் கவர்ந்தது. "ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்வதற்காகக் கங்கைக் கரையில் ஓர் இலவச வைத்திய சாலை விஹாரி பாபுவினால் திறக்கப்பட்டிருக்கிறது. ஒரே சமயத்தில் பத்துப்பேர் தங்குவதற்கேற்றபடி படுக்கை சாப்பாடு முதலிய வசதிகள் அளிக்கப்படும்'' என்று

வெளியாகியிருப்பதைப் பார்த்து மஹேந்திரன் மனம் பொருமினன். இதை விநோதினி படித்திருந்தால் அவன் பாலுள்ள சிரத்தையும் மதிப்பும் அவளுக்கு இன்னும் அதிகரித்திருக்குமென்பதே மஹேந்திரனின் மனத்தில் பொறாமைத்தீயை எழுப்பப் போதுமானதா யிருந்தது.

'விஹாரி சிறு வயதிலிருந்தே பரோபகாரிபோல் நடித்து நல்ல பெயரெடுப்பதில் தேர்ந்தவன். அவன் கபட வேஷதாரி. நான் கபடமற்றவன்; ஏமாற்றிப் பிறரை வசீகரப்படுத்தும் குணம் என்னிடம் இல்லை. இப்பொழுதும் அவன் கீர்த்தி சம்பாதிக்கவே இப்படி உபாயம் செய்திருக்கிறான்' என்பது மஹேந்திரனின் எண்ணம்.

விநோதினியின் கண்ணில் படாதிருக்கவேண்டி மஹேந்திரன் பத்திரிகையை மறைத்துக்கொண்டான். அவள் வந்ததும் அவள் முகக்குறிப்பை அறியவேண்டி உற்று நோக்கினன். அவள் மெலிந்து காணப்பட்டபோதிலும் இதுவரையில்லாத ஓர் அற்புத தேஜஸ் அவள் முகத்தில் திகழ்வதைக் கண்டான்.

விஹாரியினிடமிருந்து பதில் கிடைக்குமென்ற நம்பிக்கை அவளுக்கு இப்பொழுது இல்லை. தன்னைக் காணுதிருக்கவும், தன்னைப் புறக்கணிக்கவும் வேண்டியே அவன் ஊரைவிட்டுச் சென்று விட்டானென்பதை எண்ணவே அவள் உள்ளம் வெந்தழலி லிட்டதுபோல் உருகியது. இச் சிறு வீட்டில் வேலையின்றி, அன்பின்றி, சந்தோஷமின்றித் தனது ஆயுள் பூராவும் எங்கே கழிக்க நேரிடுமோவென அஞ்சிப் பதைத்தாள். தனக்குப் போக்கிடமின்றி இக் கதிக்கு ஆளாக்கிய மஹேந்திரனை அவள் முற்றிலும் வெறுத்தாள்.

'பிரதிதினமும் மஹேந்திரனைச் சந்திக்க வேண்டி யிருக்கும். என்னிடம் நெருங்க விடாது அவனைத் தடுப் பது அசாத்தியம். தானே அவன் மனத்தில் அணைக்க முடியாத காமத்தீயை மூட்டி விட்டாகிவிட்டது. அத் தீயிற்கு நானும் இரையாகாது தப்புவதெப்படி? இதற்கு முடிவெங்கே?' என்றெல்லாம் எண்ணி நரக வேதனையில் ஆழ்ந்தாள் விநோதினி.

இதற்கு மாருக மஹேந்திரனுக்கோ விநோதினியைத் தன் வசப்படுத்திக் கொள்வது எப்படி, விஹாரியை அவள் மனத்திலிருந்து அகற்றுவது எவ்விதம் என்று தீராத யோசனையாயிருந்தது.

இப்படி இருவரும் தத்தம் யோசனையில் ஆழ்ந்து சிறிது நேரம்வரை பேசவேயில்லை. கடைசியில் விநோ தினி, "நீ காப்பி சாப்பிட்டாயிற்ரு?" என்ருள்.

மஹேந்: சாப்பிட்டாயிருந்தால்தான் என்ன? உனது கையால் இன்னெரு முறை கொடுக்கக் கூடாதா? கொண்டு வா என்........

விநோதினி அவனைக் கோபத்துடன் பார்த்தாள். இச் சமயம் அவனது உணர்ச்சியைப் புண்படுத்தவேண்டியே அவள், "விஹாரி பாபு எங்கிருக்கிருர்? அவரைப்பற்றி ஏதாவது சமாசாரம் தெரியுமா?" என்று கேட்டாள். மஹேந்திரன் முகம் சிறுத்தது. "அவன் கல்கத்தாவில் இல்லை" என்ருன்.

விநோ: அது தெரியும். எங்கே சென்ருரென்பது தெரியுமா?

மஹேந்: அவற்றை அவன் ஒருவருக்கும் தெரிவிக்க வில்லை.

விநோ: விசாரித்துக் கண்டுபிடிக்க முடியாதா?

மஹேந்: அது அவசியமென்று எனக்குத் தோன்றவில்லை.

விநோ: அவசியம் வேறு? சிறுவயதுத் தோழரல்லவா அவர்?

மஹேந்: எனக்கென்னவோ சிறு வயதிலிருந்தே நண்பன். ஆனாலும் என்னைக்காட்டிலும் இரண்டு நாள் நட்புக் கொண்ட உனக்கல்லவோ அவனைப்பற்றி அக்கரை அதிகமாயிருக்கிறது!

விநோ: அதைக் கண்டாவது நீ வெட்கங் கொள்ள வேண்டும். இவ்வளவு நல்ல நண்பர் கிடைத்தும் நட்புரிமையைப்பற்றி நீ அறிந்து கொள்ளவில்லையே!

மஹேந்: எனக்கு அதைப்பற்றி வருத்தமுமில்லை; வெட்கமுமில்லை. ஆனால் மாதரை வசீகரிக்கும் வித்தையை அவனிடத்திலிருந்து நான் கற்றுக்கொள்ளாமல் போனேனே என்றுதான் வருந்துகிறேன். அதைக் கற்றிருந்தால் இப்பொழுது எவ்வளவு பிரயோஜனமாயிருக்கும்?

விநோ: அவ்வித்தை கற்றுக்கொண்டால் வராது; தனக்கே யோக்கியதை இருக்கவேண்டும். அதிருக்கட்டும். அவர் இருக்குமிடத்தை விசாரித்து அறியும்வரை என்னெதிரில் உன் அன்புப் பேச்சுகளையெல்லாம் எடுக்காதே. நண்பனிடம் நீ நடந்து கொள்ளும் முறையைக் கண்டயார் தாம் உன்னை நம்புவர்?

மஹேந்: உனக்கு என்மீது நம்பிக்கையில்லாமையால் தான் என்னை இவ்வளவு அவமானத்திற்கு உட்படுத்துகிறாய். இம்மாதிரி பந்தனத்தில் அகப்படாமல் இருக்கும்

வித்தை விஹாரிக்குத் தெரிந்திருக்க எனக்கு மாத்திரம் தெரியாது போயிற்றே!

"அவர் கண்ணிய புருஷர். அம்மாதிரியானவர்கள் எவ்விதப் பந்தனத்திலிருந்தும் விடுபட்டவர்கள்" என்று சொல்லி விநோதினி வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள்.

மஹேந்திரனால் பொறுக்க முடியாமற் போயிற்று. "நினைத்தபோதெல்லாம் என்னை இப்படியா அவமானப் படுத்தத் துணிந்தாய்? நான் பொறுத்துக்கொண்டு போவதால் உனக்குத் துணிச்சல் அதிகமாகிவிட்டது. நானென்ன, மனிதனல்ல மிருகமென்று நினைத்தாயோ? எப்பொழுதுமே எதிர்த்து நிற்காது உன் விரட்டலுக் கெல்லாம் உட்படுவேனென்று நினைத்துவிடாதே" என்று கர்ஜித்தான்.

கோபத்தினால் விநோதினியை அவன் வெறித்துப் பார்த்தான். அவள் பதிலே சொல்லவில்லை. சற்று நேரத் திற்குப் பிறகு அவன், "விநோதினி, புறப்படு. இந்த நிமிஷமே நாம் வேறெங்காவது சென்றுவிடலாம். இந்த இடத்தை விட்டுக் காடோ மலையோ எங்கே வேண்டுமானா லும் செல்வோம். என்னால் இனி இங்கே இருக்கமுடி யாது" என்றான்.

விநோ: இப்பொழுதே புறப்படு. வா, மேற்கே போக லாம்.

மஹேந்: மேற்கே எங்கே போவது?

விநோ: எங்குமில்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திலும் தங்காது சுற்றிக்கொண்டே இருக்கப் போகிறேன்.

மஹேந்: எப்படியானாலும் சரி. இன்று இரவே புறப்படுவோம்.

விநோதினியும் அதற்கு உடன்பட்டாள். அவள் உள்ளே சமையலைக் கவனிக்கச் சென்றாள்.

அவளுக்கு விஹாரியைப் பற்றிய செய்தி இன்னும் தெரியவில்லை என்பதை மஹேந்திரன் அறிந்துகொண்டான். ஆனால் தற்செயலாக எவ்விதமாவது தெரிந்து விடப்போகிறதே என்று பயந்தவனாய் அன்று முழுவதும் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வந்தான்.

---

## நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

விஹாரியை அழைத்துவரத்தான் மஹேந்திரன் போயிருக்கிறானென்று ராஜலக்ஷ்மி நினைத்து, விஹாரியின் வரவை எதிர்பார்த்து அவனுக்குப் பிடித்த சமையலை அன்று செய்யக் கட்டளையிட்டாள். பகற்பொழுது கழிந்து இரவும் வந்துவிட்டது. அப்பொழுதும் மஹேந்திரன் வீட்டிற்கு வராததைக் காண ராஜலக்ஷ்மி திகிலும் கவலையும் அடைந்தாள். விநோதினியின் வீட்டில் மஹேந்திரன் இறங்கிக்கொண்டு வண்டியை வீட்டிற்கு அனுப்பி விட்டதாக வண்டிக்காரன் தெரிவித்தான். தான் இவ்வளவு நோயுற்றுப் படுத்திருந்தும் மஹேந்திரன் தன்னைச் சற்றுக்கூடக் கவனியாமல் காமாந்தகனாய் விநோதினியைச் சுற்றியலைவது ராஜலக்ஷ்மியின் உள்ளத்தை வாள் கொண்டு அறுப்பது போன்று இருந்தது.

ஆசா தனது மனோவேதனையை வெளிக்குக் காட்டாது, "அம்மா, மருந்து கொடுக்கும் நேரமாகிவிட்டது. கொண்டு வரட்டுமா?" என்றாள். ராஜலக்ஷ்மி, "மருந்தும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் எனக்கு" என்றாள். ஆசாவுக்குத் தான் படும் துன்பத்தைவிட வயதான

நோயுற்ற மாமியாரின் மனத்துயரத்தைக் காணச் சகிக்க முடியவில்லை. என்ன அடக்கியும் முடியாது அவள் ராஜ லக்ஷ்மியின் தலைமாட்டிலேயே நின்று விம்மி அழலானாள். அதைக் காண்கையில் ராஜலக்ஷ்மியின் மனம் உருகியது. மெள்ள ஆசாவின் கன்னங்களை வருடிக்கொண்டே, "அம்மா ஆசா, நீ இன்னும் சிறியவள். இப்பொழுது துன் பப்பட்டாலும், துன்பம் நீங்கிச் சுகமடையும் நாள் வரும். எனக்கோ வயதாகிவிட்டது. இனி நான் இருப்பதும் இறப்பதும் ஒன்றுதான். என்னைப்பற்றி நீ சிறிதும் கவலை கொள்ளாதே" என்று அன்பும் கருணையும் ததும்பக் கூறினாள். இதனால் ஆசாவின் அழுகை பின்னும் அதிகரித்தது.

மஹேந்திரனின் வீடு துக்கமே குடிகொண்டது போல் காணப்பட்டது. நோயுற்ற தாயும், மனமுடைந்த மனைவியும் இன்னமும் அவன் வரமாட்டானாவென எதிர் பார்த்துக்கொண்டே இருந்தனர். ஏதாவது சிறு சப்தம் கேட்டாலும் அவன் வந்து விட்டானோவெனப் பார்ப்பர். பிறகு ஏமாற்றமடைவர். இருட்டி விட்டதேயென்று ஆசா விளக்கை ஏற்றினாள். "வேண்டாம், அணைத்துவிடு" என்று சொல்லிவிட்டாள் ராஜலக்ஷ்மி.

இருட்டில் மாமியாரருகில் உட்கார்ந்து ஆசா, "அம்மா, அவரைக் கூட்டிவர ஆளை அனுப்பட்டுமா?" என்று கேட்டாள். ராஜலக்ஷ்மி, "அவனுக்கு ஒன்றும் சொல்லியனுப்பக்கூடாது" என்று உறுதியுடன் மறுத்தாள்.

அச்சமயம், "எஜமான் கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறார்" என்று வேலைக்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

ராஜலக்ஷ்மி ஆவலுடன், "ஆசா, சீக்கிரம் படி. கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறனென்று சொல்" என்றாள்.

ஆசா கை நடுங்கக் கடிதத்தைப் பிரித்தாள்.

சில தினங்களாகத் தனக்கு அங்கு இருக்கவே பிடிக்காததால் இப்பொழுது மேற்குப் பிரதேசங்களில் சில காலம் சுற்றுப் பிரயாணம் செய்யப் போவதாகவும், அம்மாவின் தேக நிலையைப்பற்றிக் கவலை கொள்ளக் காரணமில்லை யென்றும், அவளை அடிக்கடி போய்ப் பார்த்து வேண்டிய மருந்து கொடுக்கும்படி தன் நண்பனை ஒரு புதிய டாக்டரிடம் சொல்லியிருப்பதாகவும், இரவில் அம்மாவுக்குத் தூக்கம் வராவிடில் தான் அக்கடிதத்தோடு அனுப்பியிருக்கும் மருந்துகளைக் கொடுக்குமாறும், அம்மாவின் தேக ஸ்திதியைப்பற்றி அடிக்கடி கிரிதி என்ற ஊருக்குத் தனக்குக் கடிதம் போடும்படியும் எழுதி விலாசத்தையும் தெரிவித்திருந்தான்.

அக்கடிதத்தைப் படித்ததும் ஆசா அப்படியே ஸ்தம்பித்துச் சிலைபோல் நின்றாள். கடிதத்தில் இருக்கும் இரக்கமற்ற நிஷ்டூரமான விஷயத்தை ராஜலக்ஷ்மிக்குத் தெரிவிக்கவும் கூசினாள்.

ராஜலக்ஷ்மியோ விஷயத்தை அறியத் துடித்தாள். மிகவும் கஷ்டத்துடன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து, "என்ன எழுதியிருக்கிறான், மஹேந்திரன்? சீக்கிரம் படியேன்" என்றாள்.

ஆசா கடிதமுழுவதையும் படித்துக் காட்டினாள்.

ராஜலக்ஷ்மியின் உள்ளம் சிதைந்தது. அவள், "இங்கே இருக்க அவனுக்கு எப்படிப் பிடிக்கும்? நான் சாகவும் சாகாமல் வியாதியாய்ப் படுத்துச் சதா அவன் கண்ணில்

உறுத்திக் கொண்டிருந்தேனாகில் அவனுக்கு இங்கே இருக்க எப்படி மனம் வரும்? நான் பிறர் அறியாது ஒரு மூலையில் விழுந்து கிடந்து பிராணனை விட்டிருப்பேனே! நீ ஏன் போய் அவனிடம் எனக்கு நோய் அதிகரித்ததைச் சொல்லி என் முன் இழுத்து வந்தாய்? இவ்வளவு கஷ்டப் பட்டும் உனக்குச் சிறிதும் புத்தியில்லை" என்று துக்கம் பொறுக்காமல் ஆசாவிடம் கூறிப் படுக்கையில் தடாலென விழுந்தாள்.

அச்சமயம் டாக்டர் உள்ளே வந்தார்; "உடம்பு எப்படி இருக்கிறது அம்மா?" என்றார்.

கோபத்துடன் ராஜலக்ஷ்மி, "எப்படியிருப்பதென்ன? சாவைத் தடுப்பது உங்களால் சாத்தியமா என்ன? உங்கள் மருந்து எல்லாரையும் சிரஞ்ஜீவிகளாய் வாழச் செய்து விடுமோ?" என்றாள்.

டாக்டர் பொறுமையுடன், "சிரஞ்ஜீவிகளாக்க முடியாமற் போனாலும் வியாதியின் உபத்திரவத்தைக் குறைக்க ......" என்பதற்குள், அவரை இடையிலே தடுத்து ராஜலக்ஷ்மி, "விதவைகளின் வாழ்க்கையே கஷ்டம் அனுபவிப்பதற்குத்தான். என்னை இப்படியே விட்டுவிடுங்கள்; என்னைத் துன்புறுத்த வேண்டாம். நீங்கள் போகலாம்" என்றாள்.

டாக்டர்: சற்று நாடியைப் பிடித்துப் பார்க்கிறேன்.

ராஜலக்ஷ்மி ஆத்திரத்துடன், "நாடியெல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறது. அது ஒன்றும் இப்போதைக்கு நின்று விடும்போல் இல்லை!" என்றாள்.

டாக்டர்: மஹேந்திரன் உங்களுக்கு வைத்தியம் செய்யும் பொறுப்பை என்னிடம் ஒப்பித்துப் போயிருக்கிறான்.

நீங்கள் இப்படி வைத்தியம் செய்துகொள்ள மறுத்தால் அவன் மிகவும் மனம் வருந்துவான்.

மஹேந்திரன் அவளுக்காக மனம் வருந்துவது! இது ராஜலக்ஷ்மியைக் கேலி செய்வது போன்று இருந்தது. அவள் பின்னும் ஆத்திரத்துடன், "நீங்கள் இதற்காகக் கவலைப்பட வேண்டாம். அவன் இதற்காக மனம் வருந்தப் போவதில்லை. நீங்கள் போகலாம். என்னைச் சற்று நித்திரை செய்ய விடுங்கள்" என்றாள்.

'இனி இவளுடன் வாதாடுவதில் பயனில்லை' என்று கண்டு டாக்டர் வெளியே வந்து ஆசாவிடம் ராஜலக்ஷ்மிக்கு என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துப் போய்விட்டார்.

ஆசா அருகில் வந்ததுமே ராஜலக்ஷ்மி, "ஆசா, நீ ஏன் இப்படி நாள் முழுவதும் என்னிடம் உட்கார்ந்து பாடுபடுகிறாய்? போய்ச் சற்று இளைப்பாறு. வேலைக்காரியை என்னிடம் அனுப்பிவிட்டு நீ போய்ப் படுத்துக் கொள்" என்றாள்.

ஆசாவுக்கு ராஜலக்ஷ்மியின் பிடிவாத சுபாவம் நன்கு தெரியுமாதலால் அவள் உடனே அவ்வாக்கைக்குக் கீழ்ப் படிந்தாள். அவள் தன் அறைக்குப் போய் வெறுந் தரையிலேயே படுத்துக்கொண்டாள்.

நாள் முழுவதும் பட்டினி கிடந்ததாலும் நித்திரை செய்யாததாலும் ஆசா இளைத்துத் துரும்பாகிவிட்டாள். தெருவில் ஒரு வீட்டில் கலியாணம். நாகசுரத்தின் (ஸானாயி) சப்தம் கேட்டது. நடந்துபோன பல சம்பவங்கள் அவள் நினைவிற்கு வந்தன. சொற்பகாலத்திற்கு முன் தனக்குக் கலியாணமானது, அன்றைக் கோலாஹலம்,

பிறகு தங்களது இன்ப வாழ்க்கை—இவற்றுடன் தற் போதைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கவே, அவள் மனம் புண்பட்டது. வாழ்வில் தனக்கு இனியும் சுகம் கிட்டுமாவென ஏங்கினாள். கடவுளை மனமாரத் தியா னித்துப் பிரார்த்தித்தாள். தான் பிரத்தியக்ஷ தெய்வ மாகக் கருதும் அன்னபூரணியின் நினைவு வந்தது. தனது துயரத்தைச் சொல்லி அவளையும் துக்கத்தில் ஆழ்த்தக் கூடாதென்று ஆசா இதுவரை அன்னபூரணிக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை. இன்று அவள் மனம் துக்கத் தால் வெடித்துவிடும்போல் இருந்தது. தனது மனத் துயரை ஆற்றிக் கொள்ள அன்னபூரணியிடமன்றி வேறு யாரிடம் முறையிடுவதென எண்ணி அவளுக்கு உடனே ஒரு கடிதம் எழுதினாள்:

"அன்பார்ந்த சித்திக்கு,

எனக்கு உன்னைத் தவிர இவ்வுலகில் வேறு யாருமில்லை. துர்ப்பாக்கியவதியான என்னை நீ வந்து தேற்றினாலொழிய நான் உய்யும் வகையைக் காணேம். எனக்கு என்ன எழுது வதெனத் தெரியவில்லை. உன் பாத கமலங்களில் என் கோடானுகோடி நமஸ்காரம்.

உன் அன்புள்ள,

ஆசா"

என்று எழுதித் தபாலில் போட்டாள்.

---

## நாற்பத்தாறும் அத்தியாயம்

அன்னபூரணி கல்கத்தா வந்து சேர்ந்தாள். வெகு நாளைப் பிரிவானது ராஜலக்ஷ்மியின் மனத்திலிருந்த பழைய மனஸ்தாபத்தையெல்லாம் குழிதோண்டிப்

புதைத்து விட்டது. இன்று அவளைக் காணும்போது இழந்த தனத்தைப் பெற்றதுபோல் மகிழ்ந்தாள். தன் ஓரகத்தியான அன்னபூரணியும் தானும் அவ்வீட்டு நாட்டுப்பெண்களாயிருந்து ஒரு காலத்தில் மிகவும் ஒற்றுமையுடன் இருந்தது ஒன்றே இப்பொழுது அவள் ஞாபகத்தில் இருந்தது. இவர்களுக்கிடையே சச்சரவிற்குக் காரணமாயிருந்த அந்த அருமைப் புத்திரன் மஹேந்திரன் இன்று எங்கே?

அன்னபூரணி ராஜலக்ஷ்மியின் அருகில் போய் உட்கார்ந்து அவள் கையை அன்புடன் பிடித்துக்கொண்டு, "உடம்பு எப்படி அம்மா இருக்கிறது?" என்றாள்.

ராஜலக்ஷ்மியால் பதில் பேசமுடியவில்லை. கண்ணீர் பிரவாகமெடுத்து ஓடியது. "அக்கா" என்ற ஒரு வார்த்தைதான் அவள் வாயிலிருந்து வெளிப்பட்டது. மனமுருகும் அக்காட்சியைக் காணத் தாளாது ஆசா அடுத்த அறையில் போய் உட்கார்ந்து அழலானாள்.

ராஜலக்ஷ்மியையோ அல்லது ஆசாவையோ மஹேந்திரனைப்பற்றிக் கேட்க அன்னபூரணி துணியவில்லை. வீட்டில் இருக்கும் ராஜலக்ஷ்மியின் தூர பந்துவான ஸாதுசரணரை அழைத்து, "மஹேந்திரன் எங்கே?" என்று கேட்டாள். ஸாதுசரணர் எல்லா ஸமாசாரங்களையும் விவரமாகக் கூறினார். பிறகு அன்னபூரணி அவரைப் பார்த்து, "விஹாரி எங்கே?" என்று கேட்டாள். "அவன் இங்கு வந்து வெகு நாட்களாயின. ஆகையால் எனக்கு அவனைப் பற்றிச் சரியான தகவல் ஒன்றும் தெரியாது" என்றார்.

அன்ன: அவன் வீட்டிற்குப் போய் அவனைப் பற்றி விசாரித்து வந்து சொல்லுங்கள்.

அவர் போய் விசாரித்துத் திரும்பி வந்து, "அவன் இங்கில்லையாம். கங்கைக்கரையில் பாலி என்ற இடத்தில் பெரிய பங்களா வாங்கிக்கொண்டு அங்கே வசிக்கிறானாம்" என்றார்.

டாக்டர் வந்ததும் அன்னபூரணி அவரிடம் நோயாளியின் தேகஸ்திதியைப் பற்றி விசாரித்தாள். ராஜலக்ஷ்மியின் வயிற்றில் கட்டி (Cancer) இருக்கிறதென்றும், அவளுடைய இருதயம் வேறு துர்ப்பலமாயிருப்பதால் அவள் எந்த நிமிஷத்திலும் இறந்துவிடக் கூடுமென்றும் டாக்டர் தெரிவித்தார்.

சாயங்காலம் ராஜலக்ஷ்மியின் மூச்சுத் திணறல் மேலும் அதிகரித்தது. "டாக்டரை அழைத்துவரச் சொல்லட்டுமா?" என்றாள் அன்னபூரணி.

"வேண்டாம் அக்கா, டாக்டரால் எனக்கு இனி ஒன்றும் செய்ய முடியாது" என்றாள் ராஜலக்ஷ்மி.

அன்ன: பின் வேறு யாரை அழைக்க விரும்புகிறாய்?

ராஜலக்ஷ்மி: விஹாரியை வரவழைத்தாயானால் நலம்.

அதற்கு முன்பு காசியில் தன்னிடம் வந்த விஹாரியைத் தான் அகாரணமாய்க் கோபித்து அவமானத்துடன் திருப்பியனுப்பியது அன்னபூரணியின் உள்ளத்தை அறுத்தது. மறுபடியும் அவனைச் சந்தித்து அவனைத் தேற்றிச் சாந்தப்படுத்தச் சமயம் வாய்க்குமென அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை. அவள் மாடிமேலுள்ள மஹேந்திரனின் அறைப்பக்கம் சென்றாள். அவ்வீட்டிற்கு ஆனந்த நிலயமாய் விளங்கிய அவ்வறை அன்று களையற்றுச் சூன்யமாகக் காணப்பட்டது. சித்தி மாடிக்குப் போவதைப் பார்த்ததும் ஆசாவும் பின்னேயே அங்கு வந்து சேர்ந்

தாள். அன்னபூரணி அவளை அன்புடன் கட்டித் தழுவி முத்தமிட்டாள். ஆசா அவளை நமஸ்கரித்துத் தழு தழுத்த குரலில், "சித்தி, எனக்கு மனோபல முண்டாகும் படி ஆசீர்வாதம் செய். இப்படித் துன்பம் ஏற்படுமென்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. அம்மா! இப்படி இன்னும் எவ்வளவு நாட்கள் சகிப்பது!" என்று வாய் விட்டு அழுதாள்.

அன்னபூரணி அங்கேயே உட்கார்ந்தாள். ஆசாவைத் தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டு, பேசாமல் வெகு நேரம் வரையில் பகவானைப் பிரார்த்தித்தாள்.

வெகு தினங்களுக்குப் பிறகு ஆசாவின் மனத்தில் இன்று சாந்தி நிலவியது. தனது துன்பத்திற்கு முடிவு காலம் சமீபித்து விட்டதுபோல் தோன்றியது. தன்னைப் போன்ற மூடாத்மாவின் வேண்டுகோளைக் கடவுள் அங்கீ கரிக்காவிட்டாலும் புண்ணியாத்மாவான தன் சித்தியின் பிரார்த்தனை ஒரு நாளும் வீண் போகாது என நம்பினாள்.

பிறகு மனத் தேறுதலடைந்து, "சித்தி, இங்கு வரு மாறு விஹாரி பாபுவுக்குக் கடிதமெழுதினால் என்ன?" என்றாள் ஆசா.

அன்னபூரணி, "கடிதம் வேண்டாம். நாளை நானே புறப்பட்டுப்போய் அவனை அழைத்து வருகிறேன்" என்றாள்.

---

## நாற்பத்தேழாம் அத்தியாயம்

தனது மனத்தை ஏதாவதொரு பரோபகார காரி யத்தில் ஈடுபடுத்தினாலொழிய தனக்கு மனவமைதி ஏற் படாதென விஹாரி தீர்மானித்தான். சிறு ஊதியம்

பெற்று அரைவயிற்றுச் சாப்பாட்டிற்கும் போதாமல், பெரிய பட்டணங்களில் குடும்ப சகிதம் குடியேறிக் கஷ்டப்படும் குமாஸ்தாக்களின் பரிதாப நிலையைக் காண அவன் மனம் இரங்கினான். அவர்களுக்காகவே கங்கைக் கரையில் பாலி என்ற இடத்தில் விஸ்தாரமான திறந்த வெளியில் ஆரோக்கிய ஆச்ரமம் ஒன்று ஸ்தாபிக்க விரும்பி அவ்வேலையில் ஈடுபட்டான். அதற்காகவேண்டிக் கட்டட வேலை நடந்துகொண்டிருந்தது.

ஆனால் அப்பொழுதும் விஹாரிக்குத் தான் விரும்பிய மனச்சாந்தி கிடைக்கவில்லை. மனக்கிலேசமே அதிகரித்தது. எக்காரியத்தில் பிரவேசித்தாலும் எல்லாம் சாரமற்றுத் தோன்றியது. ஒன்றிலும் மனத்திற்குச் சந்தோஷமோ உற்சாகமோ இல்லாமற் போயிற்று. விஹாரி இதற்கு முன் என்றும் இப்படி உற்சாகம் இழந்ததே இல்லை.

வாழ்வில் ஒருவித லட்சியமும் இன்றி, செய்யவேண்டுமென்பதற்காகவே தனக்குத் தோன்றிய வேலையைச் செய்து வந்தான். மனத்தில் அடங்காத ஒரு வேட்கை இருந்தது. அன்று இரவு தனக்கும் விநோதினிக்கும் ஏற்பட்ட அகஸ்மாத்தான சந்திப்பே அவ்வேட்கைக்குக் காரணம்.

கங்கையில் ஆடி வெள்ளம் கரைபுரண்டு பூரணமாய் ஓடியது. பூர்ணிமை இரவு. இப்படி எவ்வளவோ பூர்ணிமைகள் இதுவரையில் அமிர்த கலசத்தை ஏந்தி அவனிடம் வந்து சென்றுவிட்டன. ஆனால் இன்று விஹாரியின் மனவேட்கை அவ்வமிர்த பானமின்றித் தணியாதெனத் தோன்றியது. இதுவரை கழிந்த தன் வாழ்நாட்கள் யாவும் வியர்த்தமெனப் பட்டது. அன்று இரவு விநோதினி தன்

அவள் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

—பக்கம் 305

பாதங்களைக் கண்களில் ஒற்றி முத்தமிட்டதை அவனால் மறக்க முடியவில்லை. எங்கும் அவனுக்கு விநோதினியின் உருவமயமாகவே தோன்றியது. அவளது மிருதுவான ஸ்பர்சம், அவளது தீனப் பார்வை இவை அவனை நாலு பக்கமும் சூழ்ந்து இன்ப உணர்ச்சியை ஊட்டிப் பரவசப்படுத்தின.

ஆனாலும் இன்று விஹாரி விநோதினியை விட்டு வந்து இவ்வளவு தூரத்தில் இருப்பானேன்? தாமரை எவ்வளவுதான் அழகு பொருந்தியதானாலும் அது சேற்றில்தான் முளைக்கின்றது; பறித்தெடுக்கும்போது சேறும் கூடவே வருகிறது. அதை ஒரு தூய இடத்தில் வளரச் செய்ய முடியுமோ? அதேபோல்தான் விநோதினியைக் கொணர்ந்து களங்கமற்ற புனிதமான ஸ்தானத்தில் வைக்க முடியுமாவென அவன் யோசித்தான். அப்படியே முடியுமானாலும் மஹேந்திரனுடைய விரோதம் துவேஷம் இவையின்றிச் செய்யமுடியாது. மஹேந்திரனின் விரோதத்தைத் தேட அவன் ஒருகாலும் உடம்படமாட்டான். இதனால் தான் அவன் விநோதினிக்கு ஒரு கடிதங்கூட எழுதத் துணியவில்லை. எதிர்பாராத கெட்ட செய்தி ஏதாவது காதில் விழுந்து தனது இன்பக் கனவும் சிதைந்துவிடப் போகிறதேயென அஞ்சினான்.

விஹாரி ஒருநாட் காலை ஒரு மாமரத்தடியில் பெஞ்சியில் உட்கார்ந்து ஏக்கமுற்று யோசனையில் இருந்தான். சமையலென்ன செய்வதென்று சமையற்காரன் வந்து கேட்க, "பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது பசியில்லை" என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அச்சமயம் திடீரென்று அன்னபூரணி எதிரே வந்து நிற்பதைக் கண்டு வியப்புற்று எழுந்தான். அவள் பாதங்

களில் விழுந்து நமஸ்கரித்தான். அன்னபூரணி அவனை அன்புடன் தூக்கியெழுப்பி, "விஹாரி, வியாதிக்காரனைப் போல் ஏன் இப்படி மெலிந்து போய்விட்டாய்?" என்று கண்ணீர் உகுத்தாள்.

விஹாரி: உங்களுடைய அன்பை மறுபடியும் பெற வேண்டித்தான்.

அன்னபூரணியின் கண்ணீரைக் கண்டதும் விஹாரியின் மனம் பதைத்தது. அவன், "பெரியம்மா, நீங்கள் இன்னும் சாப்பிடக்கூட இல்லை. வாருங்கள், போகலாம். உங்களுடைய கையால் சமைத்த சாப்பாட்டைச் சாப்பிட்டு எவ்வளவோ காலமாயிற்று. இன்றுதான் அதைப் பெறும் பாக்கியம் பெற்றேன்" என்றான்.

மஹேந்திரன் ஆசா இவர்களைப்பற்றி விஹாரி ஒன்றும் கேட்கவில்லை. சாப்பாடு முடிந்ததும் அன்னபூரணி, "கரையில் படகு தயாராயிருக்கிறது. நாம் கல்கத்தா செல்வோம் வா" என்றாள்.

விஹாரி: கல்கத்தாவில் எனக்கு என்ன வேலை?

அன்ன: ராஜலக்ஷ்மி மிகவும் நோயுற்றுக் கிடக்கிறாள். உன்னைப் பார்க்க விரும்புகிறாள்.

விஹாரி திடுக்கிட்டுப் பிறகு, "மஹேன் எங்கே இருக்கிறான்?" என்று கேட்டான்.

அன்ன: கல்கத்தாவில் இல்லை. மேற்கே சுற்றுப் பிரயாணத்தில் இருக்கிறான்.

விஹாரியின் முகம் வெளுத்தது. பேசவேயில்லை அவன்.

அன்ன: உனக்கு நடந்த விஷயமெல்லாம் தெரியாதா?

விஹாரி: ஏதோ கொஞ்சம் அறிவேன். எல்லாம் தெரியாது.

அன்னபூரணி நடந்தவற்றையெல்லாம் விஸ்தாரமாக எடுத்துக் கூறினாள். அதைக் கேட்டதும் விஹாரி சற்று முன் கட்டிய கற்பனைக் கோட்டையெல்லாம் ஒரு நொடியில் தகர்ந்து மண்ணாயிற்று.

'மாயாவினி விநோதினி அன்று நடித்ததெல்லாம் வெறும் நாடகந்தானா? ஆத்ம சமர்ப்பணம் செய்வதாகச் சொன்னதெல்லாம் பொய்யா? கபடவேஷந்தானா? கிராமத்தைவிட்டு லஜ்ஜையற்று மஹேந்திரனுடன் தனியாகவா ஓடிவிட்டாள்? எனது முட்டாள்தனத்தை என்னவென்று சொல்வது? இந்த நீலியையன்றோ நான் நம்பினேன்! என்று தன்னையே சபித்துக்கொண்டான்.

ஒரு நொடியில் அவனது இன்பக்கனவு இந்திரஜாலம் போல் மறைந்தது.

---

# நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

வீட்டிற்குள் நுழைந்ததுமே வீடு களையிழந்து காணப்பட்டது. ஆசாவின் முகத்தில் எப்படி விழிப்பதெனத் தயங்கினான் விஹாரி. நண்பனின் செய்கை அவனைத் தலை குனியச் செய்தது. உள்ளே காலெடுத்து வைக்கவே மனம் பின் வாங்கியது.

ஆனால் சங்கோசப்படுவதற்கும் யோசிப்பதற்கும் இப்பொழுது சமயம் ஏது? ஆசாவே எதிரில் வந்து, "அம்மா மிகவும் அவஸ்தைப்படுகிறார். சற்று வந்து பாருங்கள்" என்றாள்.

துக்கமானது தூர இருப்பவர்களையும் அருகில் இழுத்து, வேற்றுமையைப் போக்கி ஒன்று சேர்த்து விடுகிறது. அச்சமயம் வெட்கம் நாணம் இவற்றைப் பாராட்டிக்கொண்டிருக்கத் தோன்றுவதில்லை. ஆசா விஹாரியுடன் தானே வந்து இப்படிப் பேசுவது இதுதான் முதல் முறை.

விஹாரி உள்ளே சென்ற சமயம் ராஜலக்ஷ்மி மூச்சு விடத் தவித்துக் கொண்டிருந்தாள். சமாளித்துக்கொண்டு கண்ணைத் திறக்கச் சிறிது நேரமாயிற்று.

விஹாரி அவளை நமஸ்கரித்து அவள் பாதங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். ராஜலக்ஷ்மி சொல்லிய படி அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். "அப்பா விஹாரி, சௌக்கியமா? எவ்வளவு நாளாயிற்று உன்னைப் பார்த்து!" என்றாள் ராஜலக்ஷ்மி.

விஹாரி: அம்மா, நீங்கள் இப்படிப் படுத்திருக்கும் செய்தியை எனக்கு ஏன் தெரிவிக்காது போனீர்கள். தெரிந்தால் ஒரு நொடியில் வந்திருக்க மாட்டேனா?

ராஜலக்ஷ்மி அன்புடன், "எனக்கு அது தெரியாதடா அப்பா? உன்னை நான் பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கவில்லையே தவிர உன்னைக் காட்டிலும் அருமையானவர் எனக்கு வேறு யார் இருக்கின்றனர்?" எனக் கண்ணீர் பெருக்கினாள்.

தனது துக்கத்தை மறைக்க விஹாரியும் எழுந்து பக்கத்து அலமாரியில் ராஜலக்ஷ்மிக்காக வைத்திருக்கும் மருந்துகளை எடுத்துப் பார்த்துச் சிறிது நேரம் நின்றுவிட்டுப் பிறகு ராஜலக்ஷ்மியிடம் வந்து அவளது நாடியைப் பரிசோதிக்கக் கையை எடுத்தான். அதற்குள் ராஜலக்ஷ்மி,

"எனது நாடி இருக்கட்டும். நீ ஏன் இப்படி நோய கொண்டவன் போல் ஆகிவிட்டாய்?" எனக் கேட்டாள்.

விஹாரி, "உங்கள் கையால் போஜனமிட்டு உண்டா லன்றி இந்த எலும்புகள் மறைய மாட்டா. வியாதி குண மடைந்து நீங்கள் சீக்கிரம் எழுந்திருங்கள், அம்மா. நானும் சாப்பிடத் தயார் செய்து கொள்ளுகிறேன்" என் ருன். ராஜலக்ஷ்மி சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ஆமாம்! தயார் செய்து கொள். ஆனால் சாப்பாட்டிற் கல்ல" எனக் கூறிக்கொண்டே அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "விஹாரி, இனி நீ உனக்கு ஒரு மனைவியைத் தேடிக்கொண்டு வரவேண்டும். உன்னைக் கவனிப்பார் யாரு மில்லை. (அன்னபூரணியை நோக்கி) அக்கா, விஹாரிக்கு விவாகம் செய்துவை. அவன் உடம்பு எப்படியாகி விட் டது பார்த்தாயா?" என்று சொன்னாள்.

அன்ன: செய்யவேண்டியதெல்லாம் உன்னால்தான் முடியும், ராஜலக்ஷ்மி. நீ சீக்கிரம் சொஸ்தமடைந்து எழுந்திரு. நாம் யாவருமாக இச்சுப காரியத்தை நடத்தி விடுவோம்.

ராஜலக்ஷ்மி: இனி எனக்கு அம்மாதிரி சந்தர்ப்பம் வாய்க்கப் போவதில்லை. அக்கா, விஹாரியை நான் உன் னிடமே ஒப்படைக்கிறேன். அவனைச் சுகியாக வைப்பது உனது பொறுப்பு. அவன் விஷயத்தில் என்னால் எனது கடமையை நிறைவேற்றிவைக்க முடியவில்லை. பகவான் அவன்மீது கிருபை புரியட்டும்.

யாவருக்கும் துக்கம் நெஞ்சை அடைத்தது. ஆசா அவ்விடத்தை விட்டு அகன்ருள். அன்னபூரணியின் கண் களில் நீர் துளித்தது.

திடீரென எதையோ நினைத்துக்கொண்டவள் போல ராஜலக்ஷ்மி, "ஆசா! ஆசா!" என்று அழைத்தாள். ஆசா வந்ததும், "விஹாரிக்குப் போஜனத்திற்கு ஏற்பாடு ஏதாவது செய்தாயா?" என்று கேட்டாள்.

அதற்குள் விஹாரி, "அம்மா, நான் சாப்பாட்டு ராமன் என்பது எல்லாருக்கும் தெரியும். உள்ளே நுழையும்போதே ஒரு கூடைக் கறிகாய், பழம் எல்லாம் ஆள் வாங்கிக்கொண்டு வந்ததைப் பார்த்தேன். நமது கியாதி இன்னும் இவ்வீட்டில் மறையவில்லையென்று அப்பொழுதே தெரிந்து கொண்டேன்" என்று சொல்லி ஆசாவைப் பார்த்துச் சிரித்தான்.

ஆசா அவனது சிரிப்பைப் பார்த்து நாணமடையவில்லை. அவளும் புன்னகை புரிந்தாள். முன்பு அவள் அவன் குணத்தை நன்கு அறிந்திருக்கவில்லை. அவன் இக்குடும்பத்திற்கு இதம் செய்பவனெனக் கருதாது விரோதியாகப் பாவித்து வெறுத்து வந்தாள். இப்பொழுது அவளது வெறுப்பு முழுதும் ஆதரவும் சிரத்தையுமாக மாறியது.

"அக்கா, இன்றைச் சமையலை நீயே மேற்பார்வையிட வேண்டும். என் விஹாரிக்குக் கறிகாய் வகைகள் எவ்வளவு இருந்தாலும் ஒரு தட்டு வறுவல்மட்டுமில்லாவிட்டால் அவன் வயிறு நிறையாது" என்றாள். இதைக் கேட்டு எல்லோரும் நகைத்தனர்.

அவ்வீட்டைச் சூழ்ந்திருந்த துக்கம் அன்று சற்றே நீங்கியது போல் காணப்பட்டது.

இவ்வளவு பேச்சுவார்த்தைக்கு இடையிலும் மஹேந்திரனின் பெயரைக்கூட ஒருவரும் பிரஸ்தாபிக்கவில்லை.

முன்பெல்லாம் சதா விஹாரியினிடம் தன் புத்திரனைப் பற்றியே பெருமை யடித்துக்கொள்ளும் ராஜலக்ஷ்மி இன்று அவனது பெயரை உச்சரிக்கக் கூடக் கூசினாள்.

ராஜலக்ஷ்மி சற்றுத் தூங்கும் சமயம் விஹாரி வெளியே வந்து அன்னபூரணியிடம், "அம்மாவின் நோய் சாதாரணமானதல்ல" என்றான்.

அன்ன: அதுதான் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறதே. விஹாரி, இனிக் காலதாமதமின்றி மஹேந்திரனை வரவழைப்பதுதான் நலம்.

சற்று யோசித்துவிட்டுப் பிறகு விஹாரி, "நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்யச் சித்தமா யிருக்கிறேன். அவன் இருக்குமிடம் யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டான்.

அன்ன: சரியாக யாருக்கும் தெரியாது. தேடவேண்டும், விஹாரி, இன்னுமொரு வார்த்தை. ஆசாவை நீ கவனித்துப் பார்த்தாயா? விநோதினியின் மாய வலையிலிருந்து அவனை விடுவித்தாலொழிய ஆசா பிழைப்பதும் அரிது. அவள் உள்ளம் படும் வேதனை அவள் முகத்திலிருந்தே நன்கு தெரிகிறது. மஹேந்திரனை நீதான் விடுவித்துக் காப்பாற்றவேண்டும்.

'ஹோ கடவுளே, பிறரைக் காப்பாற்றுவதற்கு நான். என்னைக் காப்பது யாரோ?' என்று தன்னுள்ளே கூறிக் கொண்டு அன்னபூரணியிடம், "பெரியம்மா, என்றுமே விநோதினியை மஹேந்திரன் நாடாதவாறு தடுத்து வைக்க எனக்கு என்ன மந்திர சக்தியா இருக்கிறது? தாயின் வியாதியை உத்தேசித்து வேண்டுமானால் அவன் சில

தினங்கள் வீட்டில் இருக்கக் கூடும். பிறகு அவன் மனம் அவள்பால் செல்லாதென்று நான் எப்படிக் கூறுவேன்?" என்றான் விஹாரி.

அச்சமயம் ஆசாவும் அங்கு வந்து சேர்ந்தாள். ராஜலக்ஷ்மியின் தேகஸ்திதியைப் பற்றித்தான் அவர்கள் இருவரும் சம்பாஷிப்பதாக நினைத்து அவளும் அங்கு வந்தாள். அப்பதி விரதா சிரோமணியின் முகம் துக்கத்தால் மலினமடைந்திருப்பதைக் காண விஹாரியின் மனத்தில் அவளிடம் பக்தி உதயமாயிற்று. புராணங்களில் வரும் சீதை, சாவித்திரி, அருந்ததி போன்ற உத்தம நாரீமணிகளின் அவதாரமாக இன்று ஆசா அவனுக்குத் தோன்றினாள்.

ராஜலக்ஷ்மிக்கு என்ன மருந்து கொடுக்க வேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டு ஆசா அவ்விடத்திலிருந்து சென்ற பிறகு, "மஹேந்திரனை நான் மீட்டு வருகிறேன்" என்று அன்னபூரணியிடம் சொல்லிப் பெருமூச்செறிந்தான் விஹாரி.

விஹாரி பாங்கியில் சென்று விசாரித்ததில் அப்பாங்கியின் அலகாபாத் கிளையில் மஹேந்திரன் கணக்கு வைத்துப் பணம் கொஞ்சநாட்களாகப் பெற்று வருவதாகத் தெரிந்தது.

---

## நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

ரெயில்வே ஸ்டேஷனை அடைந்ததும் விநோதினி இண்டர்வகுப்பு ஸ்திரீகள் வண்டி ஒன்றில் போய் ஏறிக்கொள்வதைக் கண்டு மஹேந்திரன் திகைப்புற்றான்.

"உனக்காக நான் இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கப்போகிறேன். நீ என்ன இதில் போய் ஏறிக்கொண்டாய்?" என்றான் அவன்.

விநோதினி: வேண்டாம். எனக்கு இதுவே சௌகரியமாயிருக்கிறது.

மஹேந்திரனுக்கு அவளது செய்கை வியப்பை அளித்தது. 'விநோதினி சுபாவத்தில் ஆடம்பரப் பிரியை. ஏழைமைத்தனத்தை ஓர் அவமானமாகக் கருதுபவள். நான் பணக்காரன். எனது வீட்டில் சகல சௌகரியங்களும் நிறைந்திருக்கின்றன. இதனால்தான் என்னை யாவரும் மதிக்கின்றனர். இவைகளால் வசீகரிக்கப்பட்டே விநோதினியும் என்மீது அன்பு கொண்டாள்' என்று அவன் அதுவரை நினைத்திருந்தான். இப்பொழுது அவன்மீதும் அவனது தனத்தின் மீதும் பூரண அதிகாரம் படைத்தவளாயிருந்தும், அவள் அதை எவ்வளவு குறைவாய்த் தனக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவே பெற விரும்புவதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. பணத்தை மாத்திரமன்றி அவனையும் தூரத்திலே விலக்கி வைத்திருக்க அவள் விரும்பினாள். என்றுமில்லாதவாறு தனது வைதவ்ய விரதத்தைக் கண்டிப்பாக அனுஷ்டிப்பவள்போல் காணப்பட்டாள். முன்பு இருந்த சிரிப்பு, வேடிக்கை, விளையாட்டுப் பேச்சுக்கள் யாவும் மறைந்தன. தானே வலிய ஏழைமை விரதம் பூண்டாள். முரட்டுத்துணிதான் உடுத்தாள். ஒரே வேளைச் சாப்பாடுதான். மஹேந்திரன் அவளிடம் எதையும் வற்புறுத்திப் பேசவே பயப்பட்டான். அவன் மனத்தில் கோபம் பொங்கியது. எவ்வளவோ சாகசம் செய்து

தன்னை அடைந்த பிறகு தன்னை இப்படிப் புறக்கணிப் பதேன் என ஆத்திரங் கொண்டான்.

"எவ்விடத்திற்கு டிக்கெட் வாங்கட்டும்?" என்று அவன் வினவினான்.

விநோதினி: மேற்கே எங்கே போக உனக்கு விருப் பமோ அவ்விடத்திற்கு வாங்கு; காலையில் ரெயில் நிற்கு மிடத்தில்தான் நான் இறங்கப்போகிறேன்.

சுகமாய் ஓரிடத்தில் இராமல் யாத்திரை செய்து சுற்றிக்கொண்டிருப்பதை மஹேந்திரன் விரும்பவில்லை. வெளியூரில் தங்க நேர்ந்து, சரியான வீடும் மற்றச் சௌகரி யங்களும் கிடைக்காவிடின் என்ன செய்வதென்பதே அவன் சிந்தனை. தேடித் திரிந்து வேலை செய்யும் வழக்க மில்லை அவனுக்கு. முணுமுணுத்துக்கொண்டே அவன் ரெயில் ஏறினான். தனக்குத் தெரியாமல் நடுவில் ரெயில் நிற்கும்போது எந்த ஸ்டேஷனிலாவது விநோதினி இறங் கிச் சென்றுவிடுவாளோ என்ற பயம் வேறு அவனைப் பிடித்தது.

இப்படி விநோதினி யாத்திரை செய்ய, சனீசுவரனைப் போல் அவளைப் பின் தொடர்ந்து மஹேந்திரன் சுற்றிக் கொண்டிருந்தான். அவனுக்குச் சிறிதும் ஓய்வில்லை. விநோதினி பெண்கள் வண்டியில் இருக்கும் ஸ்திரீகளுடன் சுலபமாய்ச் சிநேகம் செய்துகொண்டுவிடுவாள். அவர் களிடமிருந்து ஊர்களைப் பற்றிய விவரமெல்லாம் அறிந்து கொண்டு விடுவாள். எந்த ஊரில் தங்க விருப்பமோ அங்கே தர்ம சத்திரங்களில் இறங்கிக்கொள்வாள். தன் னோடு வரும் ஸ்திரீகளின் கூடவே சென்று பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் சுற்றிப் பார்ப்பாள்.

டிக்கெட் வாங்குவது ஒன்று தவிர அவள் எதற்கும் மஹேந்திரனின் உதவியை நாடவில்லை. அவள் கூப்பிடாமலே அவள் பின்னே சுற்றிச் சுற்றி மஹேந்திரன் களைப்படைந்தான். அப்படிச் செல்வது அவனுக்கு இழிவாகவும் தோன்றியது. தாய்க்குச் செல்வப்பிள்ளையாக வளர்ந்த மஹேந்திரன் இப்படி வீடு வாசலைவிட்டுத் தெருத்தெருவாய் ஊர் ஊராய்ச் சுற்றுவானென்று ஒருவரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

ஒருநாள் அலகாபாத் ஸ்டேஷனில் மஹேந்திரனும் விநோதினியும் நின்றுகொண்டு ரெயிலுக்காகக் காத்திருந்தனர். அன்று எக்காரணத்தினுலோ ரெயில் வரத் தாமதமாகிவிட்டது. மற்ற ரெயில்களிலிருந்து இறங்குபவர்களையும் ஏறுபவர்களையும் விநோதினி மிகவும் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். அக்கூட்டத்தில் தான் எதிர்பார்க்கும் யாரையோ தேடுவதுபோன்று இருந்தது, அவள் நோக்குவது. கல்கத்தாவில் தனி வீட்டில் அடைந்து கிடப்பதைக் காட்டிலும் இப்படி யாத்திரை செய்வது அவள் மனத்திற்குச் சாந்தியையே அளித்தது.

தற்செயலாக அவளது கவனம் ஸ்டேஷன் சுவரிலிருந்த ஒரு விளம்பரத்தின் மீது சென்றது. விஹாரி ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் ஆரோக்கிய ஆசிரமத்தின் விலாசம் அதில் காணப்பட்டது. எந்த விஹாரியாக இருக்கலாமென்பதைப்பற்றி விநோதினிக்குச் சந்தேகம் ஏற்படவில்லை. அவள், விலாசத்தை நன்குய்ப்படித்து ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, பெஞ்சியின்மேல் உட்கார்ந்திருந்த மஹேந்திரனிடம் வந்து, "நான் சில தினங்கள் அலகாபாத்திலேயே இருக்கப்போகிறேன்" என்றுள்.

விநோதினி தன் இஷ்டப்படியெல்லாம் மஹேந்திரனை ஆட்டிவைக்கக்கூடிய சக்தி பெற்றிருந்தாள். ஆனால் அவன் மனோவேட்கையை மாத்திரம் தணிக்க அவள் யத்தனிக்க வேயில்லை. அவனது உணர்ச்சியைப் புண்படுத்த எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் அவள் செய்யத் தவற வில்லை. அவனும் அவள் செயலை வெறுக்க ஆரம்பித் தான். அலகாபாத்தில் தங்கிச் சற்று ஓய்வெடுத்துக் கொள்ள அவனுக்கும் விருப்பந்தான். ஆனாலும் விநோ தினியின் விருப்பத்திற்கு இணங்குவதா என்னும் வீம்பிற் காகக் கோபத்துடன், "இங்கிருந்து புறப்படுவதற்காக ஸ்டேஷன்வரை வந்தாகிவிட்டது; இனித் திரும்புவ தாவது? நான் இருக்கப்போவதில்லை" என்று தன் பௌருஷத்தைக் காட்டினான்.

விநோதினி: நான் இங்கேயேதான் தங்கப்போகிறேன்.

மஹேந்திரன்: நீ தனியாகவே இரு. நான் போகிறேன்.

"மிகவும் நல்லது" எனக் கூறி விநோதினி ஒரு கூலியை அழைத்துச் சாமான்களை அவன் தலையில் சுமத் திக்கொண்டு ஸ்டேஷனைவிட்டு வெளியே சென்றாள்.

மஹேந்திரன், கண்களில் கோபப்பொறி பறக்க, அவள் கண்மறையும்வரை பார்த்துக்கொண்டே இருந் தான். அவள் ஒரு முறைகூட அவனைத் திரும்பிப் பார்க்க வில்லை. உடனே மஹேந்திரனும் வேறொரு கூலியைக் கூப்பிட்டுத் தன் சாமான்களைத் தூக்கிக்கொள்ளச் சொல்லி விநோதினி போன பக்கமே சென்றான். வெளியில் வந்து பார்க்கும்போது அவள் ஒரு வாடகை வண்டியில் ஏறிக்கொண்டிருந்தாள். மஹேந்திரன் வாயைத் திறவாது தன் சாமான்களையும் அதில் வைத்துவிட்டுத் தான் மட்டும்

வண்டிக்காரன் பக்கத்தில் சென்று உட்கார்ந்துகொண்டான். தன்னை அவமானப்படுத்திய விநோதினியின் எதிரில் வண்டிக்கு உட்புறம் உட்கார அவன் மனம் இணங்கவில்லை.

வண்டி ஊரைத் தாண்டிச் சென்றுகொண்டே இருந்தது. அது எங்கே போகிறதென்று வண்டிக்காரனைக் கேட்க மஹேந்திரனுக்கு வெட்கம். 'உள்ளே உட்கார்ந்திருக்கும் அம்மாவுக்கு இவன் வேலைக்காரனுக்கும்; அதனால்தான் இவனுக்குப் போகுமிடம் கூடத் தெரியவில்லை' என்று வண்டிக்காரன் நினைத்துவிடப் போகிறானென வெட்கிப் பேசாதிருந்தான்.

கடைசியில் வண்டி ஓர் அழகிய பங்களாவின்முன் நின்றது. 'இது யாருடைய பங்களா? விநோதினிக்கு இவ்விடம் எப்படித் தெரிந்தது?' என்று மஹேந்திரன் வியப்புற்றான்.

பங்களா பூட்டியிருந்தது. வெளியில் பிராமணக் கிழவர் ஒருவர் நின்றிருந்தார். "இவ்வீட்டின் சொந்தக்காரர் அதிக ஸமீபத்திலேயே இருக்கிறார். நான் போய் அவருடைய அனுமதிபெற்றுத் திறவுகோல் கொண்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே தங்கலாம்" என்றார் அவர்.

"நான் இங்கேயே இருக்கிறேன். நீயே போய் வீட்டுக்காரரைப் பார்த்துப் பேசி அனுமதிபெற்று வந்துவிடு" என்றாள் விநோதினி மஹேந்திரனிடம்.

வீடும் தோட்டமும் மஹேந்திரன் மனத்தைக் கவர்ந்தன. இவ்வளவு நாட்கள் அலைந்து திரிந்து கடைசியில் சற்றுத் தங்க அவகாசம் கிடைத்தது அவனுக்குச் சந்தோஷத்தை அளித்தது. வீட்டுச் சொந்தக்காரனைக் காணச் சென்றான்.

கிழப் பிராமணர் விநோதினிக்குத் துணையாய் நின்றிருந்தார். விநோதினி அவர் குடும்ப வரலாற்றையெல்லாம் விசாரித்துத் தெரிந்துகொண்டாள். அவர் மனைவியும் இறந்து விட்டாளென்பதைக் கேட்டு அவரிடம் அநுதாபங் கொண்டாள். பேச்சிற் கிடையிலேயே, "விஹாரி பாபு இங்கேதானே வசித்து வந்தார்?" என்று கேட்டாள்.

கிழவர்: கொஞ்ச நாட்கள் இங்கேயே இருந்தார். உங்களுக்கு அவர் பரிசயமுண்டோ, அம்மா?

விநோதினி: அவர் என் உறவினர்.

கிழவரிடமிருந்து விஹாரி எந்த அறையில் படுத்துக் கொள்வான், எந்த அறையில் உட்காருவான் என்பனவெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டாள். விஹாரி மறுபடி அங்கே திரும்பி வருவானோ வென்று கிழவரால் நிச்சயமாய்த் தெரிவிக்க முடியவில்லை. தம் எஜமானரைக் கேட்டுத் தெரிவிப்பதாகச் சொன்னார். விஹாரி சென்ற தினத்திலிருந்து அவ்வீடு பூட்டியே இருந்ததென்பதையும் அறிந்து கொண்டாள். அவளுக்கு அவ்வீடு புனிதமான கோயில் போல் தோன்றியது. விஹாரியின் சூக்ஷ்மாத்மா அவ்வீட்டில் சஞ்சரிப்பது போன்றே அவள் உணர்ந்தாள்.

அச்சமயம் வீட்டிற்கு வாடகையும் கொடுத்து அனுமதியும் பெற்று மஹேந்திரன் திரும்பிவந்தான்.

---

## ஐம்பதாம் அத்தியாயம்

ஹிமாலயத்தின் பனி உருகி அந்நீர்த்தாரையிலிருந்து உற்பத்தியாகும் புண்ணிய நதிகள் அனந்தம். கங்கை, யமுனை ஆகிய நதிகளின் பெருமையைச் சிலாகித்துப் பாடிய கவிகளோ எண்ணிலடங்கார்.

இயற்கை வனப்பு நிறைந்த இந்த யமுனைக் கரையில் மஹேந்திரன் போய் உட்கார்ந்தான். அவ்விடத்தின் சௌந்தர்யமானது அவனைப் பரவசப்படுத்தி மோஹ சாகரத்தில் ஆழ்த்தியது. சூரியன் தன் பொன்னிறக் கிரணங்களுடன் மேற்கில் மறைந்தான்.

சூரியாஸ்தமன சமயம் வானத்தில் காணப்படும் வித விதமான வர்ணவிசித்திரங்களும், யமுனைக் கரையின் அழகும், தூரத்தில் பசுக்கள் பொழுது சாய்ந்து வீட்டிற்குத் திரும்புவதுமான காட்சி மஹேந்திரனைக் கவியுலகில் கொண்டுபோய்ச் சேர்த்தது.

நதியின்நீர் சலனமற்று ஓடிக் கறுப்பாகக் காணப் பட்டது. சாயந்திரப்பொழுதும் கழிந்து இருட்ட ஆரம் பித்தது. அந்தகாரத்தில் தனியே உட்கார்ந்திருந்த அவ னுக்கு அச்சமயம் தான் படித்த ஒரு காவியத்தின் பகுதி நினைவிற்கு வந்தது. அதில் ஆற்றின் அக்கரையிலிருக்கும் காதலி இக்கரையிலிருக்கும் காதலனைச் சேர விரும்புகிறாள். "ஆற்றைக் கடக்க உதவமாட்டாயா?" என அவள் கூறு கிறாள்.

மெய்ம்மறந்து மோஹக்கடலில் ஆழ்ந்திருக்கும் மஹேந்திரனுக்கு இது கற்பனையன்று உண்மையெனவே தோன்றியது. எதிர்க்கரையிலிருக்கும் உருவம் அவனுக்கு ஸ்பஷ்டமாய்த் தெரிவதுபோல் இருந்தது. அவள் கூவும் தொனி அவன் செவியில் ஒலித்தது. விரகவேதனையால் தவிக்கும் அந்த யௌவன சுந்தரி விநோதினியாகவே அவன் மனக்கண்முன் தோற்றமளித்தாள். 'ஜனஸஞ்சாரமற்ற யமுனைக்கரையில் நின்று நதியைக் கடக்கத் தோணியை எதிர்பார்த்து எவ்வளவு நேரமாய்க் காத்திருக்கிறாளோ; கூவித் தவிக்கிறாளோ? அவ்விருளில் அவள் எந்நேரம்வரை

காத்திருப்பாள்?' என்னும் நினைவுகள் மஹேந்திரனைத் தட்டியெழுப்பின.

நிலவொளியில் யமுனைக் கரையின் சோலை தேவலோகத்தை ஒத்திருந்தது. மனிதர்கள் வாழும் இவ்வுலகிற்கும் அதற்கும் சம்பந்தமோ தாரதம்மியமோ சிறிதுமில்லை. இவ்விசித்திர உலகில் விநோதினியும் மஹேந்திரனுமே காணப்பட்டனர்.

மன்மதன் தனது பாணத்தை மஹேந்திரன்மீது தீவிரமாய்ப் பிரயோகித்தான். இச்சமயம் விநோதினி தன்னை ஏற்கமாட்டாள், தன் மனோரதத்தைப் பூரணமாய் நிறைவேற்றமாட்டாள் என்று அவனால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. எழுந்து வேகமாய் வீட்டை நோக்கி நடந்தான் அவன்.

ஜன்னல்களின் வழியாய் அறைமுழுதும் நிலவொளி வீசியது. தூய வெள்ளை விரிப்பு விரித்த படுக்கையில் விநோதினி படுத்திருந்தாள். அறைமுழுதும் கம்மென நறுமணம் வீசியது. தோட்டத்திலிருந்த புஷ்பங்களைப் பறித்துச் சிறு மாலைகளாகக் கட்டி அவள் தன் கொண்டையிலும் கழுத்திலும் இடுப்பிலும் கூட அணிந்திருந்த காட்சி அவளைத் தேவதைபோலெனச் சந்தேகிக்கச் செய்தது.

ஹேந்திரனின் மோஹவெறி எல்லையைக் கடந்தது. தழுதழுத்த குரலில் அவன், "விநோதினி, யமுனைக் கரையில் நான் உன்னை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால், நீ இங்கே எனக்காகக் காத்திருப்பதைச் சந்திரிகை நினைவூட்டியது. அதனால்தான் ஓடிவந்தேன்" எனச் சொல்லிக் கொண்டே படுக்கையண்டை சென்றான்.

விநோதினி திடுக்கிட்டெழுந்தாள். கையை நீட்டி, "போ வெளியே! நீ எனது படுக்கையருகில் வரக்கூடாது" என்று கோபத்துடன் கர்ஜித்தாள்.

புயலால் அடித்துக்கொண்டு போகப்பட்ட கப்பல் சட்டெனக் கரை தட்டி நின்றதுபோல் மஹேந்திரன் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். வெகுநேரம்வரை பேச நாவெழவில்லை. தன்னை அணுகாது மஹேந்திரனைத் தடுக்கும் நோக்கத்துடன் விநோதினி படுக்கையிலிருந்து எட்ட எழுந்துபோய் நின்றாள்.

மஹேந்: பின் யாரை எதிர்பார்த்து இவ்வளவு அலங்காரமும் சிங்காரமும் செய்துகொண்டிருக்கிறாய்?

விநோதினி தனது மார்பைச் சுட்டிக்காட்டி, "நான் யாரை எதிர்பார்த்து அலங்கரித்துக் கொண்டிருக்கிறேனோ அவர் எனது உள்ளத்தில் வசிக்கிறார்" என்றாள்.

மஹேந்: அது யார்? விஹாரியா?

விநோ: அப்பெயரை உச்சரிக்கவும் நீ யோக்கியதையற்றவன்.

மஹேந்: அவனைத் தேடித்தான் இவ்வளவு நாட்கள் வரை சுற்றினையோ?

விநோ: ஆமாம், அவருக்காகத்தான்.

மஹேந்: அவன் இருக்குமிடம் தெரியுமோ உனக்கு?

விநோ: தெரியாவிட்டாலென்ன? கண்டுபிடிக்கிறேன்.

மஹேந்: கண்டுபிடிக்க விட்டேனானல் பார்!

விநோ: கண்டுபிடிக்க விடாது வேண்டுமானால் தடுக்கலாம். ஆனல் எனது உள்ளத்திலிருந்து அவரை அகற்ற உன்னால் ஒரு நாளும் முடியாது.

மஹேந்திரனால் சகிக்க முடியவில்லை. கோபாக்கினி பொங்கி யெழ, "கத்தியால் உனது இருதயத்தை அறுத்து அவனை வெளியேற்றுகிறேன்" என்று கர்ஜித்தான்.

விநோதினி அவனுடைய கோபத்திற்குச் சிறிதும் அஞ்சாது, "உனது அன்பைக்காட்டிலும் உன் வாள் என் உள்ளத்தில் சுலபமாய்ப் பிரவேசிக்கும்" என்றாள்.

மஹேந்: துணையற்று என்னிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு என்னிடம் பயமேயில்லையா?

விநோ: எனக்குத் துணை நீதான். நீ உன்னைவிட என்னை இன்னும் அதிக ஜாக்கிரதையாய்க் காத்து ரட்சிப்பாய்.

மஹேந்: என்மீது இவ்வளவு நம்பிக்கையாவது பாக்கி யிருக்கிறதே!

விநோ: இது இருந்திராவிடில் நான் எப்பொழுதோ தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்க வேண்டும்; வீட்டை விட்டு உன்னுடன் வெளியேறி யிருப்பேனா?

மஹேந்: ஐயோ! நீ ஏன் இறக்கவில்லை? நம்பிக்கை யென்னும் பாசத்தால் என்னைக் கட்டி ஊரூராய் இழுத்து ஏன் கொல்லுகிறாய்? நீ மரித்திருந்தால் எவ்வளவு மங்களகரமாக இருந்திருக்கும்! நீயே யோசித்துப் பார்.

விநோ: இதை நானும் அறியாமலில்லை. ஆனால் விஹாரியைத் தரிசிக்கவேண்டுமென்ற எனது ஆவல் நிறைவேறினா லொழிய எனது பிராணன் நீங்காது.

மஹேந்: நீ இறந்தொழியும்வரை என் மனத்தீயும் அவியாது; எனக்கு விடுதலையும் இல்லை. கடவுளிடம் எனது ஒரே பிரார்த்தனை, இனி நீ சாக வேண்டுமென்பது தான். நானும் உன்னை அடையவில்லை. விஹாரியும் உன்னை

அடையக்கூடாது! நீ ஒழிந்துபோ! எனக்கும் விடுதலை அளி! என் தாயும் மனைவியும் பெருக்கும் கண்ணீர் என்னை நெருப்பெனச் சுடுகிறது. நீ இவ்வுலகிலிருந்து மடிந்து மறைந்தாலொழிய நான் அவர்கள் கண்ணீரைத் துடைத்துத் தேற்றும் சமயம் வாய்க்காது.

இவற்றைச் சொல்லி முடித்து மஹேந்திரன் சரே லென வெளியிற் சென்றுவிட்டான். வெறும் வெளியை நோக்கி வெகு நேரம்வரை விநோதினி அசைவற்று நின் றிருந்தாள். தான் விரித்த மாய வலையைச் சின்னபின்ன மாகத் துண்டித்தெறிந்தாள். யாவும் சூன்யமாகவும் சார மற்றும் காணப்பட்டன அவளுக்கு.

மஹேந்திரனின் சுகவாழ்க்கையை வேரோடு களைந் தெறிந்து அவனைத் தன் வசத்தில் இழுத்ததை நினைத்து மனம் விண்டாள். 'பிறரை வசப்படுத்தும் சக்தி எனக்குப் பூரணமாய் இருந்தும் விஹாரிமாத்திரம் ஏன் என் வசமாக வில்லை? நான் எழுப்பிய பிரளயத்தினால் அடைந்த பயன் என்ன? இதை எப்படி அடக்குவது?' என்னும் எண்ணங் கள் அவள் உள்ளத்தை வாள்போல் அறுத்தன.

எந்தப் பூவினால் தன்னை அலங்கரித்துக் கொண் டாளோ அவற்றின்மீது மஹேந்திரனின் பாபதிருஷ்டி விழுந்துவிட்டதென நினைத்து அவற்றைப் பிய்த்து அறுத்து எறிந்தாள். தன் முயற்சி, சக்தி, வாழ்க்கை, தன் னைச் சுற்றியிருக்கும் சேதன அசேதனங்கள் சகலமும் வியர்த் தம், வீண் என்று அவளுக்குத் தோன்றியது.

'இவ்வளவும் வியர்த்தமாகத் தோன்றினாலும் உலகில் நடக்கவேண்டியவை நியமப்படி நடந்துகொண்டேதான் இருக்கின்றன. அவை அணுவளவும் மாறப்போவதுமில்லை,

நிற்கப்போவதுமில்லை. விஹாரி பாபுவும் அதேபிரகாரம் நிச்சிந்தையாய்ச் சிறுவன் வஸந்தனுக்குத் தம் அறையில் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருப்பார்' என்றெல்லாம் யோசித்தாள்.

பிறகு அவள் மனமுடைந்து கண்ணீர் பெருக்கினாள்.

## ஐம்பத்தோராம் அத்தியாயம்

மஹேந்திரன் இரவு முழுவதும் தூங்கவில்லை. காலை எட்டு மணிக்கு எழுந்திருக்கும்போது சோர்வுற்றிருந்தான். முன்தினம் இரவு நடந்த சம்பவங்களால் மனம் குழம்பிக்கிடந்தது. வாழ்க்கையே சாரமற்றுக் காணப்பட்டது. 'நாம் ஏன் இப்படி வீட்டை விட்டுக் கடமையைப் புறக்கணித்து மனச்சாந்தியை இழக்கும்படியான காரியம் செய்தோம்?' என வருந்தினான். விநோதினியின் மீதுள்ள மோஹபாசம் அறுபட்டது. தன்னை வேண்டாத ஒரு ஸ்திரீயின் பின் அலைந்து சுயமரியாதையை இழந்து தவிக்கும் தனது மூடமதியை நினைத்துத் தன்னையே வெறுத்தான்.

பெரும் பூகம்பம் ஏற்பட்டு அடங்கிவிட்டது. அதனால் விளைந்த அனர்த்தத்தைத் திரும்பிப் பார்க்கவும் அவன் அஞ்சினான். அது அவனுக்குச் சந்தோஷத்தையோ சாந்தியையோ அளிப்பதாயில்லை. 'எந்தச் சனிசுவரனால் தூண்டப்பட்டு நாம் இம்மாதிரி மதிகெட்ட செய்கையில் இறங்கினோம்?' என்று ஆச்சரியமும் அருவருப்பும் கொண்டான்.

இதுவரை விநோதினியைச் சுற்றிக் காணப்பட்ட நவீனம், லாவண்யம், சௌந்தரியம் யாவும் மறைந்து,

அவள் ஒரு சாதாரண மாதாகவே இன்று அவன மனத்திற்குத் தோன்றினாள். அவளிடம் ஏதாவும் விசேஷமாகவோ, அபூர்வமாகவோ இருப்பதாகத் தெரியவில்லை.

இம்மோஹ சக்கரத்திலிருந்து விடுபட்டு வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிடவேண்டும் எனத் தீர்மானித்தான். தனக்கு உரிய சுகம், சாந்தி, அன்பு இவற்றை எவ்விடத்தில் பெற்றிருந்தும் விட்டு வந்தானோ, அவ்விடத்திற்கே திரும்பிச் செல்லத் தீர்மானித்தான். உலகில் ஜனங்கள் சாசுவதமான உண்மைச் சுகத்தின் அருமையை உணராது, சஞ்சல கபடமாயையை உண்மையென நம்பி மனச்சாந்தி யிழந்து ஏமாறுகின்றனர். மஹேந்திரனின் நிலையும் அப்படியே இருந்தது.

"இன்றே நான் வீட்டிற்குத் திருப்புகிறேன். விநோதினி எங்கே இருக்க விரும்புகிறாளோ அங்கேயே அவள் இருக்குமாறு ஏற்பாடு செய்து அவளது சம்பந்தத்தை அறுத்துக்கொண்டு விடுதலை பெறுகிறேன்" என்று தன்னுள்ளேயே கூறிக்கொண்டான்.

இப்படி நினைக்கும்போதே அவனுக்கு இதுவரையில்லாத ஓர் ஆனந்த உணர்ச்சி உண்டாகியது. இதுவரை அவன் தனது மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து தன்னையே ஏமாற்றி வந்தான். இன்று சுயஅறிவும் மனச்சாட்சியும் அவனை வென்றன. அவற்றின் ஆக்ஞைப்படி அவன் நடக்கச் சித்தமானான்.

எழுந்து பல் தேய்த்துப் பிறகு விநோதினியைக் காணச் சென்றான். அவள் இருக்கும் அறைக்கதவு தாழிடப்பட்டிருந்தது. "இன்னும் தூங்குகிறாயா?" என்று கத்திக்கொண்டே கதவைத் தட்டினான்.

"இல்லை! நீ இந்த க்ஷணம் இதைவிட்டுச் செல்" என்று உள்ளே யிருந்து பதில் கிடைத்தது.

மஹேந்: உன்னோடு சில விசேஷ வார்த்தைகள் சொல்லவேண்டியிருக்கிறது. நான் அதிக நேரம் தங்கப் போவதில்லை.

விநோ: நான் ஒரு வார்த்தையும் கேட்க விரும்பவில்லை. என்னைத் தொந்தரவு செய்யாதே! என்னைத் தனித்திருக்கவிட்டுப் போ!

வேறு சமயமாயிருந்தால் மஹேந்திரன் அவளைக் கதவைத் திறக்குமாறு மேன்மேலும் வற்புறுத்தி வேண்டியிருப்பான். இன்றோ அவன் மனம் வெறுப்புற்றது. 'என்னை இப்படி அவமானப்படுத்த இவளுக்கு இடங் கொடுத்தது என் தவறன்றோ? என்மீது அதிகாரம் செலுத்த இவளுக்கு உரிமை ஏது? நானே அதை இவளுக்கு அளித்து அகம்பாவமடையச் செய்தேன்' எனத் தன்னையே நொந்துகொண்டான். "இருக்கட்டும்! இப் பந்தத்தை இப்பொழுதே அறுத்தெறிந்து வெற்றிகொள்வேன்" எனக் கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றான்.

சாப்பாடு முடிந்ததும் அவன் பாங்கிற்குச் சென்று பணம் பெற்றுக்கொண்டான். ஆசாவுக்கும் தன் தாய்க்கும் சில அருமையான வெகுமதிகள் வாங்க எண்ணிக் கடைத்தெருப் பக்கம் சென்றான்.

மறுபடியும் அறைக்கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டு விநோதினி சினமடைந்தாள். சிறிதுநேரம் வரை பேசாதிருந்தாள். பின்னும் பலமாய்க் கதவு தட்டப் படவே அவள் ஆத்திரத்துடன் கதவைத் தடாலெனத்

திறந்துகொண்டே, "என்னை ஏன் இப்படி அடிக்கடி வந்து துன்புறுத்துகிறாய்?" என இரைந்தாள்.

ஆனால் கதவைத் திறந்ததும் விஹாரி எதிரில் நிற்பதைக் கண்டாள்.

மஹேந்திரன் அங்கிருக்கிறானா வென்று விஹாரி சுற்றுமுற்றும் கவனித்தான். கட்டிலின்மீது படுக்கை விரித்தவாறு கிடந்தது. அதன்மேல் உலர்ந்த பூமாலைகள் சிதறிக்கிடந்தன. அந்தக்ஷணமே அவன் மனம் மாறியது. முதலிலேயே அவன் அவள்பேரில் கொண்ட சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. இங்கு வருமுன்பு அவள்பேரில் தான் கொண்ட சந்தேகம் தெய்வ வசத்தால் பொய்யாகாதா வென வேண்டிக்கொண்டே வந்தான். அவளைக் களங்கத்திலிருந்து விடுவித்துக் காப்பாற்றும் எண்ணங்கொண்டிருந்தான். ஆனால் எதிரில் கண்ட அலங்கோலப் படுக்கையும் சிதறிக் கிடக்கும் பூக்களும் இரக்கத்திற்குப் பதில் அவன் மனத்தில் வெறுப்பையே உண்டாக்கின.

உள்ளே நுழைந்தவன் சட்டெனப் பின் வாங்கி மஹேந்திரனைக் கூவியழைத்தான்.

தான் அடைந்த அவமானத்தையும் பொருட்படுத்தாது விநோதினி விஹாரி திரும்பிப்போகவிருந்ததைத் தடுத்து, "மஹேன் எங்கோ வெளியில் சென்றிருக்கிறான். நீங்கள் சற்று உட்கார்ந்து நான் சொல்வதைக் கேட்டுத்தான் போகவேண்டுமென்று நான் உங்கள் காலில் விழுந்து வேண்டிக் கொள்கிறேன்" என்றாள்.

அந்த அருவருக்கத்தக்க காட்சியைக் காணாது தூரச் சென்று விடவேண்டும், அவள் சொல்வதற்குச் செவி சாய்க்கக் கூடாது என விஹாரி நிச்சயித்துங்கூட, அவள்

இப்படிக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதை உல்லங்கனம் செய்ய அவன் மனம் இடந்தரவில்லை. அப்படியே நின்று விட்டான்.

"நீங்கள் மாத்திரம் எனது கோரிக்கையைப் புறக் கணித்துச் செல்வீர்களானால் நான் நிச்சயமாய் உயிரை மாய்த்துக்கொண்டு விடுவேன்" என்றாள் விநோதினி.

விஹாரி: விநோதினி, என்னை ஏன் இப்படிப் பிணைத்து இழுக்கிறாய்? நான் என்ன பாவம்செய்தேன் உனக்கு? நான் உன் சுகதுக்கங்களில் குறுக்கிட்டது கூடக் கிடையாதே!

விநோ: என்மீது அதிகாரம் செலுத்த உங்களுக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதென நான் பன்முறை தெரிவித் தும் நீங்கள் இன்னும் அதை நம்பவில்லை. நீங்கள் எவ் வளவுதான் என்னைப் புறக்கணித்தாலும் நான் மறுபடியும் அதையே திருப்பிச் சொல்லுகிறேன். என்னை நீங்கள் காலால் உதைத்துத் தள்ளினாலும் அதே காலைப் பிடித்துக் கொண்டு நான் உங்களை . . . . . .

விஹாரி இடையே குறுக்கிட்டு, "அதெல்லாம் இப் பொழுது வேண்டாம். நாவினால் உச்சரிக்கவும் வேண் டாம். சொன்னாலும் என்னால் ஒன்றையும் நம்பமுடியாது" என்றான்.

விநோ: குறுகிய நோக்கமுடைய அற்ப மனிதர் களால் முடியாதுதான். ஆனால் நீங்கள் கட்டாயம் நம்பு வீர்கள். அதனால்தான் நான் உங்களை உட்காரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விஹாரி: நான் நம்பினாலென்ன, நம்பாவிட்டா லென்ன? அதனால் உனது வாழ்க்கை யென்னவோ மாறப் போவதில்லை!

விநோ: உங்கள் ஆதரவைப் பெறும் பாக்கியம் எனக்கு இல்லை. உங்கள் அருகில் வரவும் நான் யோக்கியதை யற்றவள். நான் என்றும் தூரவே இருக்கவேண்டியவள். ஆனால் ஒரு சிறு உரிமையையே வேண்டுகிறேன். நான் எங்கிருந்தாலும் சரி; என் பெயரை வெறுக்காது அன்புடன் ஞாபகப்படுத்திக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன். ஒரு சமயம் நீங்கள் என்னை மதித்து என்னிடம் சிறிது சிரத்தையும் கொண்டீர்கள். அதையே நான் ஆயுளுள்ளளவும் மனத்தில் வைத்துப் போற்றுவேன். இதே காரணத்தினால் இன்று உங்களிடம் சில வார்த்தைகள் சொல்ல நான் துணிந்தேன். நீங்கள் சற்றுப் பொறுமையுடன் உட்கார்ந்து கேட்கவேண்டுமென்று கோருகிறேன்.

"இல்லை, நான் போகவேண்டும்" எனக் கூறி விஹாரி அப்புறம் செல்ல முயன்றான்.

விநோ: நீங்கள் நினைப்பதுபோல் இது களங்கமடைந்த வீடல்ல. இது நீங்கள் வசித்த அறை. இதைப் புனிதமாய் உங்களுக்காகவே வைத்திருக்கிறேன். இங்கு வாடிக் கிடக்கும் புஷ்பங்கள் உங்களைப் பூஜிக்கவே கொண்டு வந்தவை. இந்த அறையிலேயே நீங்கள் உட்காரவேண்டும்.

விஹாரியின் மனத்தில் உணர்ச்சி பெருகியது. அவள் சொல்லியவாறே கட்டிலில் உட்கார்ந்தான். விநோதினி அவன் காலடியில் உட்காரவே அவன் திடுக்கிட்டு எழுந்திருக்கலானான். அதற்குள் அவள், "நீங்கள் உட்காருங்கள்; தயைசெய்து எழுந்திருக்கவேண்டாம். உங்கள் பாதத்தருகில் உட்காரவும் நான் தகுதியற்றவள்தான். ஆனாலும் என்மீது தயை கூர்ந்து எனக்கு இந்த ஸ்தா

னத்தை அளியுங்கள். நான் கண்காணுத தூரச்சென்ற பிறகும் இதை மனத்தில் வைத்துப் பூஜிப்பேன்" என்று மனமிளகக் கூறினுள்.

சற்று நேரம்வரை அவள் ஒன்றும் பேசாதிருந்தாள். பிறகு திடீரென, "நீங்கள் சாப்பிட்டாயிற்று?" எனக் கேட்டாள்.

விஹாரி: ஸ்டேஷனிலேயே சாப்பிட்டுத்தான் வந்தேன்.

விநோ: உங்களுக்கு நான் எனது கிராமத்திலிருந்து ஒரு கடிதம் எழுதினேனே; அது உங்களுக்குக் கிடைத்ததும் ஏன் பதிலொன்றும் எழுதாது மஹேந்திரனிடம் திருப்பிக் கொடுத்தனுப்பிவிட்டீர்கள்?

விஹாரி: கடிதமா? எனக்கொன்றும் கிடைக்கவில்லையே!

விநோ: அப்படியானுல் நீங்கள் மஹேந்திரனைக் கல்கத்தாவில் சந்திக்கவேயில்லையா?

விஹாரி: உன்னைக் கிராமத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துத் திரும்பிய மறுதினம் பார்த்தேன். அதற்குப் பிறகு நான் யாத்திரையாகக் கிளம்பிவிட்டேன். அவனைச் சந்திக்கவில்லை.

விநோ: ஊரை விட்டுப் புறப்படுமுன் எனது கடிதத்தைப் பார்த்துவிட்டு மஹேந்திரனிடம் கொடுத்தனுப்பவில்லையா?

விஹாரி: நான் அப்படிச் செய்யவேயில்லை.

விநோதினி இதைக்கேட்டுப் பெருமூச்சுவிட்டாள்; "எனக்கு இப்பொழுது உண்மை விளங்கிவிட்டது. இனி என் கதையைச் சற்றுக் கேளுங்கள். அதை நீங்கள்

நம்பினால் எனது பாக்கியமென்று நினைப்பேன். நம்பா விடின் அதற்காக நான் உங்களைக் குறைகூறப் போவ தில்லை. நான் சொல்வதை நம்புவது கடினமே" என்றாள் அவள்.

விஹாரி மனமிரங்கினான். அவனுக்கு அவள்மீது தயை பிறந்தது. அவள் தன்னிடம் காட்டும் பக்தியைப் புறக்கணித்து உதறியெறிய அவனால் முடியாது போயிற்று. "விநோதினி, நீ ஒன்றுமே கூற வேண்டாம். ஒன்றும் கூறாமலே உன்னை நான் பூரணமாய் நம்புகிறேன். உன்மீது எனக்கு வெறுப்பில்லை" என்றான்.

இதைக் கேட்டதும், உணர்ச்சி பொங்கவே, விநோ தினியின் கண்களில் நீர் ததும்பியது. அவன் பாததூளி யைப் பக்தியுடன் தனது சிரசில் அணிந்தாள். பிறகு அவனை நோக்கி, "என் கதையைச் சொல்லாவிடின் என் மனக்குறை நீங்காது. சற்றுப் பொறுமையுடன் கேளுங் கள்: உங்களுடைய ஆக்ஞையைச் சிரமேல் தாங்கி நான் எனது கிராமத்தில் வசிக்கச் சென்றேன். நீங்கள் எனக்கு ஒரு கடிதங்கூட எழுதவில்லை. ஆனாலும் உங்கள் அன் பிற்குப் பதிலாக உங்கள் ஆக்ஞையையே எனது பாக் கியமாக நினைத்துக் கிராமத்தாரின் ஏளனம், நிந்தை யாவற் றையும் சகித்துக் காலந்தள்ளி யிருப்பேன். ஆனால் பகவா னுக்கு அதுவும் பொறுக்கவில்லை போலும். நான் செய்த பாபம் என்னை அங்கும் பின்தொடர்ந்தது. மஹேந்திரன் என்னை அங்கேயும் துரத்திவந்து ஊரார் முன்னிலையில் அவமானப் படுகுழியில் தள்ளிவைத்தான். அதன் பின்பு அக்கிராமத்தில் எனக்கு இருக்க இடமேது? மறுபடியும் உங்களுடைய உத்தரவைப் பெறவேண்டி உங்களைத் தேடி னேன். உங்களை எங்கும் காணவில்லை. இச்சமயந்தான்

மஹேந்திரன், நான் உங்களுக்கு எழுதிய கடிதத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுத்து ஏமாற்றியது. என்னை முற்றிலும் துறந்து ஒழிக்க நீங்கள் தீர்மானித்து விட்டதாக நினைத்தேன். நான் இதுவரையில் படுகுழியில் வீழ்ந்திருப்பேன். ஆனால் உங்களுடைய பிரபாவம் என்னை நாசமடையாது தடுத்தது. உங்களை நான் மனத்தில் இருத்திப் பூஜித்ததால்தான் இன்றுவரையில் புனிதமாய்க் களங்கமற்றுப் பிழைத்திருக்க முடிந்தது. உங்களுக்குக் கடின இதயமெனக் கண்டும் அதன் மஹிமையால் என் உள்ளமும் வயிரம் போல் திடம்பெற்றது. ஸ்வாமி, உங்கள் பாதத்தைத் தொட்டுக் கூறுகிறேன்: நான் இன்றளவும் எனது பரிசுத்தத்தன்மையை இழக்கவில்லை" என்று கூறி முடித்தாள்.

கொஞ்சநேரம்வரை இருவரும் பேசவில்லை. சாயந்திரமாயிற்று. மஹேந்திரன் வீட்டிற்குத் திரும்பியதும் விஹாரியைப் பார்க்கவே, வியப்புற்றுத் திகைத்தான். விநோதினியை அவன் விரும்பவில்லையென்றாலும் விஹாரியின் காலடியில் அவள் உட்கார்ந்திருப்பதைக் காண அவன் அவள்மீது துவேஷங்கொண்டான். அவளால் புறக்கணிக்கப்பட்ட அவனது கர்வம் குலைந்தது. 'இவர்கள் இருவருக்கும் இடையே கடிதப் போக்குவரத்தினால்தான் இச்சந்திப்பு ஏற்பட்டிருக்கிறது' என்று அவன் உறுதியாய் நம்பினான். இதுவரை அலட்சியமாயிருந்த விஹாரியே அவளைத் தேடிவந்திருக்கும்போது, இனி அவளைத் தடுக்க யாரால் முடியுமென்று நினைத்தான்.

தன்னால் விநோதினியை விட்டுவிட முடியும்; ஆனால் அவளைப் பிறர் கையில் ஒப்பிக்க அவன் மனம் சம்மதிக்கவில்லை.

அவன் ஏளனமாக விநோதினியைப் பார்த்து, "பேஷ்! அரங்க மேடையிலிருந்து மஹேந்திரன் சென்றதும் விஹாரிபாபுவின் பிரவேசம் போலும்! காட்சி நன்றாயிருக்கிறது! கையைத் தட்டிப் புகழவேண்டுமெனத் தோன்றுகிறது. இதுதான் கடைசி அங்கமென நினைக்கிறேன். ஏனெனில் இதற்குமேல் நடித்தால் நன்றாயிராது!" என்றான்.

விநோதினியின் முகம் சிவந்தது. அவள் விஹாரியைத் திரும்பிப் பார்த்தாள்.

விஹாரி கட்டிலிலிருந்து உடனே எழுந்திருந்து, "மஹேன், அற்பத்தனமாய்ப் பேசி விநோதினியை அவமானப்படுத்தாதே. பகுத்தறிவை உபயோகித்து நீ புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளாவிடில் உன்னைக் கண்டிக்க எனக்கு உரிமையுண்டு" என்றான்.

மஹேந்திரன் ஏளனமாய்ச் சிரித்துக்கொண்டு, "இதற்குள் உனக்கு உரிமை வேறு ஏற்பட்டுவிட்டதா? ரொம்ப சரி! இனி உன் பெயரை மாற்றி 'விநோத விஹாரி' என்று வைத்துவிடலாம்!" என்றான்.

பரிகாசம் எல்லைகடந்து போவதைக் கண்டு விஹாரி மஹேந்திரனின் கரங்களை இறுகப் பிடித்துக்கொண்டு, "மஹேன், விநோதினியை நான் விவாகம் செய்து கொள்ளப் போகிறேன். இதை அறிந்துகொண்ட பிறகாவது இனி நாவை அடக்கி மரியாதையாய்ப் பேசு" என்றான்.

மஹேந்திரன் கப்சிப்பெனத் திகைத்து அப்படியே நின்றுவிட்டான்; விநோதினியும் திடுக்கிட்டுப் போனாள்.

விஹாரி மஹேந்திரனிடம் மேலும், "உன்னிடம் இன்னொரு சங்கதி தெரிவிக்கவேண்டி யிருக்கிறது. உன்

தாய் மரணாவஸ்தையில் இருக்கிறாள். இன்று இரவே நாம் போகவேண்டும். விநோதினியும் என்கூட வரட்டும்" என்றான்.

பதிலொன்றும் பேசாது மஹேந்திரன் அவ்விடத்தை விட்டு அகன்றான். உடனே விநோதினி விஹாரியை நோக்கி, "என்ன வார்த்தை சொன்னீர்கள்? இது என்ன வேடிக்கையா?" என்றாள்.

விஹாரி: நான் உண்மையையே சொன்னேன். உன்னை நான் விவாகம் செய்துகொள்ளுகிறேன்.

விநோ: இப்பாபியை ரக்ஷிப்பதற்காகவா?

விஹாரி: இல்லை. நான் உன்னைக் காதலிக்கிறேன்.

விநோ: போதும். நான் என் ஆயுளில் பெறவேண்டிய அனைத்தையும் நீங்கள் கூறிய இந்த ஒரு வார்த்தையினாலேயே அடையப் பெற்றேன். நான் வேண்டுவது இனி ஒன்றுமில்லை. இந்த வெகுமானம் உங்களைக் கணவராகப் பெற்றாலும் எனக்கு நிலைக்காது; சாஸ்திரமும் இதை ஒப்பாது?

விஹாரி: ஏன் ஒப்பாது?

விநோ: நான் விதவை; பழிக்கப்பட்டவள்! என்னை மணப்பதனால் சமூகப் பழிக்கு நீங்களும் உள்ளாவதை நான் ஒருகாலும் சம்மதியேன். சீ! இதை நினைக்கவும் எனக்கு லஜ்ஜையா யிருக்கிறது. இதை நீங்கள் நாவினால் உச்சரிக்கவும் கூடாது.

விஹாரி: என்னை நீ கைவிட்டு விடுவாயா?

விநோ: கைவிடும் உரிமை எனக்கு இல்லை. மறைவிலிருந்து பரோபகார சிந்தையுடன் நீங்கள் உலகிற்கெல்லாம் உதவி புரிவது எனக்குத் தெரியும். அந்த

ஸத்காரியத்தில் நானும் சிறிது பங்கெடுத்துக்கொள்ள அனுமதித்தால் அதையே நான் பெரிய பாக்கியமென நினைத்து உங்களது அடிமையென ஊழியம் புரிவேன். அதைவிட்டு விதவையை மணப்பதாம்! பெருந்தன்மை படைத்த உங்களால் எதுவும் கூடும். ஆனால் நான் இதற்கு உடன்பட்டேனானால், உங்களைச் சமூகப் பழிப்பிற்கு ஆளாக்கினேனாகில், நான் வாழ்வில் தலை நிமிர்ந்து பிறர் முகத்தில் விழிக்கவுந் தகுதியற்றவளாகி விடுவேன்.

விஹாரி: ஆனாலும், நான் உன்னை நேசிக்கிறேன்.

விநோதினி, "அந்த அன்பின் உரிமையினால் நான் இன்று இதைச் செய்யத் துணிகிறேன்" என்று கூறி அவன் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து அவற்றை முத்தமிட்டாள். "இந்த ஜன்மத்தில் நான் உங்களை அடையப் பாக்கியம் பெறவில்லை. அடுத்த ஜன்மத்திலாவது இப்பேறு கிடைக்கத் தபசு புரிகிறேன். இவ்வாழ்வில் நானும் வேண்டிய துன்பத்தை அடைந்தேன். பிறரையும் துன்பத்திற்கு ஆளாக்கினேன். அதனால் அடைந்த பலனை நான் என்றென்றும் மறக்கமாட்டேன். நீங்கள் உத்தம புருஷர். உங்கள் மஹிமையால் நானும் இன்று கடைதேறினேன்" என்றாள்.

விஹாரி பேசாது உட்கார்ந்திருந்தான். கைகளைக் கூப்பிய வண்ணம் விநோதினி, "மேலும் இந்தத் தவற்றை இழைக்கவேண்டாம். என்னை மணம் செய்துகொள்வதனால் நீங்கள் சுகத்தை அடையமுடியாது. இதனால் நீங்களும் கௌரவம் இழந்து நானும் இழக்கவேண்டி நேரும். நீங்கள் என்றும் நிச்சலமாயும் சந்தோஷமுடையவராயும் விளங்குகிறீர்கள். இனியும் அவ்விதமே இருங்

கள். நான் தூரவிருந்து உங்கள் சேவையைப் புரிகிறேன். நீங்கள் சந்தோஷமாயிருங்கள், சுகமாயிருங்கள்!" எனக் கூறினுள்.

---

## ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்

மஹேந்திரன் தன் தாயின் அறைக்குள் நுழையப் போனுன். அதற்குள் ஆசா அங்கு வந்து, "அங்கே இப்பொழுது செல்லவேண்டாம்" என்ருள்.

மஹேந்: ஏன்?

ஆசா: திடீரென எதிர்பாராத சந்தோஷமோ துக்கமோ ஏற்படுவது அம்மாவின் தேகஸ்திதிக்கு ஒத்தது அல்ல என்று டாக்டர் சொல்லியிருக்கிருர்.

மஹேந்: நான் அவள் அறியாவண்ணம் மெள்ளத் தலைமாட்டில் நின்று சற்றுப் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்.

ஆசா: சிறு சப்தத்திஞலும் அம்மா எழுந்து விடுகிருர். நீங்கள் உள்ளே நுழையும்போதே அவர் பார்த்து விடக்கூடும்.

மஹேந்: ஆனுல் நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

ஆசா: முதலில் விஹாரிபாபு வந்து பார்க்கட்டும். அவர் எப்படிச் சொல்லுகிருரோ அப்படிச் செய்யலாம்.

அவள் அவ்விதம் சொல்லி முடிப்பதற்குள் விஹாரி வந்து சேர்ந்தான்.



*தாயின் பாதங்களில் தலையை வைத்து நிமிராது படுத்திருந்தான் அவன்.*

பக்கம் 340.

"என்னை அழைத்தாயா என்ன? அம்மா உடம்பு சற்றுக் குணந்தானே?" என்று அவன் ஆசாவைக் கேட்டான்.

அவனைக் கண்டதும் ஆசாவுக்கு மனத்தில் தெம்பு ஏற்பட்டது. "நீங்கள் போனதுமுதல் உங்களைப்பற்றியே அம்மா கேட்டுக்கொண்டிருக்கிறார். ஏதோ முக்கியமான வேலையின் நிமித்தம் சென்றிருக்கிறீர்கள்; இரண்டு மூன்று தினங்களில் திரும்பி வந்துவிடுவீர்களென்று சொன்னோம். நேற்று உங்கள் தந்தி கிடைத்ததும் இன்று நீங்கள் வரப் போவதைத் தெரிவித்தோம். இதைக் கேட்டதும் உங்களுக்கு இன்று விருந்து தயாரிக்கச் சொல்லியிருக்கிறார். உங்களுக்கு மிகவும் இஷ்டமான பதார்த்தங்களையே சமைக்கச் சொல்லியிருக்கிறார். தம் எதிரிலேயே, உங்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டுமாம்" என்று அவனிடம் ஆசா கூறினாள்.

கண்ணீர் ததும்ப விஹாரி, "அம்மா எப்படியிருக்கிறாள்?" என்று கேட்டான்.

ஆசா: நீங்களே உள்ளே சென்று சற்றுப் பாருங்கள். எனக்கென்னவோ வியாதி முற்றி வருவதாகவே தெரிகிறது.

விஹாரி உள்ளே சென்றான். இவற்றையெல்லாம் பார்த்து மஹேந்திரன் ஆச்சரியத்தில் மூழ்கி வெளியே நின்றான். 'ஆசா ஆயாசமின்றிக் குடும்பப் பொறுப்பை உணர்ந்து சகலமும் தானே நின்று நடத்துகிறாள். சிறிதும் சங்கோசமோ பயமோவின்றி என்னை உள்ளே போகாதவாறு தடுத்துவிட்டாள். அவள் முன்பு நான் எவ்வளவு சக்தியற்றுப் போய்விட்டேன்!' என்று அவன் சிந்தித்தான். அபராதியைப் போல் அவன் இன்று தாயின்

அறையினுள்கூட நுழைய அதிகாரமின்றி வெளியில் நின்றிருந்தான்.

விஹாரியுடன் ஆசா சிறிதும் தயக்கமின்றி ஸகஜமாய்ப் பேசுவது மஹேந்திரனுக்குப் பின்னும் ஆச்சரியத்தை விளைவித்தது. என்ன ஆச்சரியம்! எல்லோரும் விஹாரியினுடைய ஆலோசனையைத்தான் நாடுகின்றனர்! எல்லோரையும் காத்து ரட்சிப்பவன் அவன்! எங்கும் அவன்தான்! அவன் சொற்படியே எல்லாம் நடக்கின்றன. தான் வீட்டைவிட்டுப் போனபோது இருந்த நிலையே வேறு. இப்பொழுது தான் காண்பதே வேறு என்பதை மஹேந்திரன் கண்டான்.

விஹாரியைக் கண்டதுமே ராஜலக்ஷ்மி அன்பும் ஆதரவுமாய், "விஹாரி, திரும்பிவந்தாயா? போன காரியமெல்லாம் முடிந்ததா?" என்றாள்.

விஹாரி, "போன காரியமெல்லாம் மிகவும் சந்தோஷகரமாய் முடிந்தது. இனி எனக்கு ஒரு கவலையுமில்லை" எனக் கூறிக் கதவுப்புறம் நோக்கினான்.

ராஜலக்ஷ்மி: இன்று ஆசா உனக்காகத் தானே சமைத்திருக்கிறாள்? நான் எதிரிலிருந்து உனக்குச் சாப்பாடு செய்விக்கப் போகிறேன். டாக்டர் இவையெல்லாம் கூடாதென்றார். ஆனால் இனி ஏன் என்னைத் தடுக்க வேண்டும்? இறப்பதற்குமுன் ஒரு முறை நீங்கள் போஜனம் செய்வதை நான் கண்ணாரக் கண்டு களிக்கக்கூடாதா என்ன?

விஹாரி: டாக்டர் தடுப்பதற்குக் காரணமேயில்லை. உங்களுடைய மேற்பார்வையின்றிச் சமையல்தான் எப்படி நன்கு நடைபெறும்? சிறுவயதிலிருந்தே எங்களுக்கு

உங்கள் சமையல்தான் பிடிக்கும். மஹேந்திரனுக்கும் ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு அலுத்துவிட்டது. என்றைக்கு வீட்டுச் சாப்பாட்டைக் காணுவோமென்று ஆவலாயிருக்கிறான். இன்று நாங்கள் இருவரும் முன்போல் சேர்ந்து போஜனத்திற்கு உட்கார்ந்து பந்தயம் போட்டுச் சாப்பிடப்போகிறோம். உங்கள் மருமகள் எப்படிப் பரிமாறுகிறாள், பார்க்கலாம்!

விஹாரி மஹேந்திரனை அழைத்து வந்திருப்பது ராஜலக்ஷ்மிக்குத் தெரியும். ஆனாலும் அப்பெயரைக் கேட்டமாத்திரத்தில் உணர்ச்சி பெருகி மூச்சே சிறிது நேரம் நின்றுவிட்டது போன்று இருந்தது அவளுக்கு.

சற்றுச் சமாளித்துக் கொள்ள அவளுக்கு அவகாசம் அளித்துப் பிறகு, "இந்த யாத்திரையினால் மஹேந்திரனின் தேகாரோக்கியங்கூட விருத்தி அடைந்திருக்கிறது. பிரயாணத்தினால் சற்றுக் களைப்படைந்திருக்கிறான். குளித்துச் சாப்பிட்டபிறகு அதுவும் சரியாகிவிடும்" என்றான் விஹாரி.

அப்பொழுதும் ராஜலக்ஷ்மி மஹேந்திரனைப்பற்றி ஒன்றும் பேசாதுபோகவே விஹாரி, "அம்மா, மஹேந்திரன் கதவிற்கு வெளிப்புறம் நின்றுகொண்டிருக்கிறான்; நீங்களாக அழைத்தாலொழிய அவன் உள்ளே வரத் தயங்குகிறான்" என்றான்.

ராஜலக்ஷ்மி பேசாது கதவுப்புறம் நோக்கினாள். விஹாரி, "மஹேன், உள்ளே வா" என்று அழைத்தான்.

மஹேந்திரன் மெள்ள அடியெடுத்து வைத்து உள்ளே வந்தான். எங்காவது உணர்ச்சி மேலிட்டுத் தாயின் சுவாசம் நின்றுவிடுமோவெனப் பயந்தான்.

உடனே அவனை ஏறெடுத்துப்பார்க்க ராஜலக்ஷ்மியின் மனம் துணியவில்லை. அவள் தேகஸ்திதியைக் கண்டு மஹேந்திரன் இடிவிழுந்தவன்போல் ஆனான்.

தாயின் பாதங்களில் தலையை வைத்து நிமிராது படுத்திருந்தான் அவன். ராஜலக்ஷ்மியின் தேகம் சிலிர்த்தது. நாடி வேகமாய் அடிக்க ஆரம்பித்தது.

பக்கத்திலிருந்த அன்னபூரணி, "அம்மா ராஜலக்ஷ்மி, அவனை எழுந்திருக்கச் சொல். நீ சொல்லாவிடின் அவன் எழுந்திருக்கமாட்டான்போல் இருக்கிறது" என்றாள்.

ராஜலக்ஷ்மி மிகவும் பிரயாசையுடன், "மஹேன், எழுந்திரு" என்றாள்.

வெகுநாட்களுக்குப் பிறகு அவன் பெயரை உச்சரிக்கவே கண்ணீர்த்தாரை பெருகியது. கண்ணீர் பெருக்கியதால் மனத்தின் பாரமும் சற்றுக்குறைந்தது. மஹேந்திரன் கட்டிலிலிருந்து கீழே யிறங்கி அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். ராஜலக்ஷ்மி மிகப் பிரயாசையுடன் அவன் பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டு அவன் தலைமயிரைக் கோதிக்கொண்டே அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

மஹேந்திரன் தழுதழுத்த குரலில், "அம்மா, நான் உனக்கு மிகவும் அபராதம் செய்துவிட்டேன். என்னை மன்னிப்பாயா?" என்றான்.

ராஜலக்ஷ்மி சற்று மனவமைதி பெற்றுப் பிறகு, "அப்படிச் சொல்லாதே, மஹேன். உன்னை மன்னிக்காது என்றால் எப்படி இருக்கமுடியும்?" எனக் கூறி, "ஆசா" என்று கூப்பிட்டாள்.

சமையலறையில் ஏதோ வேலையாயிருந்த ஆசாவை அன்னபூரணி போய் அழைத்து வந்தாள்.

ராஜலக்ஷ்மி கட்டிலில் தன் பக்கத்தில் வந்து உட்காருமாறு ஆசாவுக்குச் சைகை செய்தாள். மஹேந்திரனையும் எழுந்து அவள் பக்கத்தில் உட்காரச் சொன்னாள். "உங்கள் இருவரையும் ஒன்று சேர்த்து உட்கார வைத்துப் பார்த்தாலே என் துக்கமெல்லாம் பறந்தோடிவிடும். ஆசா, என்னெதிரில் வெட்கம் ஏன்? மஹேந்திரன் செய்ததையெல்லாம் மறந்துவிடு. அவன் பக்கத்தில் வந்து உட்கார். நான் என் கண்ணாரக் கண்டு களிக்கிறேன்" என்று மொழிந்தாள்.

ஆசா நாணத்துடன் தலை கவிழ்ந்து மெள்ள மெள்ள மஹேந்திரன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். ராஜலக்ஷ்மி அவள் கையில் மஹேந்திரன் கையை எடுத்து வைத்துப் பிடித்துக்கொள்ளச்சொல்லி, "மஹேன், இதோ என் ஆசாவை உன்னிடம் ஒப்படைத்துச் செல்கிறேன். அவளைப்போன்ற குணசாலியை அடைவது துர்லபம். (அன்னபூரணியை நோக்கி) அக்கா, இங்கே வா. இவர்களை ஆசிர்வதி. இவர்களுக்குச் சர்வ மங்களம் உண்டாகட்டும்!" என்று ஆசீர்வதித்தாள்.

தம்பதிகள் இருவரும் கண்களில் நீர் ததும்ப அன்னபூரணியையும் நமஸ்கரித்தனர். அவளும் அவர்கள் நெற்றியில் முத்தமிட்டு அவர்களை ஆசீர்வதித்தாள்.

"விஹாரி, நீயும் என்னெதிரில் மஹேந்திரனை மன்னிக்கவேண்டும்" என்றாள் ராஜலக்ஷ்மி.

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டனர். "மஹேன், சிறுவயதிலிருந்து ஏற்பட்ட உங்கள் இருவருடைய நட்பும் என்றும் மாறாதிருக்க வேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனை. விஹாரியைப்

போன்ற நண்பனைப் பெறும் பாக்கியத்தைவிடப் பெரிது வேறொன்றுமில்லை" என்றாள் ராஜலக்ஷ்மி.

இவ்வளவு பேசியதனாலேயே அவளுக்கு மூச்சுத் திணற ஆரம்பித்துவிட்டது. விஹாரி விரைந்து சென்று ஒரு மருந்தை எடுத்து வந்தான். ராஜலக்ஷ்மி அவனைத் தடுத்து, "எனக்கு இனி மருந்து எதற்கடா அப்பா? சகல துக்கத்திற்கும் நிவாரணியான மருந்தை எனக்கு அளிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நீங்கள் போய்ச் சற்று இளைப்பாறுங்கள்" என்றாள்.

அன்று இரவு விஹாரியும் மஹேந்திரனும் ராஜலக்ஷ்மியின் கட்டிலுக்கு எதிரிலேயே சாப்பிட உட்கார்ந்தனர். ராஜலக்ஷ்மி ஆசாவைப் பரிமாறச் சொன்னாள்.

மஹேந்திரனுக்கு அன்று உணர்ச்சி மேலீட்டினால் சாப்பாடு இறங்கவேயில்லை. அடிக்கடி ராஜலக்ஷ்மி, "மஹேன், நீ ஏன் ஒன்றுமே சாப்பிடவில்லை? நன்றாய்ச் சாப்பிடு; நானும் பார்க்கிறேன்" என்று வற்புறுத்திச் சொன்னாள்.

"உங்களுக்குத் தெரியாதா அம்மா இவன் சங்கதி? எப்பொழுதுமே சாப்பிடவே முடியாத பெரிய வயிற்று வலிக்காரன். இந்தக் கோசுமலி என்ன நன்றாயிருக்கிறது! எங்கே எனக்கு இன்னும் கொஞ்சம் போடுங்கள்" என்றான் விஹாரி.

ராஜலக்ஷ்மி சந்தோஷத்தினால் பூரித்தாள். "உனக்குக் கோசுமலி பிடிக்குமென்று எனக்குத் தெரியும். ஆசா, அவனுக்கு அது போதாது. இன்னும் நிறையப் போடு" என்றாள்.

விஹாரி: அம்மா, உங்கள் நாட்டுப்பெண் மிகச் செட்டு. கையில் தாராளமே யில்லை.

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே, "பார்த்தாயா ஆசா! நீ பரிமாறுவதைச் சாப்பிட்டுக்கொண்டே, உன்னைக் குறை கூறுவதை?" என்று உரைத்தாள்.

ஆசா விஹாரியின் இலையில் நிறையக் கோசுமலி கொண்டுவந்து பரிமாறினாள்.

விஹாரி: அடாடா! கோசுமலியாலேயே இன்று என் வயிற்றை நிரப்பிவிட்டு, மற்ற நல்ல பதார்த்தங்களை யெல்லாம் மஹேந்திரனுக்குப் பரிமாறிவிடவா இந்த யுக்தி!

இப்படிச் சிரிப்பும் விளையாட்டுமாய் நண்பர்கள் இருவரும் போஜனம் செய்து எழுந்தனர். ராஜலக்ஷ்மி இதைப் பார்த்துப் பரம திருப்தி அடைந்தாள். அவள் ஆசாவையும் போய்ச் சாப்பிட்டு வருமாறு சொன்னாள்.

மஹேந்திரனையும் போய்ப் படுத்துக்கொள்ளச் சொன்னாள். அவனுக்கு இரவு முழுதும் ராஜலக்ஷ்மியின் அருகிலிருந்து சுசுருஷை செய்யவேண்டுமென்று இருந்தது. ராஜலக்ஷ்மி அதற்கு ஒப்பவில்லை. "நீ மிகவும் களைத்திருப்பாய். போய்ப் படுத்துக்கொள்" எனச் சொல்லிவிட்டாள்.

ஆசா போஜனம் முடித்துக்கொண்டு ராஜலக்ஷ்மியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விசிறலானாள். ராஜலக்ஷ்மி அவளை நோக்கி, "மஹேந்திரன் அறையில் போய் அவனுக்குப் படுக்கை முதலியவையெல்லாம் சரியாய்ப் போட்டிருக்கின்றனவா என்று பார். அவன் அங்கே தனியாயிருப்பான்; நீ போ" என்று சொன்னாள்.

ஆசாவை வெட்கம் சூழ்ந்தது. ராஜலக்ஷ்மியின் பேச்சைத் தட்ட முடியாது எப்படியோ அறையை விட்டு வெளியே சென்றாள்.

அன்னபூரணியும் விஹாரியுந்தான் ராஜலக்ஷ்மியின் பக்கத்தில் இருந்தனர். அப்பொழுது ராஜலக்ஷ்மி, "விஹாரி, உன்னை ஒன்று கேட்கவேண்டும். விநோதினியைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? இப்பொழுது அவள் எங்கேயிருக்கிறாள்?" எனக் கேட்டாள்.

விஹாரி: அவள் கல்கத்தாவிலேயே இருக்கிறாள்.

ராஜலக்ஷ்மி அவனை உற்று நோக்கினாள். அவன் அவளது நோக்கத்தை அறிந்துகொண்டு, "அம்மா! நீங்கள் அவள் இங்கே இருப்பதைப்பற்றிச் சற்றும் கவலை கொள்ளவேண்டாம்" என்றான்.

ராஜலக்ஷ்மி: அவள் என்னை மிகவும் துக்கத்திற்குள்ளாக்கினாள். ஆனாலும் அவள்பேரில் எனக்குப் பிரியம் இல்லாமலில்லை.

விஹாரி: அம்மா! அவளும் உங்கள் பேரில் அப்படியே இருக்கிறாள்.

ராஜலக்ஷ்மி: எனக்குத் தெரியும். பிரியமில்லாவிடின் அவள் செய்தது போன்ற பணிவிடை செய்யத்தான் முடியுமா? மனிதர்களென்றால் எல்லாரிடமும் நல்லது கெட்டது இவ்விரண்டு குணங்களும் சேர்ந்தே இருக்கின்றன.

விஹாரி: உங்களுக்குப் பணிவிடை செய்ய அவள் இப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறாள்.

ராஜலக்ஷ்மி பெருமூச்சுவிட்டு, "மஹேந்திரன் படுக்கப்போய்விட்டான். இச்சமயம் அவளை இங்கே அழைத்து வருவதில் கெடுதியொன்றுமில்லை" என்றாள்.

விஹாரி: அம்மா, அவள் இங்கேயே வெளியறையில் காலையிலிருந்து உட்கார்ந்திருக்கிறாள். அன்ன ஆஹார மின்றிக் கிடக்கிறாள். நீங்கள் கூப்பிட்டு அவளுக்கு மன்னிப்பளித்தாலொழிய அவள் தண்ணீரும் குடிப்பதில்லை யெனப் பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறாள்.

ராஜலக்ஷ்மி வருத்தத்துடன், "பாவம்! ஆஹார மின்றியா உட்கார்ந்திருக்கிறாள்? உள்ளே கூப்பிடு அப்பா அவளை" என்று உரைத்தாள்.

விநோதினி உள்ளே நுழைந்ததுமே ராஜலக்ஷ்மி, "சீ! இதென்ன? இப்படிச் செய்யலாமா? நாள் முழுவதும் பட்டினியாயிருப்பதாவது! போய் முதலில் சாப்பிட்டு வா, பிறகு பேசலாம்" என்றாள்.

விநோதினி ராஜலக்ஷ்மியின் காலில் விழுந்து நமஸ்கரித்து அவள் பாதங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, "இந்தப் பாவியை நீங்கள் மன்னித்தாலொழியத் தண்ணீரும் அருந்தப்போவதில்லை" என்றாள்.

ராஜலக்ஷ்மி, "விநோதினி, மன்னித்தேன். எழுந்திரு. எனக்கு இப்பொழுது யார்பேரிலும் சிறிதும் கோபமில்லை. (விநோதினியின் கையைப் பிடித்துக்கொண்டு) அம்மா! உன்னால் இனிப் பிறருக்கு நன்மையே ஏற்படட்டும்; நீயும் நன்றாயிரு" என்று ஆசீர்வதித்தாள்.

விநோ: உங்களுடைய இந்த ஆசீர்வாதம் பொய்யாகாதென நான் ஆணையிட்டுச் சொல்கிறேன், அம்மா! என்னால் இந்தக் குடும்பத்திற்கு இனி ஒரு கெடுதியும் நேராது.

விநோதினி அன்னபூரணியையும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துப் பிறகு போஜனத்திற்குச் சென்

ருள். சாப்பிட்டு வந்ததும் ராஜலக்ஷ்மி அவளை நோக்கி, "போய் வருகிருயா?" என்ருள்.

விநோ: அம்மா! நான் இங்கிருந்து உங்களுக்குப் பணிவிடை செய்கிறேன். இனி என்ருல் ஓர் அனர்த்தமும் நேராதென்று நான் ஈச்வரசாக்ஷியாகச் சொல்லுகிறேன்.

ராஜலக்ஷ்மி விஹாரியைப் பார்த்தாள். அவன் சற்று யோசித்து, "அம்மா! அவள் இருக்கட்டுமே. அதனுல் ஒரு கெடுதியும் நேராது" என்ருன். விஹாரி, விநோதினி, அன்னபூரணி மூவரும் ராஜலக்ஷ்மியின் அறையிலிருந்து அவளுக்கு வேண்டிய சுசுருஷை செய்து வந்தனர்.

இரவுமுழுவதும் ஆசாவினுல் மாமியாரின் கிட்ட வரமுடியவில்லை. பொழுது விடியுமுன்பே அவள் எழுந்து குளித்து ராஜலக்ஷ்மியின் அறைக்குள் வந்தாள். அங்கு விநோதினியைக் கண்டு திடுக்கிட்டுப் பிரமித்தாள். தான் காண்பது கனவோ நனவோ என்று யோசித்தாள்.

இரவு முழுதும் விழித்திருந்த விஹாரிக்காக விநோதினி தேத்தண்ணீர் தயார் செய்துகொண்டு இருந்தாள். ஆசாவைக் கண்டதும் அவள் எழுந்து அவளருகில் வந்து, "சகல அபராதமும் செய்த நான் இன்று உன்னை அண்டி வந்திருக்கிறேன். இதை விட்டுப் போகுமாறு என்னை வேறு யாரும் சொல்லவில்லை. ஆனுல் நீ என்னைப் போவெனச் சொன்னுல் நான் உடனே சென்று விடுகிறேன்" என்ருள்.

ஆசாவுக்கு என்ன சொல்வதெனத் தெரியவில்லை. அப்படியே அசைவற்று நின்ருள். விநோதினி மேலும், "நான் செய்த அபராதத்தை நீ என்றும் மன்னிக்க முடியாது. ஆனுல் இப்பொழுது என்னைக் கண்டு அஞ்ச

வேண்டியதில்லை. அம்மா நோயுற்றிருக்கும்வரையில் அவ ளுக்குப் பணிவிடைசெய்கிறேன். பிறகு உடனே இதை விட்டுச் சென்று விடுகிறேன்" என்று கூறினாள்.

முன்தினம் ராஜலக்ஷ்மி தன் மகனையும் மருமகளையும் தன் பக்கத்திலிருத்திக் கையைப் பிடித்துச் சேர்த்துவைத் ததும் ஆசா நடந்த சம்பவங்களையெல்லாம் ஒருவாறு மறந்து மனச்சாந்தி யடைந்தாள். இன்று எதிரிலேயே விநோதினியைக் கண்டதும் பழைய மனோவேதனை புத்து யிர் பெற்று எழுந்தது. இதே விநோதினியிடம் மோஹங் கொண்டுதான் தன் கணவன் வீட்டைவிட்டுச் சென்றான். இன்னும் சிறிது நேரத்தில் அவன் விழித்துக்கொள்வான். விநோதினியைத் தன் எதிரில் காண அவன் மனம் எப்படி மாறுமோ? அவன் இன்னமும் அவளை விரும்பினால்? இவ் வாறாக ஆசாவின் உள்ளத்தில் எண்ணங்கள் அலைபோல் எழுந்தன. நேற்றுத்தான் அவள் தனது துக்கத்திற் கெல்லாம் முடிவுகாலம் வந்துவிட்டதாகக் கருதி அமைதி யுற்றாள். இன்றோ துக்கமே திரண்டு உருவெடுத்து வந்தது போன்று விநோதினி தன் எதிரிலே நிற்பதைக் காண உள்ளம் துடித்தாள் ஆசா. தனது துக்கத்தை அடக்கிக் கொண்டு அன்னபூரணியைப் பார்த்து, "சித்தி, நீ இரவு முழுதும் தூங்கவில்லைபோல் இருக்கிறது. சற்றுப் போய்ப் படுத்துக்கொள்ளேன்" என்றாள்.

ஆசாவின் குரலிலிருந்தே அன்னபூரணி அவள் மனோ வேதனையை ஊகித்தறிந்து கொண்டாள். அவளை அங் கிருந்து வேறு அறைக்குள் அழைத்துச்சென்று, "ஆசா, என் கண்ணே! நீ நடந்தவற்றையெல்லாம் மறந்தா லொழிய ஒருகாலும் சுகமடையமுடியாது" என அன் புடன் கூறினாள்.

ஆசா: சித்தி, நானும் மறக்கவே விரும்புகிறேன். ஆனால் முடியவில்லையே!

அன்ன: உண்மைதான். எதையும் சொல்லிவிடுவது சுலபம்; அனுஷ்டிப்பதுதான் கடினம். ஒரேயடியாய் மறப்பது முடியாதுதான். ஆனால் உன் மனத்தாங்கலை நீ சற்றும் வெளிக்குக் காட்டிக்கொள்ளக்கூடாது. ஒன்றுமே நடக்காததுபோல் நீ விநோதினியுடன் சகஜமாய் நடந்துகொள்ளவேண்டும். இதைவிடக் கஷ்டமான வேறொன்றையும் நீ சகித்துக்கொள்ளவேண்டும். குழந்தாய், ஒரே வீட்டில் இருப்பதால் விநோதினியும் மஹேந்திரனும் சந்திக்காமல் இருப்பதற்கில்லை. அச்சமயம் உன் மனம் என்ன பாடுபடுமென்பதை நான் அறிவேன். உனது உள்ளம் வெடித்து விடும்போலிருந்தாலும் நீ அவர்களை அச்சமயம் கவனியாது பொறுத்திருக்கவேண்டும். உன் மனத்தில் யாதொரு விகற்பமும் இல்லாததுபோல் நீ நடந்துகொள்ளவேண்டும். இவையே எனது கட்டளையென நினைத்து, சிறிதும் பிசகாது நடந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறேன். ஆசா, நான் காசிக்குச் சென்ற பிறகும் நீ இதன்படியே ஒழுகினையானால் உனக்கு நிச்சயம் சுகமேற்படும்" என்று கூறி முடித்தாள்.

அது முதல் ஆசா விநோதினியுடன் வெகு சகஜமாய்ப் பேசலானாள். இதைக் காண விநோதினிக்கே ஆச்சரியமாயிருந்தது. அவர்களிருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே மஹேந்திரன் ராஜலக்ஷ்மியைப் பார்ப்பதற்காக அங்கு வந்தான். ஆசாவின் இருதயம் வேகமாய் அடித்துக் கொண்டது. அவள் உடனே சமாளித்துக் கொண்டு மஹேந்திரனிடம் சகஜமாய், "இவ்வளவு சீக்கிரம் எழுந்து விட்டீர்களா? நீங்கள் களைப்புத் தீரத் தூங்க

வேண்டுமென்றே பொழுது விடிவது தெரியாமல் இருக்கட்டுமென்று உங்கள் அறையில் ஜன்னற்கதவுகளை யெல்லாங்கூட மூடிவந்தேன்" என்றாள்.

விநோதினியின் எதிரில் ஆசா இவ்வளவு சாதாரணமாகவும் சகஜமாகவும் தன்னுடன் பேசியதும் அவனுக்கு மனத்திலிருந்த பெரிய பாரம் நீங்கியது போன்று இருந்தது. மனம் புளகித்தான். "அம்மாவின் உடம்பு எப்படியிருக்கிறதென்று பார்க்கவே வந்தேன். தூங்குகிறாளா?" என்றான் அவன்.

ஆசா: ஆம். தூங்கிக்கொண்டிருக்கிறார். நீங்கள் கிட்டப் போகவேண்டாம். மற்றத் தினங்களைக் காட்டிலும் நேற்றிரவு அம்மா அயர்ந்து தூங்கியதாக விஹாரியாபு சொன்னார்.

மஹேந்திரன் சற்றுக் கவலை நீங்கியவனாய், "பெரியம்மா எங்கே?" என்று கேட்டான். ஆசா அன்னபூரணியின் அறையைக் காண்பித்தாள்.

ஆசாவின் உறுதியையும் பொறுமையையும் கண்டு விநோதினியும் அதிசயித்தாள். அன்னபூரணி அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து பூஜைக்கு உட்கார வந்தாள். அச்சமயம் மஹேந்திரன் அங்கு வந்து அவளை நமஸ்கரித்து, "பெரியம்மா, நான் பாபி. எனது மாசுபடிந்த இருதயத்தைக் கொண்டு உன் எதிரில் வரவே எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்று தீனக் குரலில் கூறினான்.

அன்ன: சீ, இதென்ன பேச்சு! குழந்தை விளையாடி உடம்பெல்லாம் சேற்றை வாரிப் பூசிக்கொண்டாலும் அப்படியே தாயின் மடியில் வந்து விழப் பின் வாங்கு

வதில்லை. மஹேஹன், தவறு இழைத்தது ஒரு நன்மைக்கே. நீ உன் நற்குணத்தைப் பற்றி மிகவும் இறுமாந்திருந்தாய். இப்பொழுது இத் தவற்றினால் அவ்விறுமாப்பு நீங்கி நன்மையே ஏற்பட்டது.

மஹேந்: பெரியம்மா, நீ என்னை விட்டுச் சென்றதனால்தான் இத்துர்க்கதிக்கு ஆளானேன்.

அன்ன: நான் சென்றதனால்தான் உனக்கும் புத்தியேற்பட்டு நீ சீர்திருந்த ஹேதுவாயிற்று. இனி நான் இருக்கவேண்டிய அவசியமில்லை.

அச்சமயம், "பெரியம்மா, பூஜை செய்துகொண்டிருக்கிறாயா?" என்று விஹாரியின் குரல் கேட்டது. "இல்லை உள்ளே வா, அப்பா" என்றாள் அன்னபூரணி.

விஹாரி உள்ளே மஹேந்திரன் இருப்பதைக் கண்டு அவன் இவ்வளவு அதிகாலையில் எழுந்துவிட்டதைப் பற்றி ஆச்சரியம் கொண்டு, "மஹேன், உனது ஆயுளிலேயே நீ சூரியோதயத்தைக் காண்பது இதுதான் முதல் தடவையாயிருக்கும்" என்றான்.

மஹேந்திரன், "ஆமாம், விஹாரி. ஆயுளில் முதன் முறை சூர்யோதயத்தைக் காண்பது இன்றுதான்! பெரியம்மாவிடம் ஏதோ கலந்தாலோசிக்க வந்திருக்கிறாய் போல் இருக்கிறது. இதோ நான் வெளியில் செல்கிறேன்" என்று எழுந்தான்.

விஹாரி சிரித்துக்கொண்டே, "மஹேன், நீயும் இந்த ஆலோசனை சபையில் ஒரு மந்திரிதான். இதுவரை நான் உனக்குத் தெரியாதவாறு எதுவும் செய்ததில்லை. இனியும் ஒளிக்கப் போவதில்லை. விநோதினியை விவாகம் செய்து கொள்ளும் விஷயமாய்ப் பெரியம்மாவுடன் ஆலோசிக்கவே வந்தேன்" எனக் கூறினான்.

அன்னபூரணி ஆச்சரியத்துடன், "இதென்ன வார்த்தை? விஹாரி!" என்றாள்.

மஹேந்திரனும் சற்றுச் சங்கோசம் நீங்கி, "விஹாரி, இவ்விவாகத்திற்கு அவசியமொன்றும் இல்லை" என்றான்.

அன்ன: இதற்கு விநோதினியும் உடன்பட்டிருக்கிறாளா?

விஹாரி: இல்லவேயில்லை!

மஹேந்: பெரியம்மா, விநோதினிக்கு இவனிடம் பூர்ணபக்தி சிரத்தையுண்டென்று நான் நன்கு அறிவேன். அப்படியிருக்க அவள் இதற்கு உடன்படாமலென்ன?

விஹாரி: மஹேன், நான் விநோதினியை விவாகம் செய்து கொள்ளுமாறு கேட்டேன். ஆனால் அவள் வெட்கத்துடன் அதை மறுத்துவிட்டாள்.

பிறகு மஹேந்திரன் வாயைத் திறக்கவில்லை.

## ஐம்பத்துமூன்றும் அத்தியாயம்

இப்படியும் அப்படியுமாக ராஜலக்ஷ்மி இரண்டு மூன்று தினங்களைக் கழித்தாள். ஒரு நாட்காலை அவள் முகம் மலர்ச்சி பெற்றிருந்தது. நோயின் கொடுமையெல்லாம் நீங்கிவிட்டது போன்றிருந்தது. அன்று அவள் மஹேந்திரனைக் கூப்பிட்டுத் தன் பக்கத்தில் இருத்தி, "மஹேன், என் ஜீவிய காலம் ஒடுங்கிவிட்டது. ஆனால் நான் யாதொரு துக்கமுமின்றிச் சந்தோஷமாய் மரிக்கிறேன். நீ சிறு குழந்தையாயிருந்தபோது உன்னைப் பார்த்தே நான் பூரித்துப் புளகிப்பேன். அதே ஆனந்தத்தால் இன்று எனது உள்ளம் நிறைந்திருக்கிறது. நீ எனது அருமைச்

செல்வம். உன்னைப்பற்றிய சந்தோஷ நினைவுகளுடன் நிச்சிந்தையாக நான் பிராணனை விடுவேன்" என்று கூறும் போதே மஹேந்திரன் துக்கம் தாளாது அழலானான். ராஜலக்ஷ்மி அவன் கண்ணீரைத் துடைத்து அவனை அன்புடன் மெதுவாய் வருடிக்கொண்டே, "அழாதே, மஹேன்! லக்ஷ்மியையொத்த கண்ணான மனைவியை உன்னிடம் ஒப்படைத்துச் செல்கிறேன். அவளிடம் எனது பெட்டித் திறவுகோலைக் கொடு. குடும்பத்திற்கு வேண்டிய சகலமும் சேர்த்து வைத்திருக்கிறேன். எதற்கும் நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை. உன்னிடம், மஹேன், இன்னும் ஒரு விஷயம் சொல்லுகிறேன். நான் இறக்கும் வரை அதை யாருக்கும் தெரிவியாதே. எனது பெட்டிக்குள் கரன்ஸி நோட்டுக்களாக இரண்டாயிரத்திற்கு இருக்கின்றன. அவற்றை விநோதினிக்கு அளிக்கிறேன். பாவம்! அவள் விதவை. தனியாயிருப்பவள். இந்தப் பணத்தைக்கொண்டு அவள் கஷ்டமின்றிக் காலந்தள்ளலாம். ஆனால், மஹேன், அவளை மாத்திரம் நீ இங்கே வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாதெனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று உரைத்தாள்.

பிறகு விஹாரியைக் கூப்பிட்டு, "விஹாரி, ஏழைகளின் உதவிக்காக நீ ஓர் ஆரோக்கிய ஆச்ரமம் கட்டிவருவதாக மஹேந்திரன் என்னிடம் சொன்னான். பகவான் உனக்குத் தீர்க்காயுளும் அளித்து உனது பரோபகார சிந்தையை விருத்தியாக்கட்டும். எனது விவாகத்தின் போது என் தந்தையால் எனக்கு அளிக்கப்பட்ட மஞ்சக் காணி கிராமமொன்று இருக்கிறது. அதை உனக்கு அளித்துப் போகிறேன். அதை நீ உனது ஸத்காரியத்திற்காக உபயோகித்துக்கொள்" என்று கூறினாள்.

ராஜலக்ஷ்மியின் உயிர் அநாயாசமாய் நீங்கியது.

அவளது மரணக்கிரியையெல்லாம் முடிந்தபிறகு ஒரு நாள் மகேந்திரன், "விஹாரி, எனக்கும் வைத்தியம் செய்யத் தெரியும். நான் டாக்டராயிருப்பதால் நீ ஆரம்பித்திருக்கும் சிகித்ஸாசிரமத்தில் என்னையும் உதவிக்குச் சேர்த்துக் கொள். ஆசாவும் எல்லாவிஷயங்களையும் மிகத் திறம்பட நடத்தும் சாமர்த்தியம் பெற்றுவிட்டாள். அவளும் நமக்கு மிகவும் உதவியாயிருப்பா ளென்பதில் சந்தேக மில்லை" என்றான்.

விஹாரி: நண்பா, இதைப்பற்றி நன்றாக யோசித்தாயா? க்ஷணநேர வைராக்கியத்தில் இப்பெரிய பொறுப்பை ஏற்கத் தீர்மானித்துவிடாதே.

மஹேந்: விஹாரி, எனது போக்கை நீயுந்தான் நன்றாய் அறிவாய். சோம்பேறியாய்ப் பொழுதைப் போக்காது ஏதாவதொரு நல்ல காரியத்தில் என் மனத்தை ஈடுபடுத்தா விடின், கடைசியில் என் மனமே என்னைப் படுகுழியில் ஆழ்த்திவிடும். ஆகையால் நீ என்னை உனது வேலையில் பங்கெடுத்துக்கொள்ள அனுமதித்தே தீரவேண்டும்.

கடைசியில் அப்படியே செய்வதென இருவரும் நிச்சயித்தனர்.

அன்னபூரணியும் விஹாரியும் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். அன்னபூரணி காசிக்குச் செல்லும் தினம் நெருங்கிவிட்டது. இச்சமயம் விநோதினியும் அங்கு வந்து அவர்கள் சம்பாஷணையில் கலந்துகொண்டாள். ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு ஏதோ வேலையிருக்கிறதெனச் சொல்லி அன்னபூரணி எழுந்து போய்விட்டாள்.

அப்பொழுது விநோதினி விஹாரியைப் பார்த்து, "இனி நான் என்ன செய்யவேண்டுமென்பதை நீங்கள் தான் தெரிவிக்கவேண்டும்" என்றாள்.

**விஹாரி:** நீயே சொல், உனக்கு என்ன செய்ய விருப்பமென்று.

**விநோ:** உங்களுடைய சிகித்ஸாசிரமத்தில் ஏதேனுமொரு சிறு ஊழியம் புரிகிறேன். வேறொன்று மில்லாவிட்டாலும் சமையல் வேலையையாவது நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**விஹாரி:** நான் நெடுநேரம் யோசித்தேன். வாழ்க்கையில் பலவிதக் கஷ்டங்களால் நாம் பிணைப்புற்றிருக்கிறோம். அவற்றிலிருந்து முதலில் விடுவித்துக் கொள்ளவேண்டும். மனம் எதை அடைய விரும்புகிறதோ அவ் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளத் துணிவு இல்லை. மன அமைதியின்றி வாழ்க்கை நடைபெறுவது அசாத்தியம். எல்லாம் நான் நினைப்பதுபோல் நடக்குமானால் உன்னை அடைந்தாலன்றி என் வாழ்க்கை ஒருநாளும் பூர்ணமாகாது. ஆனால் இப்பொழுது நான் உன்னைத் தியாகம் செய்துதான் ஆகவேண்டும். நாம் தனித்திருப்பதுதான் நலம். சுகத்தை நாடுவது வீண். சிதறிய வாழ்க்கையை ஒன்று சேர்ப்பதுதான் இப்பொழுது நமது கடமை.

இதற்குள் அன்னபூரணி மீண்டும் அங்கு வரவே விநோதினி அவளிடம், "அம்மா, நீங்களே இச்சமயம் பாவியாகிய எனக்கு உங்களுடைய சரண கமலங்களில் இடமளித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னைப் புறக்கணிக்கலாகாது" எனக் கேட்டுப் பிரார்த்தித்தாள்.

அன்ன: குழந்தாய், அப்படியே ஆகட்டும். நீயும் என்னோடுகூடவே காசிக்கு வா.

விநோதினி காசிக்குச் செல்லுமுன் விஹாரி அவளைத் தனிமையில் சந்தித்து, "விநோதினி, உனது ஞாபகச் சின்னமாக வைத்திருக்க எனக்கு ஏதாவதொன்று உன்னிடமிருந்து வேண்டும்" என்று கேட்டான்.

விநோதினி: உங்களுக்கு அளிக்கக்கூடியதாய் என்னிடம் என்ன இருக்கிறது?

விஹாரி ஸங்கோசத்துடன், "ஆங்கிலேயர்கள் தங்களுக்குப் பிரியமானவர்களை விட்டுப் பிரியும்போது ஞாபகார்த்தமாக அவர்களின் கூந்தலில் சிறிது கத்தரித்துக் கொடுப்பதுண்டு. அதேபோல் நீயும்—" என்று சொல்வதற்குள் விநோதினி குறுக்கிட்டு, "சீச்சீ! என்ன ஆபாஸம்! எனது கூந்தலை வைத்துக்கொண்டு என்ன செய்வீர்கள்? அசங்கியமான எதற்கும் உதவாத இதையா நான் உங்களுக்கு அளிப்பது? துர்ப்பாக்கியம் பிடித்த நான் உங்களுக்கு ஒரு விதத்திலும் பயனில்லாது போனேன். நான் கொடுக்கும் வஸ்துவாவது உங்களுக்குப் பயன்படவேண்டும். கொடுத்தால் மறுக்காது வாங்கிக் கொள்வீர்களன்றோ?

விஹாரி: வாங்கிக்கொள்கிறேன்.

உடனே விநோதினி தனது புடைவைத் தலைப்பில் முடிந்துவைத்திருந்த ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் இரண்டை விஹாரியின் கையில் அளித்தாள்.

விஹாரி விநோதினியையே பார்த்து ஸ்தம்பித்து நின்றான். சிறிதுநேரம் அவனுக்குப் பேச நாவெழ

வில்லை. பிறகு, "நான் எதை உனக்கு அளிப்பது?" என்றான்.

விநோதினி, "உங்களுடைய ஞாபகார்த்தமாக என்னிடம் ஒன்று வெகுதினங்களாகவே இருக்கிறது. அதை எனது ஆபரணமாய் அணிந்திருக்கிறேன். ஒருவராலும் அதை அபகரிக்க முடியாது. எனக்கு வேறெதுவும் தேவையில்லை" என்று சொல்லித் தனது கையில் முன்னொரு நாள் பட்ட காயவடுவைக் காண்பித்தாள்.

* * *

விஹாரி மிகவும் வியப்புற்றான். அதற்குள் அவள், "இது உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களால் ஏற்பட்டதுதான். நீங்கள் செய்ததும் சரியே! நீங்கள் இப்பொழுது விரும்பினாலும் என்னிடமிருந்து பிடுங்கிக் கொள்ள முடியாது!" என்று உரைத்தாள்.

ஆசா சித்தியின் சொற்படி வெளிக்கு விநோதினியிடம் எவ்வளவோ சகஜமாய்ப் பழகினாலும் அவள் மனம் உள்ளூற உறுத்திக்கொண்டேயிருந்தது. விநோதினியுடன் முன்போல் மனம் விட்டுப் பேசவோ சிரிக்கவோ அவளால் முடியவில்லை. இன்று அன்னபூரணி விடைபெற்று ஊருக்குப் போகும் சமயம் ஆசா பிரிவாற்றாது மனம் கரைந்து அழுதாள். சித்தியின் கூடவே செல்லும் விநோதினியின்மீதும் கருணை கொண்டாள். அவள் மீதிருந்த வருத்தமெல்லாம் மாயமாய் மறைந்தன. இனி விநோதினி திரும்பி வரப்போவதில்லை என்னும் எண்ணமே ஆசாவை யாவற்றையும் மறக்கச் செய்து அவள்பால் மனமிரங்கச் செய்தது.

ஆசா அவனுக்காகக் கண்ணீருகுத்தாள். பால்ய விதந்துவாகிய விநோதினிக்கு ஏற்பட்ட துர்த்தசை தன் ஜன்மசத்துருவிற்குக் கூட ஏற்படலாகாதென நினைத்து மனம் பதைத்தாள். ஒரு சமயம் விநோதினியைப் பிராண ஸ்நேகிதியாகக் கருதி நட்புரிமை கொண்டிருந்தாள். அந்நட்பு மீண்டும் உள்ளத்தில் உதயமாயிற்று. ஆசா, விநோதினியை நோக்கி அன்பும் தயையும் துக்கமும் கலந்த குரலில், "விநோதினி, ஊருக்குப் போகிறாயா?" என்றாள்.

விநோதினி ஆசாவின் மோவாயைப் பிடித்துக் கொண்டு, "ஆமாம், சகோதரி. புறப்படும் சமயம் நெருங்கி விட்டது. ஒரு சமயம் நீ என்னிடம் மிகவும் பிரியம் வைத்திருந்தாய். அதில் சிறிதாவது இப்பொழுது என்மீது இருக்குமானால் அதுவே எனக்குப் போதுமானது" என்றாள்.

"என்னை மன்னிக்கவேணும்" என்று மஹேந்திரன் கண்களில் நீர் ததும்ப அவளைக் கேட்டுக்கொண்டான்.

"மஹேன், நீயும் என்னை மன்னித்துவிடு. உங்கள் யாவருக்கும் கடவுள் சதா சுகத்தை அளிக்கட்டும்" என்று கூறிச் சென்றாள் விநோதினி.

# குமுதினி

## ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது

### ஸ்ரீமதி ரங்கநாயகியம்மாள்

*இனிய எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்தது*

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

### இந்நூலைப் பற்றிய முக்கிய அபிப்பிராயங்கள்.

*தினகரன்*—*மானிடவாழ்க்கையில் ஏற்படும் பல துன்பங்களை உணர்ச்சிததும்பும் முறையில் நாவலாசிரியர் சித்திரித்துக் காட்டியிருப்பது போற்றத்தக்கது.*

*தனவணிகன்*—*எளிய தமிழில் இனிய நடையில் டாகுர் அவர்களின் கதையை விளங்க வைத்த பெருமை அம்மையாரைச் சார்ந்தது.*

தாருல் இஸ்லாம்—*முதற்பக்கம் முதல் கடைசிப்பக்கம் வரையில் "அடுத்தது என்ன?" என்று வாசகர்கள் கேட்கக்கூடிய உணர்ச்சியையும் உற்சாகத்தையும் பெருக்கிக்கொண்டே போகும் முறையிலே, இக்கதையின் போக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.*

**விலை ரூ. 1—8—0**

**கலைமகள் சந்தாதாரர்க்கு ரூ. 1—2—0**

---

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர் :

# முருகன் ஓர் உழவன்

## மேல்நாட்டு அறிவாளிகள் புகழ்ந்து பேசும் நாவல்

ஸ்ரீமான் கே. எஸ். வேங்கடரமணியவர்கள்
*எழுதிய கிராமவாழ்க்கைச் சித்திரமாகிய*
*அரிய கதையின் மொழிபெயர்ப்பு*

மிக எளிய நடையில்

ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி
மொழிபெயர்த்தது

விலை ரூ. 1—8—0

**கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம்**
**ரூ. 1-2-0**

---

# ஹேமலதா

## இரு சகோதரிகள் இயற்றிய

உணர்ச்சி ததும்பும் நவீனம்

விலை ரூ. 1—4—0

**கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம்**
**ரூ. 1-0-0**

---

**: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர் :**

*மதராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை.*